www.padippakam.com



# சத்தியம் சாகாது

புலவர் ந. சிவநாதன்

படிப்பகம்

www.padippakam.com





## Nallathamby Sivanathan

BSc. (Civil Eng) MCIOB

Nallathamby Sivanathan arrived in the UK in 1974 and achieved his Civil Engineering qualification in 1979. After working abroad for three years he has since worked in the UK in the construction industry.

Along with his professional and academic qualifications Nallathamby Sivanathan known to his friends as 'pulavar', continues to build a reputation as a poet, writer, playwright, director and performance artist and has reached out to Tamils through his work which has been seen in the media and in live venues. He is involved in many spiritual and cultural projects. He is respected for voicing the sufferings that have beset the Tamil people of the North and Eastern parts of Sri Lanka, known as Tamil Eelam and struggles for freedom.

He is the youngest son of the late poet Muthu Thamil Pulavar M Nallathamby of Vaddukkoddai, Sri Lanka and after the loss of his father, while he was a baby, was brought up solely by his mother and her influence is reflected in his literary output.

படிப்பகம்

www.padippakam.com

# புலவரண்ணன் வருகிறார்

புலவரண்ணன் வருகிறார்!
பொருட்கவிதை வடிக்கிறார்!
நிலவிடையே நாம் வாழ்ந்த
நிலமதனை நினைக்கிறார்!

பாவியரைப் பழிக்கிறார்
பார்ப்பவரை விளிக்கிறார்!
போர்க் கவிதை வடிக்கிறார்
போற்றுதலும் புரிகிறார்!

விழிகொண்டு பார்க்கிறார்!
வேலுடனே நடக்கிறார்!
இழி நிலையைக் கண்டவுடன்
இதயங் குமுறி வெடிக்கிறார்!

தேசமதைப் போற்றியே
தேசியத்தை வாழ்த்துவார்!
காசியரின் நண்பரென்ற
காவியத்தைச் சொல்லுவார்!

காற்றினிலே கலக்கிறார்!
கடலலையில் மிதக்கிறார்!
மூழ்கி நீரும் பார்த்து விட்டால்
முழுவதுமே புரிந்திடும்!

கலைக்கலசம் வகுப்பில்
புலவரிடம் கற்ற மாணவருள் ஒருவரான
தமிழ் ஒளி
(சி.பாபு) - 1992

படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| Title: | Saththyam Saahaathu |
| Author: | Nallathamby Sivanathan |
| Publisher: | Thamizhavai |
| Date of Publishing: | 10th October 2004 |
| Edition: | First Edition |
| Design & Art work: | AVAN Systems - London |
| Printers: | Vasan Printers - London |

தமிழவை வெளியீடு
இலண்டன் - 10 ஐப்பசி 2004

ISBN NO: 0-9548259-0-X

படிப்பகம்

www.padippakam.com

# சத்தியம் சாகாது

புலவர் சிவநாதன்



தமிழவை

ஆன்றோர் அறிவும் சான்றோர் சால்பும் தோன்றாத்துணையாய்க் கொண்டது அவையே

படிப்பகம்

www.padippakam.com

# நூலளவை


| | |
|---|---|
| தலைப்பு: | சத்தியம் சாகாது |
| ஆசிரியர்: | புலவர் ந. சிவநாதன் |
| பொருள்: | இலக்கியம் - கவிதை |
| வெளியிடுவோர்: | தமிழவை - இலண்டன் |
| உரிமை: | ஆக்கியோனுக்கே |
| வெளியீடு: | ஒன்று |
| பதிப்பு: | ஒன்று |
| அளவு: | அகலம்: 14cm உயரம்: 21.5cm |
| படிகள்: | 3000 |
| காலம்: | 10 ஐப்பசி 2004 |
| ஓவியங்கள்: | ஜெயராஜ், ஷியாம் |
| வடிவமைப்பு: | அவன் சிஸ்ரம்ஸ் - இலண்டன் |
| அச்சிட்டோர்: | வாசன் அச்சகம் - இலண்டன் |


படிப்பகம்

www.padippakam.com

செல்லரித்துக் கிடந்த
செந்தமிழின் ஏடுகளைக்
கல்லரித்துக் கழுவிக்
காலத்தாலழியாது
சொல்லொலித்துச் சிரிக்கும்
சுரங்கமென நூலாக்கிப்
புல்லரிக்கச் செய்யும்
புகழ்படைத்த பெருமக்கள்
எள்ளெரித்து வணங்கி
எமக்காகத் தவங்கிடந்து
உள்ளெரித்துப் போன
அறிவுத்தீ அன்புத்தீ
உள்ளிருந்து எங்கள்
உயிருக்கு ஒளியூட்ட
உலகமெலாம் பறந்தும்
உள்ளுணர்வால் ஒன்றானோம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# இம்மை தந்த அம்மையும் அப்பனும்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சத்தியம் சாகாது

சத்தியம் சாகாது! - அது
தீயிலும் வேகாது!
நித்தியமாயிருக்கும் - அது
நீதியின் வழி நடக்கும்!

எத்தரின் கைகளிலே - அது
சிக்கி மடியாது! - இடி
எத்தனை வீழ்ந்தாலும் - அதன்
நெஞ்சு கலங்காது!

நெற்றியிற் சுட்டாலும் -
நெரித்து வளைத்தாலும்
கத்தியெறிந்தாலும் - சொட்டு
ரத்தமும் கொட்டாது!

சத்தியம் சாவதில்லை! - அதன்
சங்கதி ஓய்வதில்லை!
சத்தியம் வீழ்ந்ததெனும் - கதை
சரித்திரம் கண்டதில்லை!

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# என்னோசை

எனது விரல்களுக்கும் பேனாவிற்கும் இடையிலேற்பட்ட உறவிற்கு வயது சொல்ல எனக்குத் தெரியவில்லை! காரணம், இந்த உறவு இம்மைக் குரியதாகவும் எனக்குத் தோன்றவில்லை!

'எழுத வைத்த சத்தியத்தை என்ன சொல்வேன்?' என்ற எனது வரிகள் மூலம் என்னுள் ஓசையெழுப்பிக் கொண்டிருக்கின்ற சத்தியத்தின் சக்தியையெண்ணி வியந்துள்ளேன்!

'சத்தியம்' என்ற சொல், என்னைப் பொறுத்தவரை ஓர் உயிர்ப் பொருளைக் குறிப்பதாகவே நான் பூரணமாக நம்புகிறேன்; 'உள்ளது' என்றும், 'என்றும் உள்ளது' என்றும் சான்றோரும், ஆன்றோரும் நம்பிய எதுவோ அதுதான் சத்தியம் என்பது எனது நம்பிக்கையாகும்!

சத்தியம், சிவம், சுந்தரம் என்ற முக்குறிகளை நம்முன்னோர் உச்சரித்து வந்ததன் காரணத்தை நான் முழுதாக அறியாது போயினும், என்னுள்ளதிர்வுகளால், இதிலுள்ள ஆழமான அர்த்தத்தை நான் உணர்ந்து கொள்கிறேன்.

ரமணர் பெருமான், அருணாசலத்தின் அதிர்வு களை உணர்ந்ததன் மூலம் ஆன்மீகப் படிக்கற்களுக்குத் தொண்டு செய்துள்ளார். சத்தியத்தின் சான்றாக அருணாசலத்தை அவர் தரிசித்தார்.

நான் தமிழை, என் தாய் மொழியைச் சத்தியத்தின் சான்றாகத் தரிசிக்கிறேன்! என் முன்னோர் ஏற்றி வைத்த ஞான விளக்கினைச் சத்தியப் பேரொளியாக நான் வண ங்குகிறேன்! என் முன்னோரை முழு நம்பிக்கையோடு துதிக்கிறேன். உலகினையணைத்து, யாதும் ஊரெனக் கண்ட என் முன்னோர், பிரபஞ்சக்கோள்களின் சுழல் திசை

படிப்பகம்

யுடன் வாழவிரும்பியவர்கள்!. அதனால் அவர்கள் இயற்கையைப் போற்றிப் பணிந்தவர்கள்! இறை சக்தியை உணர்ந்தவர்கள்! சத்தியத்தோடு... சத்தியமாக நிலைத்தவர்கள்.

உண்மையில் நான் எதையும் புதிதாக எழுதவில்லை!எதையும் புதிதாக எண்ணவில்லை! எதையும் புதிதாக வெளிப்படுத்தவில்லை! என்னுள்ளிருந்து என்முன்னோரே ஒலிக்கிறார்கள்! 'தமிழோசை' என்று எங்கள் கவிமாமுனிவன் பாரதி குறித்தது எமது முன்னோரின் உயிரோசையைத் தான் என்று நான் நம்புகிறேன். தொல்காப்பியனும், வள்ளுவனும், இளங்கோவும், கம்பனும் எழுதாததையா நாம் எழுதிவிடப்போகிறோம்.

நான் எனது ஒன்றரை வயதில், எந்தையை இழந்தேன்! பத்தொன்பது வயதில், என் தாயையும் பறி கொடுத்தேன்! இருபத்து நான்கு வயதில், எனது ஊரையும், உறவுகளையும், தாய்த் திருமண்ணையும் பிரிந்தேன்! முப்பது ஆண்டுகளைப் புலம் பெயர் வாழ்விற் கழித்துள்ளேன்!

இழப்புக்கள் எனக்கு உரமாகின! பிரிவுகள் என்னைப் புடம்போட்டன! இன்னல்களும் இடிகளும் எனக்கு இறைமையைக் காட்டின! இளமைக் காலத்திலிருந்தே மேற்கில் வந்து வாழ நேர்ந்ததனாலோ என்னவோ, என் வாழ்வின் அனுபவங்கள், அவதானங்கள், எனக்குள் எத்தனையோ அலைகளை எழுப்பின! தேடல்களைத் தட்டி விட்டன! இவற்றின் விளைவாக என்னைக் கிழக்கு நோக்கிக் கரங்கூப்பவைத்தன; கண் பனிக்க வைத்தன!

விஞ்ஞானக் கல்வியைப் பயின்றதாலோ என்னவோ, மெய்ஞானத்தில் எனக்கு ஈடுபாடு அதிகரித்தது! அறிவின் ஆர்ப்பாட்டங்கள், உணர்வின்

www.padippakam.com

அதிர்வுகளுக்குள் என்னைச் சரணடைய வைத்தன! நாத்திகம், சிவப்புச் சிந்தனை, இவற்றிலிருந்து நான் வெகுதொலைவில் வாழ்பவன்! புத்திசீவிகளின் புழுகுப் ப்பொய்களை முற்றாக வெறுப்பவன். பெண்மியம் பற்றி எனக்கெனக் கருத்துக்கள் நிறையவுண்டு! காரணம், சத்தியத்தை நான் முற்று முழுதாக நம்புகிறேன்!

என் தாயகத்தின் புழுதியில் எனது ஊரின் முற்றத்தில், நுகர்ந்த எனது கலையும், கவிதையும் என்னுள் அங்குமிங்கும், சாம்பல் மூடிய அக்கினிப் பொறிகளாக ஒளிந்து கிடந்தன போலும்! அவ்வப்போது காற்றுப்படும் போதெல்லாம், சுவாலை விட்டெரிந்தன! ஏடுகளிலும், அரங்குகளிலும், அலைகளிலும், கவிதைகளாக, கலப்படைப்புகளாக வெளிப்பட்டன! கவிப் படைப்புகள், கலைப்படைப்புகள், நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் என முப்பதாண்டுகளாக முகிழ்த்து எழுந்தன.

பால வயது முதல், இன்று வரை, நான் ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும், அழுது கொண்டும், சிரித்துக் கொண்டும் இருக்கிறேன். இவற்றின் வெளிப்பாடுகளைக் கவிதையென்றும், நாடகமென்றும், நாட்டிய நாடகமென்றும் என்னைச் சுற்றியுள்ளவர்கள் இனங்கண்டு எனக்குச் சொல்கிறார்கள். எனது எழுத்துக்கள் பலவற்றை நான் பேணிப் பாதுகாக்க முடியவில்லை. 1983க்குப் பின்னர், எழுதியவற்றில் ஒரு பகுதியைத்தான், கவிதைகளாக இந்நூலிற் தருகிறோம். அத்துடன் ஞாபகத்தில் நிற்கும் ஒரு சில கவிதைகளும், இடம்பெறுகின்றன.

என் உயிரில் இருந்து ஓசை எழுந்தது!
என் உணர்வில் இருந்து ஓசை எழுந்தது!
என் உறவில் இருந்து ஓசை எழுந்தது!
என் உலகில் இருந்து ஓசை எழுந்தது!

எனது தாயக மக்களின் விடுதலைப் போராட்டத்திலுள்ள

படிப்பகம்

www.padippakam.com

நியாயத்தை, என் உணர்வோசை மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகிறதென எண்ணுகிறேன்! ஒரு திட்ட மிடப்பட்ட இன அழிப்பினையும் இது சார்ந்த அரச பயங்கரவாதத்தையும் எதிர்த்தும், சனநாயகம் என்கிற போர்வைக்குள் நின்று கொண்டு சிங்களப் பேரினவாதம் செய்த, செய்கின்ற கொடுமைகளை ஏற்க மறுத்தும், நான் எழுப்பிய ஓசை, உணர்வோசையாக எழுந்துள்ளது!

சத்தியத்தின் எதிரொலியாக, தர்மத்தின் ஏகோபித்த பிரவாகமாக எமது மண்ணில் உருவெடுத்ததே, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைமை என்பதை நான் பூரணமாக ஏற்றுக் கொண்டிருக்கிறேன்! இத்தலைமை மட்டும், நமது தேசத்திற்குக் கிடைத்திருக்காவிடின், நாம் இந்தப் பூகோளத்திலிருந்தே துடைக்கப்பட்டிருப்போமென்பதில் எனக்கு எதுவித ஐயமுமில்லை! தெய்வத்தமிழின் தொன்மைச் சிறப்பினாலும், எனது தாயக மக்களின் துன்ப யாகத்தினாலும் ஏற்பட்ட விளைவே எமது தலைமை என்ற ஆன்மீக நம்பிக்கையுடன் நான் எமது மக்களின் தலைமையைப் போற்றியுள்ளேன். "தலைவன் வருவான், தலைவன் வருவான்" என எழுபதின் கடைசிப் பகுதியிலேயே "லண்டன் முரசு" என்ற ஏட்டிற் பாடியிருக்கிறேன்!

'சத்தியம் சாகாது' என்ற இந்த நூல், என் ஆத்மாவாற் பூசிக்கப்படும் பாரதத்தாயின் மடியிலிருந்தே மலர வேண்டுமென்ற பிடிவாதமான எண்ணம் என்னுள் ஆழமாக வேர்விட்டிருந்தது! என் நெஞ்சிலிருந்து எனக்குட் தர்மாவேசத்தை யெழுப்பும் எனது சான்றோரும், ஆன்றோரும், எனது தாயகமாம் தமிழீழத்தின் வழி, தமிழகத்தின் ஊடாக, இந்தியத்தின் பெரு வெளியிற் பரந்து உலவுகிறார்களென்ற நம்பிக்கை என்னை ஆட்டிப் படைப்பதுண்டு! பாண்டிச்சேரியில், பாரதியின் இல்லத்தில்

படிப்பகம்

www.padippakam.com

நின்று கொண்டுதான், 'சத்தியம் சாகாது' என்ற இந்நூல் தமிழகத்திலிருந்து வெளிவர வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன். எனது தாய் மண்ணின் பூகம்ப மலர்களை எமது மக்களின் கண்ணீர்த் துளிகளைப் பதிவு செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமையிலிருந்து விலகி விடக்கூடாதென்ற எண்ணம் என்னுள் எழுந்தது!

எனது எழுத்துக்கள், கவிதைகளாகவும், நாடகங் களாகவும், பாடல்களாகவும், நாட்டிய நாடகங்களாகவும், புலம்பெயர் நிலங்களில், அரங்குகளிலும், அலைகளிலும் பதிவு செய்யப்பட்டாலும், ஏட்டிலும் பதிவாக வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது!

பத்து ஆண்டுகளின் முன்னரே, எனது தம்பிகள் சிலரால் எடுக்கப்பட்ட முயற்சியை, நான் அன்று ஆமோதித்து ஆதரவு கொடுக்கவில்லை! என்று, நான் தமிழகம் செல்ல நேர்ந்ததோ, அன்று, அந்த மண்ணில் நின்று கொண்டுதான் 'சத்தியம் சாகாது' என்ற நூலிற்கு நெஞ்சாரக் கட்டியம் கூறினேன்!

அரசியலுக்கப்பால் இந்திய மண்ணை, ஒரு ஞானபூமியாக ஏற்றவன் நான்! அதனை, உச்சிமோர்ந்து உள்ளம் சேர அணைத்து மகிழ்பவன் நான்! எனது தாயகமான தமிழீழத்தை, ஏற்றுக் கொண்டு, அதனைத் தழுவியணைத்து வரவேற்கும் பொறுப்பும் உரிமையும் தமிழகத்துக்கே உண்டெனக் கருதுபவன் நான்! மேலைத் தேயத்திற்கு ஞான ஒளியூட்டி, உலகப்பந்தினை தர்மத்தை நோக்கி நகர்த்தும் சக்தி பாரதத்திற் கேயுண்டென நம்புபவன் நான்!

அரசியற் சீர்கேட்டினால், மத, இடப் பிளவு களினால், சமுதாய இழிவுகளினால், உலகின் உயர்வான இடத்தைத் துறந்து, இருளில் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு இந்தியா முனகுவதை என்னாற் பொறுக்க முடிவதில்லை! இந்தியா என்னும் புண்ணிய

www.padippakam.com

பூமியை, இந்தியாவே இன்னும் முழுதாகப் புரிந்து கொள்ளாதது, இந்த உலகின் பேரிழப்பாகும்! இந்தியா, எமது தாயகத்தின் உரிமைப் போராட்டத்தை, எமது மக்களின் மனித நேய உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் நாள் வரவேண்டுமென்ற பிரார்த்தனையுடனேயே, இந்த நூலை அந்த மண்ணிலேயே பதிப்பாக்கம் செய்ய விழைந்தேன்! இதை நிறைவேற்ற நான் கொடுத்து வைக்கவில்லை. இந்நிலையில் இந்த நூலினை செவ்வனே குறுகிய காலத்தில் அச்சிட்டுத்தந்த வாசன் அச்சகத்தினருக்கு என்றும் கடப்பாடுடையவனாவேன்.

இந்நூலிற்கான ஓவியங்களை வரைவதற்கு, தமிழகத்திலுள்ள ஓவியர்களைத் தேடினோம்! நாங்கள் அணுகியவர்களுள், பிரபல ஓவியர்கள், ஜெயராஜ், ஷியாம் ஆகியோர் மட்டுமே இதற்கு ஒத்துக் கொண்டனர்! அவர்களிற்கு எனது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது கவிதைகளை நூலாக்கம் செய்ய வேண்டுமென்ற பேரார்வத்தோடு, பத்தாண்டுகளுக்கு மேலாக அன்றிலிருந்து இன்றுவரை விடாப்பிடியாக முயன்ற என் தம்பி நாயன்மார்கட்டு சிவகுமாரனையும், அவனுக்கு உறுதுணையாக நின்று இந்நூலிற்கான பணிகளைச் செய்து வருகின்ற அவனது மனைவியையும் எழுமைக்கும் என்னால் மறக்க முடியாது என எண்ணு கிறேன். எனது நன்றியை வெளிப்படுத்த வார்த்தைகள் அறியேன்.

இத்துடன் எனது கலைப்பணிக்கும், கவிதை யாகத்திற்கும் நேராகவும், மறைமுகமாகவும் உதவும் பல நண்பர்களை நான் இதயத்திருத்தி அவர்களுக்கு என் நன்றிகளைக் கூற விரும்புகிறேன். அவ்வாறு வாழ்த்தியும், ஊக்குவித்தும் வந்த, வருகின்ற உள்ளங்களை நினைவுகூருகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

நான் சோர்ந்து விடும் வேளைகளிலும், ஒதுங்கி விடஎண்ணும் நேரங்களிலும், என்னை அன்போடு அணைத்து அன்பால் எனக்கு ஊக்கம் தந்து எனது கலைப்பயணத்தைத் தொடர வைத்தவர்களையும், தமது கலையார்வத்தினாலும், தேசம், தேசியம், தெய்வம் என்ற நிலைகளில் தாம்கொண்ட பற்றினாலும் என்னோடு இணைந்து பற்பல கலைப்படைப்புகளை நான் தருவ தற்கு உறுதுணையாக நின்றவர்களை நான் பட்டியல் போடத் தொடங்கினால் அது புத்திசாலித்தனமான செயலாக இருக்காதென நினைத்து அச்செயலைத் தவிர்க்கிறேன்.

எனது பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய தமிழ்ப்பேரறிஞர் வித்துவான் க.ந.வேலன் அவர்கள் இன்று நம்முடன் இல்லை. அவரது ஆசியுடனேயே இந்நூல் வெளிவரவேண்டுமென விரும்பியிருந்தேன். எனது இந்த ஆசை நிறைவேறாதுபோயினும் "வருக தமிழர் பொற்காலம்" எனும் அவரது நூலிற் பதித்துள்ள "புலவனுக்குப் பொன்விழா" என்ற கவிதையினை இந்நூலுக்கு ஆசிச்செய்தியாக நான் பதிவு செய்கின்றேன்.

தமிழ் ஞானி பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களை அவரது இறுதி நாட்களில் நேரிற் கண்டு அவரது ஆசியை எழுதாக்கிளவியாய் நேரில் பெற்றேன்.

எங்கள் தாயகத்தின் விடுதலைப் பேரிகையாக முரசொலிக்கும் எங்கள் காசி அண்ணா, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களுக்கும், எனக்கும் இடையிலான பெரு நட்பின் உரிமை காரணமாகவும், இள வயதிலிருந்தே எனக்கும், எனது கவிதைக்கும் அறிமு கமானவர் என்பதாலும் அவரது கவியுள்ளம் காரண மாகவும் அவரிடமே இந்நூலிற்கான வாழ்த்தோசையைப் பெற்றுள்ளேன் . உலகத் தமிழரின் உணர்வுகளைத் தமிழ் பாலும், தமிழீழத்தின் பாலும் ஈர்க்க வைக்கும் கவிஞருக்கு

படிப்பகம்

www.padippakam.com

என் நன்றிகள் பலகோடி.
இனி எனது குடும்பத்தினர்!

என்னுடைய தமிழ் உணர்வுகாரணமாகவும், என் தாயகப்பற்றுக் காரணமாகவும், எனது வாழ்வின் பெரும்பகுதியைப், பொதுவாழ்வுடன் இணைத்துக் கொண்டவன் நான். கடந்த 22 ஆண்டுகளாக என்னுடன் தொடர்ந்து வரும் எனது மனைவியை எண்ணும்போது அவள் மீது எனக்கு மிகவும் அனுதாபம் ஏற்படுவதுண்டு. எனது அன்பையும் ஆத்திரத்தையும் தாங்கும் பாத்திரத்தையேற்று அவள் என்னுடன் பயணித்து வருகிறாள். இதிலுள்ள கஷ்ட, நஷ்டங்களை நான் உணர்வேன். சகிப்பதும், தகிப்பதும், சுகிப்பதும்தான் தமிழ் வாழ்வியலின் அர்த்தம் என்பதை நாம் உணர்ந்து வாழ்கிறோம். என் பிள்ளைகளும் என்னை சகிக்கிறார்கள். அவர்களுக்கும் எனது நன்றி.

எனது அனைத்து முயற்சிகட்கும் தோல்வி களுக்கும் வெற்றிகளுக்கும் துணை நிற்பது எனது இறை பக்தியே என்பதை நான் நன்கு புரிவேன். வாழ்வின் சகதிகளிற் கால் வைத்து நடந்த என்னையும் ஒரு பொருளாக்கி உயர வைத்த அந்தப் பராசக்தியின் பாதங்களை நான் கணமேனும் மறந்தேனில்லை.

வெள்ளையுடுத்தி, வெண்ணீறணிந்து, கண்ணீ ராற் தன்னவனின் திருவுருவத்தாள் நனைத்து, “வல்ல இறைவனவன் நம்மைவருத்துவது கொல்லவல்லக் கொல்லவல்லப் பொல்லா வினைபோக்க” என்ற பெருநம்பிக்கையோடு, ‘நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்’ என்ற சுந்தரர் பாடலின் இறுதி யடிகளான ‘ஆளிலி யெம் பெருமான்... இதை அட்டித்தரப்பணியே’ என்ற அடிகளைத் தன் கையறு நிலைக் கவசமாகப் பாடும் போதெல்லாம் விம்மி விம்மியழுது, இறைபக்தியே தனது வாழ்வின் துணையாக வாழ்ந்து, என்னுட் சத்தியத்தின் வித்தூன்றி வளர்த்த என்னம்மாவின் பாதங்களில் இந்நூலைச் சமர்ப்பி த்துள்ளேன்! எனது பத்தொன்பது வயதில், அவளிழப்பில் நானெழுதிய கவிவரிகள் இந்நூலிற் பதிவாகின்றன!

படிப்பகம்

அப்பொழுதே எனது தமிழ் வாழ்வை அவள் பாதத்திற்குச் சமர்ப்பித்துள்ளேன்! இன்று இந் நூல்மூலம், அதனை மீள்பதிவு செய்கிறேன்!
பெற்றோரிற்குப் பின்னர் என்னை வளர்த்து மனிதனாக்கிய சோதர சோதரியரை என் வாழ்வோடு பதித்துக்கொள்வதைத் தவிர வேறெந்த வழியிலும் எனது நன்றிக்கடனை நான் தீர்க்க இயலாது.
சீரடி சாயிபாபாவும், சத்திய சாயிபாபாவும், கடந்த 24 ஆண்டுகளாக என்னுள் ஐக்கியமாகி விட்ட பெரு மகான்கள். இவர்களை நான் வழிபட்டு வருகிறேன். பாடல்களை, நாட்டிய நாடகங்களை எழுதியுள்ளேன். 2002-ஆம் ஆண்டு புட்டபர்த்திக்கு சென்றேன். வரிசையில் நின்றபடியே வரிகளைக் கொட்டினேன். மண்டபத்தில் முன் இருக்கை கிடைத்தது. பாபாவின் முக தரிசனம் மூன்று அடிகளுக்குமுன் நிறைந்து தோன்றியது. இந்தக் காட்சியை சில ஆண்டுகளுக்கு முன்னரே நெஞ்சிற் கண்டு பாடலாக்கி உள்ளேன். பார்வையினால் பகவான் அருளினார். இதுவே எனக்கும், எனது பாவங்களுக்கும் போதும் என்று எண்ணி விடைபெற்றேன்.

எனது மகன் அவன் தாயின் கருவில் இருந்தபொழுது ஒருநாள் ஒரு பாடல் வரி பிறந்தது. “சத்தியன் பிறந்துவிட்டான்; என்சந்ததி தழைத்திருக்க” இந்த வரிகள் பிறந்த உடனேயே என் குழந்தைக்குச் “சத்தியன்” என்று நானும், எனது மனைவியும் பெயர் சூட்டினோம்.

சத்தியம் நிலையானது
சத்தியம் அழகானது
சத்தியம் சாதிக்க வல்லது

சத்தியம் சாகாது - அது
தீயிலும் வேகாது
நித்தியமாயிருக்கும் - அது
நீதியின் வழி நடக்கும்

அன்புடன்
நல்லதம்பி சிவநாதன்.

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்தோசை

'புலவர்' - அவர் 'பா' படித்துப்பெற்ற பட்டம் அல்ல 'பா' படைத்துப் பெற்ற பட்டம். புலமை அவருக்குப் பயில்வு அல்ல - இயல்பு. அவர்தான் புலவர் சிவநாதன்.

பள்ளிக்கூட மாணவனாக அவர் வாழ்ந்த நாட்களிலேயே பழகியிருக்கிறேன். பகலில் தமிழே நினைவாய் - இரவில் தமிழே கனவாய் வாழ்ந்தார். தன் நினைவுகளையும் கனவுகளையும் அந்த இளம் நாட்களில் என்னோடு பகிர்ந்துகொண்டவர் அவர்.

புலமை அவர் இயல்பு என்றேனே- வேறொன்றுமில்லை - கருவில் வந்தது. தந்தையார் ஊரறிந்த புலவர். இவர் புலவர் பிள்ளை. குயிலின் குஞ்சுக்குப் புகட்டினால்தான் வருமா பாடல்? சிவநாதன் புலவராய்ப் பிறந்தவர். அவரே சொல்கிறார்:

'பெற்ற தாயும் பெரும் புலவர்
பிறப்பிற் கொடுத்த அருள்வளமும்
உற்ற கொடையாய் உயிர் நின்று
ஊற்றாய் என்னை வளர்ப்பனவாம்...'

சிவநாதன் தமிழையும் தமிழ் மண்ணையும் பற்றி மட்டுமே சிந்திப்பவர். தமிழினப் பற்றாளர்.

'வெறி' எனச் சிலர் இதைச் சொல்லலாம் - இதுவே தமிழனுக்கு இன்று தேவைப்படும் 'நெறி' என்பேன் நான்.

மண்ணின் மணம் சுமந்தே அவர் தமிழ் மலர்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

'உப்புச் சொதியும் உடன் சோறும்
ஊறப்பொரித்த புதுமீனும் -
முற்றத் திருந்து நிலாவொளியில்
முகங்கள் சொலிக்க உண்டதனை
செத்துக் கிடக்கும் போதெனது
செவிக்குள் யாரும் சொன்னாலும்
தட்டை எடுக்க எழுந்திடுவேன்
தாயின் ஊரை நினைந்திடுவேன்!

இதுதான் சிவநாதனின் இலக்கியம்.

அன்னை மண்ணை நினைந்து- அவள் தாய்மடியின் உறவுக்காய் ஏங்கி அழுது துடிக்கிறது அவர் தமிழ்.

இலங்கைத் தீவே ஒரு காலத்தில் தமிழர் தாயகமாகத்தான் இருந்தது. இருந்தும் என்ன? இற்றைத் தமிழனின் இழிநிலை கொஞ்சமா? இதோ - சிவநாதன் பாடுகிறார்

'எங்கள் மண்ணிலும் எங்கள் கடலிலும்
பங்கு கேட்கும் பாவியாரானோம்...'

விளைவு - தமிழீழத்தின் விடுதலைப் போர் என்கிறார் அவர்.

'நீண்ட பயணத்தில்
நெருப்பினை உண்டோம்'

படிப்பகம்

www.padippakam.com

வீறுமிக்க தமிழீழத்தின் விடுதலைப் போரை விளக்கச் சிவநாதனின் வீச்சான இந்த இரு வரிகளே போதும்.

தலைமிசை வைத்து மாவீரர்களைப் போற்றுகிறது சிவநாதன் தமிழ்.

'ஊரைப் பிரிந்து உறவினைத் துறந்து
போரிற் பிணைந்து பொல்லாத பகைவரின்
வேரைப் பிளந்து வீரச் சாவினை
ஆரத் தழுவிய மாவீர மறவரின்
பாதம் பணிந்து பாதையை வகுப்போம்!

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் சிங்கள சிறீலங்காவின் முன்னாள் தலைமை அமைச்சர் இரணிலுடன் செய்த உடன்படிக்கையின் வலிமையை சிவநாதன் தமிழ் எப்படிப் பதிவுசெய்கிறது பாருங்கள்.

'கையெழுத்திட்டான் கரிகாற் சோழன்
மையால் அல்ல - மாண்டவர் உயிரால்

புலவர் சிவநாதன் தமிழ் புயலின் ஆற்றல் கொண்டது.

அவர் எழுதவேண்டும் இன்னும் இன்னும் என்பதே என் அவா.
வாழ்த்துகிறேன்.

காசி ஆனந்தன்
04.08.2004

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# வேலன் தமிழ் வாழ்த்து

புலவ! சிவானந்த! பொறியியற் புலமையாள!
நிலவொளி யெனக்குளிர் கவிதை பொழிந்து நீ
குலவிடக் கூட்டிய விருந்திது புதுமையே
நலமுறு மனையொடு நலமுற வாழ்கநீ!

நல்ல தமிழ்ப்புலவன் நாடறிந்த நற்றமிழன்
வெல்லத் தமிழ்க்கவிக்கு வேந்தனாய் வாழ்ந்த மகான்
நல்ல தம்பி பெற்றமகன் நான் விரும்பும் தமிழ்நெஞ்சே
வெல்லும் தமிழ்நீ வேருக்கு நீரேநீ வாழ்கவாழ்க!

உள்ளொன்று புறமொன்றாய் உறவாடும் உலகில்நீ
கள்ளமறியாய் கவியறிவாய் கதிரொளியை முகில் மறைக்கும்
வெள்ளத்தை அணைதடுக்கும் வீழ்ந்தா போகும்
உள்ளத்தால் வாழ்கின்றாய் உலகையே வெல்வாய் நீ!

உள்ளத்தால் உலகத்தைப் பார்க்கின்றாய் நீ
உள்ளத்தால் உலகத்தைக் கேட்கின்றாய் நீ
உள்ளத்தால் உலகோடு வாழ்கின்றாய் நீ
கள்ளத்தார் ஈதறியார் கடவுட் காட்சி

நெஞ்சில் உதிப்பதை உரைக்கின்றாய்
வஞ்சப் புகழ்ச்சியை வெறுக்கின்றாய்
தஞ்சம் தமிழென நினைக்கின்றாய்
பஞ்சைத் தமிழனுக்காய் உழைக்கின்றாய்

படிப்பகம்

www.padippakam.com

தாயைப் பிரிந்தோம் தாய்நாட்டைப் பிரிந்தோம்
பேயைப் போலலைந்து பிறநாட்டிற் கையேந்தி
வாயைப் பெரிதாக்கி வயிற்றை நிரப்புகின்றோம்
தீயிற் புகுந்தெமக்காய் தியாகங்கள் புரிகின்றார்

பொன் விழாக்காணும் புலவ நீ வாழ்க
பொன்போலும் மனைபெற்றாய் பொழிந்துநீ வாழ்க
என்போலும் நன்நெஞ்சம் எந்நாளும் நின்பக்கல்
பொன்போல ஒளிவீச மேகமாய் வாழ்த்துகிறோம்

வித்துவான் க.ந.வேலன்
இலண்டன்

நன்றி: வருக, தமிழர் பொற்காலம்! (கவிதைத் தொகுப்பு)

படிப்பகம்

www.padippakam.com

## ஞானன் அருள் வாழ்த்து

புலவர் தனது தமிழகப் பயணத்தின் போது, முதுபெரும் ஞானி, பேராசிரியர் **அ. ச. ஞானசம்பந்தன்** அவர்களைக் கண்டு, வணங்கி, ஆசி பெற்று, எழுதாக் கிளவியாகப் பெற்ற வாழ்த்து.



படிப்பகம்

www.padippakam.com

# பதிப்போசை

படைப்பது மட்டுமே புலவன் தொழில். அதற்குமேலே மக்கள் மத்தியிலே கொண்டுசென்று படைப்பது அவன் வேலையல்ல. ஆனால் ஈழத் தமிழர்களாகிய நமக்கு அவ்வாறான படைப்புகளை வெளியிடுகின்ற பணியினைச் செய்யவும் படைப்புக்க ளுக்கேற்ப ஊதியமோ அன்றி வெகுமதியோ படைப்பா ளிகளுக்கு அளிக்கவும் பதிப்பகங்கள் இல்லாமை பெருங் குறை. படைப்பவனே பணம் செலவு செய்து வெளியிட வேண்டும் அல்லாவிட்டால் அவனது பிள்ளைகள் வெளியிடவேண்டும். இந்த அவலநிலை ஈழத்தமிழர்கள் மத்தியில் தொடரும்வரை எவ்வாறு நல்ல தரமான தமிழாக்கங்கள் வெளிவரமுடியும்.

தமிழவையினராகிய நாம் ஒருவகையில் மேற் சொன்ன வரையறைக்குள் அடங்கியபோதும் எமக்கு வேறுவழி தெரியாததால் புலவர் கவிதையினை அவ்வாறே வெளியிட முனைந்தோம்.

இலங்கையின் தேசியகீதத்தினை தமிழில் தந்தவர் வட்டுக்கோட்டை முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள். அவரது மகனார் சிவநாதன் அவர்களுக்கு கவிதை ‘ஊனும், ஊழும்’.

கடந்த 30 ஆண்டுகளுக்குமேலாகக் கவிதை, கட்டுரை, நாடகம், நாட்டிய நாடகம், இசைப்பாடல்,

படிப்பகம்

www.padippakam.com

அரங்க நிகழ்வுகள், வானொலி நிகழ்ச்சிகள் என்று இவரது இலக்கியப் பணி பல்வேறு பரப்பினில் ஆழமாக விரிந்திருக்கிறது. இதற்குமேலாக இவரது கவிதை இவரது குரலிலேயே சிம்மக்குலாய் முழங்கும்போது ஆழமான கவிதை அழகும் பெற்றுவிடும்.

காற்றிற் கலந்த கவிதைகள் காலத்தின் பொன்னேடுகளிற் பொறிக்கப்படவேண்டிய கடமையும் உண்டல்லவா? கவியரங்குகளில் மட்டுமல்லாது காலத்தின் சுவடுகளை தன்கவிதைகளிலே பதித்து நாளாந்தம் அவரெழுதிய கவிதைகள் எத்தனையோ. புலவரது கவிதைகள் கவியாழம், அழகு என்பவற்றோடு தீர்க்கதரிசனப் பார்வையும் நிறைந்தவை.

தனது ஆக்கங்களைப் பேணிப்பாதுகாக்கின்ற பண்பு அவரிடம் கிடையாது. ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்று எழுதியது மட்டுமே அவர் பணி. தலைவன் வருவான் தலைவன் வருவான் என்ற கவிதை 1977இல் இலண்டனில் வெளியிடப்பட்ட ‘இலண்டன் முரசு’ தமிழ் இதழில் வெளிவந்ததாய்க் கேள்வியுற்று அதனைப் பெற்று இத்தொகுப்பினில் இணைக்க முனைந்தும் அது முடியாது போய்விட்டது. இவ்வாறு அவரது பல கவிதைகள் காற்றில் கரைந்ததும், கைதவறிச்சென்றதுமாய்க் காணாமற் போய்விட்டன. என்றாலும் தமிழின் மேன்மை கருதி பலர் ஆங்காங்கே சேமித்து வைத்திருந்த கவிதைகளையும், பிற்காலத்தில் புலவர் ‘மனந்திருந்தி’ பாதுகாத்து வைத்திருந்த கவிதைகளையும் ‘சத்தியம் சாகாது’ என்ற கவிதைத் தொகுப்பாக வெளியிடுகின்றோம்.

முற்றுமுழுதாக அவரது கவிதைகள் அத்தனையையும் ஒரு தொகுப்பாய் வெளியிடுவதென்பது

படிப்பகம்

www.padippakam.com

சுலபமான காரியம் அல்ல. அதே வேளை அதன் பருமனும் கையினுள் அடங்கக்கூடியதாகாது. எனவே ஒரு 500 பக்கங்களுக்கு அடங்கக்கூடிய வகையில் பகுத்தெடுத்துத் தந்திருக் கிறோம். புலவர் பணியில் இது ஒரு ı பருக்கையே.

புலவன் படைத்துள்ளான் அதனை நாம் பதிப்பித் துள்ளோம். ஆனாலும் சமூகத்தில் சென்றடைய வேண்டிய அனைத்துப் பரப்பினிற்கும் கொண்டு செல்லுதல் என்பது நம்மால் மட்டும் சாத்தியமானதல்ல. ஆகவே இலக்கிய ஆர்வலர்கள் தாங்களும் இதனை வாங்கி, பாடசாலைகள், நூலகங்கள்.... எனப் பரிசளித்து, புலவன் பணிக்கு ஊக்கமும், அங்கீகாரமும் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தமிழுலக ஆதரவு அவரது ஏனைய படைப்புகளையும் நூலுருவாக்குமென நம்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

உயிரோசை


| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து | 1 |
| புட்டபர்த்தி பாபா | 2 |
| சமர்ப்பணம் | 3 |
| என் தமிழ் | 9 |
| பாபா | 11 |
| அபிராமி துதி | 13 |
| பாரதி தரிசனம் | 15 |
| முற்றத்தில் விளையாடவேண்டும் | 16 |
| தாய்பதம் பற்றுகின்றேன் | 17 |
| விருட்சம் | 17 |
| கலைஞானம் அருள்வாள் கலைவாணி | 18 |
| பிரார்த்தனை | 19 |
| என்னுறவு | 20 |
| கவிதை | 21 |
| கடல்மீது அலையாகுவாள் | 22 |
| சோர்வகற்றும் சோதிமுகம் | 23 |
| பிறப்பின் பெருமை | 23 |
| சொல்லாடற் சுகம் | 23 |
| அரவணைத்தாடுவம் கூத்தே | 24 |
| மன்னிப்பு மனு | 24 |
| எனது இளமைக்காலக் கவிதைகள் | 25 |


படிப்பகம்

www.padippakam.com


நிலத்துமீன்.......................................... 27

கவிஞானம்.......................................... 52

எழுதவைத்த சத்தியத்தை என்ன சொல்வேன்......... 53

கவிதை செயும் சொற்கோ போற்றி.................... 54

அன்னையுடன் என்னுறவு.................................. 55

இளமை மலரவைத்தாள்.................................. 56

என்றும் வாழ்ந்து சிரிப்பேன்.................................. 57

தமிழ் தந்து பெருமைசெய்தாள்.................................. 58

பெண்ணழகைப் போற்றுகின்ற பக்தனானேன்......... 60

என்னுள் வாழும் எனது பங்கயம்.................................. 61

உயிரில் அவள்.................................. 66

பூச்சறியா மெய்யழகு.................................. 67

என்பேனா என்கவிதை.................................. 68

என்னூர்.................................. 73

சரஸ்வதி துதி.................................. 85

உலகுய்யட்டும்.................................. 85

விழிப்பு.................................. 87

என்னுயிரே.................................. 92

ரமண தரிசனம்.................................. 93

பாரதமாதா ஓர் முறை உனை.................................. 94

உயிரெரியக் கண்டனையோ.................................. 95

நம்புவேன்.................................. 96

சூத்திரதாரியென்தாய்.................................. 96

இளநெஞ்சின் ஏக்கம்.................................. 97

அன்னை வருவாள்.................................. 98

இளமைக்கு அழைப்பு.................................. 99


படிப்பகம்

www.padippakam.com

வேண்டேன் வேண்டேன்........................................ 99
என்னுளே தீச்சுடரொன்று........................................ 100
மந்திரச் சொல்லருள்வாள்........................................ 100
என்பாட்டில் என்பாட்டு........................................ 101
பிறப்பின் பெருமை........................................ 102
ஒலிக்கும் குரல்........................................ 102
முத்துமாரி........................................ 103

## உணர்வோசை

பரணி எழுதுவோம்........................................ 107
பிக்குகள் மூட்டிய பெருந்தீ........................................ 109
சுருண்டு படுக்கலாமோ........................................ 110
தாயகக் குழந்தைகட்கு........................................ 111
பூ பதித்தாள் எங்கள் பூபதித்தாய்........................................ 112
திலீபன்........................................ 113
தெருவினில் அலைகுவதோ?........................................ 114
காதல் நோய்........................................ 115
ஞானியைத் தேடுகிறேன்........................................ 116
சொல்ல உள்ளம் குமுறுதடா பாரதி........................................ 117
வீரவிளக்கேற்றி வைத்து........................................ 118
காலையில் நீ........................................ 119
நெருப்பிலிட்டாற் தாங்குவையோ கோவர்த்தனா.... 120
புலக்கோலம்........................................ 121
தாயினைக் கொன்றவன்தாள்களைக்........................................ 122
பொன்மனச் செம்மல்........................................ 123
அடலேறு........................................ 124

படிப்பகம்

www.padippakam.com

ஆனையிறவு மீட்பு.................................................... 130
தமிழ்த்தாய் வாழ்த்து.............................................. 137
தமிழர் விதி........................................................... 138
புத்தாண்டே வருக.................................................. 138
தமிழவையில் ஒரு கவியுரை................................... 140
செம்மணிப் படுகொலை........................................... 145
கையெழுத்திட்டான் கரிகாற் சோழன்..................... 146
தாயக அதிர்வுகள்................................................... 156
வெற்றித் தெய்வத்தை வேண்டுங்கள் ..................... 158
அகதிகள் கதை....................................................... 159
தமிழர் புதுயுகம்.................................................... 160
தளபதி கிட்டுவின் நினைவாக................................. 162
இறைகுமாரன் நினைவுக் கவிதை........................... 163
பாவி...................................................................... 164
தவிப்பு.................................................................... 166
செங்களம் புகுந்த சிங்களமே................................. 167
நம் நாடு பூக்கும் வேளை........................................ 168
ஒன்று படு.............................................................. 171
ஊர்க்காத்து............................................................ 172
மாவீரம் தவழும் மண்............................................ 174
1994 - ஒரு தரிசனம் ............................................. 175
வீர விரதம் நோற்றுவோம்...................................... 178
சிங்கள இனமே சிந்திக்கத் தொடங்கு...................... 182
சேற்றுப் பயணம்..................................................... 191
விபரணக் கவிதை - 2003........................................ 194
விழுந்து புரண்டிடுவோம்........................................ 205

படிப்பகம்

www.padippakam.com

நித்தியம் பெண்ணின் அன்பே........................ 206
பூச்சரங்கள் போகவில்லை........................ 207
காதலினாற் கதிர் சிவந்திருக்கும்........................ 208
வீரத்திலகமிடு........................ 209
பாலையும் காதலைச் சொரியும்........................ 210
நடிகமணிக்கு........................ 211
எங்கள் முத்து மாரியம்மா........................ 212
எங்கள் தலைவனுக்கு இதயத்தால்........................ 213
மீண்டும் தோன்றுக........................ 217
வளர்த்த கடாவின் வஞ்சப் பாய்ச்சல்........................ 218
ஆடிக் கவிதை........................ 234
படைத்தனையே பராசக்தி........................ 243
புத்தனைத் தழுவிய மேகம்........................ 244
வங்கற் கடற் சோழா........................ 246
நாட்டியம்........................ 247
நாளைய தேசம்........................ 248
தமிழை மறக்காதே........................ 249
ஏற்றிடுவோம் தமிழ்த் தீபம்........................ 250
தாய் மண்ணைத் தேடு........................ 251
கறுப்பு ஜூலையை மறப்பமோ........................ 252
நெஞ்சுரம் வேண்டும்........................ 253
ஏ சிங்களமே இன்றுபோய் நாளைவா........................ 254
குடியிழந்த கிராமங்கள்........................ 260
தலைவன் வாழ்த்து........................ 261
கூர்ப்பு........................ 262
பெண்ணவள் புலியானாள்........................ 263

படிப்பகம்

www.padippakam.com

அன்னை அருளேஞ்சற் பா........................................ 264

உறவோசை

மூத்தவள் பிரிவில் வார்த்த வரிகள்........................... 269
வித்துவான் வேலன் நித்தியம் எய்தினார்.................. 277
அக்காளுக்கோர் அன்பு மடல்.......................................... 289
பாசத்துக்குரிய கிட்டுவின் பிரிவில்........................... 292
நாடு கடந்த நட்பின் பிரிவு!............................................ 305
உணர்ச்சிக் கவிஞருக்கோர் உணர்ச்சிப்.................. 312
நெஞ்சம் கொதிக்குதம்மா............................................ 315

உலகோசை

உலகக் கவிஞர்களுக்கு.................................................. 327
கன்னியாகுமரியில்.......................................................... 329
வள்ளுவன் சிலையடியில்................................................ 329
கவியாறு........................................................................ 330
காவேரிப் பாலத்தைக் கடந்தபோது............................ 331
எண்ணெய்ப் போர்.......................................................... 333
வேண்டாம் உலகப்போர்.................................................. 334
தமிழகமே........................................................................ 336
பாரிசு நகரத்திற் தேவியின்.......................................... 338
தாய்.................................................................................. 339
எண்ணுள் எழும் எண்ணச் சமாதிகள்........................ 340

படிப்பகம்

www.padippakam.com


கூடாக்குடும்பம்........................................ 341
அப்துல் ஹமீட்டிற்கு........................................ 346
விழிப்பாய் அல்லேல் வீழ்வாய்........................................ 350
பூமித்தாயின் குழந்தைகளே........................................ 375
சகிப்பு; தகிப்பு; சுகிப்பு........................................ 376
சென்னைக் கடற்கரையில்........................................ 379
ஓ தமிழகமே!! உன்னைத்தான்........................................ 380
மாற்றம்........................................ 382
காமத்திற் காதல்........................................ 383
வேதனை தீர்ந்திட வெளிப்படு இறையே........................................ 385
வாக்கின் வழி........................................ 386
விண்தொட உயருமாமே........................................ 386
தமிழ் ஓலைகள்........................................ 387
அமுது........................................ 397
குரலடங்காது........................................ 410
நம்பிக்கைக் கதிர்கள்........................................ 416
இறைதர்மம்........................................ 419
பாரதமே உனக்காக........................................ 427
புலவன்........................................ 428
கட்சியரசியல் வாதி........................................ 432
உலகக் குழந்தைகளுக்காக........................................ 433
மகாத்மா........................................ 434
வேரின் பலம்........................................ 435
எட்டியுதைத்திட எழுந்திடுவீரோ?........................................ 436
நலிவு நீங்கிடல் கண்டேன்........................................ 437
தேசவழிகாட்டல்........................................ 437


படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் பதம்........................................................................ 438
மரபு........................................................................ 439
திருவாளர் முற்போக்கு........................................................................ 440
பெண்ணின் திறன்........................................................................ 441
கவி கண்ணதாசனுக்கு........................................................................ 442
நம்முன் ஓர் நடிகமலை........................................................................ 443
உலகத் தமிழரை உணரவைத்தவன்........................................................................ 444
சத்தியத் தாயின் பிள்ளைகள்........................................................................ 448
ஊடகர் நடேசன்........................................................................ 450
கூலிக் குரல்கள்........................................................................ 454
கார்த்திகைப் பூவே!........................................................................ 457
சத்தியம் சாகாது........................................................................ 459
முடிவு........................................................................ 471
நன்றி........................................................................ 472

படிப்பகம்

www.padippakam.com



## கணபதி துதி

கலைஞானக் கணபதியைக்
கரங்கூப்பித் தொழுநெஞ்சே!
கலையாவும் கடலாக ஊறும்! - பே
ரலையாகக் கவி வந்து கூடும்!

நிலையான பெருவாழ்வும்
நீங்காத திருயாவும்
கறையானை முகத்தானைச் சேரும்! - அவன்
கழல் வானில் என்னெண்ணம் ஊரும்!

உயிர் நாதம் அவனே!
உயர் வேதம் அவனே!
செயல் யாவும் சித்திக்கும் நெஞ்சே!
பயில்வோர்க்குப் பலமாய்
பணிந்தோர்க்குக் கரமாய்
அருள்வோனை மறவாதே நெஞ்சே!



படிப்பகம்

www.padippakam.com


# புட்டபர்த்தி பாபா!

கண்ணா கண்ணா என்று அழைத்தேன்! - அவன்
காலடி நிழல் தேடிக் களைத்தேன்!

புண்ணாகி யுளம் நொந்து இளைத்தேன்! - புட்ட
பர்த்தியின் குரல் கேட்டே
உயிர் விதிர் விதிர்த்தேன்!

தன்னோடு என்னை அழைத்தே -அவன்
தரிசனம் தந்தே தன்வசம் ஈர்த்தான்!
கண்ணோடு என்னுட்புகுந்தே -என்
கவலைகள் போக்கியே என்பயம் தீர்த்தான்!

பன்னூறு ஆண்டுகள் பழகிய முகம்போற்
பாசம் ததும்பிடப் பக்கத்தில் நின்றான்!
கண்ணூறு படுமென நினைந்தே - நான்
கண்களை மூடினேன்; கடிதென மறைந்தான்!

என்னாவி துடிக்குது பாபா! - இந்த
ஏழைக்குவரந் தருவாயா?
முன்னாளில் நான் செய்த தவத்தால் - உந்தன்
மூர்த்தத்தைக் கனவிலே கண்டேன்!



படிப்பகம்

www.padippakam.com



# சமர்ப்பணம்

பொன்னுடல்... பனித்துப்
பூவுடல் எரித்து....
என்னையித் தரணிக்குத் தந்தாய்!

மன்னவன் நானென...
மாலைகள் சூட்டி...
மாதவ நோன்புகள் செய்தாய்!

அன்னமும் பாலும்
அன்பினிற் குழைத்து
ஆனந்தப் பூசைகள் செய்தாய்

இன்னமும் உனது
இடத்தினை நிரப்ப...
ஒருவரைத் தராமலேன் சென்றாய்?

என்னுயிர் நீயே...
என் மொழி நீயே...
எழுகின்ற உணர்வுகள் நீயே!

முன்னவர் உளத்தில்
முகிழ்த்த நல் வேத
மூர்த்தமாய் நிற்பவள் நீயே!

சின்னவன் என்னுள்
சிந்தனை வயலைச்
சொத்தெனக் கொடுத்தவள் நீயே!



படிப்பகம்

www.padippakam.com


என்னதான் செய்து...
என்கடன் தீர்ப்பேன்?
ஒரு வழி சொலாமலேன் சென்றாய்!

தந்தையின் முகத்தைக்
கண்டறியேன் நான்
தாயுனைத் தெய்வமாய்க் கண்டேன்!

சென்றவன் நினைவைச்
சிந்தையிற் தொழுது...
தீயிலோர் பூவெனத் திகழ்ந்தாய்!

செந்திரு முகத்திற்
குங்குமம் அறியேன்!
சீருடை வெள்ளையாய் அணிந்தாய்!

உன்திருக் கழுத்தில்
ஓரணி யின்றி...
உயிர் வழி யறத்தினில் உறைந்தாய்!

கொழுநனைப் பிரிந்த
கொடியுனை ஒழுக்கக்
குருவெனக் கண்டு நாம் வளர்ந்தோம்!

அழிவிலா உண்மை...
அறத்தொடு தர்மம்
அனைத்தையும் நிழலெனத் தொடர்ந்தோம்!

பழுதிலாப் பாசம்
பண்பொடு பரிவு...
இரக்கமும் கருணையும் அறிந்தோம்!



படிப்பகம்

www.padippakam.com



விழுதெலாம் தந்து...
வீழ்ந்திடா விருட்ச
வாழ்வையும் தந்து நீ சென்றாய்!

அன்பதே தெய்வம்...
அதன் வழி சமயம்
என்ற நற்கொள்கைகள் தந்தாய்!

இன்பமாய் வாழும்...
இனிய தோர் உலகம்
இறைவனின் விருப்பெனச் சொன்னாய்!

நண்பரும் உறவும்
நலத்துடன் வாழ...
என்றும் நீ உழையெனப் பணித்தாய்!

என் மொழி நிலத்தில்
என்னினப் பலத்தில்
எனக்கு நீ நம்பிக்கை தந்தாய்!

நினைத்ததை உரைத்து
நீதியைப் பரப்பும்
நெறிக்கெனை நிமிர்த்தி நீ நின்றாய்!

மனித்துவம் சிறக்க
மானிலம் செழிக்க
மக்களை அணைத்திடு என்றாய்

மனைத்தரம் மக்கள்
மாண்புகள் பேசி
மனுக்குலம் ஒன்றெனக் கண்டாய்!



படிப்பகம்

www.padippakam.com


வினைத்திறன் வியந்து
வென்றிடும் துணிவும்
விதைத்து நீ இறைவழி பகர்ந்தாய்!

சத்தியக் குழம்பாய்
சமரசப் பிளம்பாய்ப்
புத்துல கொளிர்ந்திடப் படைக்கும்

நற்குலத் தென்னை...
நகர்த்திய உன்னை...
நானினி யெப்படி மறப்பேன்?

இத்தரை மீது...
எனக்கொரு இடத்தை
ஈந்தஉன் பாதங்கள் போற்றி

சத்திய வரிகள்
சமைத்திடும் என்னைச்
சமர்ப்பணம் ஆக்கினேன் உனக்கே!


படிப்பகம்

www.padippakam.com

# உயிரோசை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# என் தமிழ்

என் தாய் உதட்டின் உச்சரிப்பாய்
எழுந்தாய் எந்தன் தாய்த்தமிழே!
தந்தாள் என்தாய் தாலாட்டிற்
தவழ்ந்தாய் நெஞ்சில் என்தமிழே!

முத்தாய் உயிரின் முதல் வித்தாய்
முந்தைப் பிறவித் தொடர் சொத்தாய்
வைத்தான் இறைவன் எனுள் உன்னை
வையக் கடலிற் திசைகாட்ட!

முற்றத் திருத்தி மண்மீது
முதல்நாள் எனது விரல் கூட்டிக்
கற்கச் செய்தாள் என்னன்னை
கலந்தாள் மொழியை மண்ணோடு!

சித்தர் ஞான விளக்காகிச்
செந்நாப் புலவர் பொருளாகிப்
பக்தர் பாவின் இலக்காகி
நின்றாய் பதிந்து நிலையானாய்!

தெட்டத் தெளிவாய்த் தெய்வத்தின்
தாளே நமக்குத் துணையென்று
சித்தத் திருத்திக் கற்றதனால்
தெய்வத் தமிழென் றுனைக் கொண்டேன்!



படிப்பகம்

www.padippakam.com


தெய்வம் தேசம் பண்பாடு
தெளிவாய்த் தந்தாய் என்தமிழே!
உய்வம் உலகின் உயர்வுக்காய்!
உள்ளம் கொண்டே உன்வழி நாம்
முற்றாப் பொருள் நீ இளமையுடன்
முழுவாழ்வுற்றுப் பெருமையுடன்
நிற்பாய் உனக்கு வயதில்லை.
நிகழ்வால் உனக்கு முடிவில்லை!

கற்றார் கண்டார் இவரெல்லாம்
கன்னற் தமிழின் சுவை சொல்லிப்
பெற்றார் இன்பம் உனைப்பேசும்
பேற்றை விடவோர் புகழுண்டோ?


படிப்பகம்

www.padippakam.com



## பாபா

பொற்திருவடிதனிற்
பூவெனச் சாத்திட
இக்கவி வரிகளை
இயற்றினன் தெய்வமே
அற்புதக் கருணையால்
அகிலத்தை அணைத்திடும்
சத்திய சாயியே
சரணம் நின் தாள்களே

முற்பழவினையினால்
மூண்ட என்பிறவியின்
தப்புகள் தவறுகள்
தாங்கிடு தேவனே
கற்பனை கடந்தவா
காலத்தின் தேவையால்

இப்புவி தோன்றிய
ஈச நின்திருமலர்ப்
பொற்பதம் கண்டு
பூசிக்க வந்த இவ்
வற்பனை யேற்று உன்
அருள் தர வேண்டினேன்
ஒப்பிலா உனது
உயரிய திருவிழிக்



படிப்பகம்

www.padippakam.com


கற்பகச் சுடர்தனைக்
காணவையாயோ!

சிறுமைகள் கடந்த
சிந்தனை யருள்வாய்
பொறுமையும் பண்பும்
புகழுடை வாழ்வும்
நிறைவு கொள் மனமும்
நிம்மதி நிழலும்
தருவையென்றுந்தன்
தாள் பணிந்தேனே!
பெருமைகொள்பெரியர்
பெரு நட்பும் அன்பின்
அருவியில் நனையும்
ஆனந்தப் பேறும்
ஒருவரை முனியா
ஒழுக்கமும் உலகத்
திருவென ஓம்பும்
திறனருள்வாயே
அழுதற் பொருட்டே
அவயத்தென்னைப்
பொற்திருவடிதனிற்
பூவெனச் சாத்திட
இக்கவி வரிகளை
இயற்றினன் தெய்வமே
அற்புதக் கருணையால்
அகிலத்தை அணைத்திடும்
சத்திய சாயியே
சரணம் நின் தாள்களே



படிப்பகம்

www.padippakam.com



# அபிராமி துதி

வரந்தருவாள் அந்த
அபிராமித் தாய்! - நீ
தினந்தினம் அவளை
ஆராதிப்பாய்!
நிரந்தரம் அவளடி
நிழலெனக் கண்டாற்
பறந்திடும் துன்பங்கள்
கவலைகள் எல்லாம்!

கரங்களோராயிரம்
என்தாய் கொண்டாள்!
கருணைக் கடலாய்
அவளே நின்றாள்!
உருண்டிடும் அண்டங்கள்
அனைத்தையும் ஒன்றாய்
ஆண்டிடும் அன்னையே
உலகென நின்றாள்!

பரந்திடு நிலமும்
நீரும் காற்றும்
எரிந்திடு தீயும்
எல்லாம் அவளே
வரைந்தவள் அவளே
வாழுயிர்க் கெல்லாம்
சுரந்திடும் சக்தியாய்ச்
சுடர்பவள் அவளே!



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## பாரதி தரிசனம்

ஒளியுடைத் தமிழை விழியினில் ஏந்தி
உலகினைத் தரிசித்த உத்தமக் கவியே
அழகிய கவிகளை அகத்தினிற் தாங்கி
அன்பெனும் பொதிகையில் உலவிய நதியே

இளையவர் வாழ்வினில் உயர்வினையடைய
இறப்பிலா வரிகளை எழுதிய ரவியே
நிலையென வாழும் நித்தியம் பெற்ற
நிந்தனைக் கண்டு நெஞ்சினித்தேனே

(பாண்டிச்சேரியில் பாரதியின் இல்லத்திற்குச் சென்று அங்கு வாசற்கதவு அடைத்திருக்க.... வாசலில் நின்று எழுதிய கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



## முற்றத்தில் விளையாட வேண்டும்!

முற்றத்தில் விளையாட வேண்டும்! வெண்
முகில் பார்த்து நிலவோடு உறவாட வேண்டும்!
வட்டத்திற் பலபேர்கள் நின்றே மென்
பந்தாடி வளைந்தாட வியர்த்தோட வேண்டும்!

தோட்டத்திற் கமுகோடு தென்னை - தமைக்
கைகோர்த்துப் பிணைத்தேற வேண்டும்!
சேற்றுக்குட் கால் தோய்க்க வேண்டும்! - பயிர்ச்
செய்கைகள் கண்டுகண் பனித்தோட வேண்டும்!

எட்டத்தில் இருக்கின்ற கனியை - நோக்கி
ஏறிடும் துணி வெம்முள் எழுந்திட வேண்டும்!
கிட்டி புள் கிளித்தட்டும் கேம்பும் - ஒரு
கிறிலிப்பும் நட்புக்கு உரமாக வேண்டும்!

வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே - மனம்
வீழாது எழுகின்ற பலங்காண வேண்டும்!
சுற்றத்தின் சுகங்காண வேண்டும் - முழுச்
சுதந்திரத்தோடு நாம் இளைப்பாற வேண்டும்!
கட்டிடச் சுவருக்குள் வாழும் - சிறைக்
காலங்கள் கரைந்தோட வேண்டும்
செட்டைகள் இழந்து தம் கிளையில் - ஏங்கும்
குயில்களாய் இல்லாமற் பறந்திட வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com



## தாய்பதம் பற்றுகின்றேன்

அன்னையின் அருட்காற்றில் உலவுகின்றேன்! அவள்
அசைவுகள் கண்டுளம் மகிழுகின்றேன்!
புன்னகை செய்கிறாள்; பொங்குகின்றேன்! - அன்பைப்
பொழிகிறாள் நின்று நீராடுகின்றேன்!

எண்ணத்திற் கருக்களைக் கூட்டுகிறாள் - கவி
யின்பத்தை யெனக்குள்ளே காட்டுகிறாள்!
வண்ணங்கள் தீட்டியே பாடுகிறாள்! - புவி
வாழ்ந்திட வாழ்த்தியே ஆடுகிறாள்!

முன்னமென் பிறப்புகள் எத்தனையோ? - எனுள்
மூண்டவை முகிழ்த்தவை எத்தனையோ?
தன்னிலே வந்திடும் தத்துவங்கள் - தனைத்
தந்திடும் தாய்பதம் பற்றுகின்றேன்!

## விருட்சம்

பாட்டோடும் ஏட்டோடும் என் பூட்டன் மறைந்தான்!
நாட்டோடும் அரசோடும் என் பாட்டன் தொலைந்தான்
வீட்டோடும் வளவோடும் எந் தந்தை இறந்தான்!
வீதியிலே அலைவதற்கோ என்பிள்ளை பிறந்தான்?



படிப்பகம்

www.padippakam.com



## கலைஞானம் அருள்வாள் கலைவாணி

கலையள்ளித் தருகின்ற கலைவாணியே! - வெள்ளை
மலர் வாழ்ந்து அருள்கின்ற அருள் வாணியே!
நிலையற்ற செல்வங்கள் தமைப்போற்றும் உலகில்
கலை கல்வி வளர்ந்தோங்க வழிகாட்டும் ஒளியே!

குரலோடும் விரலோடும் விளையாடும் கலையின்
வித்தாகி உயிரோடு வாழ்கின்ற துணையே!
அறிந்தோர்க்கும் அடக்கத்தை அளிக்கின்ற செல்வி
அறிவிற்கு ஏதெல்லை கணந்தோறும் கல்வி

கலைஞானம் கவிதானம் நிறைந்தாலும் உணர்வில்
நிலையான நிதானத்தை ஈகின்ற நிதியே!
களையாது படைக்கின்ற பெருஞ் சக்தி தந்து
கடலாகச் சுரக்கின்ற அம்மா என் தாயே!



படிப்பகம்

www.padippakam.com



## பிரார்த்தனை

இறைவாநீ யெனக்கெல்லாம் தந்துவிட்டாய்
இது போதும் இனியொன்றுமெனக்கு வேண்டாம்
மறைஞான ஒளியாகி என்னுள் நின்று
மார்க்கத்தைக் காட்டுகின்ற தேவா யாது
குறைவைத்தாய் குன்றாகிக் கோட்டமாகிக்
குறையாத செல்வமாய்க் கொள்கையாகி
நிறைவான வாழ்வினைத் தந்தாய் நின்தன்
நிழலொன்றே நிதியமாய் நானுங்கொண்டேன்

சில நாளில் அழிகின்ற செல்வம் வேண்டிச்
சிறு பாதை செல்கின்ற சிந்தை வேண்டாம்
பிறர் வாழப் பிரார்த்திக்கும் பேறேயன்றிப்
பிறிதொன்றும் நான்வேண்டேன் பெருமைசேர்த்தே
தலைவா நின் தலைவாசல் ஏறி எந்தன்
தலை மோதி நின்பாதம் தொழுவேன் ஐயா
நிலையான பேரின்ப நிழலாய் வாழும்
நிலையொன்றே பெரிதென்று நானுங் கொண்டேன்

முயல்வாரை முன்னேற்றும் முதல்வா நெஞ்சில்
முடிவான எண்ணத்தின் முகப்பில் நின்று
செயலாக்கிச் செய்வோர்க்கு வெற்றி நல்கிச்
சிறப்பீயும் சீராளன் நீயாமன்றோ
அயலாரை நேசிக்கும் அன்பர் உள்ளம்
அழுகின்ற போதெல்லாம் அருகில் வந்து
துயர் போக்கி நிற்கின்ற தெய்வமுன்னைத்
துதிக்கின்றேன் உன்பாதம் துணை என் தேவா



படிப்பகம்

www.padippakam.com


# என்னுறவு

எனைத்தேடி வருவோர்கள் எல்லாம் - அந்த
எழில் கொண்ட தமிழன்னை நினைப்போடு வருவார்!
மனை தேடி வருவார்கள் எல்லாம் - பெரு
மறைபோற்றும் உலகத்தின் மதிப்போடு வருவார்!
தினையேனும் நெஞ்சத்திற் பொய்மை -தனைச்
சுமக்காத பண்புள்ள நண்பர்கள் வருவார்!
அணையாத அருட்சோதி தன்னை - நம்பும்
அகத்தோடு வாழ்கின்ற அன்பர்கள் வருவார்!

பொய்யோடும் புகழோடும் வாழும் - அந்தப்
பொல்லாத கயவர்கள் புறங்காட்டிச் செல்வார்!
கையாடும் கள்வர்கள் கூட்டம் - எனைக்
கண்டாலே மறுபாதை வழிதேடிச் செல்வார்!
கையேந்தும் நிலைவந்த போதும் - இவர்
கரம்போடும் பிச்சைக்கு நான் போதல் வேண்டேன்
வையத்தில் வாழ்கின்ற காலம் - என்னை
வாழ்வாங்கு வாழ்விக்கத் தெய்வத்தை நேர்ந்தேன்!


படிப்பகம்

www.padippakam.com



# கவிதை

கவியுளத்திருந்து உதிப்பது கவிதை!
கற்றுணர்ந்தோர்தம் காட்சிகள் கவிதை!
புவியணைத்தோரின் பேரன்பு கவிதை!
பூதங்களைந்தின் பெருமொழி கவிதை!
அவிந்தவர் ஞான தரிசனம் கவிதை!
அறமுணந்தோரின் அகப்பொருள் கவிதை!
நவின்றிடமுடியா நல்லெணம் கவிதை!
நல்லவர் நெஞ்சம் நயப்பதும் கவியே!

மந்திரச் சொற்கள் வாய்த்தது கவிதை!
மனங்களைத் தன்வசம் ஈர்ப்பது கவிதை!
சிந்தனை கடந்து செல்வது கவிதை!
செயல்களை யாக்க வல்லது கவிதை!
வந்தனை கவிதை; வாழ்த்துக்கள் கவிதை!
வானவரானோர் வாழ்க்கையும் கவிதை!
நொந்தவர் கண்ணீர் சொல்வது கவிதை!
நுண்ணிய உணர்வுகள் நூற்பதும் கவியே!
உண்மையின் தெறிப்பாய் உதிப்பது கவிதை!
உயரிய உளத்தின் அதிர்வுகள் கவிதை!
எண்ணங்கள் கவிந்து பொழிவது கவிதை!
இறைமையின் அனுபவப் பனுவல்கள் கவிதை!
பெண்மையாம் சக்தியின் மௌனமே கவிதை!
பேசாத குழந்தையின் புன்னகை கவிதை!
முன்னவர் மொழிந்த முடிவுகள் கவிதை!
முக்காலும் நிற்கும் முழுமை ஓர் கவிதையே!



படிப்பகம்

www.padippakam.com



## கடல்மீது அலையாகுவாள்

கடல்மீது அலையாகுவாள் - அன்னை
காற்றோடு விளையாடுவாள்!
உடல்மேவும் உயிராகுவாள் - அவள்
உறவோடு உணர்வாகுவாள்!
மலைமீது ஊற்றாகுவாள்! - கண்
மணியுள்ளே ஒளியாகுவாள்!
மலரூறும் மதுவாகுவாள்! - அன்னை
நிலவாகிக் கதிராகுவாள்!

தளர்வோரைத் தாங்கித்
தனித்தோர்முன் ஓங்கி...
உளநோய்க்கு மருந்தாகுவாள்! - அன்பு
உலகோர்க்கு விருந்தாற்றுவாள்!

தாயாகி மடியிற் தலைசாய்க்க அமர்வாள்!
தர்மத்தின் வேராகி மிளிர்வாள்!
நடமாடும் இறைவன் இடமாக உறைவாள்
கரமாயிரம் கொண்டு காப்பாள்!



படிப்பகம்

www.padippakam.com



## சோர்வகற்றும் சோதி முகம்

கல்லில் விதைத்த புல்லினைப் போல் என்கவிதைச்
சொல்லை விதைத்துச் சோர்வுற்ற வேளையெல்லாம்
உள்ளத்திருந்து உயிராற்றல் வழங்குகின்ற
வல்ல பொருளே வணங்குகிறேன் உன்னையம்மா!

## பிறப்பின் பெருமை

சிறப்புறு செல்வம் யாவும் சேர்ந்திடச் செய்த தெய்வம்
இறப்பிலும் நீங்கா அன்பைத்தேந் தமிழின்பமாக்கி
நிரப்பிய கருணை வெள்ளம் நெஞ்சிலேயெண்ணி
யெண்ணி
பிறப்பிதன் பெருமை போற்றி என் கடன் செய்குவேனே.

## சொல்லாடற் சுகம்

வல்லான் உழக்கும் வாழ்வியலின் வளர்ச்சியிலே
நல்லார் நசுங்கி நாவரண்டு முனகுமொரு
பொல்லாத சூழல் பொலிந்திருக்கும் வேளையிலும்
பல்லாயிரம் தோள் படைக்கும் பெருவலியாய்
உள்ளேயிருந்து ஓசைகொடுக்குமெங்கள்
கள்ளார் காவியங்கள் காவும் மலர்களென
உள்ளாரையெல்லாம் உவந்தென் நெஞ்சேற்றிச்
சொல்லாடியெந்தன் சோர்வையகற்றுகின்றேன்!



படிப்பகம்

www.padippakam.com



## அரவணைத்தாடுவம் கூத்தே!

புன்னகைத் தானம் செய்திட வாரீர்!
பூமியின் பிள்ளைகள் நாங்கள்!
சின்னவர் யாவர்? பெரியவர் யாவர்?
சீரிய சால்புடன் வாழின்!
தன்னல மில்லாத் தயவுடன் இந்தத்
தரணியைத் தழுவிடல் காண்போம்!
அன்னையெம் சக்தி அனைத்தையும் தந்தாள்!
அரவணைத்தாடுவம் கூத்தே!

## மன்னிப்பு மனு

அனற் குழம்பை அடிவயிற்றிற் கட்டிக் கொண்டும்
அருவிகளாற் குளிர வைக்கும் இயற்கைத் தாயே
உனைக் குழப்பும் உத்திகளைக் கரத்திற் தாங்கி
ஓடிவரும் மனிதர்களைப் பொறுத்துக் கொள்வாய்
அனைத்தினமும் நீ படைத்தாய் அன்பு செய்ய
ஆயிரமாய்த் தனம் படைத்தாய் அழகு செய்ய
வனத்திடையும் வாழ்விலங்கை வரமாய்த் தந்தாய்
வான் பரப்பிற் பிரபஞ்ச இயக்கம் செய்தாய்
மனக்குரங்கின் மாயைகளால் மனிதன் செய்யும்
மதி கெட்ட வித்தைகளை மன்னிக்காயோ?
சினக்குறிகள் காட்டாதே! சீற்றம் வேண்டாம்
சிறுமனிதன் செய்பிழைகள் பொறுப்பாய்தாயே



படிப்பகம்

www.padippakam.com



## எனது இளமைக்காலக் கவிதைகளிற் சில

நாவதனை வெட்டியதைச் சமைத்திட்டாலும்
நான் தமிழன் தானென்றே கூறிச்சாகும்!
பாவதனை யெழுதிவரும் பேனாக்கையும்
பைந்தமிழனிடம் பார்த்தே பிச்சை கேட்கும்!
சாவினிலும் தமிழினிக்கு மென்பதாலே
சாகின்ற போது மந்தத் தமிழேயூறும்!
பாவியொரு தமிழச்சி தந்த மானப்
பாலுண்டு தன்மானத் தமிழனானேன்!

### பாரதியின் கவியுள்ளம்

பாவின் வெள்ளம்
பாரதியுள்ளம்!
பாடிய பாடல்கள்
இனித்திடும் வெல்லம்!
நாவின் தமிழே
அவனது எண்ணம்!
ஆயிரங் காலங்கள்
வாழ்வது திண்ணம்!

### பாரதியின் மறைவை எண்ணி

இருக்கும் வரையடிப்பார்!
இறந்த பின்னர் துடிப்பார்!
தெருக்கும்பல்கள் செய்கையெல்லாம்
எருக்கும்பலாய் மறையாதோ?

(பதினாறு பதினேழு வயதில் பள்ளி நாட்களில்)



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## நிலத்து மீன்

ஈழநன்னாட்டை விட்டு
எறிபட் டிலண்டன் வந்தேன்!
ஊழ்வினைப் பயனாலிங்கு
உறுதியாய் உறைந்தும் விட்டேன்!
தோல்வியென்றுரைப்பதாகத்
துளியேனும் எண்ண வேண்டாம்!
தோல் நிறம் கலைபண்பாட்டாற்
தூரத்து மனிதனானேன்!

ஆள்பவர் வேறு எந்தன்
அயலவர் வேறு; பார்க்கும்
கோள் குறிவேறு கொண்ட
கோலமும் வேறு; பேசும்
ஆளுமை வேறு; கேட்கும்
பேர்களும் வேறு; இங்கு
நீளுமோர் வரிசை யெந்தன்
நிலைமையை விரிப்பேனாகில்!

தோல்வெறி கொண்டோருள்ளார்!
துரத்திட நினைப்போருள்ளார்!
பால்வெறி கொண்டோருள்ளார்!
பைத்தியக் காரருள்ளார்!
நால்வகை மனிதருள்ளார்!



படிப்பகம்

www.padippakam.com


நாமென்ன இதிலே வேறா!
நூலிலே வகுத்தவாறு
நூறென வகை கொண்டாரே!

மனிதத்தை மதிக்கும் நல்ல
மாந்தரும் இங்குள்ளார்கள்!
கனிவுடன் அன்பு செய்யும்
கரங்களும் நிறையவுண்டு!
பனிமழை நின்றுழைக்கும்
பாட்டாளித் தோழருண்டு!
எனினும் என் நாட்டை மட்டும்
எனக்குள்ளே போற்றலானேன்!

வாழிடம் தந்து எந்தன்
வளர்ச்சிக்கு வேராய் நின்று
கூழிடும் தொழிலும் கல்வித்
தகைமையும் கூட்டியன்புத்
தோழமையோடு எந்தன்
துயர்பகிர்ந்தணைத்து என்றும்
வாழடா என்றெனக்கு
வாக்குடன் உரிமை தந்த
ஆங்கில மண்ணை யென்றும்
அகத்தினிற் தாங்கும் நன்றி
ஓங்கிய போதும் இன்னும்
தாயகம் மறக்கிலேனே!


படிப்பகம்

www.padippakam.com



பிற இன விடுதலைக்காய்ப்
போர்க்கரம் உயர்த்துகின்ற
அற உணர் வுள்ளோர் இங்கு
ஆயிரக்கணக்கில் உள்ளார்!
பிறர் படும் துயரங்கண்டு
பெருங் கவல் கொண்டு தொண்டு
தரும் பலர் இங்குள்ளார்கள்
தருமத்தை நம்புவார்கள்!
இறைவழி வாழும் பண்பும்
இனிய நல்பேச்சும் அன்பு
மறையதைப் போற்றும் மாண்பும்
மதிப்பவர் இங்குள்ளார்கள்!

இவரெலாம் இருந்தும் ஏனோ
என்னுளம் மட்டும் அந்தத்
துவையலும் சோறும் உண்ணும்
சுவைதனை வேண்டநின்றேன்!
கரைதனில் எறிந்த மீன்முன்
கடவுள் தான் வந்த போதும்
நுரைதரும் அலைகள் எற்றும்
நெடுங்கடல் தனையே வேண்டும்!

நரைதிரை வந்து தேகம்
நடுங்கிட நடக்கும் போதும்
தரையெது என்று கேட்டாற்
தாயகம் என்றே சொல்வேன்!



படிப்பகம்

www.padippakam.com



என்மொழி தமிழை யெந்தன்
உயிரிலே கண்டதாலும்
என்னிள வாழ்வில் துன்பம்
எய்தி நான் துவண்டதாலும்
முன்னவர் தரிசனங்கள்
முழுமையாய் ஏற்றதாலும்
அந்நிய மண்ணில் நெஞ்சை
அணைத்திட அறியேனானேன்!

இருபத்து நான்கு தானே
ஈன்ற மண்பிரிந்த போது!
கரைபட்டுப் போகும் தானே
கருக்கொண்ட தாய்மண்பற்று!
பருவத்தின் மாற்றத்தோடு
பண்பாட்டின் தோற்றத்தோடு
உருக்கெட்டுப் போகுந்தானே
உள்வாழ்வு என்றும் சொல்வார்!

வேருடன் பெயர்த்து வந்து
வேற்றொரு சூழல் தன்னில்
ஆர்வமாய் நட்டு நாளும்
அவதான மாகப் பேணி
நீர்தனை வார்த்த போதும்
நைந்திடும் மரத்தைப் போலச்
சோர்வது உள்ளே சுற்றச்
சுமைகளை உணரலானேன்!



படிப்பகம்

www.padippakam.com



தாயக மக்கள் கண்ணீர்
தாங்கிய காற்று வந்து
ஆவியைத் தொட்ட போது
அலறியே துடித்தேன், எங்கள்
ஊர்களை அழித்தாரென்று
உடன் செய்தி வந்த போது
மார்பிலே யாரோவந்து
மிதிப்பதாய் உணர்ந்தேன் நானே

ஊர்கூடிச் சென்ற காலம்
உறவோடு நின்ற காலம்
பூர்வீகம் புகட்டி நின்ற
புழுதியிற் படுத்த காலம்
மார்மீது ஊஞ்சலாட
மல்லாந்து படுத்துக் கண்கள்
நீர்வாரக் கிடப்பேன்! நெஞ்ச
முள்ளெல்லாம் நோகுமன்றோ!

அலைஅலையாக என்னுள்
ஆர்த்தெழும் ஞாபகங்கள்!
விலைமதிப்பில்லா அன்பு
வீழ்ச்சிகள் உறவின் கண்கள்!
தொலைவினில் நின்று என்னைத்
தொடர்வதாய் உள்ளுணர்ந்தேன்!
அலையுமோர் ஆவிபோல
அந்நிய மண்ணில் நின்றேன்!



படிப்பகம்

www.padippakam.com


உலையிலே கொதிக்கும் நீர்போல்
உள்ளத்தில் உணர்வு பொங்கக்
கலையுடன் கவிதை செய்தே
காலத்தை யுருட்டி நின்றேன்!

உறவுகள் சுற்றமென்றால்
உண்பதை மறந்திருப்பேன்!
பறவைகள் பூக்கள் பாட்டு
பழமை கொள் ஆட்டக் கூத்து
இறைமை கொள் தமிழையன்பால்
ஏற்றியே புகழ்ந்திருந்தேன்!
மறையென இந்து மக்கள்
மார்க்கமே ஏற்றிருந்தேன்!

பிறந்துயிர் தரித்து மண்ணில்
பிள்ளைகள் எண்மரானோம்!
இறந்தவர் நால்வர் ஈங்கு
இருப்பவர் எட்டில் நால்வர்
மடந்தையர் மீதி ஆண்கள்
மனிதராய் அன்பு கொண்டு
தொடர்ந்தனர் வாழ்வு தர்மம்
துணையெனத் துணிவு கொண்டே!

ஆண்டுகள் இருபதாகி
அரங்கின நாடுதன்னைத்
தாண்டியே லண்டன் வந்து


படிப்பகம்

www.padippakam.com



தலையிலே நூல் சுமந்து
தோண்டிய கல்வி பின்னர்
தொடர்ந்தன தொழில்கள் வாழ்வில்
வேண்டிய தேவைநோக்கி
வளர்ந்ததே காலமையா!

ஆயினும் எனது ஆத்ம
அசைவிலே தர்மமொன்று
நாயக மாகி நிற்றல்
நாளும் நானுணருகின்றேன்
போயொரு நாட்டில் வாழின்
புதியவை யேற்றல் வேண்டும்
தாயக வாழ்வுக் கேங்கல்
தவறதோ தெரியவில்லை

இருப்பதில் நிறைவு கொண்டு
இதயத்திற் திருப்தி காணல்
உருப்பட உதவுமென்று
உணர்ந்திட முயன்ற போதும்
கருத்தினில் நிறைந்த கால
நிகழ்வுகள் பசுமை தோய்ந்து
சிரிப்பதைப் புறக்கணிக்கும்
சிந்தையேன் தோன்றுதில்லை?

தாயகம் தீயில் வெந்து
தணற் பிழம்பாகும்போது



படிப்பகம்

www.padippakam.com




காயமும் புண்ணும் கொண்டு
நம்மவர் துடிக்கும் போது
சேய்களும் பெற்றோர் தாமும்
சகதியிற் குளிக்கும் போது
நான்பிற நாட்டில் வாழ்ந்தும்
நடு உயிர் துடிப்பதேனோ!

பாலனாய்ப் படியில் நின்று
பாதையைப் பார்த்த நாட்கள்
பக்கத்து வீட்டாரோடு
பசிமறந்திருந்த நாட்கள்
சாலையிற் தாயின் கையிற்
திருவுலா வந்த நாட்கள்


படிப்பகம்

www.padippakam.com



சொர்க்கத்திற் பாடல் கேட்டுத்
தூங்கியே சிரித்த நாட்கள்!
தோலுடல் மறைக்காத் தோற்றம்
தோற்றியே திரிந்த நாட்கள்!
காலின் கீழ் அடிகள் வாங்கித்
துள்ளியே துடித்த நாட்கள்!
காலையிற் கள்ளம் போட்டுப்
பள்ளியைத் துறந்த நாட்கள்!
கருணைத்தாய் மடியில் வீழ்ந்து
கதறியே அழுத நாட்கள்!

புழுதி மண்பட்டு மேனி
புனிதத்திற் தோய்ந்த நாட்கள்!
எழுதிப் பின் னழித்து மீண்டும்
எழுதியே திண்ணை மண்ணை
உழுதொரு தேசப் பெண்ணின்
உணர்வினைக் குடித்த நாட்கள்
தொழுதழு திருந்த தாயின்
துறவினிற் கரைந்த நாட்கள்!

காகிதத் தெப்பம் செய்து
கால் மறை வெள்ளம் நின்று
பாடிய நாட்களென்னைப்
பந்தாடிச் செல்வதுண்டு!
மோதியே அடித்துப் பள்ளி
முடிந்ததும் வீடுநோக்கி



படிப்பகம்

www.padippakam.com


ஓடிய நாட்களென்னை
உலுப்பியே கவிதை சொல்லும்!

கறிசோறு சமைத்த நாட்கள்
கல்யாண வீடு செய்து
புரியாத உணர்வுக்கெல்லாம்
புதுவேதம் யாத்த நாட்கள்!
அறிவார்ந்த ஆசானாகி
படித்தோர்க்கு அடித்த நாட்கள்
குறிபார்த்துக் கல்லெறிந்தோர்
கூட்டத்திற் கலந்த நாட்கள்!

வேலியிற் பொட்டு வைத்து
வரிசையாய் புகுந்த நாட்கள்
ஓலையாற் குடிசை கட்டி
உள்ளிருந் தினித்த நாட்கள்
ஆலயம் செய்து சுற்றி
ஆரத்தியெடுத்த நாட்கள்
வாளியில் மேளந்தட்டி
வண்ணத்தேர் இழுத்த நாட்கள்!

சூரன்போர் செய்த நாட்கள்
சப்பரம் தூக்கி வீதி
ஊர்வலம் வந்த நாட்கள்
உறவினர் வீடு வாசல்
கூரைகள் ஏறி வீழ்ந்து


படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



குழப்படி செய்த நாட்கள்
பாடையிற் போகும் போதும்
பார்வையில் நிற்குமன்றோ!

நாவலில் இலந்தைதன்னில்
நற்பலா மாவிற் கொண்ட
ஆவலால் அவற்றிலேறிக்
கடி மணம் புரிந்த நாட்கள்
காவலாய்ச் சிலரை வைத்துக்
களவுகள் செய்த நாட்கள்
நோவெலாம் மறந்து ஊரை
நுகர்ந்து நாமலைந்த நாட்கள்!

புளிமரக் கிளையிற் தாவிப்
பாய்ந்து தைபட்ட நாட்கள்
மழைதனில் ஊறித் தோய்ந்து
மண்டை நோய் பிடித்த நாட்கள்
திருவிழாக் கோலம் கோயில்
தஞ்சமென்றிருந்த நாட்கள்
பெருவிழாப் பலவும் சென்று
பெரியோரைக் கண்ட நாட்கள்!

முற்றத்தில் முழங்கால் நீட்டி
முகத்திலே சிரிப்புக் காட்டிப்
பொக்கை வாய் அசைத்துப்பாடிப்
பாக்குரல் இடிக்கும் பாட்டி



படிப்பகம்

www.padippakam.com



பக்கத்திற் போயமர்ந்து
பயங்கரத் திட்டும் கேட்டு
வெக்கத்தை விட்டு வாங்கி
வெற்றிலை போட்ட நாட்கள்!

ஆயிரம் மைல் கடந்தும்
ஆண்டுகள் பல கடந்தும்
தாயக நினைவு நெஞ்சைத்
தழுவியே கிடப்பதேனோ!
ஊரையும் உலவி வந்த
ஒழுங்கைகள் தெருக்கள் கல்விச்
சாலைகள் இவற்றையெல்லாம்
சுகமெனச் சுமப்பதேனோ!
சுகமெனச் சுமப்பதேனோ!

கெக்கட்டச் சிரிப்புப் போட்டுக்
கேலிகள் செய்து மற்றோர்
மொக்கர்கள் பேயரென்று
முடிவுகள் எடுத்துப் பின்னர்
சிக்கல்கள் பட்டு நொந்து
சிலம்படி பட்ட நாட்கள்
கக்கத்திற் கையை வைத்துக்
கப்பென்று இருந்த நாட்கள்!

நள்ளிராப் படத்துக்காக
நண்பரின் கூட்டத்தோடு



படிப்பகம்

www.padippakam.com



மெள்ளவே சென்ற நாட்கள்
மெட்னிதான் பார்த்து விட்டு
கள்வன் போல் மாலைவீட்டுத்
திண்ணையில் நுழைந்த நாட்கள்
கள்ளமாய் இளநீர் வீழ்த்தி...
விண்ணகம் துய்த்த நாட்கள்!

பண்டிகை விரத மென்று
பலருடன் விருந்து உண்டு
கொண்டு போய்ப் பெட்டிச் சோறு
கொடுத்த நல்லினிய நாட்கள்!
பெண்டுகள் பிள்ளை குட்டி
பெரியவர் என்று கூடி
உண்டு நாம் களித்த நாட்கள்
உயிர் வளஞ் சொரிந்ததன்றோ!
குச்சியாற் பல்துலக்கிக்
கூட்டமாய்க் கிணற்றுக்கட்டில்
கச்சேரி வைத்த நாட்கள்!
கதை பேசிக் களித்த நாட்கள்!
பச்சிலை சுண்டிச் சோறு
பகிர்ந்து நாம் உண்ட நாட்கள்
எச்சில் வாய் கடித்து அன்னை
இனிய வாய்க்களித்த நாட்கள்!

திரிவதும் திரிந்து வீடு
வருவதும் பசியெடுக்க



படிப்பகம்

www.padippakam.com


எரிவதும் உணவுக்காக
அடுக்களை புகுந்து தாயின்
அறுசுவை யமுது உண்டு
அன்பினால் உளம் நிரப்பிச்
சரிவது பாயில் என்றும்
சமனிலாச் செயல்களன்றோ!

தாயவள் நடுவிருக்கத்
தட்டுகள் முன்னிருக்க
சேய்கள் நாம் வட்டமாக
விருந்தினை ருசிப்போம் ஓலைப்
பாயிலே நிரையில் நாங்கள்
படுத்தொரு யுத்தம் செய்வோம்
கோயிலோர் குடும்பமென்ற
கொள்கையில் வளர்ந்தோமன்றோ!

கூழெனக் குடித்த போதும்
குளித்து நாம் குடித்தோம் மற்றோர்
வாழவும் வழிகள் பேணும்
வரலாற்றின் விளைச்சலானோம்
சாளரம் மூடிச் சாகும்
சரித்திரம் அறியோம் அன்பைத்
தாழிடல் முடியாதென்ற
தர்மத்திற் தலைநிமிர்ந்தோம்!
இத்தனை நிகழ்வுக்குள்ளும்
இயங்கிய எந்தன் ஆத்மா



படிப்பகம்

www.padippakam.com



நித்திரை கொள்ளுமாமோ
நிகழ்ந்ததை மறக்குமாமோ?
பத்திரமாக நெஞ்சிற்
பதுக்கி நான் வைத்த செல்வம்
சொத்தென என்னுள் வாழ்ந்து
சோதியாய் ஒளிருதம்மா!

சிரித்திட நிகழ்வு இன்றிச்
சிறையிலே துடிக்கும் வாழ்வில்
நினைத்திடச் சுகம் கொடுக்கும்
நிகழ்வுகள் நாட்டிற்றானே!
கரித்துகளாகி நாங்கள்
கடைவழி செல்லும் போது
குறித்திட வரிகள் தந்த
குருநிலம் நந்தாய் மண்ணே!

எனக்கெது தர்மமென்று
என்னை நான் கேட்ட போது
உளத்திலே யெழுந்த உண்மை
உயிர் வாழப் பிறந்த தென்பேன்!
இனத்திடை மலர்ந்த பண்பு
எம்கலை உயர்ந்தஅன்பு
அனைத்தையும் போற்றி வாழும்
அறமதே எனது வாழ்வாம்!

பொற்குவை பதவி கொண்டு



படிப்பகம்

www.padippakam.com



புகழில் நான் மிதந்த போதும்
சத்தியம் என்னுள் நின்று
சாமரம் வீசும் மூச்சில்
நற்றமிழ் ஆட்சி செய்யும்
நான்குடி கொண்டதாயின்
அற்புதத் திருத்தாள் என்னை
ஆட்சி செய்தணைத்து நிற்கும்!
இத்தரை மீது என்மண்
ஒரு தமிழீழ மென்றே
நற்பெயர் ஈட்டும் போது
நானொரு தமிழனாவேன்!

உலகினைப் போற்றி ஈங்கு
ஓரினம் காணும் நெஞ்சு
மலர்வதே தமிழர் நோக்கு
மனித்துவம் அன்பை வாழ்த்தி
தலைமகன் தாள் பணிந்து
தரணிக்குப் பெருமை சேர்க்கும்
நிலையதே சித்தர் வேத
நெறியெனக் கொள்ளுவோமே!

லண்டனிற் பாதம் வைத்து
வந்ததும் தமிழைப் போற்றும்
நண்பர்கள் சிலர்முன் வந்தார்
நெஞ்சிலே நீரை வார்த்தார்!
மண்டி நான் முனகிடாமல்



படிப்பகம்

www.padippakam.com



மணித் தமிழுலகு ஒன்றைக்
கண்டிடச் செய்தார் என்மேற்
கருணையாய் இருந்தாரம்மா!

புலவரே என்று என்னைப்
பெருமையாய் அழைத்தார் அன்பு
உலகிலே கிடைத்த பேறாய்
இதனை நான் ஏற்றேன் அன்று!
குலவிய பண்பால் அன்புக்
குடும்ப மொன் றென்னை யிங்கு
புலவனென்றாக்கி நண்பர்
புலத்தினில் விட்டதாமே!
அறிஞரும் கலைஞர் தானும்
ஆன்றவர் சான்றோர்தானும்
அறிமுகம் செய்யும் போது
அவையிலே புலவனென்று
குறுகி நான் குனிவேன் பாசக்
குவையலிற் புள்ளியாவேன்!
வறியவன் வள்ளலான
வரலாறே இதுவாமென்பேன்!

கலையதைத் தமிழைத் தானும்
கற்றிட அறியா என்னைப்
புலவனென்றழைத்தோர் நெஞ்சிற்
பூட்டிய தர்மத்தேரை
விலகிடமுடியாதின்று



படிப்பகம்

www.padippakam.com


விழிக்கிறேன் முன்னோர் தந்த
நிலையது என்றே எண்ணி
நெடு வழி தொடர்கின்றேனே

தூங்கிடா தெனையெழுப்பும்
துல்லிய காட்சி கோடி
மாங்குயில் ஆடு மாடு
மரத்தணில் கிணறு வாய்க்கால்
ஓங்கிய தென்னை ஒற்றை
ஒழுங்கையில் வண்டிச் சத்தம்
வாங்கினில் அமரும் பிள்ளை
வாழுதென் நெஞ்சில் இன்றும்!

புலம் பெயர்ந்திந்த மண்ணில்
புதியதோர் சூழல்தன்னில்
பொருந்திட முயன்றும் போகாப்
புலமொரு தாயின் மண்ணாம்!
கலங்கரை விளக்கமாகக்
கண்களிற் தெரியும் தேசம்
சிலம்பென ஒலிப்பதாலே
சீறுதென் கவிதை யாகம்!

அருவியிற் கை நனைத்து
அழகிலே மிதக்கத் தோன்றும்!
பெருகிடும் ஆற்றிற் தோய்ந்து
பிள்ளை போற் சிரிக்கத் தோன்றும்



படிப்பகம்

www.padippakam.com


குருமணற் பரப்பில் மேனி
குளிர்ந்திடப் படுக்கத் தோன்றும்!
விரிகதிர் ஒளியில் நின்று
விண்முகம் பார்க்கத் தோன்றும்!

அலைகளின் கரங்களோடு
அரவணைத் திருக்கத் தோன்றும்!
மலையடிவாரம் நின்று
மதியுடன் பேசத் தோன்றும்!
மலர்மணம் நுகர்ந்து காவில்
மாலையைக் கழிக்கத் தோன்றும்!
பலருடன் இணைந்து பேசி
பல்சுவை யருந்தத் தோன்றும்!

ஆலய மணியில் ஈசன்
ஓசையில் லயிக்கத் தோன்றும்!
சேலையில் உலவும் தோகை
மயில்களை ரசிக்கத் தோன்றும்!
ஓலையால் வேய்ந்த மேட்டுக்
குடிசையில் வசிக்கத் தோன்றும்!
வேலியால் எட்டி ஊரார்
விடுப்புகள் கேட்கத் தோன்றும்!

புற்தரை தன்மேற் பாத
பூசை தான் செய்யத் தோன்றும்
மற்றவரறியா நேரம்


படிப்பகம்

www.padippakam.com


மலர்முகம் நுகரத் தோன்றும்!
இத்தனையுணர்வும் என்னுள்
இருந்தெனைக் காதல் செய்யும்!

சத்தியத் தீயில் எந்தன்
சரித்திரம் நடக்குதாமே!
சொந்த மண் விட்டு வந்து
இந்த மண் வாழ நேர்ந்த
முந்தைய விதி நினைந்து
முனகிடல் நீதியில்லை!
வந்தது உண்மையென்று
வாழ்ந்திட எண்ணும் போது
போவதும் உண்மையென்று
புரிவது சரியாமன்றோ?

சிந்தியா தன்று என்னைச்
சேர்ந்தனள் ஒருத்தி இன்று
தந்தையாய் விட்டேன் இல்லத்
தலைவனாய் இயங்கும் தர்மம்
தந்தனன் இறைவன் செய்யத்
தயங்கிடல் தவறாமன்றோ!
குந்திடக் குடிசையோடு
கூழிடல் கடனாமன்றோ!

எழுத்திலே எனைமறந்து
எனக்குளோர் உலகு கண்டு



படிப்பகம்

www.padippakam.com



இழுத்திடும் எனது வாழ்வில்
எதிர்ப்படும் தடைகள் நூறு!
பழுத்தவர் தத்துவங்கள்
பார்வையிற் புத்தகங்கள்
கழுத்தினைத் தந்தாளுக்கே
கஷ்டம் நான் கொடுத்து நின்றேன்!

கலைத்திறன் உடையோர் என்னைக்
கனிவுடன் அணைத்துத் தங்கள்
கலைக்குளென் பங்கைச் செய்யப்
பணித்தெனைப் பெருமை செய்தார்
மலைத்திறன் கொண்டோரோடும்
மதித்தெனை வென்றோரோடும்
இலைத்திறன் என்ற போதும்
இணைந்திடும் வாய்ப்புக் கொண்டேன்!
தொழிலென்று சென்றாலங்கு
மொழித் தொல்லை நிறத்தின் தொல்லை
குளிர்காற்றிற் பனிகலந்தால்
குலைப்பன் நோய் உடைக்கும் பல்லை!
கிளிப்பாடம் போல நாளும்
சிலவார்த்தை சொல்லிச் சொல்லி
இளித்தோடும் வாழ்க்கை யீங்கு
இன்பத்திற் கர்த்தமில்லை!

ரோகத்தால் உடல் நலிந்து
உருவத்தால் நான் மெலிந்து



படிப்பகம்

www.padippakam.com


சாகத்தான் போறேன் ஆனாற்
சத்தியம் சாகுமாமோ?
வேகத்தான் போகுதிந்த
வெற்றுடல் உள்ளே நாட்டுத்
தாகத்தாற் சாகலாமோ!
தமிழ்மண்ணை மறக்கலாமோ!

இங்கு தான் நோய்களுக்குப்
பஞ்சமே யில்லையாமே!
தொங்குவாற் பேய்கள் போலத்
தெருவிலே தூங்கிநிற்கும்
பெண்களைத் தொட்டாற் போதும்
பெருநோய்கள் தொற்றும் பாழும்
வங்கியிற் பணம் மெலிந்தால்
வருகின்ற நோய்கள் நூறு
வாங்கிய கடனை யெண்ணி
வாழ்க்கையே கசந்து போகும்!

இங்கிலீஷ் படிப்பு வேறு
என்மகன் வீடு வந்து
நுங்கென எனது காதை
நோண்டியே குடையும் போது
எங்கடா தொலைவேன் என்ற
எண்ணமும் எழுவதுண்டு!
சங்கடம் கொண்டு வாழ்வுச்
சக்கரம் உருட்டினேனே!


படிப்பகம்

www.padippakam.com



கையிலே கயிறு கொண்டு
காலனென் கண்ணில் வந்து
சைகைதான் காட்டி நிற்பான்
சாவெனும் கவிதை செய்வான்!
மையிலாப் பேனாவாக
மண்ணிலே கிடப்பேன் என்னைப்
பொய்யெனச் சொல்லிப்போவார்
புகைத்துப் பின்னடங்குவேனே!

ஆழ்கடற் பிறந்த மீனை
அலையது இழுத்து வந்து
பால்மணற் பரப்பிற் போடப்
பலமுறை யுயிர் துடித்து
வால் தலையடித்துச் சாகும்
வண்ணம் போல் நானுமிங்கு
வாழ்வினை நகர்த்துகின்றேன்
வல்வினை வசத்தாற்றானே

(இளமைக் காலத்திலேயே தாயக வாழ்வைப் பிரிந்து வந்தும், காலத்தோடு பிறநாட்டுச் சூழலுக்குத் தன்னை மாற்ற முடியாத நிலையிற் தான் அனுபவித்த துன்பத் துடிப்பினை வெளிப்படுத்தி எழுதிய வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com


# கவிஞானம்

சிந்தனைக் காவிற் சில்வண்டுக் கூட்டமாய்ச்
சூழ்ந்திடும் எண்ணங்கள் யாவும்
குந்தி யென்னுள்ளக் கோயிலின் முன்னே
குண்டத்திற் செந்தீயை வளர்த்து
மந்திரம் ஓதி மாதவம் இயற்றி
மகரந்தப் பொடிகளைத் தூவ
அந்தரத்திருந்து ஆனந்த வெளியில்
அமரரும் முனிவரும் வாழ்த்த
முந்தையர் ஞான விளக்கதன் ஒளியில்
மூப்பிலா வேதங்கள் ஒலிக்க
செந்தமிழ்த் தாயாள் தண்புனலாடிச்
சீரடி ஓசையை எழுப்ப
விந்தென வீழ்ந்து விரிந்திடும் உண்மை
விளக்கமே விளைந்திடும் உயிராய்
சந்தமோர் துடிப்பாய்ச் சரீரமோர் எழுத்துச்
சரங்களாய்த் தானுருப் பெற்று
உந்தலின் பயனாய் உள்ளிருந்து டைத்து
உலகினைப் பார்த்திடும் நோக்கில்
வந்திட உதைத்து வாய்தனைத்திறந்து
வீரிட்டுக் கதறிப்பின் சிரிக்கத்
தந்தைதாய் நானாய்த் தரணிக்குத் தந்து
சிந்தனைக் காவுக்குத் திரும்ப
சிந்திவள் சிறுமி சிற்றாடைகட்டிச்
சிற்றடி நடைபோட்டு நிற்பாள்


படிப்பகம்

www.padippakam.com

பந்தமும் விலகப் பாசமும் விலகப்
பாருக்குப் பிள்ளையைக் கொடுக்கும்
விந்தைதான் கவிதை வியத்தகுதியான
வேள்விதான் கவிஞானம் என்பேன்
என்திறன் இங்கு ஏதெனக் கேட்கில்
என்பதில் மௌனமாய் விரியும்
சந்ததம் என்னுள் சக்தியாய் நின்று
சாதனை செய்வதும் இறையே

## எழுதவைத்த சத்தியத்தை என்ன சொல்வேன்

சுட்டுவிரல் காட்டியென்தாய் அப்பனென்று
சொல்லுநிலையிருந்ததில்லை தந்தைபின்னே
தொட்டு விரல் பிடித்து நான் நடந்ததில்லை!
துள்ளியந்தத் தந்தைமடி யமர்ந்த தில்லை!
பெற்றவளும் இளவயதிற் பிரிந்தபோது
பேரிடியைத் தாங்குபலம் இருந்ததில்லை!
சுற்றி நின்ற செல்வங்கள் சூழ்ந்ததில்லை!
சுகபோகம் வாழ்க்கையினில் நிறைந்ததில்லை!
உற்றதொரு ஊருறவும் தொடர்ந்ததில்லை!
உகந்ததோர் இயற்கையுடன் வாழ்ந்ததில்லை!
பெட்டியுடன் புறப்பட்டேன் பிற மண் நோக்கி!
பெரியபடிப் பதுநோக்கிப் பயணம் செய்தேன்!



படிப்பகம்

www.padippakam.com


கற்றுணர்ந்த இலக்கியங்கள் ஏதுமில்லை!
கண்டறிந்த புலவர்களும் எவருமில்லை!
சிற்றறிவு தனைக் கூடத் தமிழிற் கொள்ளும்
சிறப்பான சூழ்நிலையும் அமைந்ததில்லை!
பட்டறைகள் பல சென்று பயின்றதில்லை!
பணம் கொடுத்து வித்துவங்கள் அடைந்ததில்லை!
பொட்டு மலர்ப் பெண்ணுலவும் அழகுக்கோலம்
பார்க்கும் நிலை இருந்ததில்லை! முன்னோர் செய்த
சிற்பங்களைச் சிலைகளினைக் கண்டு எந்தன்
சிந்தைவெறி கொண்டதில்லை! உரிமைப்போரின்
கொட்டு முரசார்த்ததையும் கேட்டதில்லை!
கொந்தளிக்கும் குருதியிலும் தோய்ந்ததில்லை!
இத்தனைக்கு மத்தியிலும் என்னை யின்று
எழுதவைத்த சத்தியத்தை என்ன சொல்வேன்!

## கவிதை செயும் சொற்கோ போற்றி

எந்தையுமாய் என்தாயு மானாய் போற்றி
எழுத்தறிந்த என் குருவு மானாய் போற்றி
சிந்தையெலாம் எண்ணம் செய் சேயே போற்றி
செந்தமிழிற் கவிதை செயும் சொற்கோ போற்றி
முந்தை வினையணுகாத முத்தி நல்கும்
முழுஞானப் பழமான முருகா போற்றி
செந்தில் வடிவேலவனே செந்தூர் வாழும்
செவ்வேளே உன் பாதம் தொழுகின்றேனே



படிப்பகம்

www.padippakam.com

## அன்னையுடன் என்னுறவு

ஆனந்தப் பொய்கையிலே நீந்துகின்றேன் -அன்னை
அபிராமி மெய்யழகை ஏந்துகின்றேன்
மோனத்திலே நிலவாய்த் தோன்றுகின்றாள் -வன
மோகினியாய் எனையே தாங்குகின்றாள்
கானங்களில் உயிரை ஆழ்த்துகின்றாள் -அவள்
கண்மலரால் என்னை வாழ்த்துகின்றாள்
ஊனமெலாம் கடந்த உள்ளொளியாய் -நின்றே
உலகினை யெந்தனக்குக் காட்டுகின்றாள்
நானவள் மீட்டுகின்ற வீணை யென்பேன் -அந்த
மென் விரல்கள் அசைய ஓசை செய்வேன்
ஞானநிலை கொடுக்கும் தேவியன் பால் -இந்த
ஞாலமதை உணரும் பான்மை கண்டேன்
தேனமுதாம் தமிழை யூட்டியெனை -ஒரு
தெளிந்த கவிஞனென ஆக்குதெய்வம்
வானமதையெனது கைகளிலே -விளை
யாடிடத் தந்திடுவாள் நேரம் வந்தால்!



படிப்பகம்

www.padippakam.com



# இளமை மலர வைத்தாள்

குமரி வடிவெடுத்தே அம்மா என்முன்
குதூகலத் தோடு வந்தாள்
அமர மடி கொடுத்தே அன்னை சக்தி
இளமை மலர வைத்தாள்
கமல அடிகளிலே கண்ணையொற்றிக்
கருணை வரங்கள் பெற்றேன்
உமையாள் கரங்கள் பட்டே நெஞ்சகத்தின்
இருள்தான் அகலலுற்றேன்

அன்னை சிரிப்பினிலேகடல் சூழ்
அகிலம் மிளிரக் கண்டேன்
வண்ணக் கலப்பினிலே - அவள் தன்
வனப்பின் பெருமை கண்டேன்
எண்ணம் இனித்திடவே - எழிலார்
இதயக் கவிதை சொன்னேன்
கன்னம் சிவந்து நின்றாள் கண்களால்
கௌவி யுயிரை வென்றாள்

செக்கச் சிவந்த இதழ் - உதட்டில்
சிந்தும் இனிய மது
பக்கத்திருந்தவளைப் - பார்த்தே
பரவச மாகி நின்றேன்
சொர்க்கத்திருப்பது போல் இதய
சுகத்துடன் அருகிருந்தேன்
துக்கம் அகன்றதம்மா துயரம்
தூர விலகியதே



படிப்பகம்

www.padippakam.com



## என்றும் வாழ்ந்து சிரிப்பேன்

எல்லா நாளும் பிறந்த நாளே
எனக்காய்ப் பூக்கும் சிறந்த நாளே
உள்ளம் பாடும் கீதம் கேட்பேன்
உலகம் பேசும் மொழியைக் கேட்பேன்
இல்லை இங்கே துன்பம் - இது
இறைவன் தந்த இன்பம்
வெள்ளம் போலத் தமிழென் நெஞ்சில்
வீச்சாய் வந்து வீழும்
சொல்லில் உண்மை சுடராய் ஓங்கி
மூச்சே மந்திரமாகும்
கள்ளம் என்னும் கள்வன் என்னுள்
என்றும் நுழைந்ததில்லை
காலம் காட்டும் மாயை எந்தன்
கண்ணை மறைப்பதில்லை
புல்லும் என்னுடன் பேசும்
பூக்கள் தாளம் போடும்
எல்லையில்லை அந்தம் இல்லை
என்றும் வாழ்ந்து சிரிப்பேன்



படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் தந்து பெருமை செய்தாள்

தமிழ் தந்து பெருமைசெய்தாள் - சக்தி
தாயென்னுட் தத்துவமாரி பெய்தாள்
இமயங்கள் போன்ற முன்னோர் -பெற்ற
இலக்கிய வித்தினால் நூல்கள் நெய்தாள்



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## பெண்ணழகைப் போற்றுகின்ற பக்தனானேன்



பெண்ணழகைப் போற்றுகின்ற பக்தனானேன்
பேசுமொழி கேட்கு மொரு பித்தனானேன்
கண்வழியே கருணை பொழி மாதர் தம்மைக்
கரங்கூப்பி வணங்குகின்ற சித்தனானேன்.
மண்ணுலகு உயர்வு பெற வந்துதித்த
மாதேவி அன்னை மகா சக்தியாகி
மன்னுயிர்கள் அத்தனைக்கும் மூலமானாள்
மனிதத்தின் தாயவளைப் போற்றுவேனே

பெண்ணணைப்பு இல்லையெனிற் பாரே வீழும்
பெருந்தகையாள் பெருஞானப் பேறே வேண்டும்
எண்ண முயர்ந்தவளாகிப் பெண்ணிருந்தால்
இடும்பைகளும் இன்னல்களும் இல்லாதோடும்
முன்னவர்கள் அதனாற்றான் அவளை யெங்கள்
முதற்குருவாய் எண்ணுமுளம் எமக்குத் தந்தார்
அன்னை முகம் காணாத மழலை வாழ்வு
அநியாயம் அது கொடிது கொடுமையந்தோ!

படிப்பகம்

www.padippakam.com

## என்னுள் வாழும் எனது பங்கயம்





யாரிந்தப் பங்கயமோ?
பலர் கேட்டார் பல தடவை
யார் கண்டார் பங்கயத்தை
ஊர் ஒன்றாய்த் தேடி வந்தேன்
ஈர் பத்து வயதினிலே
இளமைத் துடிப்பேறி
மார்(பு) தட்டி நடக்கையிலே
மனசு தடுமாறியது

பூர்வீகத் தொடர்போடு
புதுப்பெண்ணாய் என் முன்னே
தேர்போலே வருவாளென்
றெத்தனையோ பூசை செய்தேன்
கார் மேகக் கூந்தல் ஒரு
கடலலையின் குளிர்த்தேகம்
கூர்வாளின் கண்கள்
குடிபோதை தருமிதழ்கள்
பார்காக்கும் பார்வதிபோல்
பார்வையிலே கருணை மழை
சேர்கலையிற் செழித்த உளம்
சிந்தனையிலொரு தீர்க்கம்

பருவத்துக் கொடிபோன்று
பால் நிலவில் முற்றத்திற்

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



புருவத்தை உயர்த்திப்
பார்க்கின்ற அழகு கண்டேன்

ஊர்கண்டு உவக்க
உலா வரும் தேவியவள்
தேர் கொண்டு அசைவது போல்
தெரிந்ததவள் திருத்தோற்றம்
போர் கண்டும் அஞ்சாப்
புது நெஞ்சின் புக்ககமாய்
நார் காணா மலராய்
நாயகி தான் நின்றிருந்தாள்

இத்தனையும் கொண்ட
சித்திரத்தைப் பொற்சிலையை
சத்தியமாய்க் கண்டேன்
நெஞ்சுக்குள் இவளழகைப்
பத்திரமாய் வைத்துப்
பல நாளாய் வாழ்ந்திருந்தேன்
சக்தி யிவளென்றும்
சமயத்திற் கும்பிட்டேன்

பாரதிக்கோர் கண்ணம்மா
பாடலுக்கு அழகு செய்தாள்
ஈரவிழி காட்டி அவள்
ஈடற்ற உறவு செய்தாள்
ஊரறியப் பாட எந்தன்



படிப்பகம்

www.padippakam.com



உள்ளமது துடித்தாலும்
யாரும் அறியாமல்
நான் மறைவாய்ப் பாடி வந்தேன்

எழுதாக் கவிதையென
என்னுயிரின் கருவறையில்
அழகைச் சொரிந்தவளென்
அரசியென வாழுகிறாள்
முழுதாய் விரியாத
மொட்டாகி யெனைமூடித்
தொழுவாளை நினையா
துள்ளம் உறங்காதே

ஆடற் கலையென்ன
அரும் பாடற் கலையென்ன
கூடும் இவளுக்கு
என்றும் குறித்திருந்தேன்
ஊடவும் கூடவும்
உட்கார்ந்து பேசவும்
தேடிய துணையவள்
தேவியாய் மலர்ந்தவள்

காலை எழுகையிலே
கதிரவனா யென்முன்னே
சேலைதானுடுத்தி
சிரிப்போடு முன் வருவாள்



படிப்பகம்

www.padippakam.com



காலடிகள் வைப்பாள்
நிலம்நோக மாட்டாது
கைகள் படும் போது
பனிமலர்கள் உடையாது

அன்பு மழையில்
என்னைக் குளிப்பாட்டி
அகத்தின் அழகதனால்
ஆத்மாவிற் கிதமூட்டி
இன்பந் தரப் பிறந்த
இனியவளே பங்கயத்தாள்
எந்தன் இளமைக்கு
ஒளி தந்த புதுயுகத்தாள்

இந்த உணர்வுகளின்
வெளிப்பாடாய் என்னுயிரில்
வந்தவளை என்னோடு
வைத்து நான் வாழுகிறேன்
சொந்தமாய் எனக்குள்ளே
சொத்தாக வைத்துள்ளேன்
முந்தை விதித்தொடர்பு
முடியும் வரை அவள் வாழ்வாள்

(இலக்கியங்களும் ஏடுகளும் காட்டிய இலட்சியப் பெண்ணை நெஞ்சிற் கண்டு அவளுக்குப் பங்கயம் எனப் பெயரூட்டி, அவளைக் கனவிலும் நனவிலும் தாங்கிய இளைஞனாக வட்டூர்ப் பங்கய மணாளன் எனும் புனைபெயரில் ஏட்டிலும் அரங்கிலும் எழுதிவந்த அனுபவத்தை மீட்டுப் பார்க்கிறார் புலவர்)



படிப்பகம்

www.padippakam.com


# உயிரில் அவள்

களைத்திருக்கும் போதெந்தன் பக்கம் வந்து
கன்னியவள் கரத்தாலென் நெற்றிநீவி
வளைத்திருகை என்தோளில் இட்டு வட்டக்
கண்ணிரண்டால் உயிர் கௌவி ஊறு மன்பைக்
குழைத்த சொல்லாற் காதலினைப் பொழிந்தவாறு
குனிந்து முகம் என் முன்னே கொண்டு வந்து
அழைத்தென்னை அத்தானென் னத்தானென்று
அமுதவிதழ் தான்விரித்து இனிய முத்த
மழைத்துளிகள் பொழியாளோ மங்கை யெந்தன்
மாது பங்கயத்தாளென் கனவிலேனும்!

நிலைத்த நெஞ்சு நீங்காத பாசம் வாழ்வின்
நீண்ட துயர்நிழலணுகாதிருக்கும் வண்ணம்
மலைக்குளெழு நதிபோலமானம் என்னும்
மாமலைக்குள் உனைக்கண்டேன் மாதே அன்பே!
கலைத்துளிகள் கவித்துளிகள் நீயும் நானும்
காலமெல்லாம் பெய்திடுமோர் அனுபவத்தை
உளத்தினிலே சுவைக்கின்றேன் உனது காதல்
ஊட்டத்தால் உயிர் வேரில்வளர்ச்சி கண்டேன்!


படிப்பகம்

www.padippakam.com



# பூச்சறியா மெய்யழகு

நீ சிரிக்கும் ஓசையிலே
நித்திலங்கள் கொட்டுதடி!
நின்னழகுப் புன்னகையில்
நிலவின் விழி கூசுதடி!
நாவசைத்துப் பேசுகையில்
நாதசுரம் கேட்குதடி!
நடைபயின்று வருகையிலே
நர்த்தனமே நடக்குதடி!

மூச்சிரைக்க வந்தெனது
முன்னமரும் போதினிலே
முன்னழகு மேலெழுந்து
மூர்க்க நடமாடுதடி!
பூச்சறியா மெய்யழகு
மேனிதனைப் பார்க்கையிலே
என்னிலைமை யேதுவென்று
நீயறியாய் பொன்மயிலே



படிப்பகம்

www.padippakam.com


## என் பேனா - என் கவிதை

எத்தனையோ குண்டுகளைச்
சத்தமின்றி என்பேனா
கக்குவதன் காரணத்தைக் கேளு

எத்தர்களை எதிரிற் கண்டு
பத்துவரி பாடாமல்
நித்திரை நான் கொண்டதில்லை பாரு

சத்தியத்தை நம்பியொரு
சந்ததியைப் படைப்பதிலே
வைத்த குறி தப்பியதேயில்லை

புத்தகத்தில் இல்லாத
தத்துவமாம் தரிசனத்தை
வித்திடுதல் என்னெழுத்தினெல்லை

போலிகளைப் போற்றியவர்
காலடியில் வீழுகின்ற
கூலிகளின் கூட்டமொன்று உண்டு

பாலியலிற் பாட்டெழுதி
வாலையுடன் வாழ்வதற்கும்
மூலிகைகள் காட்டிலைகள் உண்டு


படிப்பகம்

www.padippakam.com



"இப்படித்தா னிதையெழுது
இலக்கணத்தை நீ யுழுது
என்பதிலே எனக்கு இட்டமில்லை

அப்படி நான் மனக் கணக்கில்
கணக் கெடுத்துக் கொட்டியவை
ஐம்பதிலே ஒன்று கூட இல்லை

உணர்ச்சியது உட்புகுந்து
என்னுயிரை ஆட்டும் போது
அனற் குழம்பாய்ச் சீறுகிறேன் இங்கு!

கவர்ச்சி தரக் கையசைத்துக்
காண் பவரின் கண்குளிரப்
படைப்பதிலே எனக்கு இல்லைப் பங்கு

பெற்ற மண்ணை விட்டு வந்து
பத்திரண்டு ஆண்டெனினும்
செத்ததில்லை எனது தேசப்பற்று!

புற்தரையிற் புழுதியிலே
ஒத்தியொத்தி நானெடுத்த
வித்தின்வேரைப் பொத்திவாழ்ந்தேன் சற்று!

உள்ளுயிரை யணைத்துவிட்டு
உருக்கொடுத்துக் கவிதையெனத்



படிப்பகம்

www.padippakam.com



தள்ளுவது என்தருமமன்று
உள்ளதனை யுள்ளபடி
உயிர்த்துளியாய்க் கள்ளமின்றி
வெள்ளமெனக் கொட்டுதலென்பண்பு

அள்ளியுண்ணு மனிதருக்காய்
அங்கு மிங்கும் மழகு சேர்த்து
நல்ல புகழ் சேர்த்திடு நீயென்று

சொல்லுகின்ற நண்பர்களைச்
சுட்டெரித்துப் புன்சிரிப்பால்
வெல்லுகின்றேன் விளைவுகளைக்கொன்று

தொன்மைகளைத் தொலைத்துவிட்டு
தொற்று நோயைத் தழுவுதற்கு
இன்னுமொரு பஞ்சம் வரவில்லை

அன்னையவள் தன்முலையில்
அன்று தந்த பால் வழியே
என்னுயிரில் ஊறுதடா கள்ளு

நாலுவரி தானெழுதி
நாடறிய நிற்பதனை
ஏழையவன் நம்பியதேயில்லை

மூலையிலே வாழ்கையிலும்
முனகியுயிர் போகையிலும்



படிப்பகம்

www.padippakam.com



காலமகள் தந்திடுவாள் சொல்லை
கோன்முறையின் கொடுமைகண்டு
கொதித் தெழுந்து குமுறுகின்ற
பாணியெந்தன் பாடலுக்குச் சிந்து

ஏன்? எதற்கு? என்று கேட்டு
என்னுள்ளெழும் விளக்கங்களை
ஆணி கொண்டு எழுதுகிறேனின்று

மானிடத்தின் மகிமைகளை
மாநிலத்தின் பெருமைகளை
மறந்திருப்போர் மடமைதனை வென்று

பாநடத்துமோர் துணிவைப்
பாரதியாம் வாணியவள்
தான் கொடுத்து வாழ்த்துகிறாள் நின்று



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## என்னூர்

உலகத்தாயின் ஒரு சேயாய்
என்னைத் தந்தே நின்றாலும்
தலைவைத்தே நான் படுத்திட்ட
தாயின் ஊரை மறப்பேனோ!
நிலவிற் தாவிக் குதித்தாலும்
நிதியும் புகழும் குவிந்தாலும்
குலவித் தவழ்ந்த என்னூரைக்
கூறா தொளிக்க முயல்வேனோ?

வட்டுக் கோட்டை என்னூராம்
வயலும் கடலும் சூழூராம்
வட்டக் களரிக் கூத்தாலே
வாழ்த்துப்பெற்ற நல்லூராம்
பத்து வயதில்என் தோழர்
பலரைச் சேர்த்துக் கூத்தாட்டம்
வைத்த நிகழ்வு வாழ்வெல்லாம்
வரைந்த நினைவாய் அழகூட்டும்

கட்டுத் தெறியாத் தாளங்கள்
கவிதைப் பாட்டுச் சந்தங்கள்
முத்துத் தமிழின் மூச்சோடு
முட்டிச் சொரிந்தார் முதுமக்கள்
பக்திக் குரலிற் பாட்டாளர்



படிப்பகம்

www.padippakam.com


பாடும் சத்தம் உ ணர்வூட்டும்
தித்தோம் என்றே மத்தளத்தில்
தீர்மானங்கள் தெளிவாகும்!

பட்டுச் சரிகை பளபளக்கும்
பாதச் சதங்கை ஒலியெழுப்பும்
எத்தி யெழுந்தே ஆடுகையில்
எம் மண்ணெம்மைக் குளிப்பாட்டும்
கட்டுக் கதையோ கற்பனையோ
காலத் தழியாக் காவியங்கள்
சொட்டும் சுவையிற் எமைத் தோய்த்துச்
சொல்லும் நெறிகள் பலவாகும்

சுற்றியிருந்து சுவைக்கையிலே
சூழல் மறக்கும் முச்சாமம்
சற்றும் தூக்கம் கொடுக்காமல்
சலனம் இன்றித் தான் போகும்!
கட்டிய காரன் தோன்றியொரு
கதையின் போக்கை யுரைத்திடுவான்!
தட்டி பிரித்துப் பாத்திரங்கள்
தாள நடையில் வந்திடுவார்!

குருக்கேத் திரனென்றொரு கூத்து
கொடுத்தோமில்லை நாம் பார்க்க
உருக்கும் அரிய பாரதத்தின்
உண்மைப் பொருளை நாம் பார்த்தோம்!


படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



தருமம் ஒரு நாள் வெல்லும் மெனும்
கருவெம் நெஞ்சில் கட்டியதால்
திருடல்பிறர்க்குத் தீங்கு செய்தல்
தீமை பயக்கும் என்றுணர்ந்தோம்!

கட்டு மரமும் கலந்தானும்
கலப்பத்தடிக்கும் கலை தானும்
தொட்டுச் செழித்த தொன்குடியில்
தோன்றிச் சிறந்தார் என்னவர்கள்
எட்டி நன்கு வலைவீசி
எழிலார் பாட்டுந்தான் பாடித்
தட்டித் தாளம் கூத்தாடித்
தமக்குட் கலைத் தீ வளர்த்திட்டார்!
பட்டுப் படர்ந்த அனுபவங்கள்
பாட்டும் கலையும் தருசுகங்கள்
விட்டுக் கொடுக்காத் தன்மான
வீச்சும் கொண்டு வாழ்ந்தோராம்
கொத்தத் துறையில் இவர் சாம்பல்
கொட்டிக் கரைப்பார் என் வாழ்வும்
பெற்றோர் துறையில்முடிந்திட்டால்
பேறாய் அதனைக் கொள்வேனே

வெட்ட வெளிகள் வயல்வரப்பும்
விரியும் வானம்கடல் களமாய்ப்
பற்றி வளர்ந்த பெருஞானம்
படுக்கை எனது தளமாகும்



படிப்பகம்

www.padippakam.com



பெற்றதாயும் பெரும் புலவர்
பிறப்பிற் கொடுத்த அருள் வளமும்
உற்ற கொடையாய் உயிர்நின்று
ஊற்றாய் என்னை வளர்ப்பனவாம்!

கற்ற கல்வி தானில்லை!
கலையில் எனக்கோ வளமில்லை
சுற்றம் தந்த சுயமன்றிச்
சுருட்டிச் செல்ல ஒன்றில்லை
சொட்டும் உணர்விற் கருவாகிச்
சுடர்விட்டெழுந்து ஒலியாகி
நிற்கும் எனது நாச் சொற்கள்
நல்லோர் செய்யும் சித்துகள்!

கொட்டு மழையிற் குளிர் நிலவில்
கூவிச் சிரிக்கும் கடற்தாயைக்
கட்டியணைத்து அவளீயும்
கயலை மணலை கொய் மீனைக்
குட்டித் திரளி இறால் நண்டு
கணவாய் கெளிறு சுவைச் சுங்கன்
ஒட்டி பாரை புயற் காற்றில்
உலவும் ஓரா மீன் தன்னை
அட்டி வந்து எம் மூரின்
அயலோர் தமக்கும் அயல் வழியில்
எட்டிக் கொடுத்து இன்புற்ற
இனியோர் வாழ்ந்த என்னூராம்!



படிப்பகம்

www.padippakam.com



உப்புச் சொதியும் உடன் சோறும்
ஊறப் பொரித்த புதுமீனும்
முற்றத் திருந்து நிலா வொளியில்
முகங்கள் சொலிக்க உண்டதனை
செத்துக் கிடக்கும் போதெனது
செவிக்குள் யாரும் சொன்னாலும்
தட்டை யெடுக்க எழுந்திடுவேன்
தாயின் ஊரை நினைந்திடுவேன்!

வட்டுக் கோட்டை எனச் சொன்னால்
வடக்கா கிழக்கா எனக் கேட்பார்!
எட்டுத் திசையில்ஒரு திசையை
எமக்காம் என்று குறித்திட்டார்!
வட்டு மேற்கு எனச் சொன்னால்
விடுப்பை மேலும் விரித்திடுவார்!
கெட்ட மனிதர் நெஞ்சத்தின்
கிடக்கை சாதி வெறியாகும்!

சித்தன் கேணி சுளிபுரமா!
கொட்டைக் காடா தாவளையா?
பத்திரகாளி கோயிலடிப்
பக்கந்தானா? நவாலியதா?
குட்டி யூர்கள் குறிச்சிகளைக்
குறிப்பாய்க் கேட்டார் இதற்கெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



தெட்டத் தெளிவாய்க் காரணத்தைத்
தெரிந்தே நாமும் பதில் சொல்வோம்!
கொடுக்க உண்டும் குறை சொல்லிக்
கொடிய சாதி வெறி கொண்டு
அடுக்க மாட்டோம் என்போரும்
அயலில் இருந்தார் அறிவின்றி
துடுப்பு வலித்த திண் தோள்கள்
துணிவால் நிமிர்ந்த நெஞ்சங்கள்
எடுப்பில் அன்பை வெளிக்காட்டும்
எளிய மக்கள் என் மக்கள்!

வயலில் விதைப்போர் உயர் வென்னும்
வழக்கம் சாதிக் கொடுமையினைப்
பயிர்செய் ததனால் நம் மினத்தில்
பாவம் மலிந்து நாமழிந்தோம்
செயலும் உளமும் சேறாகிச்
சிறுமைக் குணங்கள் ஆறாகிக்
கயமை புரிவோர் கீழ் சாதிக்
கூட்டம் என்றாள் மூதாட்டி

பாண்டி நாடு முத்துடைத்து
பாரம்பரிய வார்த்தையிது!
தாண்டிக் கடலிற் தாம் சென்று
தம்மூச்சடக்கித் தண்ணீரில்
நீந்திக் குளித்து முத்தெடுத்தோர்
நின்றே நிலைத்தார் வரலாற்றில்



படிப்பகம்

www.padippakam.com


வாங்கிப் பொருள்கள் தாம் விற்றும்
வணிகத் தொழிலும் தாம் செய்தார்

ஓட்டிச் சென்ற படகுகளை
ஓடம் என்றார் இன்னொருபேர்
ஏட்டில் உண்டாம் திரமிலமென்
றெழுதிச் சென்றார் தமிழறிஞர்
ஆற்றிற் கடலிற் துடுப்போடு
அலையில் மிதந்த இம்மக்கள்
நாட்டில் உள்ளார் இன்றுமென
நவின்றார் ஞானப் பிரகாசர்
ஊற்றையறியும் உள்ளுணர்வு
இயல்பாய் இருத்தல் காரணமாய்
ஏற்றிப் பணிந்தேன் என்னவரை
எல்லாம் இறைவன் திருவருளாம்!
காற்றிற் கடலிற் கல்லதனுள்
காலம் பார்த்துச் சேர்த்துயிர்க்கு
ஆற்றல் தந்தான் அவன் வழியில்
அடைந்தோம் எங்கள் ஊற்றினையே!

மொழியால் இனத்தால் ஒன்றானோம்
முகத்தால் அகத்தால் ஒன்றானோம்
வழியாய்த் தொழில்கள் பலசெய்தும்
வாழ்வால் உணர்வால் ஒன்றானோம்
அழியா உயிரை உள்ளத்தை
ஆளும் இறைபே ருள்ளத்தை



படிப்பகம்

www.padippakam.com


விழியாய்க் கொண்ட இந்துக்கள்
விதையாய் விளைந்தோம் நாமெல்லாம்

பழியாய்ப் பிரிவு பல சொல்லி
பாவக் குழியில் நாம் வீழ்ந்தோம்
இழிவாய்ப் பிறரைத் தீண்டாதோர்
என்றே பழித்தோம் இதன்கண்ணே
கழிவாய் உலகில் நாம் நின்றோம்
காலக் கடலிற் கரைகின்றோம்
மொழிவாய் இருந்தும் ஊமையராய்
முனகிச் சாகத் துணிந்தோமே!

எழிலார் இறைவன் ஆலயத்தில்
எல்லா உயிரும் சமமென்று
அறியா வெறியர்தான் நின்று
அடியார் அன்பர் பற்பலரை
வெளியே துரத்தி உணர்வுகளை
வெட்டிக் குருதி தனில் வீழ்த்தி
ஒளியே யறியாக் குருடரென
உள்ளே நின்று சமர் செய்தார்
ஊர்மன்றத்தின் உயர்படியில்
உயர்ந்தோர் தாமென்றுரிமையுடன்
கூர்வாள் கொண்டு நின்றிட்டார்
குடிகள் பொருளைத் தின்றிட்டார்!
சாதிக்கரத்தால் நம் மூரில்
நீதித் தாயைச் சிறைவைத்தார்



படிப்பகம்

www.padippakam.com


வீதி தெருக்கள் கலைபள்ளிச்
சேவைதன்னிற் கறை வைத்தார்!

இந்துப் பெருமை கெடுத்திட்டார்
இனத்தின் வளர்ச்சி தடுத்திட்டார்!
சந்து பொந்து தெருக்களிலே
சாதிச் சிலைகள் வைத்திட்டார்!
மின்னும் ஒளியும் வசதிகளும்
மளிகைக் கடையும் பொதுச் சந்தை
இன்னும் பலவும் தமக்கென்றே
ஊழற் தீயை வளர்த்திட்டார்!
படித்த பள்ளிக் கூடத்திற்
படர்ந்த சாதிப் பிளவுகளால்
வெடித்த உணர்வின் வீச்சினிலே
விளைந்த சண்டை பலவுண்டாம்!
பிடித்தேன் கொடி நான் சிறுவயதில்
பிளவும் பிரிவும் தீர்வதற்காய்
எடுத்தேன் என்னுட் தீர்மானம்
எழுந்தேன் தமிழர் ஒற்றுமைக்காய்!
தேநீர்க் கடைகள் கிணற்றடியில்
தெளிவற்றோரின் கெடுபிடியில்
ஆநீர் குடித்தல் போல் நின்று
அருமைத் தமிழர் குடித்திட்டார்
வாய் நீருக்கும் வழியின்றி
வறுமைப் பிடியில் நம் மக்கள்
போனா ரென்றால் நாம் செய்த
பொல்லாப் பழியென்ற றிவோமே!


படிப்பகம்

www.padippakam.com


வெள்ளைக் காரன் வெளியேற
விரைந்தே ஆட்சி கைப்பற்றிக்
கொள்ளை செய்த கொடியோரின்
கொடுமை நாட்டில் மலிந்ததனால்
நல்ல தமிழ்த்தாய் நலிந் திட்டாள்
நாட்டிற் தீயோர் பலம் வென்று
எல்லை யில்லாத் துன்பங்கள்
அடைந்தோம் அதனால் அழிந்தோமே

என்மேல் உயர்ந்தோன் இங்கில்லை
என்னிற் தாழ்ந்தோன் இங்கில்லை
மண்மேல் மனிதன் பிறக்கையிலே
மனிதம் ஒன்றே எம் எல்லை!
தன்மேல் வீழ்ந்த அழுக்குகளைத்
தன்னுள் ஏந்திப் பிளவுகளால்
புண்கொள் புழுவாய்த் துடிக்கின்றான்
புரியா மனிதன் தவிக்கின்றான்

பிறப்பின் வழியே ஒரு தாழ்வு
பேசும் கொடுமை அழியாதோ?
சிறப்புக் கொண்டே ஒற்றுமையாய்ச்
செய்யும் தொழிலைப் போற்றோமா?
பழிப்புக் கிடமாய் பாரெல்லாம்
பார்வை இழந்த சடந்தாங்கி
இருக்கும் வரை நாம் கீழோரே!
எழுவோம் நாம்தமி ழீழவரே!



படிப்பகம்

www.padippakam.com



## சரஸ்வதி துதி

ஓம் சக்தி சரஸ்வதியே உமையாளாகி
உலக மெலாம் காக்கின்ற அம்மா தாயே
வான் சுற்றும் அண்டமெலாம் இயக்கும் தீயாய்
வடிவெடுத்த அம்பிகையே உனையே நாளும்
நான் பற்றி வாழ்கின்றேன். நாளும் உந்தன்
நாதத்தில் உயிரோசை யெழுப்புகின்றேன்
தேன் சொட்டும் தமிழ்க் கவிதை நானும் பாட
திருவருள் செய் நீயென்று வேண்டினேனே

## உலகுய்யட்டும்

கொடும்போர் தணிந்து
குவலயம் எல்லாம்
கொற்றங்கள் கைகோர்க்கட்டும்
கடும் நோய் பசியும்
கவலைகள் யாவும்
விட்டிந்த உலகுய்யட்டும்
குடும்பம் இணைந்து
குலவிடும் பண்பே
சொத்தென்ற மெய்யோங்கட்டும்
நடுங்கா நெஞ்சும்
நலியா அன்பும்
நல்வாழ்வுக் கடி கோலட்டும்



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## விழிப்பு

உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டேன்
உடலின் விழிப்பினைக் கடந்த தோர் விழிப்பிது
மறப்புக்குள் நினைப்புக்குள் மாட்டிக் கொள்ளாத
சிறப்பான விழிப்பிது சிந்தனை வலயத்தில்
அடங்காத விழிப்பிது ஆன்மாவின் விழிப்பு
புலன்களின் புரிவுக்குப் புறம்பாக நடக்கும்
உள்ளத்தின் விழிப்பு உள்ளுயிர் விழிப்பு
இறப்பு வந்ததாய் நான் கண்ட கனவின்
இறுதியில் வந்த இன்ப விழிப்பு

இறந்துவிட்டேன் நான் என்றதோர் கனவின்
இறுதிக் காட்சியில் விழித்துக் கொண்டேன் நான்
ஆசைகள் கனத்தன கடமைகள் கடித்தன
அனைத்தையும் செய்யாமல் அசையாத கட்டையாய்
பாடையிற் கிடக்கிறேன் பக்கத்திற் பற்பலர்
மோசம் செய்துநான் மரணித்து விட்டதாய்ப்
பேசிப் பேசி யழுவதைக் கேட்கிறேன்.

பாச உறவுகள் நட்புகள் எல்லாம்
பதைத்துத் துடிப்பதைப் பார்க்கிறேன் கனவில்
வாச மலர்களின் வளையங்கள் எனது
தேகத்தின் மீது சூடப் பெற்றன
வாழும் போதெனை வெறுத்தவர் கூட
வந்து என்முன்னே வாய் மூடி நிற்கின்றார்



படிப்பகம்

www.padippakam.com



தேசம் தேசம் என்று நான் பாடித்
துதித்தம் பாடல்கள் அலையில் மிதந்தன
பாதி வழியிற் பயணத்தை முடித்த
பாவி நானெனப் பார்க்கப் படுகிறேன்
மீதிப் பயணத்தை முடிக்காமற் போவதால்
மீண்டும் பிறப்பது நிசமெனச் சொல்கிறார்
வாழ்வின் ஒழுங்கைக் கடைப்பிடிக்காததால்
வந்தது சா வெகு விரைவினில் என்று
நூலறிந்தோர்கள் தமக்குள் முனகினர்
நூறும் அறிந்தோர் காலம் என்றனர்

வேளைக்குணவு உண்ணாமற் போனேன்
வேட்டைக் காரனாய் மாமிசம் உண்டேன்
ஆளுக்காளொரு குற்றம் கூறி
அவரவர் உரிமையை அழகாய்க் காட்டினர்

பாடி முடித்தனர் சுண்ணப் பாட்டையும்
பரிவோடிட்டனர் எண்ணெய்ப் பொட்டையும்
வாயில் இட்டனர் அன்னம் பூவையும்
வரிசையில் வந்த உறவினர் நண்பர்கள்

கட்டிய தாலியைக் கழற்றியே வைத்தாள்
கரத்தைப் பிடித்த என்னன்பு மனைவி
பொட்டுப் போனது பொருமியழுதாள்
பொல்லாத சிறைக்குட் போகப் போகிறாள்



படிப்பகம்

www.padippakam.com



பெட்டியின் மூடியைத் தூக்கி வந்தனர்
பிறப்பிற்கு முடிவாய் மூடி வந்தது
உரத்த குரலில் எல்லோரும் அழுதனர்
உடம்பில் வீழ்ந்து அழுதன உறவுகள்

எனது பயணம் முடிந்து விட்டது
எனது நயனம் மூடி விட்டது
எனது விரல்கள் முடங்கி விட்டன
எனது மூச்சு அடங்கி விட்டது
மாய்ந்து போனதோர் மனிதப் பிறவி
மரணக்குழிக்குள் மறைந்து போனது

“இடம் விடுங்கள்
இடம் விடுங்கள்”
இடித்து விலக்கி
என்னுடல்மூட
நடந்து வந்தனர்
நல்லவர் இருவர்
நால்வர் தூக்க
நான் போகப்போகிறேன்

இப்போது எனக்கு விழிப்பு வந்தது
இத்தனை காட்சியும் கனவெனத் தெரிந்தது
எப்போதும்ஓயாது உழைக்கும் உணர்வு என்
உட்போந்து என்னை உலுப்பிச் சென்றது



படிப்பகம்

www.padippakam.com



எனக்குள் விரிந்தன எண்ணக்கூட்டங்கள்
எழுதாக் கணக்குகள் என்னுட் தெரிந்தன
ஐந்தொகை ஒன்றை அறிவு கணித்தது
அடடா செய்ய ஆயிரம் உண்டெனும்
சிந்தனை மெள்ளச் சிறகினை விரித்தது.

படிக்காமல் வாழ்ந்த கணங்களைப் பார்க்கிறேன்
பார்க்காமல் விட்ட அழகினைப் பார்க்கிறேன்
வாழாமல் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்க்கிறேன்
பழகாமற் போன உளங்களைப் பார்க்கிறேன்
பதிக்காமல் விட்ட வரிகளைப் பார்க்கிறேன்
நழுவிய கணங்கள் எத்தனை ஆயிரம்
நான் செய்யாக் கடமைகள் எத்தனை ஆயிரம்
உலகப் பரப்பெல்லாம் உயர்ந்த ஞானத்தின்
இதய சுரப்பிகள் நிறையக் கிடக்கவும்
அலகை மூடிய அந்தகப் பறவையாய்
இங்கோர் மூலையில் ஒதுங்கிக் கிடந்தேன்

மலைகள் நதிகள் மாபெரும் வெளிகள்
மனிதச் சுடர்களின் உணர்வுப் பெருக்குகள்
மொழிகள் இனங்கள் கலை பண்பாடுகள்
அனைத்தும் என்முன் அமைந்து கிடக்கவும்
அழுத முகத்துடன் அடைந்து கிடந்தேன்



படிப்பகம்

www.padippakam.com



மதமே தொடாமல் புனிதம் கெடாமல்
வாழும் உளங்களைக் காணாதிருந்தேன்
இதமாம் அன்பினை இதயத்திருத்திய
இனிய மனிதரை அறியாதிருந்தேன்

எத்தனையழகுடை இயற்கையின் மடியில்
என்னை ஈந்து சென்றாள் அன்னை
அத்தனை யழகையும் அனுபவிக்காமல்
அடைப்பட்டுக் கிடந்தேன் இல்லச் சிறைக்குள்

இப்போது செய்யாமல் எப்போது செய்வேன்
எனது கடமைகள் என்றே யெண்ணிப்
பொற்பாதையொன்றைக் கண்ட பூரிப்பில்
புதுவாழ்வு நோக்கிப் பயணம் தொடர்கிறேன்.

(தனது மரணத்தைத் தானே கண்டு அதற்குள் ஒரு விழிப்பினை விரிய வைக்கும் ஓர் உயிரானுபவம்)



படிப்பகம்

www.padippakam.com



## என்னுயிரே

காயத்தைச் சுமந்து நடக்கின்ற உயிரே!
காலத்தைக் கடந்து நிலைக்கின்ற உயிரே!
தாயின் கருப்பை கலந்தஎன் னுறவே!
தனித்துவத்தோடு ஒலிக்கின்ற குரலே!

இயற்கைத் தாயின் இனிய படைப்பே!
இன்பதுன்பத்தை இனங்காட்டும் விளக்கே!
வியக்கும் படி யென்னுள் விரவியே நிற்கின்ற
உனக்கும் எனக்கும் உணர்ச்சிதான் இணைப்போ!

உனக்குள் எத்தனை ஆற்றல்கள் உண்டு!
ஊறுஞ் சக்திக்கு எல்லையேதுண்டு!
பிறக்கும் எண்ணங்கள் என்னுளே நின்று
பேசும் போதெல்லாம் திகைகிறேன் நின்று!

புலன்கள் வழியாய்ப் புத்திக்கு இறங்கும்
புதிய செய்திகள் ஆயிரம் ஆயிரம்!
புறத்தின் நிகழ்வுகள் பற்றி யெழுந்திடும்
புதிய உணர்வுகள் ஆயிரம் ஆயிரம்!

அனைத்தையும் உனக்குள் அணைத்துக் கொள்கிறாய்!
ஆர்ப்பரித்தெழுகிறாய் அழுகிறாய் சிரிக்கிறாய்!
சினத்திற் கொதிக்கிறாய்! சிறிது பின் சகிக்கிறாய்!
சிந்தித்த பின் குளிர்ச் சுனையிலே குளிக்கிறாய்!



படிப்பகம்

www.padippakam.com



கணத்திற்குக் கணம் நீ கோலங்கள் எடுக்கிறாய்!
கம்பீரம் கர்வம் கவலையிற் துடிக்கிறாய்!
நினைப்பிற் திளைக்கிறாய்! நம்பிப் பின் களைக்கிறாய்
நாளையுண்டென்று மீண்டும் நடக்கிறாய்!
மனத்திற்கும் உனக்கும் மல்யுத்தம் நடக்கும்!
மனதினை வென்று நீ உள்ளத்தை மணப்பாய்!
இனத்திற்கே யுரிய இயல்புனக்குண்டு!
ஈன்ற மண்ணோடு உனக்குறவுண்டு!

மானத்தின் மாண்பினை நேசிக்கும் பண்பினால்
மட்டற்ற துயர்களை மாலையாய் அணிகிறாய்!
ஊனத்தைக் கடந்து உண்மையைக் காண்கிறாய்!
உயிரே உன்னை நான் உயர்வாக மதிக்கிறேன்!

## ரமண தரிசனம்

அருணாசலத்தின் அதிர்வினையுணர்ந்தே
ஆன்மீகத்தின் உள்ளொளி பெற்றுக்
கருணாமூர்த்தியவனது கழல்கள்
கதியே என்று அருள் நிலையுற்றுப்
பெருவாழ்வடைந்த பெருமான் ரமணர்
பேசா ஞான விளக்கென ஆகிக்
குருவாயமர்ந்த குன்றக் குகைக்கு
ஏகிய நாளோர் திருநாளாமே!



படிப்பகம்

www.padippakam.com



# பாரதமாதா ஓர் முறை உனை நான் பார்த்திட வருவேனடி

பாரதமாதா ஓர் முறை உனை நான்
பார்த்திட வருவேனடி - என்
காதலை உனது காலடி தனிலே
சேர்த்திட வருவேனடி
தாரணி மீதினிற் தனியழகுனதடி
காரண மறியேனடி - ஒரு
நீர் வளம் நிலவளம் ஊர்வளம் கோடி
ஏழ்மையின் மணமேனடி?

பூமகள் மடிதனிற் கோமகள் நீ
பாமலர் சூடிய புதுமகள் நீ
ஆசியர்உலகின் ஆதவ ஒளியே
ஏழ்மையின் ஓரத்தில் உறங்குவதேன்?

எத்தனை மதங்கள் எத்தனை மொழிகள்
அத்தனை யும்உன் அங்கங்க ளன்றோ
சத்தியத்தாயே சமரசக் காற்றே
புத்தொளி வீச மறுப்பதும் ஏனோ?

(பாரத மண்ணைத் தரிசிக்க வேண்டுமென்ற புலவரின் இளமைக்கால ஆதங்கம்)



படிப்பகம்

www.padippakam.com



## உயிரெரியக் கண்டேனையோ!

உடலெரியக் கண்டாருண்டு!
ஊரெரியக் கண்டாருண்டு!
கடலெரியக் கண்டாருண்டு!
காற்றெரியக் கண்டாருண்டு!
இடம் பெயர்ந்து திசைகள் தோறும்
இரக்கு நிலை வந்ததாலே
அட! உலகில் என்னினத்தின்
உயிரெரியக் கண்டேனையோ!
அன்னையிட்ட பெயரை மாற்றி
முன்னவரின் முகத்தை மாற்றி
முதன்மை கொண்ட மொழியை மாற்றி
விண்ணை முட்டும் விழுமியங்கள்
விளைந்தவர லாறு மாற்றிச்
சிறுமையோடு சாதல் கண்டேன்!

எண்ணமெலாம் ஈட்டும் செல்வம்
இதய மதிற் பொருள் சார் கல்வி
தன்னை யறியாது மாற்றார்
தாள் பணியும் அடிமைக்கோலம்
கண்ணயர நேரம் இன்றிக்
காசு பணம் தேடியிங்கு
சின்ன வய தோடு சாகும்
என்னவரை ஈங்கு கண்டேன்!



படிப்பகம்

www.padippakam.com



## நம்புவேன்

என்னுடைய காலம் வரும்
எதற்கு மொரு நேரம் வரும்
என்னிறைவா உன்னை நம்புவேன்
புன்னகையில் ஞாலமெழும்
புத்தொளியிற் பாவம் விழும்
அன்னையவள் அருளை நம்புவேன்
எண்ணத்துயர் வானவர்கள்
எழுச்சியிலே உலகுயரும்
உண்மையதன் உயர்வை நம்புவேன்
மண்ணில் அருளாளர்களின்
மார்க்கமொன்றே தர்மமெனும்
வாழ்வியலையென்றும் நம்புவேன்

## சூத்திர தாரியென்தாய்

வல்லமை தந்தெனை வாழ்த்திடும் தேவியென்
உள்ளத்தில் வாழுகின்றாள் - என்
சொல்லும் அவள்தான் செயலும் அவள்தான்
சூத்திர தாரியென்தாய்



படிப்பகம்

www.padippakam.com



# இளநெஞ்சின் ஏக்கம்

பூத்திரையை விலக்கியவள் புன்னகைத்தாள்!
பொறுத்திருக்க மாட்டாது பக்கல் சென்றேன்!
காத்திருக்க வேண்டுமெனக் கண்ணாற் கூறி
மறுத்திருகை கொண்டு முகம் பொத்தி நின்றாள்!

போர்த்திருக்கும் கைவிலக்கிப் பெண்ணே என்னை
வெறுத்திடுதல் ஏன் என்றே விழித்தேன்! தேகம்
வேர்த் தடிக்க வேகமாய்ப் பிரிந்து சென்றாள்
வெறுமை நெஞ்சில் இடம் பிடிக்க வாடினேனே!

காற்றுவந்த திசையெல்லாம் கன்னிப்பெண்ணின்
காலடியின் ஓசையதைக் கேட்டு நின்றேன்!
ஊற்றறியா வெள்ளம்போல் உள்ளே பொங்கி
ஓடிவந்த உணர்வுகளில் மாட்டிக் கொண்டேன்

ஏற்றிடுவாளெனையென்ற எண்ணம் உள்ளே
எதிர்பார்ப்புக் கோட்டை யொன்றை யெழுப்பிக் கொள்ள
தேற்றிடத்தான் வருவாளா தேவியென்ற
தோத்திரத்தைப் பாடியவாறு றங்கினேனே!



படிப்பகம்

www.padippakam.com


## அன்னை வருவாள்

அன்னை வருவாள்
அருளைப் பொழிவாள்
அவளே சகலதும் ஆவாள்
பொன்னைப் பொருளைப்
புகழைத் தருவாள்!
பகலும் இரவதும் ஆவாள்!

கண்ணிற் கடமை ஒளியேற்றிக்
கருணை நெஞ்சின் களமாக்கிச்
செய்யுந் தொழிலே இலக்கானால்
பெய்யும் மழைநீர் அவளாவாள்!

எண்ணம் யாவும் உயர்வாக
ஏற்றம் அன்பின் விளைவாக
பண்ணும் இசையும் கலையாவும்
பாவை அவளால் வளமாகும்!


படிப்பகம்

www.padippakam.com



## இளமைக்கு அழைப்பு

இருபது வயதே இன்னொரு முறைவா!
இளமையின் எழிலில் உருகிடும் நிலைதா!
பருவத்தின் எழிலைப் பருகிடும் பலம் தா!
பன்னிருவிழியுடன் பார்த்திடும் கலைதா!
குருதியிற் துடிப்பும் குவலயப் பிடிப்பும்
விழவிழ எழுந்திடும் வீரியத் துடிப்பும்
அருவியாய்க் கொட்டும் அபரீத சக்தியும்
அளித்திட என்னுள் மறுபடி நீவா!

## வேண்டேன்! வேண்டேன்!

முன்னோரை இகழ்வாரின் முகமும் வேண்டேன்!
மூத்தோரைப் பழிப்போரின் உறவும் வேண்டேன்!
தன்னாட்டை மறப்பவரின் தயவும் வேண்டேன்!
தாய்மொழியைத் துறப்பவரின் நிழலும் வேண்டேன்!
பொன்னோடும் பொருளோடும் புரண்டு சாகும்
பொல்லாத சமுதாயப் புகழும் வேண்டேன்!
என்னோடு பிறந்த தமிழ் உள்ள போது
எனக்கேது இப்புவியிற் துயரமம்மா!



படிப்பகம்

www.padippakam.com



## என்னுளே தீச்சுடரொன்று

என்னுளே தீச்சுடரொன்று
எரிந்தொளிர்ந்திடுவது கண்டேன்!
முன்னவர் முகங்களேயங்கு
முகிழ்த்தெனக் கருள்வது கண்டேன்!
"உன்னுயிர் ஆயிரம் ஆண்டு
உலகினில் வாழ்ந்ததே"யென்று
என்னிடம் உறுதியைத் தந்து
இறைமையைக் காட்டினார் நன்கு!

## மந்திரச் சொல்லருள்வாள்

மந்திரச் சொல்லருவாள் - எங்கள்
மாசக்தியாள் மனத்துரம் தருவாள்
என்திறனேதுமில்லை - எந்தன்
தாயின்றி எனக்குவே றெதுவுமில்லை
கண் திறந்தால் அவள்தான் - எழும்
காட்சியிலெல்லாம் தோன்றுகின்றாள்
செந்தழலும் அவளே -குளிர்த்
தென்றலும் அன்னையின் திருவருளே



படிப்பகம்

www.padippakam.com



# என் பாட்டில் என் பாட்டு

பூவைக் கொந்தித் தேனெடுக்கும் அந்த
வண்டுகள் எனக்கு இசையமைக்கும்
மேளங் கொட்டும் மண்டூகம் ஒரு
தாளந் தட்டும் பூங்காற்று

ஓலைக் குடிசை மேல்முகட்டிற் பல்லி
காலக் குறிகள் தான் படிக்கும்
ஏணைக் கட்டின் இடுக்கு வழி என்
செல்வம் என்னைப் பார்த்திருக்கும்

ஒட்டுத் திண்ணைக் குந்தினிலே
குப்பி விளக்கு எரிந்திருக்க
முற்ற மண்ணை முழுநிலவு
மூடிக்கிடக்கும் கிணற்றடியைச்
சுற்றி வாழை ஒன்றிரண்டு
குட்டி போட்டுப் பொலிந்திருக்கும்
சுற்றிப் படரும் மலர்க் கொடிகள்
சுகந்தம் நிரப்பும் பூந்தோட்டம்

சமையற் கட்டில் மீன்குழம்பு என்
பசியைத் தட்டி இழுத்திருக்கும்
துவையல் பிட்டு கடிமிளகாய் எனைச்
சொர்க்கம் வரையிற் பிடித்திழுக்கும்
சேலைக் கட்டின் அணைப்பினிலே என்
சிந்தனை வானிற் சிறகடிக்கும்
பாவைக் கட்டி நான் தொடுக்க இறை
கைகள் கொட்டித் தான்சிரிக்கும்



படிப்பகம்

www.padippakam.com



## பிறப்பின் பெருமை

சிறப்புறு செல்வம் யாவும் சேர்ந்திடச் செய்த தெய்வம்
இறப்பிலும் நீங்கா அன்பைத்தேந் தமிழின்பமாக்கி
நிரப்பிய கருணை வெள்ளம் நெஞ்சிலேயெண்ணி
யெண்ணி
பிறப்பிதன் பெருமை போற்றி என் கடன் செய்குவேனே

## ஒலிக்கும் குரல்

எனக்குள் ளெழுந்திடும் ஒரு குரல்!
இதயக் கோயிலின் மணிக்குரல்!
இணக்கம் இல்லா வேளையில்
உரத்து ஒலித்திடும் திருக்குரல்!

மனத்தில் மாயைகள் ஒலிக்கையில்
மனிதச் சாயைகள் உதிக்கையில்
எனக்குள் ஒலித்திடும் அக்குரல்
அதுவே வள்ளுவன் திருக்குறள்!



படிப்பகம்

www.padippakam.com



# முத்துமாரி

முத்துச் சிவிகையிலே முன்னோர்கள் உனையிருத்தி
வைத்து வரக் கனவு கண்டேன் முத்துமாரி! - அவர்
பக்திப் பரவசத்திற் பாடி நடமாடிவரச்
சித்தங்குளிர நின்றேன் முத்தனாகி!

கத்தும் கடலலையும் காமாட்சி யுனைப்பார்த்துக்
கைத்தாளம் இடக் கண்டேன் முத்துமாரி!
வைத்த கண்கள் வாங்காமல் வானோரும் பூமாரி
கொட்டியன்பைத் தூவக் கண்டேன் முத்துமாரி!

பொட்டு நிறை நெற்றியுடன் புன்னகைக்கும் வதனத்துடன்
பட்டுடுத்தி வந்தாயடி முத்துமாரி!
சட்டென ஓர் சத்தமெழ செல்லும் குண்டும் வந்துவிழ
ரத்தத்திலே மிதந்தோமடி முத்துமாரி!

நற்றலங்கள் யாவும் அங்கே நாசகாரர் தீயில் விழக்
குற்றுயிரிற் துடித்தோமடி முத்துமாரி!
குற்றமென்ன செய்தோமென்று குழறிக்கூவியழுதபடி
கற்குழிக்குள் மறைந்தோமடி முத்துமாரி!

கெட்ட கனவோ இது கேட்ட நிகழ்வோ?
பட்ட துயரோ இல்லைப் பார்த்த நினைவோ? - அம்மா
முத்துச் சிவிகையிலே முன்னோர்கள் உனையிருத்தி
வைத்து வரக் கனவுகண்டேன் முத்துமாரி!



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# உணர்வோசை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பரணி எழுதுவோம்

எழுது எழுது பரணி - எம
தினிய தாயகத்தை எண்ணி!
விழுது வேர் கொண்ட இனம் நீ - இதை
விளங்கிக் கொள்ளட்டும் தரணி!

தொழுது கிடந்தது போதும்! - இனித்
துணிந்து போரிட்டு மரணி!
பொழுது புலர்ந்திடும் என்று - புலி
போரில் இறங்கினான் புரி நீ!

உழுது வாழ்ந்த எம் நிலத்தில் - பகை
ஊன்றி ராணுவம் அமைத்தான்
புழுதி சூழ்ந்திடக் களத்தில் - பலர்
மாண்டு தோல்விகள் சமைத்தான்

கழுதை மந்தைகள் போல - நாம்
கடவுச் சீட்டுடன் அலைந்தோம்!
அழுது வெந்தது போதும் - மண்
ஆளும் வேங்கையை அணைப்போம்!



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## பிக்குகள் மூட்டிய பெருந்தீ

பிக்குகள் மூட்டிய பெருந்தீ - தமிழ்
மக்களைச் சுற்றிய கொடுந்தீ!
அக்கறையில்லா அரசுடன் கூடி
இராணுவம் ஆற்றிய படுகொலை!

திக்குகள் எட்டும் துரத்திய படைகளைத்
தட்டிக் கொடுத்தனர் பிக்குகள்!
பக்குவமாக அவர்களின் திட்டப்
பயிற்சி கொடுத்தன கட்சிகள்!

கத்தி பொல்லுடன் வாளினை ஏந்திக்
காடையர் எங்களைத் துரத்தினர்!
சுற்றி ராணுவம் காவற்படையுடன்
வீடுகள் நுழைந்து விரட்டினர்!

பட்டியல் போட்டுத் தமிழரின் இடங்கள்
படுகொலை வெறியர் பரவினர்!
தட்டிகள் சுவர்கள் தகர்த்துட் புகுந்து
திடுதிடு மென்று தடவினர்!

எட்டிய வரைக்கும் எமது குரல்வளை
பற்றிப் பிடித்துத் திருகினர்!
கட்டிய துணியுடன் கலைத்தனர் எம்மைக்
கண்டதுண்டமாய் வெட்டினர்!

கொட்டியா வென்று கூவியழைத்துக்
கூட்டமாய் எம்மைப் பிடித்தனர்!
பெற்றதாயரைப் பிள்ளை குட்டியை
மாட்டு மந்தையாய் அடித்தனர்!


படிப்பகம்

www.padippakam.com



## சுருண்டு படுக்கலாமோ

என்று மிவர்க்கினி எடுபிடி செய்து நாம்
உண்டு களித்திடவோ -நாம்
பண்டு இருந்ததோர் பெருமையைக் கூறியே
பாடித் குதித்திடவோ

குண்டுகள் நாம் இவர் கோட்டையைச் சாய்த்திட
மூச்சைப் பிடித்து வாடா -கொலை
கண்டும் கொதித் தெழா திருக்கும் தமிழனைக்
கட்டி இழுத்து வாடா

கண்டு கண்டும் இவர் காலடி கழுவியே
கையேந்தி நிற்பதோடா
பெண்டிரை இவர்கரம் பிய்த்திடக் கொடுத்து நாம்
பேடிகளாவதோடா

தொண்டு புரிந்து நாம் தோளிலே தாங்கிட
ஈழமோர் கறுவாக் காடா - பலங்
கொண்டு பணத்திற்கு உரிமையை வாங்கிட
நினைப்பவர் அறுவார் போடா



படிப்பகம்

www.padippakam.com



## தாயகக் குழந்தைகட்கு!

செஞ்சோலைப் பூக்களே!
நெஞ்சோலைப் பாக்களே!
அஞ்சாத யுகத்திற் பூத்த...
தியாகப் பூக்களே!
அம்மா என்றழைக்கத் தோன்றும்!
அப்பாவின் அணைப்புக் கேங்கும்!
கம்மாலை நெருப்புக் காற்றாய்....
உணர்ச்சி வீசுமே!
கைகோர்த்து ஆடிப் பாடிக்...
கண்மூட மடியைத் தேடி...
கண்பூத்துப் போகும்... அன்புத்
தாகம் ஊறுமே!
தன்மானப் பாலையுண்டு
தாகம் தீர்க்கும் பிஞ்சுகள்!
தமிழ் வீரப் பாடல் கேட்டுத்....
தூங்குகின்ற நெஞ்சுகள்!
பொன்னேட்டின் எழுத்துக்கள்!
நம் நாட்டின் குருத்துக்கள்!
பொன்னாளில் வெற்றிமாலை...
சூடப்போகும் கழுத்துக்கள்!
எம் நாட்டுத் தேசியத்தின்
எழுச்சியென... எந்தலைவன்
எதிர்காலச் சந்ததிக்கு...
எம் நிலத்தை மீட்டு வைத்தான்!
கண்ணீரின் மாலைகளே!
காவியத்தின் ஓலைகளே!
முன்னோரின் ... உயிர்த்துளியாய்...
வந்து வீழ்ந்த தேவர்களே



படிப்பகம்

www.padippakam.com



## பூ பதித்தாள் எங்கள் பூபதித்தாய்

பூபதித்தாய் - மண்ணிற்
பேர் பதித்தாள்!
தீபத்தின் சுடராய்த்
தேசுடன் ஒளிர்ந்தாள்!

- (பூபதித்)

பாவத்தின் சின்னமாய்ப்
பாரதப் படைகள்
பாய்ந்தெங்கள் மண்ணைப்
பாழ் செய்த போது
கோபத்தினாலெமைக்
குற்றுயிராக்கிய
பாவிகள் முன்னே
குன்றென நின்றாள்!

(பூபதித்)

ஆபத்து என்றே
அயலவர் சொலவும்
அன்னையாள் ஈகத்தின்
எல்லைக்குச் சென்றாள்
நாவற்றி வரண்டு
நல்லுடல் சோர்ந்து
சாபற்றும் போதும்
சத்தியம் கண்டாள்

(பூபதித்)



படிப்பகம்

www.padippakam.com



# திலீபன்

சத்திய விளக்கினை யேந்தித் - தன்
சந்ததி தளைத்திட எழுந்தான்!
பொற்றமிழீழத்தின் காந்தி - போர்ப்
பறையுடன் புலிக் கொடி தாங்கி!

இந்திய விடுதலைப் போரில் - பெயர்
எழுதியவன் அந்த மகாத்மா!
இந்தியப் படைகளை நேரில் - எதிர்த்
தெழுந்தவன் எங்களின் ஆத்மா!

வந்தது பாரதப் படையா? - இல்லை
வானவ ரைக்  கொல் படையா?
சிந்தனை விற்றவர் தலைமை - எங்கள்
தேசத்திற் செய்தது கொடுமை!

இந்தக் குரல்தனை எழுப்பி - எங்கள்
இனத்திற்கு முன்னுடல் பரப்பி
தன்னுயிர் தந்த எம் கிள்ளை - தமிழ்த்
தாயகத் தேவியின் பிள்ளை!

அவன் தான் எங்கள் திலீபன்!
அணையா தொளிரும் தீபன்!
கவர்ந்தான் உலகின் கவனம்!
கலந்தான் நம்முள் அவனும்!



படிப்பகம்

www.padippakam.com



## தெருவினில் அலைகுவதோ?

தேடுவாரில்லாத்
        தேசமாய் நாங்கள்
                தெருவினில் அலைகுவதோ?
பாடுவாரில்லாப்
        பாடலாய் எம்மினம்
                பரணிலே உறங்குவதோ?
கூடுவீடில்லாக்
        குஞ்சுகளாகிக்
                கூச்சலிட்டேங்குவதோ?
ஆடு மாடாகி
        அவரையும் இவரையும்
                உரசி நாம் ஒதுங்குவதோ?
நாடிலா வாழ்வும்
        நக்கிடும் தாழ்வும்
                நமக்கென எழுதியதோ?
காடுவாழ் விலங்கும்
        களிக்கையில் நாமோ
                கவலையில் மூழ்குவதோ?
ஓடி நாம் களைத்தோம்!
        உழைப்பினால் இளைத்தோம்!
                உண்மையாய் உலகணைத்தோம்!
மூடுவா யோடு
        முனகியே பிறர்முன்
                முழந்தாளில் நின்றிடவோ?



படிப்பகம்

www.padippakam.com



# காதல் நோய்

வசப்படுமுன் காதலெனும் வாஞ்சையாலே
வாழ்க்கையிலே பலவற்றை யீகம் செய்தேன்
கசப்பதுவும் இனிப்பதுவும் உன்னை வைத்தே
கணிப்பதற்கும் துணிந்து விட்டேன் நண்பரெல்லாம்
குசப்புகிறேன் எனும் படியாய்க் குளறிப் பேசும்
குணம் பெற்று நகைச்சுவைக்கும் ஆளாய்ப் போனேன்
நிசத்தினிலே நீ வருவாய் என்றே நாளும்
நிற்கின்றேன் என் வாசற் படியில் நானே

பிசத்துவதும் பின்னிரவில் எழுந்து முற்றப்
புறத்தினிலே உலவுவதும் நிலவைப் பார்த்து
அசப்பினிலேயென்னவள்போல் நீயுள்ளாயே
அழகினிலேயுன்னை விட அவளே மேலென்
றிசைப்பதுவும் இத்தனைக்கு மேலும் ஏங்கி
இளைத்து உடல் மெலிவதுவும் தூக்கங்கெட்டு
வசைப் புயலில் வாடுவதும் காதல் நோயின்
வரப்புகளில் வாழுவதும் இயல்பானேனே



படிப்பகம்

www.padippakam.com



## ஞானியைத் தேடுகிறேன்

ஞானியைத் தேடுகிறேன் - தமிழ்
ஞானத்தை நாடுகிறேன்
வாணியின் வாய்மொழியாய் - வரும்
வார்த்தைக்கு ஏங்குகிறேன்

ஆன்மீகப் பேரழகும் - உயர்
ஆற்றலின் வீச்சழகும்
வான்தொடநிற்குமொரு - தமிழ்
ஞானியைத் தேடுகிறேன்

மோனத்தின் அலைகளினால் - எனுள்
முதிர்ச்சியைத் தந்திடவும்
தேனொத்த வார்த்தையினால் - எனைத்
தேற்றியணைத்திடவும்
கார்கட்டு மேகமென - என்முன்
பாமழை கொட்டிடவும்
ஞானத்தின் பேருருவாய் - வருங்
காலத்தை வேண்டுகிறேன்

கவித்துவப் பெருங்கடலாய் - முது
கலைகளைத் தருங் குருவாய்
மூலனின் மந்திரமாய் - குறள்
முனிவ னின் சூத்திரமாய்
ஞாலத்தின் நெறியுரைக்க - அவன்
மறுமுறை தோன்றானோ?
புவித்தளம் வருவனென்றால் - உளம்
பூரித்து உயிர் விடுவேன்



படிப்பகம்

www.padippakam.com



## சொல்ல உள்ளம் குமுறுதடா பாரதி

கல்லும் முள்ளும்
நிறைந்த காட்டில்
பிள்ளைகுட்டியோடு எங்கள்
நல்ல இனம் நடந்ததடா பாரதி!
சொல்ல உள்ளம் குமுறுதடா பாரதி!

வள்ளமேறி நாடு விட்டு
வழிவழியாய் அல்லற்பட்டு
நள்ளிருளில் மறைந்ததடா பாரதி!
உள்ளதெல்லாம் இழந்ததடா பாரதி!

தாம் பிறந்த பூமியிலே
நாதியற்ற அகதிகளாய்
ஏங்கியவர் அலைந்தாரடா பாரதி!
தூக்கமின்றி அழுதாரடா பாரதி!

தீங்கு செய்த பகைவன் படை
தேடித் தேடி அழிவு செய்ய
தாங்கவொணாத் துயரடைந்தார் பாரதி! - இவர்
தமிழராகப் பிறந்ததனால் ... பாரதி!

நீ பிறந்த பூமியிலே
நேற்று வந்த கவிஞரெல்லாம்
நீதி கேட்க மறுத்து விட்டார் பாரதி! - எங்கள்
நெஞ்சிலேறி மிதித்து விட்டார் பாரதி!



படிப்பகம்

www.padippakam.com



## வீர விளக்கேற்றி

வீர விளக்கேற்றி வைத்து...
விடுதலைக்கு ஊற்றுவைத்துத்...
தூர வழி செல்லுகின்ற தோழர்களே! - அந்த
நேரம் வரும் போது ஒரு நீதி வெல்லும் - எங்கள்
நாளையுகம் வரலாற்றின் பெருமை கொள்ளும்!

சுற்றுகின்ற பூமியிலே...
சுதந்திரத்தின் தூரிகையால்
ஈழமெனும் ஓவியத்தை வரைந்தவரே -தமி
ழீழமெனும் காவியத்தின் நாயகரே

கற்றுநின்ற தேசியத்தைக்
காவலரணாக்கியதைச்
சுற்றி நின்று... காவல் செய்யும்... தேவர்களே! -அதைப்
பற்றி நின்று ஒளி கொடுக்கும் தீபங்களே!

(1990களின் முற்பகுதியில் இலண்டனில் நிகழ்ந்த எழுச்சி விழாக்களில் மாவீர வணக்கப் பாடலாக பாடப்பெற்றது)



படிப்பகம்

www.padippakam.com



# காலையில் நீ!

கண்திறந்து பார்க்கும் போது
காட்சி தரும் உன்முகம்
காலை நேர வரவேற்பு
உன் முகத்தின் மங்கலம்

நித்திரையில் என்னைப் பற்றி
படர்ந்திருக்கும் உன் கரம்
சத்தமின்றிக் கரம்விலக்கப்
பாவை எந்தன் அந்தரம்

உன்முகத்தில் விழிக்காவிட்டால்
எனக்குங் கூடச் சங்கடம்
உன்கரத்தைச் சுமக்காவிட்டால்
என்னுடலும் புண்படும்

தூங்கும் போது சின்னப்பிள்ளை
துணையிருக்கும் என்மனம்
தாங்கும்போது உந்தன் மார்பு
தங்க மணிக்கோபுரம்

காலை நேரம் தேனீர் கொண்டு
கட்டில் நோக்கி வந்திடும்
வேளை யென்னைப் பாத்து மெள்ளச்
சிரிப்பதென்ன தந்திரம்

(விடியலின்போது தலைவனைப் பார்த்துத் தலைவியின் பாடல்.
ஆனி 1979 இல், இலண்டன் முரசில் வெளிவந்த கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



# நெருப்பிலிட்டாற் தாங்குவையோ கோவர்த்தனா

கோபுரங்கள் சரிந்ததடா - கோவர்த்தனா - எங்கள்
கோயிலெல்லாம் எரிந்ததடா - கோவர்த்தனா!

சூரர் நின்று சிரித்தாரடா - கோவர்த்தனா - எங்கள்
சுதந்திரத்தைப் பழித்தாரடா - கோவர்த்தனா!
கோவர்த்தனா! கோவர்த்தனா! கோவர்த்தனா!

காவற் தெய்வம் நீயே என்றார் கோவர்த்தனா
கண்ணை மூடி நின்ற தேனோ? கோவர்த்தனா!
தேவியரைத் தூக்கிச் சென்று - கோவர்த்தனா
துகிலுரிந்தாற் சகிப்பாயோடா கோவர்த்தனா!

நீ பிறந்த பூமிதனைக் கோவர்த்தனா - நீசர்
நெருப்பிலிட்டாற் தாங்குவையோ? கோவர்த்தனா
ஆவி நொந்து அழுத இனம் கோவர்த்தனா -காட்டில்
அடைக் கலந்தான் புகுந்ததடா கோவர்த்தனா!
பாலர்மீதும் செல்லும் குண்டும் கோவர்த்தனா - வீழ்ந்து
பற்றி மேனியெரிந்ததடா கோவர்த்தனா!
சேலையின்றித் துரோபதைகள் கோவர்த்தனா - தீய்ந்து
குற்றுயிராய்க் கதறினரே கோவர்த்தனா!

கூவி நாங்கள் கூச்சலிட்டோம் கோவர்த்தனா! - சாக்
கோலங் கொண்டு தத்தளித்தோம் கோவர்த்தனா!
கோபியர்கள் சூழ நின்று கோவர்த்தனா - எமை
கொன்றொழிக்கச் சம்மதித்தாய் என்றர்த்தமா?

(புலவரின் நாட்டிய நாடகப் பாடல்)



படிப்பகம்

www.padippakam.com



# புலக்கோலம்

கொலைகண்டேன்கொள்ளையதன் கொடுமைகண்டேன்!
கொற்றங்கள் கொடுவழியிற் செலவும் கண்டேன்!
கலையென்றாற் காசென்போர் கையிலின்று
கலைத்தாயின் கழுத்து நெரிபடவும் கண்டேன்!
தலையெங்கும் தடிப்பேறி நிற்போர் தங்கள்
தடியாட்கள் தாங்கிவரப் பல்லக் கேறி
வலம் வந்து ஆலயங்கள் வைக்கக் கண்டேன்!
வாழ்வை மட்டும் காணுநிலை காணேனம்மா!

நிலையங்கள் நிதி கொண்டோர் நீதியன்பின்
நிழல்கூட அறியாதோர் நெஞ்சஜோதி
வலயங்கள் இல்லாதோர் ஆதிக்கத்தில்
வளர்கின்ற நிலை கண்டேன் தமிழின்பேரிற்
பலரிங்கு அரங்கேறி முழங்கக் கண்டேன்!
பகட்டிற்குப் பணிந்தாடும் கூட்டம் கண்டேன்!
உளங்கொண்ட உணர்வோடு உண்மையன்பின்
உறவுகளை மட்டுமிங்கு காணேனம்மா!



பலமில்லை! பண்பில்லை! பாரின்முன்னே
பளிச்சென்று ஒளிர்கின்ற ஞானமில்லை!
அழகில்லை! அறிவில்லை! ஆற்றலில்லை
ஆன்மீக நெஞ்சில்லை! அன்புமில்லை!
நலமில்லை! நாகாக்கும் வலிமையில்லை!
நவமான யுகம் ஒன்று வந்த பின்பும்
மலமுண்ணும் மனிதரென மாய்தல் நன்றோ?
மார்க்கத்தை யறியாது மயங்கலாமோ?



படிப்பகம்

www.padippakam.com



# தாயினைக் கொன்றவன் தாள்களைக் கழுவிடல் நன்றோ?

நெருப்பு வாளேந்து...
நீதியைச் சார்ந்து
நெஞ்சிலே உண்மையைத் தாங்கு!
இருப்பதோ சோர்ந்து...
அடிமையாய் வாழ்ந்து...
தஞ்சமென்றெதிரியைச் சேர்ந்து!
பருக்கையும் கஞ்சியும்
பருக்கினான் என்று நம்
பகைவனைக் கும்பிடல் நன்றோ?
தங்கையைத் தம்பியைத்
தாயினைக் கொன்றவன்
தாள்களைக் கழுவிடல் நன்றோ?
இருக்கையும் எல்லையும்
இல்லாது எங்களைத்
தெருக்கும் பலாக்கினான் அன்றோ?
உருக்கொண்டு எழுந்திடு!
ஒன்று பட்டுயர்ந்திடு!
உடன்பட்டு வாழுதல் நன்றோ?



படிப்பகம்

www.padippakam.com

# பொன்மனச் செம்மல்

பொன்மனச் செம்மல் வாழ்வே
புரட்சியாய்க் கொண்டு காஞ்சி
யண்ணனின் கருத்தினோடு
ஆட்சியில் இணைந்த வள்ளல்
வெண்திரை வானில் நின்று
வெற்றிகள் ஈட்டிப் பின்னர்
தென்னகத் தமிழர் போற்றும்
தலைவனாய் மிளிரலானார்

எம்மினத் தவலங் கண்டு
இதயத்திற் கசிவு பொங்கத்
தன்கரம் நீட்டியெங்கள்
தலைவனை அணைத்த மேலோன்
எம்ஜிஆர் எமது பக்கம்
என்றதோர் உணர்வில் நாங்கள்
நம்பிடும் நிலையில் நின்றோம்
நல்லவர் மறைந்து போனார்

அம்மையார் அடுத்து வந்து
அனைத்தையும் மாற்றியெங்கள்
துன்பினைத் துச்சமாக்கித்
தூசித்தார் துயரந்தந்தார்
வெம்மை கொள் சட்டம் செய்து
விரட்டிடும் கொடுமை மாறி
எம்மையும் உறவாய் எண்ணும்
எம்ஜிஆர் தோன்றுவாரோ



படிப்பகம்

www.padippakam.com



# அடலேறு!

ஆன்றவர் தமிழின் அழகுக் கவி சொல்லிச்
சான்றுகள் பகரும் சால்புடைத் தலைவ!
ஈன்றவர் நிலத்தின் இறைமையைக் காத்திடத்
தோன்றிய வீரரின் தோள்வலியுரைக்க
ஈண்டடலேறு என்றதோர் தலைப்பிற்
தோண்டியே கவிதை யெடுத்திங்கு வந்த
மாண்புடைக் கவிஞரே! மனிதத்தின் துணைவரே!

நீண்டதோர் பயணத்தில் நிகழ்ந்திடும் துன்ப
காண்டம் இதுவாம் காலமும் இதுவாம்!
ஆண்ட தமிழர்கள் மீண்டும் ஒருமுறை
பாண்டவர் ஆயினர் பரதேசம் போயினர்!
மூண்ட போரினில் முகிழ்ந்த துன்பத்தின்
தூண்களாய் மாறித் துயர்க்கடல் வீழ்ந்தனர்!

வாழ்ந்த நிலத்தையும் வளர்ந்த சுகத்தையும்
ஈய்ந்து விடுதலைத் துறவிகளாயினர்!
காய்ந்த வயிற்றுடன் கண்ணில் நீருடன்
கானகத் துறை முனிவர் களாயினர்!

ஏந்திய கரமும் இளைத்த மேனியும்
தூங்கிடா இமைகளும் தொற்றித் துரத்திடும்
வாந்தி பேதி வல்சுரம் என்று
சேர்ந்த நோய்களும் செத்தவர் எண்ணமும்



படிப்பகம்

www.padippakam.com



நேர்ந்த துன்பினைச் சூழ்ந்த நினைவுமாய்
நிழல்களில் நின்று அழுதிடும் மக்களின்
கழல்களில் வீழ்ந்தென் கவிமலர் தூவுவேன்

தாய்நிலத்தின் மடியிற்
கண்ணுறங்கும் மாவீரக்
கோயில்களை வணங்கிக்
குரலில் ஒலிதொடுப்பேன்

ஒரு தனி மனிதனால் ஓரினம் அழிவதாய்
எருமையொன்றிங்கு எக்காளமிட்டது
தருவதையுண்டு தன்னுயிர் வாழத்
தமிழனை விற்கும் தொழிலை மேற்கொண்டது!

எச்சிற் பணிக்கமாய் எடுபிடியாய்ச் சிங்களவர்
கச்சை துவைக்கும் கையாளாய்ச் சந்திரிக்கா
குத்தும் பற்குச்சியாய் குந்துரைஞ்சும் பணியாளாய்
செத்து எழும் சேவகனாய்ச் சிறைப்பட்ட புழு ஒன்று
அத்தனை தமிழரையும் அடக்கஞ் செய்யத் தன்
சுட்டு விரல்காட்டிக் குற்றங்கள் சாட்டியது

ஊத்துவதைக் குடித்து விட்டு உள்ளே கிடக்காமல்
காத்து வாங்க என்று கடல் கடந்து வந்த இதை
ஏத்தி வந்து வானொலியில் இடங்கொடுத்த நண்பர்களை
என்னென்று சொல்லி... எச்சுவரில் நான்மோத!
வானொலியா? இல்லை இது வீணொலியா? நானறியேன்!



படிப்பகம்

www.padippakam.com



நரகாசுரர்களின் நிழலும் படாது
பிரவாகமானவன் பிரபாகரனாம்
இந்தத் தலைவனின் உலகப் படையை
எந்தச் சக்தியால் அழித்திட  முடியுமாம்?

தலைவனை வணங்கிய தலைவனின் அரங்கிது
அலைகடல் மீது ஒளியுடன் எழுந்த
அழியாக் காவியம் கிட்டுவின் அரங்கிது
அவனொடு கூடி ஆருயிர் ஈந்த
புலிகளைப் போற்றும் புண்ணிய அரங்கிது

கிட்டுவின் கண்ணொளி பட்டு மகிழ்ந்த
நட்பின் சுமையுடன் நானிங்கு நிற்கிறேன்
வட்டமுகமும் வரவேற்கும் விழிகளும்
தொட்டு அணைக்கும் தூய நல்நெஞ்சமும்
அத்தனைக்கும் மேல் அழகான சிரிப்பும்
இத்தனையும் கொண்ட இனிய மனிதனின்
நட்பின் சுமையுடன் நானிங்கு நிற்கிறேன்!

ஆயுதம் சுமந்த அந்த மனிதனின்
ஆழ நெஞ்சிலே அன்பினைத் தரிசித்தேன்!
தேசியம் உணர்ந்து தெளிந்த மறவரின்
ஈழ மண்தனைச் சேர்ந்து புரிந்தேன்!

பழகிய நாட்கள் குறுகிய தாயினும்
பாசத்தின் பெருக்கமோ அருவியை வெல்லுமாம்



படிப்பகம்

www.padippakam.com



யாழாண்ட சோழனின் நெஞ்சிற் தவழ்ந்த
ஊரார்ந்த கனவுகள் ஏந்தும் அரங்கிது!

இந்த அரங்கினில் இன்று எம்மண்ணில்
நொந்து கிடக்கும் மக்களை நினைக்கிறேன்!
சிங்கக் கொடியைச் சிறுமையாய்க் கண்டு
தங்கள் தலைவனைத் தழுவி நடந்திடும்
எங்கள் தமிழனை எண்ணிப் பார்க்கிறேன்!

காணி நிலங்களைக் கட்டிக் கிடந்தவன்
கேணி குளங்களைச் சுற்றி நடந்தவன்
பேணினான் ஒரு சுதந்திரப் பயணத்தை
பெற்ற மண்ணுக்காய் அதனையே பிரிந்தான்!

கந்தையுடையும் கஞ்சிச் சிரட்டையும்
சொந்தமாய்க் கொண்டு தெருவினில் நடந்தான்!
வெந்த கால்களும் வெட்டிய தேகமும்
நொந்த நெஞ்சமும் நோய்ப்பட்ட சொந்தமும்
பந்த பாசத்தாற் பெருகிய சோகமும்
கொண்ட கூட்டமாய்க் குருதியில் மிதந்தான்!

ஏற்றிச் செல்லும் வாகனத்தோடு
எல்லையில் வந்து பகைவன் சிரித்தான்!
ஆட்டு இறைச்சியும் அன்னமும் தருவேன்
அதற்குமேற் பல வசதிகள் செய்வேன்!



படிப்பகம்

www.padippakam.com


நாட்டு எல்லைக்குள் கூட்டி நான் செல்வேன்!
நாயைப் போல் வந்து ஏறு நீ என்றான்!

காற்றை உண்டு நாம் கல்லிலே படுக்கினும்
பூட்டும் விலங்கிற்குப் பலியாக மாட்டோம்!
சோற்றுப் பிண்டங்கள் நேற்றுடன் போயின
சுதந்திர வாழ்வொன்றே சொர்க்கமென்றாயிற்று!

ஆட்சியுண்டெனில் அது தமிழாட்சியே
அரக்கனே உனை நம்பிடோம்! என்றங்கு
கூக்குரல் இட்டிடும் வீரத் தமிழர்கள்
கூடி நின்றனர் நம்தமிழ்மண்ணிலே!
அந்தத் தமிழனே அடலேறு என்பேன்!
அதுவே விடுதலைப் பண்பாடு என்பேன்!

சொந்த நிலத்தை மீட்பதற்காக
சுமையை மறந்து சுடுகாட்டில் வாழ்ந்திடும்
அந்தத் தமிழனே அடலேறு என்பேன்

அவனுக்காக ஒருநாள் விடியும்
அங்கே விரியும் அரசும் கொடியும்
புவனத்தாயின் மடியிற் பூக்கும்
புனித மறவரின் பொற்றமிழீழம்!

கொட்டு மேளங்கள்
கேட்கும் அந்நாள்!



படிப்பகம்

www.padippakam.com



கூடித் தமிழினம்
சிரிக்கும் அந்நாள்!

பட்டு விரல்கள்
பாடப் புத்தகம்
தொட்டுத் தூக்கியே
நடந்திடும் அந்நாள்!

கட்டிய மாலையும்
தட்டமும் கொண்டு
கவினுறு தமிழ்ப் பெண்
கோவிலை நோக்கி
இட்ட அடி நோக
எடுத்த அடி கொப்பளிக்க
எட்டி நடப்பாள்
எதிர்காலம் நமக்குண்டு!

பட்ட துயர் யாவும்
பலங்கொண்ட தேசத்தைக்
கட்டியெழுப்புதற்கே!
கவலை விட்டுக்
கடமை செய்வோம்!

(கிட்டுவின் நினைவாஞ்சலி விழாவிற் பாடிய அரங்கக் கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



# ஆனையிறவு மீட்பு

வானம் பிளக்க மானத்தமிழன்
ஆனையிறவுப் பூமியை மீட்டான்!
தானித் தரணியிற் தலை நிமிர்ந்தானெனும்
தங்கச் செய்தியைப் பொங்கிக் கொடுத்தான்!

சேனைகூட்டிச் சிறுமைகள் செய்த
ஈனச் சிங்கள இனவெறிப் படைகள்
ஊனப்பட்டு ஓடிச் சிதற
ஓயாத அலைகளின் உக்கிர எழுச்சியால்
தானைத் தலைவன் தர்மத்தின் பிள்ளை
தமிழ்த்தாய் செய்த யாகத்தின் முல்லை
தேனைப் பிழிந்து தென்றலிற் தந்தான்!
திறந்தது ஈழக் கதவெனச் சொன்னான்!

எட்டும் திசையெலாம் எங்கள் தாயகம்
கொட்டும் பேரிகைச் சத்தம் கேட்டது!
விட்டுப்போன வீடுகளெல்லாம்
விளக்குகளேற்றி விழித்திடல் தெரிந்தது!
கட்டுப்போட்டுக் கிடந்த எம் பூமியைக்
கட்டியணைத்திடக் கண்ணீர் சொரிந்தது!

ஆலயமணிகள் ஆர்த்திடும் ஓசை
அகிலத்திற் தர்மம் வென்றதாய் உரைத்தது!



படிப்பகம்

www.padippakam.com



மாலைகளோடு எங்கள் மக்கள்
மண்ணின் மைந்தரைத் தழுவுதல் தெரிந்தது!

அங்கீ காரம் கிடைத்தது என்று
அரங்கின் நாதம் அங்கே ஒலித்தது!

அன்னைத் தமிழே அடியே உனது
முன்னைத் தவங்கள் முழுதாய் உன்முன்
தன்னைத் தந்தது தலைவனின் வடிவில்
சொன்னேன் பலமுறை சுதந்திர இனத்தினை
மண்ணிற் காண்பது நிசமெனச் சொன்னேன்

போனது எங்கள் பிறந்தகம் என்று
போலிகள் இங்கு பிதற்றியதுண்டு
கானக வாழ்வே கதிநமக்கென்று
கலங்கிய மக்களும் நம்மிடையுண்டு
தானமும் தர்மமும் தாழ்ந்தது என்று
தளர்ந்தவர் கூடத் தமிழருள் உண்டு
தீன் தரும் சிங்களச் சிறுக்கியின் பின்னாற்
திரிவதே தீர்வெனக் கண்டோரும் உண்டு

ஆனது ஆகட்டும் அடிமைகளாய் நாம்
அரக்கரின் ஆட்சியில் அழிவோம் என்று
ஊடகப் புழுக்கள் உளறியதுண்டு
உதவாக் கரைகளை உயர்த்தியதுண்டு!



படிப்பகம்

www.padippakam.com


உலகம் எதிரிக்கு உறுதுணையானதால்
உண்மையை மறைத்து உதவிகள் செய்ததால்
புலிகளைத் தடை செய் என்று ஒரு சில
புண்கொண்ட தலைகள் முழக்கங்கள் செய்ததால்
கலையும் தாயகக் கனவுகள் என்று
கலையும் கவிதையும் படைத்தவர் உண்டு!

இந்தியக் கண்டம் இனவெறி கண்டும்
சிந்தியா திருப்பதால் சிதறும் புலிப்படை
என்றும் இங்கே எழுதியோர் உண்டு!
தந்ததை வாங்கித் தம்மை வளர்ப்பவர்
குந்தியிருந்து குரைத்ததும் உண்டு!
அலையும் இனமாய் அடுத்தவர் நிலத்தில்
அகதி வாழ்க்கையில் வர்த்தகம் செய்து
நிலைகொள்வோமென நினைத்தோரும் உண்டு!
நீட்டிய கரத்துடன் ஓட்டுவோம் வாழ்வெனும்
பாட்டும் பரதமும் படைத்தோரும் உண்டு!

உலகத் தமிழனே! உயர்த்து விழிகளை!
திலகம் இட்டுத் தாயகத் தாயின்
அழகு முகத்தை உளத்தில் நிறுத்து!

விலைமதிப்பில்லா வீரவேங்கையர்
வித்தாய் வீழ்ந்து முளைக்கும் மண்தனை
அலைகள் கொள்ளாது! அந்நியம் விழுங்காது!
அத்தனையிழப்பும் அவமாகிப் போகாது



படிப்பகம்

www.padippakam.com



சொத்துக்கள் சுகங்கள் சுதந்திர வாழ்வு
அத்தனையும் நாம் அர்ப்பணித்துலகின்
புற்றுக்களெல்லாம் புகுந்து கிடந்தோம்!

செத்துப் போகவல்ல!
சிறுமையில் நோகவல்ல!
முத்துப் போன்ற
எங்கள் நிலத்திற்கு
முத்தமிட்டு முற்றத்தில் நிற்க!

இரத்தமும் கண்ணீரும்
இதயத்திற் கனலும்
நிறைத்து நடந்தோம்!
நிலாவை மறந்தோம்!
மரத்துப் போன
முகத்துடன் மாற்றார்
சுரத்துக்கு ஆடினோம்!
சுரண்டியும் பிழைத்தோம்!
கரத்திற் தட்டுடன்
கண்டவர் முன்பும்
சிரத்தினைத் தாழ்த்தினோம்!
சிறியவரானோம்!

அனைத்தும் எங்கள்
அன்னை தாயக



படிப்பகம்

www.padippakam.com



நிலத்தின் விடிவுக்காய்!
நிம்மதி வாழ்வுக்காய்!

ஆனையிறவு மீண்டது என்று
நானும் நீயும் ஆடிக் களிக்கலாம்!
பானம் அருந்திப் பக்கத்தோருடன்
கூடிக் கூத்தாடிக் கூப்பாடு போடலாம்!

இராணுவம் வீழ்ந்தது!
இத்தனை சாய்ந்தது!
என்று எம் பெருமையை
எல்லோர்க்கும் பகிரலாம்!

ஆனால்... நமக்கு
இதுவல்லப் பெருமை!
அகிலத் தமிழர்க்கு
இதுவல்லக் கடமை!

பானை சோறின்றிப்
பருக்கையும் பாலும்
ஊனும் இன்றி
ஒருதாய் மண்ணின்
வீரப் போரில்
விரைகின்ற மக்களின்
மானப் பயணத்தில்
நாமும் இணைவோம்!



படிப்பகம்

www.padippakam.com



சாதிப் போர்வைக்குட்
சங்கமமாகிக்
கோயிற் சாலைக்குட்
கூடிக் கிடக்கும்
நீதியற்றோரும்
நெஞ்சை நிமிர்த்தட்டும்

ஆதியினத்தின்
ஆன்மீக விழிப்பின்
சோதியே எங்கள்
சுதந்திரப் போரெனும்
சேதியை இவர்களும்
செவிசாய்த்துக் கேட்கட்டும்!

ஆனையிறவை மீட்டிடும் பணியில்
வானைத் தழுவிய மாவீர மணிகளை
ஆரத்தழுவி அவர் கண்ட தாயகத்
தேனைப் பருகித் தேசத்தை யணைப்போம்!

தீக்குள் நடந்தும்
திகைப்பில் உடைந்தும்
பூக்களாய் உதிர்ந்தும்
பூமேனி கருகியும்
காய்களாய்ச் சொரிந்தும்
கனிகளாய் நெரிந்தும்
தூக்கமும் தாகமும்



படிப்பகம்

www.padippakam.com



துன்பமும் தம்மைத்
தாக்கிடத் தரையிற்
தவித்துக் கிடந்தும்
நோய்க்கு மருந்தின்றி
நோய்க்குள்ளே புதைந்தும் - உயிர்
போக்கிய உறவுகள்
போற்றிய மண்ணிற்கு
ஆக்கம் அளித்திட
அனைவரும் முயல்வோம்!
ஊக்கத்தோடு
உரிமைப் போரிலே
ஓரினமாகி
உயர்ந்து சிறப்போம்!

புதைக்கப்பட்டோர்
சிறைக்குட் செத்தோர்
சதைநகம் பிடுங்கப்
பதைத்துத் துடித்தோர்

விடுதலைக் குரலை
எழுப்பினார் என்று
வெறியர் வெறிக்குப்
பலியாகிச் சென்றோர்
அனைத்துப் பேரையும்
ஒருமுறை யெண்ணி
ஆனையிறவுப்
பூமியை அணைப்போம்
மீண்டும் ஒரு முறை
ஆண்டு களித்திடத்
தோன்றிய புலிகளின்
தோள்கள் வாழ்கவே!



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த்தாய் வாழ்த்து

சீருடைச் செந்தமிழ் மகள் வாழி! எம்
சிந்தையில் நிறைந்தே அவள் வாழி!
போருடைப் புறமும் அன்புடை யகமும்
போர்த்த பேரழகாள் புகழ் வாழி!

ஆரமாயியலொடு தேனிசை நாடகம்
அணிந்தவள் சங்கம் தனிலூறிச்
சாரமாய் வடிந்த காவியச் சோலையில்
களி நடம் பயின்றவள் பேர் வழி!

ஏருடை நிலமுங் காருடை வளமும்
தாருடை அரசும் இல்லாமல்
பாரினில லையுந் தமிழரை யிணைத்தே
வீறுடைச் செல்வியாய் அவள் வாழி!



படிப்பகம்

www.padippakam.com



## தமிழர் விதி

விதியைப் பார்த்து வினவினான் பாரதி!
விதியே விதியே தமிழச் சாதியின்
கதியென்ன வென்று கர்ச்சித்துக் கேட்டான்!

பாரதி நெஞ்சில் பரவிய பதைப்பு
பாருள்ள வரையும் மறையாது என்ற
தோர் உணர்வென்னுளும் தோன்றிடக் கண்டேன்!

தாருடையரசும் நாடுடை நிலமும்
ஊர் நிறை குடியும் உடையதோர் இனமாய்ப்
பாரினில் நாமும் பதிந்திடும் யுகத்தை
நேர் வரக் காணும் நாள் வருமாமோ?

## புத்தாண்டே வருக

பொற்திரை விலக்கிப்
புன்சிரிப்போடு
பூதலம் வருகின்ற தாயே!
சித்திரைத் தேவி!
சிவந்த எம் பூமியில்
சிதையாத அமைதியைத் தா!



படிப்பகம்

www.padippakam.com



கற்புடை மகளிரின்
கதறலில் எழுந்திடும்
கதைகட்கு முடிவொன்று தா!

பட்டினி பசியிலே
வாடிடும் மக்களின்
பதைப்புக்கு
விடிவொன்று தா!

கற்றிட வழியின்றிக்
கசங்கிடும் பாலரின்
கதிவெல்ல வழியொன்று தா!

பெற்ற எம் பூமியில்
பூக்களும் பாக்களும்
பொழிந்திட அருள் செய்து தா!

சத்தியம் நீதியைத்
தர்மத்தைச் சார்கின்ற
சமாதான விதியொன்று தா!

இத்தரை மீதிலே
எம்மினம் நிலைபெற
இதமான ஒரு செய்தி தா!



படிப்பகம்

www.padippakam.com



## தமிழவையில் ஒரு கவியுரை

எண்ணம் நெஞ்சின் ஆயுதமாக்கி
இதயத் தூய்மையை அதன்களமாக்கி
வண்ணம் வண்ணமாய்க் கவிகலை படைக்கும்
திண்ணம் கொண்ட தமிழவை யோரே!

முன்னம் வாழ்ந்த மொழிதனைக் காத்த
மூத்தோர் செய்த பெருந் தவத்தாலே
இன்னும் வாழும் எங்கள் இனத்தின்
இறைமை கொண்டு இறுமாப்புடன் நாம்
பண்ணும் பாட்டும் பாருக்களிப்போம்!
பதுங்கா இனமெனும் பேருடன் நிமிர்வோம்!

திண்ணையில் இருத்தித் தித்திக்க எமக்கு
எண்ணும் எழுத்தும் கண்ணென ஓதிய
மண்ணிற் பிறந்த மாதவம் மதிப்போம்!
விண்ணில் உயர்ந்த விழுமியம் போற்றுவோம்!

இன்பத்தமிழினை இதயத் திருத்தி
இனிய தேசத்தை எண்ணத் தமர்த்தி
அன்புத் தமிழ்க்குலம் அழுகையை நிறுத்த
ஆண்டவன் பாதத்தை ஆழமாய்த் துதித்து

பண்பும் பாசமும் கொண்டவர் பழகும்
பாலமாய் அமையப் போகும் தமிழவை



படிப்பகம்

www.padippakam.com



வந்து கூடிய அன்புக்குடியை
வாழ்த்தி வணங்கிக் கவிதை படிப்பேன்!

துன்பத் தீயிலும் துயரிலும் எமது
தாயக விடுதலை வேள்வியை யாத்துச்
சங்கத் தமிழின் சரித்திரச் சான்றாய்ச்
சமரிற் தங்கள் வெற்றியைப் படைக்கும்
எங்கள் புலிகளை ஏற்றிப் பாடி
இணையிலாத் தலைவனைப் போற்றிச் சூடி
உங்கள் முன்னென் கவியுரை வழங்குவேன்!

பாருக்கு வழிகாட்டும் பண்பாட்டின் எல்லையின்
வேரில் முளைத்து விழுதாகி யெழுந்தவர் நாம்!
போருக்குட் சிக்கிப் பொருள்வளம் சிதைந்து
நீருக்காய்த் தவிக்கும் நிலம் எங்கள் தாய் நிலம்!

“தண்ணீர் விட்டோ வளர்த்தோம்! சர்வேசா இப்பயிரை
கண்ணீராற் காத்தோம்!
கவி பாரதிதன் கண்கள் பனிக்கக்
கவிசெய்து நின்றான்!

அன்று ஒருமுறை எழுதிய வரிகளை
இன்று உங்கள் முன் ஒலிக்க விரும்பினேன்!
புலம் பெயர் நிலங்களிற் கலையும் கவிதையும்
வழங்கும் மக்களை வணங்கியே கூறினேன்!



படிப்பகம்

www.padippakam.com



பாதச் சதங்கைகள் எங்கள் தாயக
வேதனை தன்னை வெளிப்பாடு செய்யட்டும்!
மாதா மாதம் நாங்கள் செய்யும்
வீணான செலவுகள் தாய்நாட்டைச் சேரட்டும்!

கொட்டும் மேளமும் தட்டும் தாளமும்
காயப் பட்டோர்க்குக் கட்டுப் போடட்டும்!
சொட்டும் வியர்வைத் துளியிலே ஒரு சில
சுதந்திர பூமிக்கும் சொத்தாகப் போகட்டும்!

பிறந்த நாளிலே வந்து குவிந்து
பின்னர் பரணிலேயேறும் பரிசுகள்
திறந்த வெளிகளில் உறங்கி யெழுகின்ற
எங்கள் குழந்தைகள் இல்லமாய் மாறட்டும்!

அரங்குகள் தோறும் நாம் செய்யும் விழாக்கள்
அன்புத் தேசத்தில் அரண்களை யெழுப்பட்டும்!
அரங்கேற்றங்களில் நாம் செய்யும் ஆரங்கள்
சிரங்கு சொறியிற் சிணுங்கும் குழந்தைகள்
மருந்தாய் மாறி அவலம் தீர்க்கட்டும்!
வரங்கள் வேண்டி நாம் செய்யும் அர்ச்சனை
வாழ்வு தேடி நிற்போர்க்கு உதவட்டும்!

அன்னை விழாக்கள் ஆராதனைகள்
கண்ணற்றோர்க்குக் கண்கள் வழங்கட்டும்!
வேலன் விநாயகன் மீது சொரியும்



படிப்பகம்

www.padippakam.com



பாலும் பழமும் தேனும் பாகும்
காலிழந்தோர்க்கும் கையிழந்தோர்க்கும்
காலையும் கையையும் தானம் செய்யட்டும்

வெள்ளி தங்கம் வைரம் வாங்கி
உள்ளே வைத்துப் பூட்டி மகிழும்
கொள்ளை நோயின் பிடியிற் தமிழ்க்குலம்
அள்ளுப்பட்டு அழிவது கண்டனம்!

பள்ளியின்றிப் படிப்பும் இன்றி
பாலரங்கே தவிப்பது கண்டும்
உள்ளங்கல்லாய் உலவிடல் பாவம்
உணர்வு கொண்டு பொங்கிடுவீர் நீர்!

நகையும் புகையும் சிகையலங்காரமும்
வகை வகையான கால்கையணியும்
திரையின் பாடலும் வாழ்வெனக் கொண்டு
கரைந்திடும் எங்கள் கனவுகள் போதும்!

எழுத்தறிவித்தலை இறைவனின் தொண்டென
அழுத்திய மக்கள் எங்கள் மக்கள்!
அன்பே சிவமென எண்ணிய எம்மவர்
மக்களின் சேவையே மகத்தான தென்றனர்
தாயகத்தாயின் பாதம் தொழுதிடும்
காலம் ஒன்று பிறந்தது இன்று!
நாயகமாக விளங்கும் தலைமைக்கு
நாமும் தருவோம் ஆயிரம் கரங்கள்!



படிப்பகம்

www.padippakam.com



கல்விப் பீடங்கள் பல்கலைக்கழகங்கள்
கட்டடம் கோபுரம் கனமான வீதிகள்
பல்தொழிற் கூடங்கள் பயிற்சிக் களங்கள்
பல் பிணி தீர்க்கும் வைத்தியத் தலங்கள்

எல்லை காக்கவும் எதிர்ப் படை போக்கவும்
எமக்காய் முப்படை வீரர் சேனைகள்
என்று இப்படி எம் தாயகத்திலே
எழுப்பும் பணிகட்கு எம் கரம் நீட்டுவோம்!

அமைதி வந்தது அமைதி வந்தது
ஆட்டம் முடிந்தது என்று உறங்கிடல்
நமைக் கெடுத்திடும்! நாளைய சந்ததி
நலன் மறந்திடல் நாசச் செயலன்றோ!
சுமை இறங்கிற்று என நினையாதீர்!
சுதந்திரம் இன்னும் வந்ததாயில்லையே!

அமைதி யென்பது ஆயிரமாயிரம்
ஆண்டுகாலமாய் நிலைத்திட வேண்டுமாம்!
இதையுணர்ந்தினியெம் கடன் ஆற்றுவோம்!
எமது தேசத்தின் எல்லையைத் தீட்டுவோம்!

ஊரைப் பிரிந்து உறவினைத் துறந்து
போரிற் பிணைந்து பொல்லாத பகைவரின்
வேரைப் பிளந்து வீரச்சாவினை
ஆரத் தழுவிய மாவீர மறவரின்
பாதம் பணிந்து பாதையை வகுப்போம்



படிப்பகம்

www.padippakam.com


# செம்மணிப் படுகொலை

செம்மணிப் புதைகுழியில் - உங்கள்
சிந்தனை அடங்கியதோ?
கண்மணிகாள் உமது - உடல்
நொந்து முடங்கியதோ?

எத்தனை துணிவிருந்தால் - உமை
எத்தர்கள் கொன்றிருப்பர்!
கத்திடக் கத்திட உம்
கழுத்தினை நெரித்திருப்பர்!

புத்தனைப் போற்றுவதாய் - இவர்
பிதற்றிடும் போதனை பொய்!
குற்றுயிராய்ப் புதைக்கும் - இவர்
கொடுமையைத் தடுத்திடுவோம்!

சத்தியம் செத்ததில்லை - அது
சாந்தமாய்ப் படுத்ததில்லை!
நிச்சயம் நெட்டுயிர்க்கும்! - அதன்
நிகழ்வுகள் நிலைத்து நிற்கும்!

அத்தனை கொடியவர்க்கும் - பதில்
அளித்திடும் புலிகள் யுத்தம்!
செத்தவர் சாந்திகொள்ள -ஈழச்
சுதந்திரப் பூ மலரும்!



படிப்பகம்

www.padippakam.com


# கையெழுத்திட்டான் கரிகாற் சோழன்

கையெழுத்திட்டான் கரிகாற் சோழன்
மையாலல்ல; மாண்டவர் உயிரால்!
பொய்யாதிருந்து பொறுமையாய்ப் போராடி
மெய்யை இந்த மேதினிக் குணர்த்திய
ஐயன் தலைவன் அவன் திருக்கரங்கள்
வையத் தமிழரின் வாழ்வினை உயர்த்திடச்
செய்யும் பணியிது! சிங்கள இனமும்
உய்யும் படியாய் உலகோரை அணைத்திடும்
மையம் ஆகியே மாண்புடன் விளங்கினான்!
ஐயம் யாவையும் அகற்றிட இணங்கினான்!

மனிதர் நாமென மதிக்கப்படும் வரை
புனிதப் போரொன்றைப் புரிந்திடுவோமெனத்
துணிவாய் இயங்கியே தூய்மையின் வழி நின்றான்!
பணிவேன் நீதிக்குப் பாதை தவறேன்!
அணிகள் திரட்டுவேன் அறவழி உயர்வேன்!
எனவே தனது இலட்சியப் பயணத்தில்
இனமும் இணைந்திடும் படி படைகூட்டினான்!
இனியும் அடிமைகள் இலையெனக் கூவினான்!
வனவாழ் வினையும் வல்லார் எதிர்ப்பையும்
தனதாய் ஏற்றுத் தவவாழ்வியற்றினான்!
கனவினிற் கூடக் கண்ணியம் காத்தான்!


படிப்பகம்

www.padippakam.com



கொதிக்கும் தாருக்குட் குளித்த தமிழரின்
விழிக்குள்ளிருந்து விரிந்த சோதியாய்
விதிக்குச் சவாலிட்டு வெற்றிகள் சூடினான்!
விடுதலைப் பொறியென வீரத்தில் ஆடினான்!

ஐம்பது ஆண்டுகள் அடிமைப்பட்டு நாம்
துன்ப அலைகளிற் துறைதேடி யலைந்தோம்!
தின்பதும் உடுப்பதும் தீனிக்கு உழைப்பதும்
என்பதே வாழ்வாய் இதயம் எரிந்தோம்!

எங்கள் மண்ணிலும் எங்கள் கடலிலும்
பங்கு கேட்கும் பாவியராகினோம்!
எங்கு பார்க்கினும் எதிரியின் படைகள்
தங்கு பாசறை கண்டு குமுறினோம்!

இந்த அரசியல் தந்த இழப்புகள்
கண்டு பொங்கியே காவியத் தலைவர்கள்
வந்து எங்களின் வரலாற்றை மீட்டதால்
இன்று எம்மண்ணில் இந்நிலை கண்டனம்!

பந்த பாசங்கள் அனைத்தும் தமையீன்ற
சொந்தத் தாயக விடிவுக் காய்த் தந்தவர்
முந்து வீரராய் முப்படை அணிகளிற்
சென்று தம்முயிர் ஈந்தவர் தியாகங்கள்
வென்று சிங்கள மக்களின் சிந்தையிற்
கொண்டு வந்ததோர் மாற்றத்தை நமதுமுன்!



படிப்பகம்

www.padippakam.com


வாழ்ந்த பூமியை விட்டுப் பிரிந்து நாம்
வாழ்வு தேடியே அலைந்த கொடுமைகள்
சூழ்ந்து எங்களைச் சுட்டு எரித்ததும்,
சுதந்திரம் ஒன்றே ஓட்டி நடந்ததும்
தாழ்ந்து போவதோ தமிழினம் தரணியில்
தட்டு ஏந்தியே பிச்சை எடுப்பதோ?

வீழ்ந்து போவதோ எங்கள் தாயகம்?
விதியை நம்பி நாம் வாளாவிருப்பதோ?
என்ற கேள்விகள் எம்முன்னே யெழுந்து
இதயச் சுவர்களை மோதியுதைத்ததும்...
நேர்ந்த இழப்புகள் நெருப்பாய் எம்முள்ளே
நீண்டு எரிந்ததும் நினைவு கசந்ததும்
ஈண்டு நினைக்காத் தமிழன் இருப்பனோ?
எண்ணிப்பார்க்காத இளைஞர் இருப்பரோ?



தாண்டிக்கடந்த ஏரிகள் குட்டைகள்
தவழ்ந்து கடந்த கிடங்குகள் பள்ளங்கள்...
ஆண்டிக்கோலமும் அழுதவிழிகளும்
அகதி முகாம்களின் அலங்கோல வாழ்க்கையும்
ஈண்டு நினைக்காத தமிழன் இருப்பனோ?
எண்ணிப் பார்க்காத இளைஞர் இருப்பரோ?

நீண்ட பயணத்தில் நெருப்பினை உண்டோம்!
நெஞ்சக் களத்திலே உணர்ச்சிகள் வென்றோம்!



படிப்பகம்

www.padippakam.com



எழுத்துக்கடங்கா இன்னல்கள் யாவும்
எங்கள் வாழ்விலே பட்டுத் தெளிந்தோம்!
விழுத்த விழுத்த மீண்டும் எழுந்தோம்!
வெட்ட வெட்ட மீண்டும் தளிர்த்தோம்
கொழுத்தக்கொழுத்தக் குளிர்மேகமாகினோம்!
கொத்தக் கொத்த மலையாய் நிமிர்ந்தோம்!
அழுத்த அழுத்த ஆகாயமாகினோம்!
அந்நியப் புயல்களைத் தமிழால் அடக்கினோம்!



படிப்பகம்

www.padippakam.com


வழுத்தினோம் எங்கள் தமிழர் மரபினை!
வாழ்த்தினோம் எங்கள் முன்னோர் மறைகளை!
இழுத்து மூடினோம் எட்டப்பர் மேடையை!
இசையையும் கலையையும் எம் தாய்க்கு வழங்கினோம்!

சாதி ஒன்றது தமிழச்சாதி!
சமயம் என்றது மனிதத்தின் நீதி!
வேதம் அன்பு! என்று நாம் உணர்ந்தோம்!
எங்கள் தாயக விடுதலைத் தாகத்தை
எல்லா முனையிலும் எடுத்துக் காட்டினோம்!
எங்கள் தலைமையை நெஞ்சிலே காவினோம்!
இதனாலன்றோ இன்றும் பெருமையாய்
நின்று சிரிக்கிறோம்! நிச்சயம் நமக்கொரு
குன்றாய் விளங்கும் கொள்கை வீரர்கள்
கொண்டு வருவர் நல்ல செய்திகள்
என்ற நம்பிக்கை எம்மிடம் உண்டு!
எல்லாத் தமிழரும் ஒன்றெனக்கண்டோம்!

நேற்று நமக்கிட்ட தடைகள் சட்டங்கள்
காற்றுடன் போகும் காலம் பிறந்தது!
ஆற்றுப்படை பாடும் அரசுகள் பற்பல
அந்நிய நிலங்களில் எம்மோடு இணையும்!

எந்த முடிவினை எங்கள் தலைமகன்
எடுப்பினும் அதனை ஏற்றிடும் கூட்டமாய்


படிப்பகம்

www.padippakam.com



நின்று அவனுக்கு நெடுபலம் வழங்கும்...
நிச்சயம் இந்த உலகத் தமிழினம்

இந்த முடிவுக்கு இணைந்த ரணிலுக்கு
எங்கள் நன்றிகள் ஆயிரம் ஆயிரம்
வந்தாய் ஐய சண்டாளி செய்த
வரலாற்றுக் கொடுமைக்கு வரம்பொன்று போட!
பிந்தாமல் விரைவிற் பிக்குகள் சபையிலும்
பிரச்சினை வராமல் விளக்கங்கள் தருக!
பந்தாடும் அரசியற் பாரம்பரியத்தை
அடியோடு மாற்றிடும் அனைவரும் இணைக!

இந்த நாள் வரை எமது இனத்தின்
துன்பந்துடைப்பதே தீர்வெனக் கொண்டு
நின்றநோர்வேக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்!
பண்பாடு கொண்டோர் பாரெங்கு முள்ளதைப்
பறைசாற்றும் உங்களைப் பாராட்டி மகிழ்கிறோம்
கண்டம் ஒன்றாய்க் கண்களும் ஒன்றாய்...
அண்டை நாடாய் அயலின் உறவாய்
நின்றும் எங்களை நினைக்கத் தயங்கும்
இந்திய மண்ணே! உனக்கும் நன்றி!
என்றோ ஒரு நாள் எம்மைப் புரிவாய்!
அன்று உனது கடமையைப் புரிவாய்!

உலகத் தரையெல்லாம் உலவும் எனது
உறவுக் காரரே! உங்களை யழைக்கிறேன்!



படிப்பகம்

www.padippakam.com



அழகுத் தாயகம் இதுவரைகண்ட
உடைவுகள் போக்க உழைத்திட எழுங்கள்!

செல்லும் குண்டும் சிதைத்த பூமியை
மெல்லத் தடவி மருத்துவம் செய்ய
எல்லாத் தமிழரும் எழுந்து நடவுங்கள்!
கல்லும் குண்டுமாய்ச் சிதறிய கட்டடம்
கரித்துண்டாகிய கூரைகள் வீடுகள்
பள்ளிக் கூடங்கள் மருத்துவ விடுதிகள்
எல்லை வரம்புகள் இழந்த தோட்டங்கள்
பள்ளந் திட்டியாய்ப் பாழான பாதைகள்
பயணம் காணா வீதிகள் தெருக்கள்
எல்லாம் திருத்தி எங்கள் மக்களை
இன்பப்படுத்த எல்லோரும் வாருங்கள்

எங்கள் கதிரையும் எங்கள் நிலவையும்
எங்கள் கடலையும் எங்கள் நிலத்தையும்
கண்கள் குளமாகக் கட்டியணைத்திடும்
காலம் பிறப்பதைக் காண்கின்ற நாளிது!
வாழ்ந்த நிலத்தை விட்டுப் பிரிந்தவர்
மீண்டுகளிக்கப் பிறக்கும் நாளிது!
கூண்டுச் சிறைகளிற் துடித்த பறவைகள்
மீண்டும் பறக்கும் மேலான நாளிது!
அங்கே பாருங்கள் அழகுக் காட்சியை!
அனைத்து உலகையும் ஈர்க்கும் காட்சியை!
எங்கள் தலைவன் ஏறு நடையுடன்
வந்தான் அவைக்கு!



படிப்பகம்

www.padippakam.com



எங்களையெல்லாம் இதயத்தில் ஏந்திச்
செங்களமாடிய அந்த வேங்கை
இந்த உலகை ஈர்க்கும் மையமாய்
வந்தான் அவைக்கு!

வங்கத்துச் சோழன் வரலாற்றின் பாலன்
தங்கத் தமிழன் தரணியின் முன்னே
பொங்கும் சிரிப்போடு புறப்பட்டு வந்தான்!

சங்கப் புலவர் இன்றிருந்தாலோ
பிள்ளைத் தமிழாற் புகழ்பாடியிருப்பர்!

அகிலம் நிறைக்கும் அனைத்து ஊடகத்
தகவலாளர்கள் தமிழீழத் தலைமையின்
முகத்தினைப் பார்க்க முகாமிட்டிருந்தனர்!

திசைகள் தோறும் பிரிந்து வாழ்ந்து
உறையும் எங்கள் இனிய இனமே!

தம்பியொரு நிலம்; தங்கையொரு நிலம்
அண்ணன் ஒரு நிலம் அக்கா ஒரு நிலம்
என்று பிரிந்து... ஆளோர் மொழியுடன்
நின்று தவித்த நிலைமாறி யொருநாள்...
சென்று தாயகச் சிரிப்பினைக் காணும்
அந்த நாள்காண அறைகூவி நின்றேன்!



படிப்பகம்

www.padippakam.com


நகையும் புடவையும் நமது வாழ்வென
நகைப்புக் காளாய் நடந்தது போதும்!
புகையும் மதுவும் போலிச் சிரிப்பும்
புதுமையென்று கிடந்தது போதும்!
சிகையலங்காரமும் சினிமாமயக்கமும்
சிந்தனைக் குழப்பமும் இதுவரை போதும்!
திரைகள் தோறும் தோன்றும் முகங்களைத்
தோத்திரம் பாடித் துதித்ததும் போதும்!

பகைவன் கூடத் தன்னிலைமாறித்
தலைவன் கரங்களைத் தழுவிட நிற்கிறான்!
முகில்கள் விலக முழுமதி நிலவாய்
முன்னே வந்தான் எங்கள் தலைவன்

முகவரி நமக்கும் உண்டு உண்டென்று
முடிவுகள் செய்து முயற்சிகள் எடுக்கும்
பகலவன் அங்கே செய்திடும் பணிக்குப்
பணபலம் மனபலம் அனைத்தையும் தருவீர்!

உலக அரங்கில் ஈட்டிய அனுபவம்
இளைய தலைமுறை ஈட்டிய அறிவு
அனைத்தையும் எமது அன்னைக்குத் தருவீர்
பறந்து பறந்து பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பாடிப்பாடி மகிழ்ந்தது போதும்!
சிறந்த கலையையும் சீர்பண்பாட்டையும்
கூவிக் கூவி விற்றதும் போதும்!



படிப்பகம்

www.padippakam.com



மறந்து போன மண்ணை யொருமுறை
மனதில் இருத்தி மணித்துளி அளிப்பீர்!
இறந்து போன உறவுகள் பெயரில்
உங்கள் நாட்டிற்கு உழைப்பினைத் தருவீர்!

கையெழுத்திட்டான் கரிகாற் சோழன்
மையால் அல்ல; மாண்டவர் உயிரால்!
தையும் பொங்கலும் தாழ்விலா வாழ்வும்
கையிற் கிடைக்கும் காரணியாகினான்!
தையின் பொங்கலும் சித்திரைத் திங்களும்
மெய்யாய் எங்கள் மண்ணிலே பிறக்க
வையத் தமிழரே வாழ்த்துவீர் நின்று!
வாழிய எங்கள் தாயக மண்ணே!

(தலைவர் / ரணில் ஒப்பந்தத்தில் தலைவர் கையெழுத்திட்டது குறித்து எழுதப்பட்ட வானொலிக் கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



## தாயக அதிர்வுகள்!

கடல் நீர் நடுவே....
கண்ணீர் வடிக்கும்....
தமிழ்த்தாய் முகத்தை ... நினைக்கின்றேன்!

உடல் தீப்படவே...
புழுவாய்த் துடிக்கும்....
ஒருதாய் நிலத்தை .... நினைக்கின்றேன்!

அம்மா! அம்மா!
என்றே கதறும்...
பிஞ்சுகள் குரலைக் கேட்கின்றேன்!

ஐயோ மகனே
ஐயோ! என்றே...
அழுகின்ற தாயைப் பார்க்கின்றேன்!

மங்கலக் குங்குமம்
நெற்றியில் சிதற
மங்கையர் கதறிடக் காண்கின்றேன்!

சிங்கள வெறியர்
செங்கரம் பிசைய...
மலர்ச்சரம் உயிர்விடக் காண்கின்றேன்!



படிப்பகம்

www.padippakam.com



தங்கையர் எங்கே?
தம்பியர் எங்கே?
என்றமும் உளங்களைப் பார்க்கின்றேன்!

கொண்டவன் எங்கே?
குழந்தைகள் எங்கே?
புரண்டமும் உறவினைப் பார்க்கின்றேன்!



படிப்பகம்

www.padippakam.com



## வெற்றித் தெய்வத்தை வேண்டுங்கள்

வெற்றித் தெய்வத்தை வேண்டுங்கள்! - தமிழ்
வீரரின் பக்கம் நில்லுங்கள்!
பெற்றுப் போட்டவள் நிமிரட்டும்! - எங்கள்
பிஞ்சுகள் ஆட்சியில் அமரட்டும்!

கொற்றவை முன்னே செல்லுங்கள்! - புலிக்
கொடியினை உயர்த்திக் கொள்ளுங்கள்
நற்றவத் தலைவன் பேர் சொல்லி - நம்
பிரிவினை விட்டுத் தள்ளுங்கள்

முற்றுகையிட்டான் முற்றத்தில்! - எங்கள்
முகங்களை வைத்தான் அடுப்புக்குள்!
உற்றவையெல்லாம் அவன் கைக்குள்! - எம்
உறவுகளெல்லாம் தடுப்புக்குள்!

கற்றுத் தெளிந்து
        கைதட்ட என்றே
                காலங் கழித்தது போதுமடா!
சுற்றி வளைத்துச்
        சுட்டு எரிக்கச்
                சுதந்திரம் அங்கே சாகுதடா!



படிப்பகம்

www.padippakam.com



# அகதிகள் கதை

ஆண்டாண்டாய் எமைக் காத்த
ஊர்களை விட்டே - நாங்கள்
பாண்டவராய் பட்டினியின்
மூட்டை சுமந்தோம்!
தாண்டாத தடைகளெல்லாம்
தாவிக் கடந்தோம் - பகை
தீண்டாத வனம் நோக்கித்
தூரம் நடந்தோம்!
தோண்டாத குழிகளெல்லாம்
தோண்டி நுழைந்தோம்!
பூண்டோடும் புழுவோடும்
சேர்ந்து கிடந்தோம்!
நீண்டோடும் சாக்கடையில்
நீந்தி மிதந்தோம்
மாண்டாரின் உடல்களையும்
ஏந்திச் சுமந்தோம்!
வேண்டாத விருந்தினராய்
விடுதிகள் கண்டோம்!
ஆண்டாரின் கொடுமையினால்
அகதிகளானோம்!





படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் புதுயுகம்

புதுயுகத்தைத் தோற்றுவித்த
புதுத் தமிழன் வருகிறான்
விழிகொடுத்து வழிநடத்த
வீறுகொண்டு எழுகிறான்
படைநடத்திப் பகையை வீழ்த்தி
விடிவை நோக்கிச் செல்கிறான்
தொடை நடுங்கிச் சாவதில்லை
என்று சாவை வெல்கிறான்
மலை தகர்த்துத் தரை குடைந்து
கடல் குளித்த வீரனாய்
உயிர் நிகர்த்த மானங்காத்து
ஆத்ம பாணம் விடுகிறான்

படிப்பகம்

www.padippakam.com

எட்டுத் திக்கும் கைவிரிக்கும்
என்ற உண்மை கண்டதால்
சத்தியத்தின் வலிமையோடு
தாய் நிலத்தை மீட்கிறான்
உலகமெங்கும் வாழுகின்ற
தமிழர் தூங்கத் தொட்டிலாய்
விளங்கு மீழத் தாய் நிலத்தின்
விலங்கொடித்து நிற்கிறான்
அடிமையென்று தலைகுனிந்த
அவலம் ஓடிச் சென்றதே
பெருமை கொண்டு வாழும் காலம்
தலைவணங்கி நின்றதே
விடிந்த தின்று விடிந்ததென்று
கூவுகின்ற குயில்களும்
முடிந்ததெங்கள் துயரமென்று
பரணிபாடி வந்தவே



படிப்பகம்

www.padippakam.com



# தளபதி கிட்டுவின் நினைவாக...

காலக் கவிதையொன்று
காலக் கவிதையொன்று
நீலக் கடலலையில் நீந்தியதோ?
சோழத் தமிழ்க் குழந்தை
சோழத் தமிழ்க் குழந்தை
சூடமென நெருப்பில் உருகியதோ?

ஈழக் கனவுகளை ஏந்திச் சென்றான் - எங்கள்
இதயத் துடிப்புக்களைத் தாங்கிச் சென்றான்!
தானைத் தலைவன் முகம் காணச் சென்றான்! - தன்
தாயக மண்தொட்டுப் பூசச் சென்றான்

காயத்தைத் தான் எரித்தான் கொடும் பகைவன்! - அவன்
கண்களை மூடவைத்தான் கொடும் பகைவன்!
சாவுக்குள் வாழ்வு வைத்தான் புலி மறவன்! - அந்தச்
சாவையும் வாழவைத்தான் நந் தலைவன்!

பாவியர் சூழ்ச்சி என்றும் பலித்ததில்லை - ஒரு
பரிதியைப் பனிப் புகார் தடுத்ததில்லை
காவிய நாயகர்கள் சலித்ததில்லை! - கொடும்
காரிடி வீழ்ந்தும் நெஞ்சு வலித்ததில்லை!



படிப்பகம்

www.padippakam.com



# இறைகுமாரன் நினைவுக் கவிதை

செக்கு மாடெனச் சிந்தனை சுழன்றிடச்
செயலறுந்தொரு சொல்வெறி வீரராய்
நக்கு நீருடன் நல்லதோர் மண்ணிலே
நாம் நடத்திய அரசியற் பயணத்தின்
திக்கை மாற்றிய திறனுடைத் தீரர்கள்
தீனியாகினார் இப்பெருமாற்றத்தில்
முக்கியம் இவர் முகங்களை நினைந்திடல்
முதல் வணக்கம் உரியது இவர்கட்கே

சத்தி யத்தினை நம்பிய இவர்களும்
சந்த திக்கொரு சாதனை காட்டினர்
புத்தி கொண்டொரு பெருமைகள் அறுத்தவர்
பிழைகள் கண்டுவெம் புயலென வீசினர்
கத்தி பொல்லுடன் துரத்திய சிங்களக்
காடையர்விழு தடைக் கல்லாய் எழுந்தனர்
இத்தகைப் பெரும் இளைஞர்கள் வரிசையில்
இறைகுமாரனை எண்ணுதல் கடமையாம்

பத்துநூறெனப் பதைத்துக் குருதியில்
பாடையின்றியே பட்டுடல் கரைந்தனர்
வித்து வேரென விடுதலை வயலிலே
விளைச்சல் தந்தொரு வெளியினிற் கலந்தனர்
பெற்ற தாயரைத் தந்தையர் சுற்றத்தை
பிரிவுமாதுயர்க் கடலிலே பிரிந்தனர்
பற்றெலாமொரு பாரிய விடுதலைப்
பணியில் வைத்தவர் பாதங்கள் போற்றுவோம்



படிப்பகம்

www.padippakam.com


# பாவி

பிஞ்சுக் குழந்தையின் நெஞ்சைப் பிளந்தொரு
குண்டைப் பதித்து விட்டான் -ஒரு
மஞ்சற் சரட்டுக்குத் தாயையும் கொல்பவன்
என்ற சொல் நிறுவிவிட்டான்

தங்கத் தமிழ்நிலம் தாய்க்குலம் அழித்தொரு
சாக்களம் ஆக்கிவிட்டான் -எங்கள்
தங்கையர் தம்பியர் தந்தையர் குருதியிற்
தாகத்தைத் தீர்த்து விட்டான்

நஞ்சுகலந்த நீர் தொண்டையுட் பாய்ச்சியே
நாசமாய்க் கொலைகள் செய்தான்
விஞ்சும் இளைஞரை வெஞ்சிறை தள்ளியே
வேட்டுவ வேலை செய்தான்

கெஞ்சியழுதிடும் மங்கையர் வாழ்வினைக்
கெடுத்து மலர்கள் கொய்தான் -எமைக்
கொஞ்சி மகிழ்ந்த எம் அன்னையர் மேனியைக்
கூறிட்டுக் கொடுமை செய்தான்

எங்கு பிறக்கினும் இனம் தமிழென்றதும்
எட்டியுதைக்க வந்தான்
தங்கு மிடங்களிற் தேடுதல் செய்திடும்
சட்டம் அமைத்து நின்றான்

தங்கள் பிறப்பிடம் இலங்கையாம் என்றிவன்
எங்களைத் துரத்துகின்றான்
சிங்களப் பாவியின் செய்கைகள் கண்டும் நாம்



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com


## தவிப்பு

ஊஞ்சலிலே உனையிருத்தித்
தேன் தமிழிற் பாட்டிசைக்க
வான் நிலவு உனக்கு வந்து கைகாட்டும் - உன்
தாய் நிலவு உணவு தரக் கைநீட்டும்

தாழ்வு வந்து தழுவிடினும்
சூழுறவு நழுவிடினும்
தங்கமகன் உனது முகம் துணிவூட்டும் - உன்
புன்னகையென் பொறுமைதனைப் பொன்னாக்கும்

நேற்றிருந்த செல்வமெல்லாம்
நெஞ்சிழந்த ஆட்சியிலே
தீப்பிழம்பில் மறைந்ததடா தன்னாலே - ஒரு
காப்பிழந்து கலங்குதடா உன்னாடு

ஆசையுடன் பலதுந்தர
ஆழநெஞ்சில் நினைவு வரக்
காசெடுக்கக் கைநுழைந்து தடுமாறும் -என்
கண்ணிரண்டில் நீர்த்துளிகள் குளமாகும்

அன்பிருக்கு ஊற்றாக
ஆண்டவனின் சொத்தாக
இன்ப முத்தம் ஏற்றிடடா இப்போது - உன்
கைநிறையக் கொடுத்திடுவேன் தப்பாது

(1983ஆம் ஆண்டு ஆடியில் ஏற்பட்ட இனக்கலவரத்தினைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அகதிகளாகக் கப்பலிற் பயணித்த மனைவியையும் மகனையும் லண்டனுக்கு மீட்டு வந்து, லிபியாவில் பார்த்திருந்த தொழிற் பதவியையும் இழந்து துன்பத்தில் வாடிய காலத்தில் எழுதிய பாடல்)



படிப்பகம்

www.padippakam.com



## செங்களம் புகுந்த சிங்களமே

அழித்தாய் அழித்தாய் சிங்களமே - எமை
அடித்தாய் உதைத்தாய் சிங்களமே
தமிழ்த்தாய் நெஞ்சினிற் தீயினை வைத்தாய்
தகர்த்தாய் பெயர்த்தாய் சிங்களமே

பழித்தாய் இழித்தாய் ஒறுத்தாய் வெறுத்தாய்
மறுத்தாய் மறைத்தாய் மணித்தாய் நிலத்தை
மிதித்தாய் எம்மைத் தூசாய் மதித்தாய்
விதித்தாய் எமக்கு அழிவென விதித்தாய்

உனக்கொரு தலைவிதி நீயே கணித்தாய்
இனக்கொலை வெறிக்குன் இனத்தைப் பணித்தாய்
கனித்தமிழ் மாதரின் கனவைப் பறித்தாய்
காவலன் போர்வையில் உயிர்களைக் குடித்தாய்

தனித்தாய் தரணியில் பலதலை முறைக்கும்
தரித்திரம் தேடியே தாழ்வினைப் பிடித்தாய்
படிக்கா யோநீ சரித்திரப் பாடங்கள்
பாவம் தொடரின் சாயுமுன் தலையே



படிப்பகம்

www.padippakam.com



# நம் நாடு பூக்கும் வேளை

எத்தனை காலந்தான் சத்தியத்தை
எத்தர்கள் இருளிலே அடைத்து வைப்பார்
கத்திபொல் ஆயுதம் ஏந்தி நின்று
காமுகர் திருடர்கள் வளைத்து நிற்பார்
சத்தியசோதனை முடியும்போது
சரித்திரம் போதனை செய்ய முந்தும்
அத்தனை பேருமே அடிபணிந்தெம்
அருந்தமிழீழத்தை வணங்குவாரே

பயங்கரவாதமென்றோதி நிற்கும்
பாவியர் ஓரினம் அழித்து நாட்டில்
விலங்கின ஆட்சியை விருத்தி செய்தே
விதித்தனர் தடைகளைச் சர்வதேச
அரங்கிலே தமிழரின் அழிவு காண
ஆயுதம் நிதிதன்னைப்பெற்று வந்தார்
விலங்கிடும் இவர்களை வாழ்த்திப்பாடும்
வீணரும் விழித்திட முரசொலிக்கும்

தூங்குதல் போலே நடிப்பவர் கூடத்
துடித்தெழுவாராம் புவியில் ஈழப்
பூங்குயில் கூவிடும் இனிய வேளை
பூமியே அதிர்ந்திடக் கனியும் வேளை
நாங்களும் தமிழரே என்று கூறி



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



நாட்டியம் நர்த்தனம் ஆடிப்பாடித்
தாங்களும் தாயகம் நோக்கிச் செல்வர்
தமதுமண் தாயகம் ஈழமென்பர்

மாங்குளம் கிளிநொச்சி மட்டு நாடு
வவுனியா திருமலை கண்டியோடு
ஈங்குயாழ் தீவுகள் யாவும் சேர
எழிற்றமிழிழீமாய் மலருமன்றோ
தீங்கிலா ஆட்சியிற் தமிழர் வாழ்வு
செழித்திடும் சிறுமைகள் யாவும் நீங்கி
ஓங்கிடும் ஒற்றுமை ஒளியில் மக்கள்
உயர்வுகொள் இனமதாய்ப் பொலிவராமே

கத்திடும் கடலலை தன்னைக் கொஞ்சிக்
கடற்புலிமறவரின் கப்பல் செல்லும்
முத்துடைக் கடல் மகள் எல்லை தன்னில்
முற்படும் பகைக்கலம் தகர்த்து வெல்லும்
கொத்திடும் குதறிடும் விலங்கின் காட்டிற்
கரந்தொரு காற்படை காவல் செய்யும்
சுற்றிடும் வானிலே விமானச் சேனை
சுதந்திரத் தமிழ்மணம் வீசுமாமே.



படிப்பகம்

www.padippakam.com



# ஒன்று படு

ஒன்று படு தமிழினமே
உந்தனுயிர் காப்பதற்கு
தின்று கெட்டுப் போனவர்கள்
என்ற வசை துடைப்பதற்கு

குண்டு பட்டுக் குருதியிலே
குற்றுயிராய்த் துடிக்கையிலும்
என்று வரும் தமிழீழம்
என்றுரைக்கும் இளைஞரங்கே

கொக்கினைப் போற் காத்திருந்து
தீனெடுக்கும் பகைவனிடம்
சிக்குப் பட்டுச் சிரசிழந்து
சிதறுகின்ற தமிழரங்கே

தத்துவத்தின் கொள்கைகளிற்
தனிமை கொண்டு பிளவுபட்டு
குத்து வெட்டுச் சண்டை பட்டுக்
குளறுகின்ற தமிழரிங்கே

(அலை ஓசை கார்த்திகை 1988)



படிப்பகம்

www.padippakam.com



## ஊர்க்காத்து

ஊர்க்காத்து வீசுது
உள்ள மெல்லாம் கூசுது
நீர்க் கோத்த விழியோரம்
நெஞ்சப் பாரம் தீருது

ஆராரோ தாய்நிலமே நீயுறங்கு
அன்பான தாய்க்குலமே கண்ணுறங்கு

ஏர் பாடும் பாடலுக்கு
ஊர்க்காளை நடைபோடும்
கார் கால மழை மேகம்
கல்யாணக் கதைபேசும்

ஆராரோ தாய்நிலமே நீயுறங்கு
அன்பான தாய்க்குலமே கண்ணுறங்கு

பூம்புதிய மலர்வாசம்
பூர்வீக சந்தோசம்
ரத்தம் சிந்தி நம்மறவர்
மீட்ட பூமி நம்தேசம்

(புலவரின் 'ஊர்க்காத்து' தாள லய அரங்க நாடகத்தின் ஆரம்பப் பாடல் - திருமதி மாதினி சிறீக்கந்தராசா அவர்களினால் இசையமைக்கப்பட்டு அரங்கில் பாடப்பெற்றது)



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com



# மாவீரம் தவழும் மண்

மாவீரம் தவழும் மண்மீதிலே
தாய் மானம் காக்கும் தமிழ்வீரரே

நேர் கொண்ட பகையைத்
தீர்க்கின்ற வரையில்
போரென்று துணிந்த பெருவீரரே

அச்சத்தை விழுங்கி
ஆபத்தை நெருங்கித்
தேசத்தை அணைத்துக் கொண்டீர்களே

பாசத்தை மறந்து
நேசத்தைத் துறந்து
விடிவுக்குக் குருதி தந்தீர்களே

தாய் வாழ்ந்த நிலத்தைத்
தமதாக்க நினைக்கும்
சதிகாரப் படைகள் குடைசாயவே

பாய்கின்ற புலியாய்
வரலாற்றுப் பொறியாய்
ஈழத்தை வரைந்தீர் புவி மீதிலே – தமி
மீழத்தை வரைந்தீர் புவி மீதிலே



படிப்பகம்

www.padippakam.com



# 1994 - ஒரு தரிசனம்

வான் புலிகள் தோன்று கின்ற அறிகுறிகள் தெரியுது
வட்டநிலா தொட்டுவரும் புலிமுகங்கள் தெரியுது
வீழ்ந்தெரியும் எதிரிவிசை விமானமங்கு தெரியுது
விட்டிலெனப் பறந்து'கெலி' வீழ்வதுவுந் தெரியுது
நூர்ந்தெரியும் வான்துறையிற் தமிழ்க் குரல்கள் கேட்குது
நுண்கருவி பலநிறைந்து நந்தமிழில் இயங்குது
ரோந்து சுற்றி எல்லைகாக்கும் கடற்புலிகள் துணையுடன்
கூர்ந்து நோக்கிக் குரல்கொடுத்து வான்புலிகள் பறக்குது

எம்பகைவன் எல்லையிலே தன்படையை நிறுத்தியே
சிங்களத்திற் தோல்வியுரை சிற்றொலியில் ஆற்றியே
கண்கலங்கிக் கொழும்பு நோக்கிக் கால் நடையாய்ப் போகிறான்
கடுமிழப்பை யெண்ணி யெண்ணிக் கால்தளர்ந்து வீழ்கிறான்
எங்கடமை தீர்ந்ததென்று ராணுவத்தார் கூறியே
காலியொடு மாத்தறைக்கும் களுத்துறைக்குஞ் செல்கிறார்
தங்கஇடம் கேட்டுக் கேட்டு ஊர்மனைகள் கடக்கிறார்
தமிழர் வீரங் கூறக்கேட்டுச் சிங்களவர் வியக்கிறார்

நான்கு திசை எல்லையிலும் நமதுவீர மறவராம்
நாடுதன்னைக் காத்துப்பலம் சேர்த்திடுதல் உண்மையாம்
தீங்குதரும் கிருமியெமைத் தீண்டிடாத மாதிரித்



படிப்பகம்

www.padippakam.com



திறமையாகப் பாதுகாக்கும் அமைச்சுமொன்றுமிருக்குதாம்
ஏங்கியழும் நெஞ்சுகளே யில்லையென்ற மாதிரி
எமது தேவை நோக்கிப் பல அமைச்சுகளுமிருக்குதாம்
ஓங்கியெழுந் தேசியமும் எங்கள்கலை கவிதையும்
ஏற்றமிகு லக்கியமும் எழுச்சிதனைப் பெருக்குதாம்

தூங்கி நின்ற வயல்களெலாம் துடித்தெழுந்து பார்க்குதாம்
துடுப்படிக்கக் கலங்களுடன் கடலலைகை கோர்க்குதாம்
தேங்கி நின்ற பள்ளி வாழ்க்கை மீண்டுமங்கு
தொடங்குதாம்
துள்ளிப் பாய்ந்து ஓடியாடப் பள்ளிக்கூடம் குலுங்குதாம்
பாங்கியுடன் தலைவியன்புப் பாட்டுப் பாடக் கேட்குதாம்
பாடல்கேட்டுத் தலைவன் வரும் பாதவோசை கேட்குதாம்
பூங்குயில்கள் புள்ளிமான்கள் புரியுங்காதல் லீலையிற்
புலிகள் கூட்டம் நெஞ்சு வீங்கி காதல் நோயில்
நலுங்குதாம்
தாங்குகின்ற வுழைக்குங்கரந் தந்துநிற்குந் தொழில்களால்
தங்கமணித் தமிழீழம் தலைநிமிர்ந்து நிற்குதாம்

மின்னலென எமதுமுன்னே எந் தலைவன் வருகிறான்
புன்னகையின் பேரொளியில் நின்று கரந்தருகிறான்
மன்னவனின் முன்னிலையில் மறத்தமிழர் அணிநடை
வரிப்புலிகள் சீருடையில் அணிவகுத்து நகர்கிறார்
சின்னவனாய்ப் போர்க்களத்தில் சீறிப்பாய்ந்த செம்புலி
சிலமயிர்கள் நரைத்திருக்கக் கண்டு சிலர் விம்மினார்
சென்றவரையெண்ணியதும் எந்தலைவன் கண்களிற்



படிப்பகம்

www.padippakam.com



செங்குருதி கசிந்து மொழி வரமறுத்து நிற்குது
'இன்றெமது மண்சிரிக்க நேற்றுச்சென்ற வீரனை
என்றுமெண்ணி இந்தமண்ணை ஏற்றத்துடன்
ஆளுவோம்'
என்றெமக்கு ஆணையிட்டு மின்னலென ஊர்தியில்
சென்றுவிட அவனைநெஞ்சிற் கொண்டு பலர்
பொங்குவார்

எந் தமிழர் முகங்களெல்லாம் இன்பவொளி வீசுது
இதயமெலாம் நாம்தமிழர் என்றவொலியோங்குது
இன்று வரை நாமடைந்த துன்பமெல்லாம் போனது
என்று கூறி ஆடிப்பாடி உண்டுவகை கொள்கிறார்

(தொண்ணூறுகளின் முற்பகுதியில் கண்ட தரிசனக் காட்சி)



படிப்பகம்

www.padippakam.com



# விரதம் நோற்றுவோம்

கொடிய நிகழ்வுகள் - யாவும்
கடிதில் மறையவே
விடிவு நோக்கியே - வீர
விரதம் நோற்றுவோம்

நெஞ்சிற் துவக்கை வைக்க நாங்கள்
அஞ்சி யழுத நிகழ்வுகள்!
அச்சம் ஓங்கக் கத்த மறந்து
விக்கி நின்ற நிகழ்வுகள்!



கொஞ்ச வந்த கொடிய பேயைக்
கெஞ்சி வீழ்ந்த நிகழ்வுகள்
தஞ்சந்தேடித் தாவி ஓடித்
தலை மறைந்த நிகழ்வுகள்

கொடிய நிகழ்வுகள் யாவும்
கடிதில் மறையவே
விடிவு நோக்கியே - வீர
விரதம் நோற்றுவோம்

வேற்று மண்ணின் ஆட்சியாளன்
வெறிபிடித்த நாயெனச்
சேற்றி லெம்மை யுருட்டியுருட்டிக்
குதறிக் கடித்த நிகழ்வுகள்!



படிப்பகம்

www.padippakam.com



படலை வீழ்த்திக் கதவை நீக்கி
உட்புகுந்த கொடியவர்
நடன மாடிக் களித்து எம்மை
நசித்து நின்ற நிகழ்வுகள்

கொடிய நிகழ்வுகள் யாவும்
கடிதில் மறையவே
விடிவு நோக்கியே - வீர
விரதம் நோற்றுவோம்



படிப்பகம்

www.padippakam.com

பெற்ற மகனைச் சுற்றி வந்து
பேதலித்துக் கதறியே
சுட்ட பாவி காலைக் கட்டிப்
பிச்சைகேட்ட நிகழ்வுகள்



படிப்பகம்

www.padippakam.com

புலவர் சிவநாதன்

கடலில் ஓடும் கலத்தை நோக்கிப்
பாய்ந்து வந்த பகைவர்கள்
மழலையோடு முதியோர் தம்மை
மாய்த்துச் சென்ற நிகழ்வுகள்

கொடிய நிகழ்வுகள் - யாவும்
கடிதில் மறையவே
விடிவு நோக்கியே - நாங்கள்
விரதம் நோற்றுவோம்.

ஊரைவிட்டு உறவை விட்டு
யாருமற்று உலகெலாம்
பேரைமாற்றிப் பிறரைப் போற்றி
வாழுகின்ற நிகழ்வுகள்

கூறை பட்டுச்சேலை யோடு
கோயில் வாசல் நின்று நம்
குறைகள் கூறி யர்ச்சனைக
கோடி செய்து ஏங்கினோம்

கொடிய நிகழ்வுகள் - யாவும்
கடிதில் மறையவே
விடிவு நோக்கியே - வீர
விரதம் நோற்றுவோம்



படிப்பகம்

www.padippakam.com



## சிங்கள இனமே சிந்திக்கத் தொடங்கு

இன்றும் தீர்வுக்கு எதிர்ப்பினை யெழுப்பும்
இனவாதக் கும்பலை என்னென்று சொல்வேன்?
கொன்றும் குவித்தும் குண்டு செல்பொழிந்தும்
கண்ட அழிவினைத் தொடர்வதா? இவர்கள்
கொண்ட முடிவு! கொடும் படை யாட்சியின்
தண்டனை பெற்றுத் தமிழினம் தொடர்ந்தும்
துண்டாடப் படுவதா இவர் தரும் தீர்வு?

எழிலே இயல்பாய் இன்பத்தின் சோலையாய்த்
திகழும் அந்த அழகிய தீவினைப்
புகைக்கும் காடாய்ப் பூகம்பத்திடலாய்
நிலைத்திட வைப்பதா இவர்களின் கனவு?

இந்து சமுத்திர அலைகளின் நடுவே
இதயமாய் விளங்கும் இனிய பூமியைச்
செந்தழற் பூவாய்ச் சிதைத்திடல் தானா
சிங்கள இனத்தின் சிந்தனை மார்க்கம்?

சிந்திக்கத் தொடங்குவாய் சிங்கள இனமே!
வந்தது உனக்கும் வாய்ப்பெனக் கருது!
முந்திய அரசுகள் முனையாத முயற்சியை
இந்த அரசினர் முன்வைத்தல் பெரிது!



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



எண்ணெய் ஊற்றையும் தன்னுளே கொண்டு
அன்னை எம்தாய் அமைந்தனள் என்று
சொன்னவர் எல்லாம் சும்மாவா சொன்னார்
மன்னார்ப் பகுதியை மறந்திடலாமா?

குளிரை யார் கண்டோம்?
கூதலை யார் கண்டோம்?
படுக்கை யறைக்குள்ளே
பகலில் யார் இருந்தோம்?

இயற்கைத் தாயின் இனிய மைந்தராய்
இரவும் பகலும் உலவிய நாங்கள்
பயத்தின் பிடியில் நடுங்கி வாழ்வது
பாவம்! பாவம்! பாவம்! பாவம்!

சிந்திக்கத் தொடங்குவாய் சிங்கள இனமே!
வந்தது உனக்கும் வாய்ப்பெனக் கருது!

இன்னற் பட்டதும் இரத்தத்தில் மிதந்ததும்
கன்னத்தில் நீருடன் கலங்கியழுததும்
சன்னம் பட்ட சடலங்கள் கண்டு
அன்னையர் கூட்டம் அழுது புரண்டதும்
உன்னையும் பாதித்த உண்மையை நம்பு!
உனக்கும் தெரியும் போரின் அனர்த்தங்கள்!



படிப்பகம்

www.padippakam.com



கணவரையிழந்து கதறிய மனைவியர்
தமையனையிழந்து துடித்த சோதரர்
உனது இனத்திலும் உள்ளதை யறிவாய்!

போரின் பெயரால் பொருளா தாரம்
வேருடன் சாய்ந்ததை விளங்கிக்கொள்வாய்!
ஏறும் விலையால் ஏழையர் பசியில்
நாராய்ப் போனதை நன்கு புரிவாய்!

உலக வங்கியை உருவி உருவி
உலங்கு வானூர்தி உயர்ரக ஆயுதம்
நிறைய வாங்கி வந்து நிரப்பியும்
அசைய முடியாமல் அழிந்ததை அறிவாய்!

உயர்ந்த வாகன ஊர்தியில் அமர்ந்து
உலகை வலம் வரும் அரசியல் வாதிகள்
வழங்கும் இனவெறி வார்த்தைகள் கேட்டு
உயர்த்தி விடாதே வெட்டரிவாளை!

எக்கி யெக்கி இனவெறிச் சுவாலையை
எடுத்து வருகின்ற உன் நாட்டுப் பிக்குகள்
பக்கம் நின்று நீ பாழாகிப் போகாதே!
பாடையில் வீழ்வது பிக்குகளல்ல!

புத்த சமயத்தின் தத்துவம் நமக்குப்
புதியது அல்ல; பகையதுமல்ல!
சத்தியமாகச் சமய வெறிகொள்



படிப்பகம்

www.padippakam.com



பித்தர் நாமல்ல; பதட்டப்படாதே!
தமிழனை யழிப்போம் என்றே தர்க்கிக்கும்
விஷமிகள் வலையில் வீழ்ந்து விடாதே!
அமிழ் தெனக்கூறி ஆலால விஷத்தை
அவர்கள் தந்தாலும் நீ பருகாதே!

சிங்கள இனமே! சிந்திக்கத் தொடங்கு!
சிங்கள இனமே! சிந்திக்கத் தொடங்கு!

ஒன்றை மட்டும் உள்ளே வாங்கிக் கொள்!
உன்னைத் தகர்ப்பது எம் நோக்கமல்ல!
இன்றும் நாளையும் எல்லாக் காலமும்
இனமாய் வாழ்வதே எங்கள் நோக்கமாம்!

தொன்று தொட்டு வாழ்ந்த தாயக
முன்றலில் நின்று மூச்சு விடுதலாம்!
கன்று குட்டிகள் காளைகள் என்றும்
கன்னி தாயென்றும் காண விரும்பினோம்!

நீயோரினமென நாங்கள் அறிவோம்!
நீயும் வாழ்வதை நிச்சயம் புரிவோம்!
உன்னை அணைத்திடும் உள்ளமும் உடையோம்!
உலகினை அணைத்தலே எங்களின் மதமாம்!

உழைத்து வாழ்வதும் உண்மையால் உயர்வதும்
களைத்து வருவோரைக் கரம் நீட்டி யழைப்பதும்
நிலத்தவள் தந்த நல்ல நெறிகள்!



படிப்பகம்

www.padippakam.com



அன்னைத் தமிழெம் ஆருயிர் ஆனாள்!
அவளைத் தீண்டிட அனுமதி வழங்கோம்!
மண்ணைத் தொழுதல் மனிதத்தின் கடனாம்!
மாதவம் செய்ததாற் தாய் நிலம் உடையோம்!

எண்ணத்தாலுயர் தலைமையை இறைவன்
எமக்குத் தந்ததால் எழுமைக்கும் உயர்ந்தோம்!
திண்ணம் நாங்கள் தரணியில் நிலைப்பது!
தீர்வு நாங்கள் தாயகம் காப்பது!

சிங்கள இனமே! சிந்திக்கத் தொடங்கு!
சிங்கள இனமே! சிந்திக்கத் தொடங்கு!

இனியும் யுத்தம் எவருக்கும் வேண்டாம்!
இரத்தமும் கண்ணீரும் எவருக்கும் வேண்டாம்!
திணிப்பும் பணிப்பும் இருவர்க்கும் வேண்டாம்!
துரத்தலும் மிரட்டலும் யாருக்கும் வேண்டாம்!

சிறைப் பட்டிருப்பதும் சித்திரவதைக்கு
இரைப்பட்டழிவதும் எவருக்கும் வேண்டாம்!

"இறப்பதும் இழப்பதும் தமிழினந்தானே!
துரத்துவோம் தமிழரை! தொலையட்டும் இவர்கள்!
இலங்கைத் தீவு சிங்களர் தீவு
விலங்கைப்போடு தமிழரின் காலில்!
சிங்கள மொழியே தேசியப் பாடை!
சிங்களர்வழியே அரசியல் மேடை!"



படிப்பகம்

www.padippakam.com



இந்தச் சுலோகங்கள் இனியும் வேண்டாம்!
சிந்திக்கத் தொடங்குவாய் சிங்கள இனமே!

காவியுடைகளும் கண்களைத் திறக்கட்டும்!
கருணையோடு காழ்ப்பினை மறக்கட்டும்!
சாவின் சரித்திரம் கனவாகிப் போகட்டும்!
சமயச் சிந்தனை மனிதமாய் மலரட்டும்!

இராணுவ உலகிலும் இதயங்கள் உயிர்க்கட்டும்!
எல்லோரும் வாழும் இயல்பினை ஏற்கட்டும்!
தராசினை நீதித்தாய் தாங்கியே நிற்கட்டும்!
தர்மமே ஆட்சியின் தாரகம் ஆகட்டும்!

சனநாயகத்தின் சத்தியச் சான்றாய்
இலங்கைத் தீவு வெற்றி பெறட்டும்!
சிங்களர் தமிழர் சேர்ந்து வாழ்ந்துலவும்
சீரிய பூமியைத் தாரணி காணட்டும்!
எங்கள் பூமியில் நாங்கள் வாழவும்
உங்கள் பூமியில் நீங்கள் வாழவும்
இங்கொரு தீர்வு இறைமையாகினால்
இத்தனை இழப்பும் அர்த்தத்தைத் தருமே!

சிங்கள இனமே! சிந்திக்கத் தொடங்கு!
சிங்கள இனமே! சிந்திக்கத் தொடங்கு!

(ஈரினங்களும் தத்தம் சுய உரிமைகளோடு வாழக்கூடிய ஒரு சுதந்திரத் தீவாக இலங்கைத் தீவு இந்துசமுத்திரத்தில் அழகும் வளமும் கொண்டு செழிப்புறத் திகழமுடியும் என்ற நம்பிக்கையோடு எழுதப்பெற்று வானலையிற் தவழ்ந்த வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com



## சேற்றுப் பயணம்

சேற்றில் நடக்கும் சிறுபிள்ளை போல் நான்
சிரித்தும் அழுதும் சிறுமையில் நடக்கிறேன்!
போற்றல் தூற்றல் அனைத்தையும் மறந்து
புதையும் கால்களை இழுத்து நடக்கிறேன்!
ஆற்றல் எனக்குள் இருப்பது கண்டு
ஆனந்தப்படுகிறேன் அயராது நடக்கிறேன்!
ஊற்று ஒன்று எதிர்ப்படுமென்ற
ஒற்றைக் கொள்கையில் ஓயாது நடக்கிறேன்!

காதல் காமம் கோபம் இவற்றின்
கொடுபிடியெல்லாம் என்னைத் தகர்க்கவும்
நோதல் நொடிதல் சோர்வுகள் யாவும்
கெடுதல் தந்து வேகம் தடுக்கவும்
பாதை தன்னை வகுத்து வகுத்துப்
பாதம் வைத்துத் தூரம் நடக்கிறேன்!
மோதும் தடைகளை முட்டி விலக்கி
சேதம் துடைத்துச் சேற்றில் நடக்கிறேன்!

தூய்மை ஒழுக்கம் வாழ்வெனக் கூறிய
தொல் புகழ்ப் புலவர் தொகுத்த நெறிகளின்
வாய்மை வரிகளைப் பேணிடாதவனாய்
வழி யெலாம் போதையில் வாடிநடக்கிறேன்!
வாய் நிறை தேன்தரு வனிதையர்காதலை
வழிவழி நின்று பாடிச் செல்கிறேன்
தேய்பிறை யென்று தெரிந்தும் மகிழ்ச்சியைத்
தேடித் தேடித் தேய்ந்து நடக்கிறேன்!



படிப்பகம்

www.padippakam.com



ஆத்திரப் படுவேன்! அவசரப்படுவேன்!
அன்பினில் உருகி அடிபணிந் தெழுவேன்!
தோத்திரப் பாடலிற் தூய்மையிற் கலப்பேன்!
துணிவுடையோனாய்த் தலைநிமிர்ந்திடுவேன்!
பாத்திரம் பலவாய்ப் பலநிலை கொள்வேன்!
பகலவனாவேன் பேரிருளாவேன்
காத்திடும் தேவி காட்டிடும் திசையெலாம்
காலடி வைக்கும் பித்தனும் ஆவேன்!

எட்டுக் குணமும் என்னுள் விளைந்து
என்னுட் சிவத்தைக் காட்டுதல் கண்டேன்!
சுற்றிச் சுழரும் அண்ட சராசரம்
சுரக்கும் சக்தியை என்னுளே கண்டேன்!
தொட்டுத் தொடரும் காலச் சுழியிற்
துணிக்கை யொன்றாய் ஓட்டிக் கொணட்டே
விட்டுப் போதல் அறியாதவனாய்
விதியின் பாட்டிற் சிக்கிக் கொண்டேன்!

எல்லாம் என்றோ ஆயிற் றென்று
எங்கள் யோகர் சொன்னாற் போல
வல்லான் இறைவன் வகுத்த படியே
வாழ்வினை யோட்டும் வழியும் தேர்ந்தேன்!
புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாய்க்
கல்லாய்ப் பிறக்கும் கதையொன்றுண்டேல்
எல்லாப் பிறப்பும் பிறந்திட்டேனோ?
இனியும் பிறக்கும் விதியுள்ளேனோ?

வேதம் கேட்கும் விருப்பும் ஒருபுறம்
விடாப்பிடியாக முழங்கக் கேட்கிறேன்!
நாதன் பாதமும் நாயகி நாதமும்
நடு உயிர்க் கோயிலில் அருளொளிபரப்ப



படிப்பகம்

www.padippakam.com



ஓதும் ஞானியர் ஓராயிரமாய்
உள்ளத்திருந்து ஓங்காரமிசைக்க
யாதும் அன்பெனும் நம்பிக்கையோடு
யாக வாழ்வுடன் கணங்கள் கழிக்கிறேன்!

பக்தனும் நான்தான் பாவியும் நான்தான்!
பற்றிலா ஞானத் துறவியும் நான்தான்!
சித்தனும் நான்தான்! சிதறியும் நான்தான்!
சத்தியம் தர்மம் சமரசம் வேண்டிச்
சாதனை புரியும் யோகியும் நான்தான்
எத்தனை முகங்கள் எனக்குளே கண்டேன்!
எல்லாம் நானெனும் தத்துவம் கண்டேன்!

இறையருள் ஞானப் பேரொளி யொன்றே
இம்மையில் மனிதப் பிறவியின் இலக்கென
மறைகளும் சித்தர் மார்க்கமும் உரைத்தும்
மாயை கொள்ளுலகின் மாணிக்கக் கற்களை
உறையினுள் இட்டு உடையினுட் செருகி
ஆசையின் கருவியாய் அலைந்து அலைந்து
மறைவினை நோக்கி மாலைப் பொழுதிற்குள்
நுழையும் கதிரைப் போல் நானும் நுழைகிறேன்!

மரணம் நிச்சயம்; மறைவதும் நிச்சயம்!
மாயை உலகினைப் பிரிவதும் நிச்சயம்!
இரவும் பகலும் இல்லா உலகின்
இதயம் திறக்கப் போவதும் நிச்சயம்!
அறிவும் உணர்வும் அதிர்வும் கடந்த
அடைக்கலப் பேறும் இறுதியில் நிச்சயம்!
சரணம் இறைவன் சற்குரு பாதமே
சாந்தி அவனது பிரணவ நாதமே!



படிப்பகம்

www.padippakam.com



## விபரணக் கவிதை - 2003

சத்தியத்தாயின் நற்றவப் புதல்வன்
சத்தியவரிகளைப் பொறித்தனன் நேற்று!
வித்தென வீழ்ந்து விடுதலை காத்த
வீரமாமறவரின் விழிகளில் நின்று
கர்ச்சனை யெழுந்தது காசினி கேட்டது!
கார்த்திகையிருப்பத்தேழென உய்த்தது!
கொட்டியா தனது கொள்கைகள் தம்மை
விட்டில தென்று விறைத்தது சிங்களம்!!

இத்தனை நாளாய் இருந்தான் பொறுமையாய்
எங்கள் தலைவன் வன்னியின் மடியில்!
நித்திரையல்ல நீண்ட தியானம்!
நிகழ்வன பற்றிய நெஞ்சாவதானம்!
முத்திரை பதித்தான் முழுமையாய்த் தலைமைக்கு
முடிவான தீர்வுக்கு முகங்காட்டி நின்றான்!

நித்தியத் தீர்வினை நெஞ்சினில் நிறுத்தி
நெருப்பினில் நடந்தவன் நீண்ட தோர் பயணத்தில்
முப்படை நடத்தி மூண்டதோர் போரில்
மூர்க்கமாய்ப் பகைவரின் மூச்சாட வைத்தவன்
உற்ற நற்தோழரின் உயிர் நீங்கிப் போகையில்
உயிர் நொந்து துடித்தவன் உலகத்தின் பார்வைக்காய்
மத்தியம் வகுத்தவர் மாண்புரை மதித்து
மாபெரும் அபாயத்தின் மத்தியில் அமர்ந்தான்



படிப்பகம்

www.padippakam.com



பத்திரம் தன்னிற் பதிவையும் செய்து
பாருக்கு மதிப்பினைப் பண்போடு காட்டினான்!
வைத்திடும் தீர்வென்ற வையத்தின் அழைப்பினை
வலுவோடு ஏற்றுத்தன் வரவேற்பை வழங்கினான்!
சத்திரம் அமைத்துச் சர்வதேசந்தரும்
சமரச உணர்வையும் சந்தித்து நின்றான்!
இத்திறன் கொண்ட இனியதோர் தலைவனை
அத்தனை தமிழரும் அன்போடு வாழ்த்தினர்!

தெற்கினில் நடக்கும் தெருப் பேய்கள் ஆட்டத்தைத்
தெளிவுபடுத்திட முற்பட்டு வந்தான்!
கற்றவர் பலருக்கும் கண்களிற் தெரியாத
காட்சிகள் சிலவற்றைக் காட்டிடவந்தான்!
விற்றிட முடியாத விடுதலை தன்னை
விளக்குப் போட்டவன் விளக்கிட வந்தான்!
"எத்தகை தீர்வினை எம் மகக்ள் ஏற்பர்"
என்பதைச் சற்றுத்துலக்கிட வந்தான்

'விற்றிடும்' அரசியல் தெரியாத தலைவன்
வீரத்தின் களத்தினை நடத்திய தலைவன்
முற்றிலும் தன்னின விடுதலையொன்றே
மூச்சிலும் பேச்சிலும் உணர்விலும் கொண்டவன்!
கச்சிதமாய்த் தன் கடமையைச் செய்பவன்!
கண்ணொளியால் இந்த உலகத்தைக் காண்பவன்!
"நிச்சயம் நமக்கொரு நிரந்தரத் தீர்வுண்டு!
நம்புங்கள்" என்றெமை நிமிர்ந்திட வைத்தவன்



படிப்பகம்

www.padippakam.com


இத்தகை தலைவனின் இன்றைய பேருரை
ஈழத்தில் எழுந்த இமயத்தின் பேரோசை!
சொற்றொடர்மாயைகள் சோடனை வார்த்தைகள்
சுற்றி வளைப்புக்கள் அனைத்தையும் விடுத்தவன்
பட்டென விடயத்தைப் பளிங்கு போற்பரப்பினான்
பாருக்கு விளங்கிடும் வார்த்தையால் நிரப்பினான்
சற்றுப் பதட்டமும் இல்லாமற் சாந்தமாய்ச்
சகலரும் உணரவே சங்கதி கூறினான்!

நெற்றிக்குள் ஒரு விழி நெருப்பெனச் சுடர்வதை
நெடுஞான முள்ளவர் நிச்சயம் காணுவர்
வெற்றிக்குப் பிறந்தவோர் வீரனின் நெஞ்சுரம்
தொற்றிக்கொண் டிருந்தது அவனதுதொனியிலே!

தலைவன் உரைத்த வார்த்தைகள் சிலவாம்!
தலைவன் உரைக்கா வார்த்தைகள் பலவாம்!
மலையை நிகர்த்த மாண்புகள் கொண்ட
மறத்தமிழ் வீரனின் உணர்வுகள் பலவாம்

எங்கள் தலைவனின் எண்ணத்தைப் பார்த்திடும்
நெஞ்சம் கொண்டிங்கு நிற்பவர் நாங்களாம்!
வங்கத்தின் அலைகளில் விரிகின்ற ஓசையை
வார்த்தையில் வடிப்பது வரலாற்றுக் கடமையாம்!



படிப்பகம்

www.padippakam.com



பத்தையா நூறையா பறித்தனர் இந்தப்
பாவியர் எங்கள் முற்றத்தில் நின்று!
சொத்தை மட்டுமா சூறையாடினர்
சுகங்களை மட்டுமா சுமந்து சென்றனர்!

வற்றிடாத எம் வாழ்வையுமல்லவா
வாரிச் சென்றனர் தெற்கினை நோக்கி
கத்திக் கதறவும் காணாது கழுத்தினை
வெட்டிச் சென்றனர் விரட்டித் துரத்தினர்

செத்தோம் சிதறினோம் சிறையினில் மாண்டோம்
சேறு சகதியில் வெற்றுடல் மறைத்தோம்
பெற்ற தெய்வங்கள் பேசாத செல்வங்கள்
பிணங்களாகிடப் பிரிவோடு கலங்கினோம்

பத்துமாதத்துக் கர்ப்பிணி யிறந்தாள்
பாட்டியோடு எம் பாட்டனும் இறந்தான்!
பொட்டழிந்தது பூவும் எரிந்தது!
போக்கிழந்து நம்மூர்கள் நடந்தன!

இல்லம் என்பதன் அர்த்த மிழந்தோம்!
ஈன்ற தாய் முன்னே அமர்வதை யிழந்தோம்!
கல்வியூட்டிய பள்ளிகள் இழந்தோம்!
காதலித்தவர் களவின்பம் இழந்தோம்
எல்லைகாத்தவெம் கோயில்கள் இழந்தோம்
எழுந்த வைத்திய சாலைகள் இழந்தோம்
சில்லபில்லமாய்ச் சிதறியபோதிலெம்
சிரிப்பும் போனது சோகம் வாழ்வானது!



படிப்பகம்

www.padippakam.com


நூல் சுமந்தவர் நெஞ்சினிற் தீயுடன்
தோளில் ஆயுதம் தூக்கி நடந்தனர்
கோல் சுமந்தனர் குண்டும் சுமந்தனர்
கொடும்பகைதனைக் கொன்றிட நின்றனர்

கால் கழன்றிடக் களத்தினிலாடியே
கண்துயின்றனர் வேங்கையர் ஆயிரம்
தோல் பொசுங்கிடத் தேகம் எரிந்திடத்
தீயிற் போயினர் கரும்புலி மறவரே!

துன்பம் இத்தனை வாட்டிய போதிலும்
தேசத் தலைவனோ வெற்றிகள் ஈட்டினான்
இன்ப வேதனை இதற்குள் உதித்தது!
எங்கள் வீரரின் எழுச்சி குதித்தது!

சொந்த மண்ணிலே சுதந்திர தேவிதன்
சுடர் பரப்புவாள் சோதியில் விடுதலை
வந்திடும் எனும் வாழ்த் தொலி கேட்டது!
வரம் கிடைத்திடும் வாசல் திறந்தது

அகதிக் கோலமும் அழுகையின் ஓலமும்
அவலக் காலமும் எங்களைப் பிடித்தது!
முகத்தில் வேதனை மோதும் விரக்தியே
சகத்திலெங்களின் குடிநிலையானது!


படிப்பகம்

www.padippakam.com



பகடிப் பேச்சுகள் பார்வைக் குறும்புகள்
அனைத்தும் எங்களை வருத்திக் குலைத்தன
அகத்தில் நம்பிக்கை அறம் வெல்லுமென்றே
ஆழஉணர்வுடன் அலைந்து அடங்கினோம்!

கொடுத்த கரங்கள் கொடை கேட்டு ஏங்கின!
அணைத்த நெஞ்சுகள் அணைப்புக்கு ஏங்கின!
உடுத்த பண்பாடு உடை கேட்டு நின்றது!
உரைத்த நாக்குகள் உள்வாங்கி நின்றன!
படித்த மனசுகள் பட்டறை தேடின!
படைத்த உயிர்களோ பாஷை பயின்றன!
வடுக்கள் தாங்கிய வல்லினமாகினோம்
வாழ்வு தேடிடும் பிழைப்பினை நாடினோம்!

இந்த வேளைதான் உலகும் விழித்தது!
“இருக்கிறோம்” என்று குரலைக் கொடுத்தது!
வந்து பார்க்கவும் சிந்தை திறந்தது!
வான வீதியில் வலம் வரலானது!
எந்த லைவனும் ஏற்புரை கூறினான்
பொந்தணில் ரணில் விக்கிரமசிங்க
புறப்பட்டார் பெரும் புரட்சியைச் செய்யவே!

நோர்வேத் தாயின் நீண்ட முயற்சியின்
நிகழ்வு நமது முன் னரங்கினை யமைத்தது!
கோர்வையாகவே கூட்டங்கள் நடந்தன!
கொள்கையின் பரிமாற்றம் நடந்தது!



படிப்பகம்

www.padippakam.com



பீரிஸ் - பாலா தலைமையில் ஈரீனப்
பாலம் அமைத்திடும் பான்மை தெரிந்தது!
வேரில்இருந்தெங்கள் தேசத்தலைவனும்
விளக்கெனும்படி அறவழி காட்டினான்!

அமைதிக்கான பயணம் ஒன்றிலே
ஆர்வத்தோடு பங்கு கொண்டிருந்தோம்!
அமையும் புதிய தீர்வெனும் பண்பிற்
பாரைக்கூட நாம் வலம் வந்தோம்
அமெரிக்காவையும் ஐரோப்பாவையும்
அணுகிக் கூட அறிவுரை கேட்டோம்
நமைவைக்காத நாடுகளாயினும்
நன்மை தருமெனிற் கரந்தந்துநின்றோம்!

இந்திய அரசு தந்த துன்பங்கள்
அனைத்தையும் கூட மறந்திடத் துணிந்தோம்!
குந்தகம் செய்யும் சந்திரிக்காவையும்
பந்தியில்வைப்பதைப் பார்த்தும் தணிந்தோம்!
வந்தெமைக் குதறிய சிங்களப் படையையும்
வாருங்கள் என்று வரவேற்று நின்றோம்
எந்த தமிழீத்தில் இனமானத் தோடு
எம்மினம் வாழும் எனும் நிலை வேண்டியே

கந்தக நெடியும் காற்றில் விஷமும்
குண்டின் கொடுமையும் செல்லின் எரிப்பும்



படிப்பகம்

www.padippakam.com



கண்ட எம் மக்களின் கண்ணீரில் நின்றே
கரங்கள் குலுக்கினோம் கடமையில்இறங்கினோம்
சொந்த நிலத்திலே சுட்டுக் கருகிய
சந்தனமேனியர் சாவுக்குள் நின்றே
வந்தனம் சொன்னோம் வாழ்த்துக்கள் கூறினோம்
வானத்தில் ஏறி வலங்களும் வந்தோம்!

சண்டை நின்றது சமாதானம் வந்தது!
சமுத்திரத்தீவினிற் சமதர்மம் எழுந்தது!
தொண்டையிற் சிக்கிய நரகத்து முள்ளு
துப்பலினோடு தூரப் பறந்தது!
என்ற எண்ணத்தில் எல்லாரும் நின்று
எகிறிக் குதித்துச் சிரித்துக் களிக்கையில்
வந்தாள் மகராசி வடிவுக்கு அரசி
கொண்டையை விரித்துக் கொலுவைப் பிரித்தே!
சந்திரிக்கா எனும் சிங்களத் தலைவி
சமாதானத் தாயின் குரல்வளைதிருகவே!

"மீண்டும் குழப்பம் மிகுதியும் குழப்பம்!
மீண்டும் கலவரம் மீண்டும் இனவெறி!
ஆண்ட சிங்களம் மீண்டும் தாண்டவம்!
பாண்டவர் பயணம் மீண்டும் தொடரும்!
கூண்டிற் தமிழரைக் கொழுத்துங்கள் என்று
தூண்டும் அரசியல் தோன்றுக" என்று
மீண்டும் வந்த மிலேச்சத்தலைவியின்
காண்டம் மீண்டும் கனிவதுகண்டோம்



படிப்பகம்

www.padippakam.com


இரண்டாயிரத்து மூன்றில் நின்று
இன்னுமொருமுறை மீளாய்வு செய்கிறோம்
வரண்டு போன பூமியை மீண்டும்
வனப்புறு தேசமாய் மாற்றிடும் பணியிற்
திரண்டு நிற்கும் தமிழினம் தனது
திருப்புமுனையைத் தேடுகின்றது!
சுரண்டும் அரசியற் சூறாவளிக்குச்
சுருக்குப் போடும் கயிறொடு நின்றது!

சிங்கள இனத்திற்குத் தலைவர்கள் நூறு
சித்தம் கலங்கினாற் கட்சி தொடங்கலாம்!
“மங்கல தேவா மாணிக்கதேரோ
மரணம் சரணம் சேனைக்கு வாவா
பங்குண்டு உனக்குத் தமிழனை அழிக்கப்
பரப்புவோம் புத்தம் படைக்குள்ளே நீவா”
சங்குடன் புறப்பட்டோர் அனைவரும் தலைவரே!
சட்டத்தை மீறிடும் அனைவரும் தொண்டரே!

எங்கள் இனத்திற்கோ ஒருவனே தலைவன்!
எத்தீர் வெனினும் எடுப்பவன் அவனே!
பொங்குதமிழே எங்கள் வாழ்வு!
போற்றும் அறமும் தர்மமும் வாழ்வு!
வெங்களம் சென்றது விடுதலை வாழ்விற்கு!
வேற்று இனங்களை வீழ்த்திட வல்ல!
இங்கிதை யுணர்ந்தவர் எம்மையுமுணர்வர்!



படிப்பகம்

www.padippakam.com



ஈழம் என்பது எமையீன்றதாய் மண்!
பொங்கியுண்ணவும் பொழுதைக் கழிக்கவும்
பூங்கன்று நாட்டவும் போராடுகின்றோம்!

இனியும் எமக்கு ஏமாற்றம் வேண்டாம்!
இனியும் எம்மை ஏய்த்திட வேண்டாம்!
இனியும் நாங்கள் பொய்களை வேண்டோம்!
இனியும் நமக்குப் போதனை வேண்டாம்!
கனியும் என்று காத்திருந்தெங்கள்
காலம் ஒன்றே கழிவது கண்டோம்
சனியும் புதனும் பார்த்தது போதும்!
சரித்திரக் கதவை யடைத்ததும் போதும்!

தனியாய்த் தமிழன் தானரசமைக்கும்
பணியில் இறங்கும் படி நடவாதீர்
மனிதம் என்றும் மதமொழி யென்றும்
மயக்கம் தந்து குடி கெடுக்காதீர்

தலைமையின்றித் தான்தோன்றித் தனமாய்த்
தத்தம் வழியே இனவெறி யெழுப்பும்
நிலைமை கொழும்பில் நிலைத்திடும் வரைக்கும்
இரத்தம் ஒன்றே தீர்வெனவாகும்

கலைகின்ற அரசும் காடையர் குரலும்
கையில் ஆயுதம் ஏந்திய படையும்



படிப்பகம்

www.padippakam.com



விலையாய்க் கேட்பது தமிழனின் அழிவை!
வீணாய்ப் போகும் அத்தனை முயற்சியும்

பட்டுக் களைத்தது தமிழர் பேரினம்
பாய்ச்சல் நமக்குப் புதுக்கலையல்ல
விட்டுக் கொடுப்பதும் வீரத்தின் அம்சமே
விளங்கா மலிருப்பவன் வேங்கையுமல்ல
குட்டுப் படாத குன்றுகளாகிக்
கூரைக்கு வெளியே கொடிகட்டி நிற்கிறோம்
எட்டிப் பாருங்கள் வன்னியை ஒரு முறை
எல்லாம்தெளிவாய் எவருக்கும் புரியும்
கட்டி யெழுப்பும் கரங்களின் உறுதியைக்
கட்டியங்கூறும் காட்சியைக் காண்பீர்!
தட்டுப் பட்டால் வீழ்வது நீங்களே!
தாகம் நமக்குத் தமிழீழமென்பதே!

(2003 மாவீரர் தினத்தையொட்டி தமிழீழத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையைப் பின்னணியாக்கி எழுதப்பட்ட கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



## விழுந்து புரண்டிடுவோம்

சிவந்த இதழ்ச் சிரிப்பு - எனது
சிந்தைக்கு இன்பமடி
மலர்ந்த உனது முகம் - எனக்குள்
நின்றிடும் சொந்தமடி
கலந்து களிக்கையிலே - இளமை
காலத்தை வெல்லுமடி
வளர்ந்து சிறகடிக்கும் - காதலால்
வானத்தில் வாழ்வமடி

அளந்து கொடுப்பதில்லை - அன்பினை
அறிவாற் தருவதில்லை
பிளந்த பெருங்கடல்போல் - இன்பம்
பெருக்கெடுத்தோடுதடி
குழந்தையுளம் எமக்கு - அங்கே
கொடு வஞ்சம் சேர்வதில்லை
விழுந்து புரண்டிடுவோம்- விதியின்
வலியையும் வென்றிடுவோம்



படிப்பகம்

www.padippakam.com


## நித்தியம் பெண்ணின் அன்பே

பட்டுத் துணியுடுத்தே - பாவைதன்
பருவ அழகில் நின்றாள்
கொத்து மலர்களினைக் - கார்மழைக்
கூந்தலிலேகொணர்ந்தாள்

கட்டிக்கரும்பிதழாள் - நாவினாற்
காதற் கனி கொடுத்தாள்
விட்டு விலகாத - அன்பினால்
வேதப் பணிகள் செய்தாள்

வெட்டும் விழிகளினால் - தேவைகள்
தெரிந்து அருகில் வந்தாள்
கட்டியணைத்தெனது - பாடலின்
குருவாய் அணிகள் தந்தாள்

வட்ட நிலவொளியில் - முற்றத்தில்
வந்து அமர்ந்து கொண்டோம்
நட்ட நடுநிசியை -இன்பமாய்
நகர்த்தும் வழிகள் கண்டோம்

முற்று முழுதான - இன்பினில்
மூழ்கிக் கணங்கள் உண்டோம்
சற்றும் விலகாத -துணையாய்ச்
சேர்ந்த மனங்கள் கண்டோம்


படிப்பகம்

www.padippakam.com



பக்தி நிலையிதுவே - இன்பப்
பண்பும் இதன் விளைவே
நித்தியம் பெண்ணின் அன்பே -அவள்தான்
நீடூழி வாழியவே

## பூச்சரங்கள் போகவில்லை

பாச்சொரிந்த பெருநிலமாம் தமிழகத்தில்
பண்டையொரு முச்சங்கம் வாழ்ந்ததென்றார்
நாச் சுருண்டு போனதுபோற் தமிழின் நாதம்
நசுங்கி மொழி ஆங்கிலமே தமிழாய் மாறிப்
போச்சுதென வெண்ணியுளம் நொந்து போனேன்
புகழ் கொண்ட புலவர்களை யெண்ணலானேன்
பூச்சரங்கள் சூடுகின்ற பெண்கள் மட்டும்
போகவில்லை வாழுகின்றார் பூரித்தேனே



படிப்பகம்

www.padippakam.com



# காதலினாற் கதிர் சிவந்திருக்கும்

வெற்றிக்கனிகளை வீழ்த்துகின்றார் - அவர்
விடுதலைத்தேரினை ஓட்டுகின்றார்
செத்துப் பிறந்தது எங்களினம் - இன்று
சாவே யிலையடா எங்களிடம்

கொட்டிய செல்களும் குண்டுகளும் - இனி
எட்டியும் பார்க்காது எங்கள் நிலம்
லட்சியக் கொள்கைகள் கொண்டு தினம் - தமைக்
கட்டி எழுப்பிடும் எங்கள் இனம்

முற்றத்தில் மீண்டும் முகங்கள் மொய்க்கும்
முழுநிலா வானத்தை முத்தமிடும்
சுற்றத்தின் சிரிப்பொலி தொடர்ந் தொலிக்கும் - இன்ப
சுகத்தினில் ஊரெலாம் விருந்தளிக்கும்

கற்றிடப் பள்ளிகள் கரம் விரிக்கும் -அங்கே
கத்தலும் ஓடலும் கலந்திருக்கும்
சிற்றிடையாரொடு சீரிளைஞர் -செய்யும்
காதலினாற் கதிர் சிவந்திருக்கும்



படிப்பகம்

www.padippakam.com



# வீரத்திலகமிடு

வெற்றி கொடுத்த வீரரின் நெற்றியில்
வீரத்திலகமிடு
வீட்டின் வாசலில் நின்ற பகைவரை
விரட்டினர் கோலமிடு
வெட்டியெரித்து வீழ்த்தியடித்த
வெறி கொள் இராணுவத்தின்
கொட்ட மடக்கிக் காவல் புரிந்த
தோள்களில் மாலையிடு

பட்டியல் போட்டு எங்களைக்கொன்ற
பாவியர் ஆட்சியிலே
பாழ்சிறைப்பட்டு எத்தனை இளைஞர்
ஆவியைப் போக்கிச் சென்றார்
திட்டங்கள்போட்டுச் சட்டங்கள் ஆக்கித்
தீயவர் எம்முரிமை
முற்றுமெடுத்து முண்டங்களாக்கி
வேதனை செய்திருந்தார்

இத்தனை கொடுமை பட்டது போதும்
என்றதோர் நெஞ்சுடனே -பெரும்
சத்தியப் படையாய்ச் சமர் செய எழுந்த
சந்ததி வாழியவே



படிப்பகம்

www.padippakam.com



## பாலையும் காதலைச் சொரியும்

மலைச்சாரலிலே ஒரு குடிசை செய்து - இள
மங்கையுடன் நான் வாழ்வேன்
மணிக்கணக்காய் அவள் மடியினிலே - நான்
சாய்ந்திருந்தே கவி புனைவேன்

அலையடிக்கும் ஒரு மணற் பரப்பில் - விளை
யாடிடுவேன் அவளோடு
தலைநிரப்பும் நறு மலர் மணத்தில் - புதுப்
பாடல்களை நான் பொழிவேன்

வயல்வரப்பில் வரும் தென்றலிலே - உளம்
பொங்கிட அவளுடன் நடப்பேன்
கயல் குதிக்கும் நல்லருவியிலே - அந்த
நங்கையுடன் நான் குளிப்பேன்

பைங்கிளி யென்னுடன் வாழ்ந்தாற்
பாலையும் காதலைச் சொரியும்
ஐந்திணையும் அவளாலே - அகத்
தன்பிலேதான் வந்து முடியும்.

இலையிதைப்போல் ஓர் இன்பமெனும் - பெரும்
நிலையினை நான் நிதம் அடைவேன்
கலகலக்கும் அவள் குரலொலியில் - என்
காலத்தைக் கழித்துயிர் பிரிவேன்



படிப்பகம்

www.padippakam.com



# நடிக மணிக்கு

நடிக மணி எங்கள் நல்ல வைரமுத்து
நாடகத்தால்ஈழ ரசிகர் தமை ஈர்த்த மகன்
விடியல் வரை நாங்கள் விழித்திருந்து அவர் நடிப்பில்
ஈடுபட்டு எங்கள் இதயம் கொடுத்திருப்போம்

அடியடியே கள்ளி யாரடி நீ என்று அவர்
அடர் மயானம் நின்று ஆர்ப்பரிக்கும் காட்சிதனை
முடிவு வரை பார்த்து முழுக்கலையைப் புசித்தவர்கள்
முன்னணியில் இவரை வைக்கின்ற முறைமை யுண்டு

நெஞ்சிடிக்கும் உடல்வேர்க்கும் நடுங்கும் தலைவிறைக்கும்
குஞ்சுகுறுமான்கள் குழந்தைகளின் அகமெல்லாம்
மண்தளிர்க்கும் மரபுத் தமிழ் உயிர்க்கும் வைரமுத்து
பொன்குரலில் அரங்கே பொன்னுலக மாய்ஒலிக்கும்

சின்னமணி யென்பார் சேர்ந்தரங்கில் நின்று தமிழ்
தன்னை இசையோடு தந்திடுதல் தித்திக்கும்
அன்னைத் தமிழீழ மண்ணில் இவர் கலைப் பணியை
எண்ணும் பொழுதிவரை ஏற்றுதற்கு நெஞ்சு முந்தும்

தொன்மை நிறை கூத்தும் தொடர்கின்ற நாடகமும்
தந்த கலைச் செல்வம் தாயகத்தின் உடமைகளாம்
இன்னும் இவர்பெயரை இதயத்திருத்துகின்ற
இனிய கலையுலகு என்றும் வளருகவே

(நடிகமணி வைரமுத்து, வில்லுப்பாட்டு சின்னமணி ஆகியோரின் ஆற்றல்களை வியந்தெழுதிய வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com



## எங்கள் முத்து மாரியம்மா

எங்கள் முத்து மாரியம்மா
அன்பு கண்டு பூரியம்மா
தங்கத் தமி ழோசை கொண்டு
நாங்கள் வந்தோம் நேரிலம்மா

வேற்று மண்ணின் காற்றி லுமெம்
பாட்டு னக்குக் கேட்குமடி
மூச்சு மட்டும் உண்மையிற் றாய்
நாட்டில் நின்று ஆர்க்குமடி

நேற்று வந்த வாழ்க்கையிலே
நெஞ்சிழந்து போகாமல்
போற்றுகின்றோம் தாய் நிலத்தைப்
பாட்டன் முகம் சாகாமல்

ஆற்று வெள்ளம் அடிக்கவில்லை
அதனோடு மிதக்க வில்லை
காட்டுத் தீ பரவவில்லை
கடும் நோயும் துரத்தவில்லை
சீற்றங் கொண்ட சிங்களத்தார்
செய்த பெருங்கொடுமையிலே
நாட்டை விட்டு வந்தோமடி
நாளை மீண்டும் செல்வோமடி



படிப்பகம்

www.padippakam.com



## எங்கள் தலைவனுக்கு இதயத்தால் ஒரு வாழ்த்து

கொதிக்கும் தாருக்குட் குளித்ததமிழரின்
விழிக்குள்ளிருந்து விரிந்தவன் தலைவன்
மிதித்த சிங்கள மிருகத்தின் பாதத்தில்
மிடறு நசுங்கிட விழிகள் பிதுங்கிடச்
சகிக்க முடியாத் துன்பத்திற் துடித்துத்
துவண்டு சரிந்த தமிழனின் நெஞ்சிலே
முகிற்குள்ளெழுந்த முன்னவர் தோன்றலாய்த்
தெறித்த மின்னலே யெங்கள் தலைவனாம்

பசியெடுத்திடும் போதெலாம் பாவியர்
பலியெடுத்திட வந்து புகுந்து நாம்
வசித்த பூமியை வதைத்துக் குதறிட
வலியிற் கத்தியே வக்கற்று வீதியில்
திசைகள் எட்டும் நாம் சிதறியபோதிலெம்
சிந்தை செய்த நல்நோன்புகள்தான் எம்முன்
தசையும் தேகமும் தரிசனத் தாகமும்
தாங்கியின்றொரு தலைவனாய் வந்ததே!

காத்திடும் எனக் கரங்கூப்பித் தேவர்கள்
கண்ணில் நீருடன் வேண்டியபோதிலே
கூத்தன் நெற்றியிற் குமரனார் தோன்றிய
கொள்கைபோல் எங்கள் தமிழர் குலத்திடை



படிப்பகம்

www.padippakam.com



பூத்தவன் இந்தப் பிரபாகரனெனும்
புண்ணியச் செல்வன் பூமியிற் தமிழர்கள்
ஆர்த்தலைந்திடல் ஆகாது என்பது
போற்பிறந்தவன் பல்லாண்டு வாழியே!

யார் நினைத்துளர் நமக்குளே யித்துணை
வீரவேங்கையின் வித்துவிழுமென!
பார் திகைத்திடப் பகைவர் நடுங்கிடப்
போர்தொடுத்திடல் முற்றும் புதுமையே!
தீர்வை வைத்திடும் சிங்கள அரசெனும்
தீர்வில் நித்திரைசெய்த தமிழர்க்கு
ஓர்ம மாத்திரை உள்ளத்தில் ஊட்டிய
உத்தமன் எங்கள் உயர்ந்த தலைவனே!

பரணியென்றொரு பாவது நம்மிடை
பாடப் பெற்றது உண்மையா என்றும்
பிறரின் கால்களைப் பிடித்துத் தருவதைப்
பெற்று வாழ்வதே பிறவியின் பேறென்றும்
அறிஞர் கூறியே அடிமைகளாக்கினர்
அந்தக்காலத்தை யடியோடு மாற்றிட
பரிதியாயெம்முன் புலியெனப் பிறந்தவன்
புகழைப்பாடுதல் புலவரின் கடமையே!

இன்று விழித்திடல் இல்லையேற் தமிழர்கள்
என்றும் விழித்திடல் இல்லையென்றாகுமாம்!
கொன்று குவித்திடும் கொடியவர் படையதன்
கொட்டம் போக்கிடக் கொடியுடன் போரிடும்



படிப்பகம்

www.padippakam.com



குன்றுகள் எங்கள் வேங்கையர் அணியிலே
கூட்டம் கூட்டமாய் நாங்களும் சேர்ந்திடின்
வென்றுவாழுவம் விதியினை மாற்றுவம்
வீரமண்ணிலே விளைந்திடும் செல்வமே!

வாழி தலைவனே வண்டமிழ்த்தாயவள்
வரமாயுந்தனை வையத்திற் தந்தனள்!
தோளில் வீரமும் தோற்றத்தில் வீறதும்
தேசம் தாங்கிடும் தெளிவான சிந்தையும்
தூரதரிசனம் தோற்காத நெஞ்சுரம்
தொடுத்த இலட்சியம் தொடர்ந்திடும் பாங்கதும்
போரிற் தர்மத்தைப் போற்றிடும் நேர்மையும்
போர்த்தி நிற்கின்ற புதல்வனே வாழி நீ!

வன்னிப் போரது வருவிக்கும் வெற்றிகள்
வா வா என்றுனை வரவேற்கும் எம்மக்கள்
மின்னி மறையுமுன் மோதல் நடந்திட
மூச்சுத்திணறிடும் இராணுவராட்சகர்
கண்ணில் நீரினைக் கொணர்கின்ற காட்சிகள்
காலத்தாயவள் கொடுக்கின்ற மீட்சிகள்
விண்ணைத்தாவிடும் விடுதலைக்கொடியிலே
வேங்கைபாடிடும் விடியலின் தோற்றமே!

மண்ணைத் தாங்கிடும் மைந்தரின் தலைவனே
மறத்தமிழ் எனும் மரபினைக் காத்தவ!
உன்னைத் தாங்கிய அன்னையை மறப்பமோ?
உடன் வள்ர்ந்த உன் தோழரை மறப்பமோ?



படிப்பகம்

www.padippakam.com



எண்ணத்தாலுனை யேற்றுத் தலைவனாய்
எதிரியாதிக்கம் தொலைத்திடும் பணியிலே
தம்மைத்தந்த தியாகிகள் யாகிகள்
தீபமானவர் திரும்பவும் பிறப்பரே!

(வன்னிக்கள வெற்றியைப் போற்றியும், தமிழீழத்தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பிறந்தநாளில் அவரை வாழ்த்தியும் எழுதி அலையிலும், ஏட்டிலும் வெளியாகிய கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



# மீண்டும் தோன்றுக

எங்கள் வீதிகள் எமக்காய் மீண்டும்
  எம்முன் தோன்றுக தோன்றுக என்போம்!
எங்கள் ஊர்கள் எமக்காய் மீண்டும்
  எம்முன் தோன்றுக தோன்றுக என்போம்!

எங்கள் தோட்டந் துரவுகள் யாவும்
  எமக்காய் மீண்டும் தேன்றுக என்போம்!
எங்கள் வீட்டின் கதவுகள் மீண்டும்
  எமக்காய்த் திறந்திடல் நிச்சயம் என்போம்!

சிங்கள ராணுவச் சிப்பாய் இல்லாச்
  சூழல் எம்முன் தேன்றுக என்போம்!
பங்கர் வாழ்வின் பயங்கரம் எமது
  பக்கம் வாரா நிலை வரும் என்போம்!

செல்லும் குண்டும் சிதைத்திட முடியாச்
  செழிப்புடை நிலத்துடன் வாழ்வோம் என்போம்
அல்லும் பகலும் அதற்காய் உழைக்க
  அனைவரும் வந்து அணி திரண்டிடுக!



படிப்பகம்

www.padippakam.com



## வளர்த்த கடாவின் வஞ்சப் பாய்ச்சல்

யார் விழி பட்டதோ?
எவர் பழி தொட்டதோ?
பாரதன் முன்னே
படையென நின்ற
பலநிறை மறவரின்
பேரில் ஓர் மறுவோ?

மார்பினில் வளர்த்த
கடாவது பாய்ந்ததோ?
மாபெரும் துரோகம்
மாற்றுரு வெடுத்ததோ?
வேரினில் விழுது
வெந்நீர் வார்த்ததோ?
கூர்விரல் இமைதனைக்
குத்திக் கிழித்ததோ?

யாரிதன் ஊற்று?
எவர் நாட்ட நாற்று?
தீர்வினை நோக்கிய
தேடலின் போது
போர்மேகம் விட்டுப்
புறப்பட்ட வேளையில்
வீரரின் மூச்சினை
விடங்கொண்ட காற்று



படிப்பகம்

www.padippakam.com



ஏனெதிர் கொண்டது?
எமைப்பலி கொண்டது?

ஊரினில் எழுந்து
உலகெலாம் பரவிச்
சோர்வினைத் தந்த
சேதிகள் அறிவீர்
மானிடம் மலர
ஓரினம் நிலைக்கக்
கூனல்கள் நிமிர்த்திக்
கொடியுடன் முரசம்
வான்வரை யெழுப்பிய
வல்லவர் வரலாற்றில்
மான விளக்குடன்
மரணித்தோர் குடும்பத்தில்
ஈன வழுவேன்
இல்தேடி வந்தது?

போன அரசியல்
மீண்டும் வந்ததோ?
போலித் தனங்கள்
புதுத்தோற்றம் கண்டதோ?

வாக்குக் கேட்டு
வாசல் வந்ததும்
வணக்கங்கள் கூறி



படிப்பகம்

www.padippakam.com



வாழ்த்துக்கள் தந்ததும்
தோற்றுப் போனதும்
தூங்கப் போனதும்
வெற்றி பெற்றதும்
வீங்கிப் போனதும்
மீட்டிங்கு வருகின்ற
சகுனம் தெரிந்ததோ?

பதவி நினையாப் பண்போடு வளர்ந்தவர்
உதய மாகும் ஒரு தமிழீழத்தை
நிதமும் போற்றி நெடும் போரிற் கலந்தவர்
வதங்கள் பட்டு வாழ்வினையீந்து
வனத்திலுறைந்து வல்லுயிர் காத்தவர்
மதத்தால் இடத்தாற் பிளவுகள் கடந்து
மனிதம் என்ற சாதியில் இணைந்தவர்
கதையில் ஏனொரு களங்கம் நேர்ந்தது?
கற்பனை கடந்த காட்சியேன் விரிந்தது?

மலரப் போகும் மணித் தமிழீழத்து
மடியில் வீழ்ந்த மாபெரும் இடியிது
விடியும் வேளையில் வீட்டு முற்றத்தில்
வெடித்துக் கிளம்பிய பூகம்ப நெருப்பிது
முடியப் போகும் துன்பத்தின் எல்லையில்
முளைவிட்டெழுந்து முகம் காட்டும் புயலிது
உலகம் நிறைந்த தமிழரின் இதயத்தை
உரலிட்டிடிக்கும் உணர்வற்ற செயலிது



படிப்பகம்

www.padippakam.com



இவனேன் பிறழ்ந்தான்? இவனேன் வளர்ந்தான்?
இவனேன் எங்கள் இறகுக்குள் இணைந்தான்?

காட்டிக் கொடுக்கும் கயமைத் தனத்தாற்
கவலை கொடுக்கவா கருக்கொண்டெழுந்தான்?

பூட்டிக்கிடந்த விலங்கினை யுடைப்பதாய்ப்
பொய்தனைக் கூறும் பலமெங்கு பெற்றான்?
கூட்டிக் கொடுக்கும் கொள்கை கொண்டவன்
கூடாரம் தேடி எம்மோடேன் வந்தான்?

அரங்கெலாம் ஏறி அளந்து படைத்தானே?
'அவன்தான் தலைவன்' என்றெலாம் சொன்னானே
குரங்காய் மாறிக் குடைசாய்க்க ஏன்போனான்?
வருங்காலம் இவனை வசைபாட ஏனானான்?
உலக அரங்கில் உட்கார்ந்தேனென்ற
உட்கர்வம் தானா இவனைக் கெடுத்தது?
கரகோஷம் கேட்டுக் கதிகெட்டுப் போனானா?
வருக வருக என்றுகை கொடுத்த
வரவேற்புக் கண்டு வழி மாறிப் போனானா?
வெளிநாட்டுத் தரையில் வழிகாட்டல் செய்ய
விழி பார்த்துக் கிடந்தோர் வலைவீழ்ந்து போனானா?
வாழ்த்தப் பிறந்த என்னையும் இன்று
வசைபாடும் நிலைக்கு ஏன் தள்ளலானான்
காழ்ப்பேயறியா நெஞ்சுகள் கூடக்
காறியுமிழும் நிலைதரலானான்



படிப்பகம்

www.padippakam.com



மட்டக்களப்பு மண்ணின் முகத்தினில்
வட்டப் பொட்டினைக் கரியினால் இட்டான்
எட்டப்பர் போற்றும் எட்டப்பனாகி
எதிரிகள் பாசறைக் கொட்டகை சேர்ந்தான்

தமிழனின் அழிவே தகுந்த தீர்வெனத்
தமக்குள் எண்ணித் திட்டங்களிட்டுச்
சமயம் பார்த்துச் சதி செய்ய நின்றவர்
சாணக் கியத்தின் சாய்மனைக் கதிரையாய்
அமைந்து இன்று ஆழ்குழி தோண்டினான்
ஐயோ எங்கள் வாழ்வையே தீண்டினான்

தேர்தல் என்ற திரைக்குள்ளே தமிழனைத்
தீர்த்துக் கட்டும் முயற்சியில் நின்றிடும்
பேர்வழி யெல்லாம் பெரிதாய்ச் சிரிக்கும்
ஓரிடை வெளியை எடுத்துக் கொடுத்துளான்
கதிர்காமர் வீட்டுக் கதிரையும் தமிழர்க்குக்
கதியில்லை யென்று கவிபாடவைத்துள்ளான்
புதிர்போட்டுப் பேசிய அதிகாரி கூட
பதில்பேசும் படியொரு வழிசமைத்துள்ளான்

தமிழன் பூமி தமிழீழ மென்ற
தாரகந் தன்னைத் தமதெனவாக்கி
இமைமூடாது இயங்கிய புலிகளின்
இதய அணுக்களில் எரிமூட்டியுள்ளான்



படிப்பகம்

www.padippakam.com



அண்ணன் தானே அடிக்கவா போகிறான்?
அடிப்பார்க்கலாம் என்ற துணிவுடன்
தம்பி யொருவன் கரத்திலே கம்புடன்
எம்பி யெழுந்து எதிரிலே நின்று
கெம்பிப் பாய்ந்து கத்துறானென்றும்
நம்பி யமைதி யடைந்தவருண்டு
தும்புக்கட்டையைப் பறித்தே யெறிந்ததும்
தம்பி யடங்குவான் என்றோரும் உண்டு

நம்பிக்கை யென்ற நல்லதோர் வார்த்தையை
நாசப் படுத்தியே துன்பத்தைத் தந்துளான்
தம்பியென் றிவனைத் தட்டிக் கொடுத்துத்
தளபதி யாக்கிய தலைவனின் நெஞ்சினை
நொந்திடச் செய்து நிந்தனை செய்துளான்

அந்தகோ இந்தப் பாவியால் எமது
இழப்புகள் அனைத்தும் இழிவுக்குள்ளானதே

துரத்தப் பட்டதும் துண்டாடப் பட்டதும்
இரத்த வெள்ளத்தில் எறியப்பட்டதும்
கரத்தை யிழந்ததும் கால் முறிபட்டதும்
சிரத்திற் செல்லடி பட்டுத் தெறித்ததும்
அனைத்தையும் இன்று மறந்தொரு பகைவனின்
வரத்துக்காக வழிதேடிப் போனானே



படிப்பகம்

www.padippakam.com



கூட்டுக் குருவிகள் குழப்பமாயிருக்கலாம்
கூடப் பிறந்தவர் ஊடலாயிருக்கலாம்
வீட்டுப் பிள்ளைகள் விளையாட்டாயிருக்கலாம்
வீரத் தோழரின் போட்டியாயிருக்கலாம்
தோட்டப் பூக்களின் உரசலாயிருக்கலாம்
தூக்க முறிவிலே மயக்கமாயிருக்கலாம்
நாட்கள் நகர்ந்திட நல்லதில் முடியலாம்
நமக்கேன் கவலை யென்றோரும் இருக்கிறார்

ஆட்டம் இன்று அலங்கோலமாயிற்று
அசுரத்தனத்தின் விலங்கோடு கூடிற்று
நாட்டை விற்கும் நய வஞ்சகத்துடன்
நமது தேசத்தை யழித்திடலாயிற்று
கூட்டை யுடைத்திடக் குஞ்சே துணிந்தது
கொலை வாளெடுத்துத்தன் குலத்தின் முன்நின்றது
பார்த்துக் கிடப்பது பாவத்திற் பாவம்
பச்சைத் துரோகத்தைப் பொறுப்பதும் பாவம்
கூத்தை முடிப்பதே கொள்கையாய் மாறியெம்
கொடியை உயர்த்திடக் கூடுதல் தேவையாம்
துரோகத் தனத்தின் உச்சியைத் தொட்ட
துரோகம் இன்றுதான் மண்ணில் நிகழ்ந்தது
வராத கொடுமை இன்றுதான் வந்தது
வயிற்றுப் பிள்ளையே வல்லூறாய் எழுந்தது
அராஜகத்தின் அதிகார பீடத்தில்
அவமானச் சின்னமாய் எம்பிள்ளை அமர்ந்தது
சிராவஸ்தி அரசியல் சிறைதரும் ஆட்சிக்கு
சிற்றரசமைக்கும் சிந்தனை பிறந்தது



படிப்பகம்

www.padippakam.com


காட்டிக் கொடுப்புகள் கழுத்தறுப்புகள்
நேற்றும் நடந்தன நேரில் நாம் கண்டுளோம்
மாட்டுப்பட்டு நாம் மறுபிறப்பெடுத்துத்தான்
மறவர் தலைமையில் மாவீரம் கொண்டுளோம்
தோற்றுப் போவது இனியும் தொடராமல்
ஆற்றுப் படுத்துவோம் எங்களின் ஆற்றலை
மாற்றுக் கொள்கைகள் எமக்கினி வேண்டாம்
மண்ணின் விடுதலை யொன்றே யெம் மார்க்கமாய்
வாக்குப் போடுவோம் வாக்கோடு வாழுவோம்

பரணிப் பாட்டினைப் பாடி வைத்தவர்
பாடையேறிப் போனபின் பாரெலாம்
இரை பொறுக்கிடும் இனமெனும் பெயருடன்
இழிவு கொண்டு நாம் அலைவதைப் போக்கிடத்
தரையிற் தோன்றிய சூரியப்புதல்வர்கள்
தலையிற் பேரிடி வீழ்வதைத் தடுப்போம்
விரைவிற் தீர்ந்திடும் வெளிச்சம் பிறந்திடும்
என்ற வேண்டலில் எம்பணி யாற்றுவோம்

அருமையான தலைவன் ஒருவன்
அதிசயப் பிறவியாய் எம்முள் உதித்தான்
பெருமையோடு நாங்களும் வாழப்
பரிதியைப் போல அவனொளி கொடுத்தான்
குருதிக் கடலில் மூழ்கிய எங்களைக்


படிப்பகம்

www.padippakam.com


கூட்டியணைத்துக் கொடியுடன் நிமிர்த்தினான்
கருதிய கருமம் ஆற்றிடும் கொள்கையைக்
கடைப்பிடித் தொழுகும் தத்துவம் காட்டினான்

மெழுகுதிரியாய் எமக்காக எரிந்த
மேனியர் செய்த ஈகங்கள் எண்ணுவோம்
அழுது அழுது அவனியில் அலைந்து
அகதிகள் வரிசையில் நின்றதை யெண்ணுவோம்
உழுத நிலமும் உலவிய முற்றமும்
ஊரும் தெருவும் உருவிய பகைவன்முன்
அருவியாய்க் கண்ணீர் வடிய வடிய
அஞ்சி நடந்த கணங்களை எண்ணுவோம்

பிரதேச வாதம் எமக்குள் வேண்டாம்
பிரிவுகள் பிளவுகள் எழுந்திட வேண்டாம்
இரவற் பூமியில் இத்தனை காலமும்
இடியடி பட்டு அலைந்ததும் வேண்டாம்
கரமேந்தி வாழ்ந்த கேவலம் போதும்
கண்ணீரிற் கரைந்த காலங்கள் போதும்
பிறர்தந்த பிச்சைக்காய் அவர் பின்னே நின்று
பிற்பாட்டுப் பாடிப் பிழைத்ததும் போதும்
அரசியலுயர்வுக்காய் அவர் தரும் பதவிக்காய்
அங்கலாய்த் தோடிய அநியாயம் போதும்

முன்பு நான் கூறும் முதன்மை வரிகளை
என்னுயிரோசையாய் இன்றும் எழுப்புவேன்



படிப்பகம்

www.padippakam.com



அன்னை தமிழ்த்தாய் இயற்றிய தவமும்
முன்னைத் தமிழ்க்குடி வேண்டிய வரமும்
அந்நியர் அநீதியில் அடிமிதிபட்டு
ஆட்சியும் அரசும் இழந்து மெலிந்து
தன்னை மறந்து தாழ்வுடன் அலைந்த
தமிழர் கண்களிற் தோன்றிய மின்னலும்
மண்ணில் எமக்காய் மலர்ந்தது தலைவனாய்
மக்களாய் வாழ்ந்திடும் மார்க்கமும் தந்தது

இந்தத் தலைவன் முன் ஒன்றாய் எழுவோம்
இவனது காலத்தில் இனமாய் எழுவோம்

படிக்காதழிந்த இனங்கள் இந்தப்
பாரினிற் பலவுள யாமதையறிவோம்
படித்தே யழியும் இன மொன்றுண்டெனிற்
பாரினிற் தமிழினம் ஒன்றே யென்பேன்

எம்மைப் பிரித்திட எத்தனம் செய்திடும்
எதிரிகள் கண்களில் எத்துணை பேரொளி
தம்மை மறந்து தலையாட்டிச் சிரிக்கிறார்
தமிழன் அழிந்ததாய்த் தமக்குள் உரைக்கிறார்
பொம்மை யொருவன் பிடிபட்டான் நம்மிடம்
பொறுத்துப் பாருங்கள் விளைவினையென்கிறார்
அம்மையாரின் ஆட்களின் துள்ளல்
அங்குமிங்கும் நடப்பதைப் பாருங்கள்



படிப்பகம்

www.padippakam.com



தென்னையும் பனையும் ஒரு புறம் நிற்கத்
தேனொடு தயிர்மீன் மறுபக்கம் நிற்க
அன்னையும் பிதாவும் அடிபடப் போவதன்
அழகைப் பாருங்கள் என்கிறா அம்மையார்

முன்னையும் இவர்கள் மூன்றாக நின்றார்கள்
மன்னவர் மூவர் மணிமுடி கொண்டார்கள்
தென்னகத் தமிழனும் தேர்தலாற் செத்தான்
தென்றலின் கையிலும் லஞ்சத்தை வைத்தான்
இன்னமும் இவர்கள் எழுவதாய் இல்லை
இனமானத்தோடு இணைவதாய் இல்லை

என்றெம தெதிரிகள் எக்காளமிட்டு
எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ள நிற்கிறார்

எமக்காய் இறைவன் தலைவனைத் தந்தான்
எழுந்திடுவீர் எனும் ஆணையும் இட்டான்

தலைவன் காலத்தில் உயர்ந்திட வேண்டும்
தலைவன் பார்வையில் உயர்ந்திட வேண்டும்

தரிசனம் கொண்ட தலைவனைத் தந்த
தமிழ்த் தாயவளின் தாள்களில் வீழ்ந்து
வரமொன்று கேட்பேன் வனிதையே தலைவன்
வரலாற்றுக் காலத்தில் வாழ வைத்தவளே
தருவாய் தருவாய் எமக்கிந்த வரத்தைத்



படிப்பகம்

www.padippakam.com



தலைவன் காலத்தில் உயர்ந்திடும் வரத்தை
நிலையான அமைதியும் நீங்காத இன்பமும்
அலையாத வாழ்வும் அமைந்திடும் வரத்தை
விதியே விதியே தமிழச் சாதியை
என்செய நினைத்துளாய் என்றே பாரதி
பதித்தான் வரிகளைப் பதைப்புடன் அன்று

கதியிழந்தவராய்க் காலத்தோடழியும்
விதிதான் தமிழரின் விதியோ என்றான்

நிதியுடையோராய் நிலத்திடை வாழ்ந்தும்
மதியுடையோராய் மண்தனில் வளர்ந்தும்
கதியிலாதவராய்க் கண்களை மூடுதல்
விதியதோவென்று வேதனையடைந்தான்

பாரதி பாடிய வரிகளே எனக்குட்
பலமுறை வந்து பந்தாடிச் சென்றன
ஊர்ச்சேதி கேட்டதும் உள்ளே குமுறினேன்
உண்மையைத்தேடி உறுதியாய் அழுதேன்

விதியின் விலங்கினை வெட்டிடும் சக்தியாய்
விடுதலைப் புலிகளை ஈன்றதெம் தாயகம்
குகையினுட் கிடந்த குடியதன் பெருமையைக்
கொடியுடன் வெளியே கொணர்ந்திட வைத்தது



படிப்பகம்

www.padippakam.com



பதியும் பாடலும் பண்பாட்டுணர்வும்
பழந்தமிழ் மரபும் மீட்டிடச் செய்தது
சதியும் வஞ்சமும் சரித்திடா தொளிவிடும்
சத்தியத் தலைவனைச் சரித்திரம் கண்டது

எத்தனை இடிகளைத் தாங்கினான் தலைவன்
எத்தனை இழப்புகள் தாங்கினான் தலைவன்
சத்திய ஒளியிற் தர்மத்தின் நிழலில்
எத்தனை பெரிய சதிகளைத் தாண்டினான்

எத்தனை உயிர்களை எம்மண் இழந்தது
எத்தனை உறவுகள் எம்மைப் பிரிந்தன
அத்தனை இழப்பும் அவமாகிப் போகுமா?
அடுத்தவர் கரங்களிற் திசை மாறிப் போகுமா?

அன்னை பூபதி தன்னை யெரித்ததும்
ஆயிரமாயிரம் இளைஞர் யுவதிகள்
கண்களை மூடிக் காவியம் படைத்ததும்
நம்மை நாமே நாசப்படுத்தவா?

தலைவனுக்காகத் தமிழர் அழுவார்
தலைவனுக்காகத் தமிழர் எழுவார்

தலைவன் என்றாற் தமிழரின் நெஞ்செலாம்
தாமரை யன்றோ உடனே தெரியும்
இளைய புன்னகை இறுமாப்பின் விரிப்பு
இதயத்தில் எரியும் தர்ம நெருப்பு



படிப்பகம்

www.padippakam.com



மலையின் பேருரம்; மலரின் மெல்லிதழ்
மாறி மாறி முகங்காட்டிச் செல்லும்
அலையிற் கொடியுடன் அவன் வரும் காட்சி
அவனித்தமிழனை அரசினில் ஏற்றும்
அவனது விழிகளை நினைத்ததும் உயிரில்
ஆனந்தமன்றோ ஆர்ப்பரித்தாடும்

எங்கள் தலைவா எங்கள் தலைவா
உனக்காய் இந்த வரிகளை எழுதுவேன்
உன்கண் கலங்கிட அனுமதியோம் நாம்
உயர்வையும் தாழ்வையும் உன்னோடு தாங்குவோம்

மட்டக்களப்பின் மக்கள் அறிவர்
மாண்புறு ஈழத்தின் மீட்பினை உணர்வர்
பட்டபாடுகள் பகைவரின் கொடுமைகள்
வட்டமிட்டது வடக்கையும் கிழக்கையும்
வாழ்வும் சாவும் விடுதலையானதால்
வரம்புகள் என்பது நம்மிடையில்லை
தொட்ட பிளவுகள் அனைத்தையும் தகர்த்துத்
தொடங்கிய விடுதலைப் போரெனும் உண்மையை
மட்டக்களப்பின் உறவுகள் அறியும்
மாற்றார் நோக்கினைத் தெளிவாய்ப் புரியும்

மட்டக்களப்பு யாழ்ப்பாணப் பிரச்சனை
பட்டுப் போனது பராமரிப்பின்றி
கெட்ட சாதி உயர்ந்தவர் என்ற



படிப்பகம்

www.padippakam.com


கேடு போனது கடுங்குளிர் கண்டு
கட்சியரசியற் கசப்பான அனுபவம்
விட்டுப் போனது விடுதலை கண்டு
பட்ட மரத்திற்குப் பிறவி கொடுக்கப்
பாடுபடுவது பெருந்தன்மையன்று

எட்டுத் திக்கும் வாழ்தமிழ் மக்களை
எட்டிய கவிதைகள் எங்கள் மாகவிப்
பெட்டகம் காசி ஆனந்தன் கவிதைகள்
பிறந்தகம் போற்றிடும் தமிழர்கள் கனவுகள்
மட்டக்களப்பின் புழுதியிற் தவழ்ந்த
மாபெரும் கவிஞன் தமிழரின் தண்டு!
கட்டியணைத்து வளர்ந்தவர் நாங்கள்
கவிதைச்சாற்றினைப் பகிர்ந்தவர் நாங்கள்!
அண்ணன் காசியை ஈண்டு நினைக்கிறேன்
அறியாமைத்தூசியை அகற்றிடும் பணியிலே
முன்னின்றுழைக்க அவனையும் வேண்டுவேன்!
மூத்தவன் அவனது மூச்சினை வேண்டுவேன்!

எண்ணம் எல்லாம் எங்கள் தாயகப்
பண்ணை ஏந்தும் என் தமிழ் மக்களே!
தீர்வினை நோக்கித் தொடர்ந்திடும் பயணத்திற்
தூரவிருந்தே கலந்திடும் மக்களே!

சூரியன் ஒளியை யார் மறைப்பார்கள்?
சுதந்திரப் பாட்டை யார் தடுப்பார்கள்!



படிப்பகம்

www.padippakam.com



வாருங்கள் எமது வரலாற்றைக் காக்கும்
வங்கத்தின்வீரரின் பக்கலில் நிற்போம்!
தேர்தலில் எங்கள் தாயகப்பணியின்
தேவையை உணர்ந்து வாக்கினைக் கேட்கும்
ஆர்வலர் தங்கள் அரசியற் குரலாய்
அகிலத்தின் அரங்கில் நாங்களும் ஒலிப்போம்!

கார்மேகம் கலையும்!
கவலைகள் விலகும்!
ஊர் நாதம் ஒலிக்கும்!
உண்மைகள் வெல்லும்!
பார் நின்று அணைக்கும்!
பகலவன் ஒளியில்
தீர்வொன்று பிறக்கத்
தொண்டாற்றி நிற்போம்!

திங்களும் கதிரும்
தென்றலும் தீயும்
பொங்கிடு கடலும்
பூமியும் உளவரை
எங்கள் தமிழும்
இனமும் வாழும்
கண்களைத் துடைத்துக்
கடமையில் இறங்குவோம்!

(மட்டக்களப்பில் எழுந்த மாபெரும் துரோக நிகழ்வு குறித்துக் கொட்டிய கவிமழை)



படிப்பகம்

www.padippakam.com



# ஆடிக் கவிதை

'ஆடி ஆடி விடுதலை வித்திட்டுக்
கூடிக் கூடிக் களையெடு' என்று
பாடிய பாணரே! பைந்தமிழ்க் கவிஞரே!
கேடு களையப் பாடுங்கள் கவிதை!

ஏடும் எழுத்தும் எழில் பெறப்பாடுங்கள்!
நாடு நலம் பெற நல்லவர் வளம் பெற
ஈடிணையில்லா இலக்கியம் படையுங்கள்!
நீடு நீர் வாழ்ந்து நந்தமிழ் போற்றுங்கள்!

தேசம் தேசியம் சுயநிர் ணயம் எனும்
தெளிந்த கொள்கையால் பொங்கும் தமிழரை
மோசம் செய்ய முடியாது என்ற
முழக்கத் தோடு முகத்தை நிமிர்த்துங்கள்!

அறமும் தர்மமும் அழிந்திடா தென்று
ஆடடா! எந்தன் அன்புத் தமிழா!
இறைமை கொண்ட இனிய மொழியும்
என்றும் குன்றாக் கலையும் பண்பும்
உடையோம் யாமெனக் கூத்திடு தமிழா!
உனது பிள்ளைக்கும் சேர்த்திடு தமிழா!
நிறமே உயர்வென நினைக்கும் உலகில்
நெஞ்சால் உயர்ந்து நின்றிடு தமிழா!



படிப்பகம்

www.padippakam.com



அகில உலகெலாம் எங்கள் தமிழின்
ஆளுமை நிறைந்திடத் தொண்டு செய் தமிழா
ஆடியாடி விடுதலை வித்திட்டுக்
கூடிக்கூடிக் களையெடுதமிழா!

எண்பத்து மூன்றின் நெருப்பு ஆடியை
நெஞ்சத்தில் இருத்தி நெருப்பாக எழுந்தோம்!
கண்கெட்ட சிங்கள அரசின் கொடுமையால்
வங்கத்துக் காற்றின் வரிகளாய்ப் பதிந்தோம்!
ஆடியின் செம்மைக் கோடுகள் எமது
அன்னை நிலத்தில் ஓடிய நாட்களில்
நாடிலாக் கூட்டமாய் நாங்கள் அலைந்ததை
நாமுள்ளவரையில் நாங்கள் மறப்பமோ?

ஆடியாடி விடுதலை வித்திட்டுக்
கூடிக்கூடிக் களையெடுதமிழா!

வீடுகள் எரிய
வீதிகள் வழியே
விழுந்தடித் தோடிய
ஊர்களை மறப்பமோ?

பாடையும் இன்றிப்
பாதியாய் எரிந்த
பாச உறவுகள்
பிரிவினை மறப்பமோ?





படிப்பகம்

www.padippakam.com



காடையர் கரங்களிற்
கத்தியும் வாளும்
ஏந்திய படியே
எங்களைத் துரத்திட
ஓவெனக் கதறி
உயிருடல் பதறி
உணர்வுகளடங்க
ஒளிந்ததை மறப்பமோ?

கம்பி வேலிகள்
கால்வாய் கிடங்குகள்
கும்பிகள் குட்டைகள்



படிப்பகம்

www.padippakam.com



தஞ்சமென்றடைந்தோம்!
பச்சைக் குழந்தைகள்
பாலர்களெல்லாம்
உச்சி பிளந்து
உயிரின்றிக் கிடந்தனர்!

பட்டுத் தளிர்களும்
பாச மலர்களும்
வெட்டப்பட்டு
வீழ்ந்து கிடந்தனர்!

பொட்டும் பூவும்
புதைக்கப்பட்டது!
புண்ணிய தலங்கள்
சிதைக்கப்பட்டது!

சிட்டுக் குருவிகள்
சிறகுகள் இழந்து
சிதறிக் கிடந்தன

கட்டிய துணியே
கடவுளாய் நின்று
மானத்தைக் காத்தது!

நட்ட நிசியிலும்
நடு ராத்திரியிலும்





படிப்பகம்

www.padippakam.com



தட்டி பிரித்தும்
தலைவாசல் மிதித்தும்
தறுக்கரின் கூட்டம்
தாய்க்குலம் கதறக்
'கொட்டியா எங்கே?
கொட்டியா எங்கே?'
என்று குளறிக்
கொலை வெறியோடு
அட்ட காசம்
செய்து அழித்தனர்!
முகாம்கள் தோறும்
அகதிகளானோம்!
முகவரி யிழந்த



படிப்பகம்

www.padippakam.com

மூடரின் கூட்டமாய்
அயலவர் நிலங்களில்
அந்நியராகினோம்!

ரத்தம் கசிய
எலும்புகள் பொசிய
கட்டு மருந்துக்கும்
மருத்துவ சிகிச்சைக்கும்
கத்திக்கதறிய
எங்கள் மக்களைக்
கண்டுங் காணாது
காசினி கிடந்தது!

அகதிகளானோம்! - ஆதரவற்ற
அநாதைகளானோம்!
அகத்தில் நெருப்புடன்
அவனியில் அலையும்
அகதிகளானோம்!

தமிழன் என்பவன்
தட்டேந்தப் பிறந்தவன்!
உமிழும் நீருக்கும்
உதவிக்கும் பிறரின்
தயவை நாடும்
தாழ்ந்தவன் என்ற
வரலாறு பிறந்தது!



படிப்பகம்

www.padippakam.com



"ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தமானந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்!
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"

அன்று நாம் கேட்டு
ஆனந்தப் பட்ட
தங்கத் தாத்தாவின்
ஆடிப் பாட்டிது!

நவாலிப்புலவனின்
நாதந்த பாட்டு!
கவலை மறந்து
பள்ளியில் நாங்கள்
கூடிக்களித்துத்
துள்ளிய பாட்டு!

இன்றோ எங்கள்
இதயத்தைப் பிழிந்து
இரத்த நாளங்கள்
நாடிகள் எல்லாம்
துன்பம் தருவது
ஆடியின் காட்சி!

கொன்று குவிக்கும்
கொடிய சிங்களப்



படிப்பகம்

www.padippakam.com



பௌத்த ஆட்சியின்
கொடுமையின் காட்சி!

இன்று எங்கள்
புலவர்கள் வாழ்ந்தால்
இதயப் புண்களில்
இரத்தம் வடிந்திட
நின்று சிங்கள
நீசரைத் தமிழாற்
கொன்று குவித்துச்
சென்றிருப்பார்கள்!
என்ன செய்வோம்!
இன்றைய பாணரோ
பொன்னைப் பொருளைப்
போற்றுதல் கண்டோம்!
மண்தனைப்பாடி
மகிழ மாட்டாத
சின்னப் புலவர்கள்
செறிந்தது கேடே!

ஈழத்திற் தமிழினம்
இல்லாத நிலையே
தீர்வென்ற தீர்வுடன்
தெளிவாக இயங்கும்
பாழும் அரசியற்



படிப்பகம்

www.padippakam.com



பட்டறை உலகின்
தாளில் வீழ்ந்து
தருவிக்கும் ஆயுதம்
நாளும் எமது
நல்ல மக்களின்
வாழ்வைத் தீய்க்கும்
வரலாறு தொடர்வதா?

பிறந்த மண்ணைப்
போற்றுதல் பிழையெனிற்
பிறரின் மண்களில்
அரசுகள் எதற்காம்?
கொடிகள் எதற்காம்?
கோட்டங்கள் எதற்காம்?
தமிழன் மட்டும்
தனி விதி விலக்கா?

உரிமைகளோடு நாமோரினமாய்
எம் தாயகத்தில் வாழ்வதே தீர்வெனும்
முடிவினை யெடுத்து உலகின் திசையெலாம்
அரசியற் பேரிகை முழக்கிட எழுவோம்!
வரலாறுடையவர்
வாழ்வினுக்குரியவர்!
பிறரால் நசுக்கப்
படுவது கொடிதெனும்
குரலையுயர்த்தி



படிப்பகம்

www.padippakam.com



உலகினுக் குணர்த்துவோம்!
உறவுகளே நாம்
ஒன்றாய்த் திரளின்
உலகின் செவியும்
விழியும் திறக்குமே!

(கறுப்பு ஆடி குறித்து ஐ.பி.சி வானொலிக் கவியரங்கிற் கலந்து கொண்டு ஒலித்த கவியோசை)

## படைத்தனையே பராசக்தி

கோடிக் கணக்கிற் குவித்திடலே குறியென்று
கூவிக்கிடக்கும் சுற்றங்கள் மத்தியிலே
தேடித் தமிழைப் பாடிக் கிடக்கு மிந்தப்
பாவிப் பிறவியெனைப் படைத்தனையே பராசக்தி



படிப்பகம்

www.padippakam.com



# புத்தனைத் தழுவிய மேகம்

புத்தனைத் தழுவிய மேகம் - இன்று
ரத்தத்தைப் பொழிவதும் ஏனோ?
முத்தி தரும் நிர்வாணம் - கையில்
கத்திபொல் ஏந்திய தேனோ?

சித்தார்த்தன் செப்பிய வேதம் - வந்து
செந்தீயைக் கொட்டுவதேனோ?
முற்றுந் துறந்தவன் பாதம் - எங்கள்
முகத்தினில் மிதிப்பதும் ஏனோ?

வெற்றிநிச் சயமெனக் கூறி - எமை
விழுங்கிட நின்றது மேனோ?
சுற்றிவ ளைத்தெங்கள் பூமி - கொடுஞ்
சுடுகாடாய் மாற்றிய தேனோ?

மொட்டையடித் துடல் காவி - தனில்
மூடி மறைத்தவர் கூடி
கொட்டுங்கள் குண்டெனக் கூவி - பச்சைப்
பாலரைக் கொன்றதும் ஏனோ?

பௌத்த மதப் பிரச்சாரம் - இன
வெறியென ஆனதும் ஏனோ?
கருணையைப் போதிக்கும் தூயோர் - இன்று
காடையர் ஆனதும் ஏனோ?



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



## வங்கக் கடற்சோழா!

வங்கக் கடற்சோழா! - உனை
வாழ்த்துகின்றோம் தோழா!
எங்கள் தமிழ்த்தாய் மடியில்
வந்த வீரத் தோளா!

சங்கப் பாடற் சரித்திரத்தைச்
சாத்தியமென் றுரைப்பவனே!
வெங்களத்து வரலாற்றின்
வெற்றிச் சங்கம் ஒலிப்பவனே!

மங்கையவள் மறத்தியென
மாற்றிப் படை செய்தவனே!
தங்கைகளும் தாயகத்தின்
தாவு வேங்கை யென்றவனே!

பொங்குதடா தமிழ்மானம்
போர் முழக்கஞ் செய்யுதடா!
பங்கெமக்கும் உண்டுனது
பாதையிலே செல்வமடா!

சிங்களத்துச் சிறுக்கி நெஞ்சு
சிதறிப் புறங்காட்டுதடா!
உன்களத்துப் பெருமைகண்டு
உலகரங்கே வியக்குதடா!



படிப்பகம்

www.padippakam.com



# நாட்டியம்

கொட்டுது முரசு தமிழரின் அரசு
கோமளமே நீ துணிந்தாடு! - நாம்
கொட்டிய விழி நீர் அமிழ்தென மாறத்
தாயகம் தளிர்த்தது நடைபோடு!!

கெட்ட நம் பகையின் கொட்டங்களெல்லாம்
விட்டது என்றே நீ பாடு! - நாம்
பட்டவையெல்லாம் பறந்தன வீரப்
பரம்பரை வென்றதைக் கொண்டாடு!

ஒப்பில்லாத் தலைவன் தொட்டனன் இமயம்
எப்பொழுதும் அவன் புகழ்பாடு! -பெரும்
முப்படையோடு உலகினிற் தமிழன்
பெட்புடன் வாழ்வான் புகழோடு!

வித்தென வீழ்ந்த வீரர்கள் கண்ட
சொப்பனம் உயிர்த்தது நனவாகி!
சத்தியத்தாயின் சக்கரம் வானில்
நர்த்தனம் ஆடுது கதிராகி!

கட்டடம் வீதி காத்திடும் அரண்கள்
இப்பொழுதிருந்தே எழ வேண்டும்! - எம்
கற்பனை காட்சி எண்ணங்கள் செய்கை
அத்தனையும் விண் தொட வேண்டும்

(மதுரக் குரலோன் கண்ணன் -ஜேர்மனி- அவர்களின் இசையமைப்பில், பரதநாட்டிய அரங்கேற்றத்தில் ஒலித்த பாடல்)



படிப்பகம்

www.padippakam.com



## நாளைய தேசம்

தேசக்காத்து வீசும்! - ஈழம்
தேவ லோகம் ஆகும்!
வாசமலர்கள் நாளும் -பூத்து
மலர்ந்து மணம் வீசும்!

ஓசை எழும் வயல் வரப்பில்!
ஓடும் சுனை குரல் கொடுக்கும்!
பாசம் பொங்க ஆணும் பெண்ணும்
பாடும் பாடல் களை எடுக்கும்!

பாவி படை மிதித்த நிலம்
பச்சை பூசி முகம் சிலிர்க்கும்!
ஏவுகணை எரித்த தெல்லாம்
எழுந்து நின்று அகம் களிக்கும்!

கோயில் மணி உயிர் எழுப்பும்!
கூட்டமாக ஊர் கலக்கும்!
நோயில்லாத சுகமிருக்கும்!
நேசம் அன்பு நிறைந்திருக்கும்!

பாய்க் கலங்கள் கடலலையிற்
பயணம் செய்து வளம் பெருக்கும்!
தாய்க்குலங்கள் கரங்களிலே
சேய்க் குலங்கள் சிரித்திருக்கும்!

(பொன் சுபாஸ் சந்திரன் அவர்களாற் பாடப்பெற்று ஒலிப்பேழையிற் பதிவு செய்யப்பட்ட பாடல்)



படிப்பகம்

www.padippakam.com



# தமிழை மறக்காதே!

தந்தையின் தாயின் முந்தையர் வணங்கிய
தமிழை மறக்காதே! -உன்
சந்ததி வழியே உன் உயிர் தொடர
உன் பணி மறக்காதே!

உயிரினுள் உணர்வல்லவா? - சுடர்
ஓங்கிடும் ஞானத்தின் தீயல்லவா?

தமிழோர் மொழி மட்டுமா! - அது
தந்தது ஒலி மட்டுமா?
தர்மத்தின் தாயல்லவா! - தெய்வம்
தரணிக்குத் தந்த நற் சேயல்லவா?

உலகினை அணைத்திடும் இனம் தந்தவள்!
உண்மையால் உயர்ந்திடும் உளம் தந்தவள்!
கலையினிற் குரு வெனும் தளம் தந்தவள்
கல்வியில் ஒழுக்கத்தின் வளம் தந்தவள்!

வீரத்தின் களம் தந்தவள்! - நாம்
வீழ்ந்திடா நலம் தந்தவள்!

வாழ்வெனும் தவம் தந்தவள்
தாழ்விலும் தளர்ந்திடா உரம் தந்தவள்!
தோல்வியிற் கரந் தந்தவள்! - நாம்
தோன்றிய நாள்முதல்
தறித்திடத் தளிர்த்திடும் வரம் தந்தவள்

தமிழை மறக்காதே! - நீ
தமிழை மறக்காதே!



படிப்பகம்

www.padippakam.com



# ஏற்றிடுவோம் தமிழ்த்தீபம்!

ஏற்றிடுவோம் தமிழ்த்தீபம்! - எங்கள்
இதயத்தில் அன்பெனும் பேரொளி வீசும்!
காற்றினில் எழும் தமிழ்க்கீதம் - உளக்
காதினில் நுழைந்தெம் கடவுளைச் சேரும்!

ஊற்றென உள்ளெழும் தாகம்! - எங்கள்
உயிருக்கு வேர்தரும் முன்னவர் தேசம்
காற்றுடன் வந்திடும் சோகம் -எமை
ஆட்டிப் படைத்த பின் எமைவிட்டுப் போகும்!

பூட்டனும் பாட்டனும் பாடித் - தங்கள்
பூமியில் ஆடிய கூத்துகள் கோடி!
மீட்டிடுவோம் எங்கள் மண்ணை! - அங்கு
மீளவும் பாடுவோம் எந்தமிழ்ப் பண்ணை!

வேட்டுவர் ஆண்டது போதும்! - எமை
விரட்டியும் துரத்தியும் ஏய்த்தது போதும்!
ஆட்சியிற் புலிக்கொடி ஏறும்! - இனி
அரசினிற் தமிழே ஆணைகள் போடும்!



படிப்பகம்

www.padippakam.com



# தாய் மண்ணைத் தேடு

பெற்ற பிள்ளைகள் பேசு மொழியின்றிச்
செத்துப் போவது சம்மதமா?
தொட்டு அணைத்திடச் சொந்த இனமின்றிச்
சோர்ந்து வீழ்வது சம்மதமா?

கற்றுச் செல்வங்கள் சேர்த்த போதிலும்
கண்கள் தீய்த்திடல் உன்மதமா?
பட்டுமெத்தையிற் பள்ளி கொள்ளினும்
பயந்து கீச்சிடல் இங்கிதமா?

மற்ற மனிதர்கள் மண்ணும் ஆட்சியும்
கொண்டு வாழ்கிறார் தம்பலமாய்!
முற்றும் மாறி நீ முகத்திற் கரியுடன்
சுற்றி னாய் ஒரு பம்பரமாய்!

கொட்டும் பேரிகை கொண்டு தாயகம்
பற்றி நிற்குதே உன்னினம்!
சற்று நீ விழி சாதனை புரி
வெற்றி பெற்றிடும் தமிழினம்!



படிப்பகம்

www.padippakam.com



# கறுப்பு ஜூலையை மறப்பமா?

தொகையறா

ஆயிரத்துத் தொளாயிரத்து மூன்றினிலே - வந்த
ஆடியிலே நடந்தகதை கேளுமையா!
தாயகத்து வீதியெல்லாம் தமிழர் கூட்டம் - அழு
தோடியது நெஞ்சினிலே வாழுதையா!

பாடல்

கறுப்பு ஜூலையை மறப்பமா? - அந்தக்
கதையை மாற்றாமல் இறப்பமா?
இரத்தக் கோலத்தை மறப்பமா? - எங்கள்
இனிய தேசத்தைத் துறப்பமா?

கரத்திற் துவக்கினை ஏந்திய அரக்கரின்
காலடி கிடந்தே கதறினோம்!
இரக்கமில்லாத கொடிய ஆட்சியால்
இதயம் வெந்திடச் சிதறினோம்!

கொதிக்கும் தாருக்குள் குற்றுயிராகத்
துடித்திடத் தோய்த்து உருக்கினார்!
பிதுக்கி விழிகளைப் பிளந்து உடல்களை
மிதித்துக் குருதியைப் பெருக்கினார்!



படிப்பகம்

www.padippakam.com



விதிக்கு ஏங்கிய எங்களை - வீர
வேங்கைக் கூட்டமாய் மாற்றினார்
இதுக்கு மேலினிப் பொறுப்பதோ? - என
எங்கள் தாகத்தை மூட்டினார்!

(பொன் சுந்தரலிங்கம் அவர்களாற் பாடப்பெற்று ஒலிப்பேழையிற் பதிவு செய்யப்பட்ட பாடல்)

## நெஞ்சுரம் வேண்டும்

நீதிக்குரல் கொடுக்க
நெஞ்சுரம் வேண்டும் - உயர்
நேர்மைத் திறன் இருப்பின்
நிம்மதி தோன்றும்
பாதிப்பு வந்திடினும்
பண்புடன் உண்மை - நிறை
பாதையிலே போவதுவே
பிறவியின் மேன்மை - நாம்
புகன்றபடி நின்றிடலே
அறமெனும் பான்மை
வாதித்துச் செல்வதல்ல
வளர்ச்சியின் நோக்கம் - உளம்
வரைந்தபடி வாழ்வதுதான்
சான்றவர் மார்க்கம்



படிப்பகம்

www.padippakam.com


## ஏ சிங்களமே இன்று போய் நாளைவா!

ஏ சிங்களமே இன்றுபோய் நாளைவா!
எமது தலைவனை இதயத்தால் மதித்துவா!
தமிழர் தவத்தின் தங்க உள்ளத்தை
முழுதாய்ப் புரிய முற்பட்டுடோடிவா!

போக்கிட மறியாப் புலம் பெயரினமாய்
ஆக்கிய சிங்கள இராணுவ அரசே!
தாக்கி யெம்மக்களைத் தரித்திர வாழ்வினை
நோக்கி நீ துரத்தினாய் நோய்க்குள் அமிழ்த்தினாய்

தீக்கிரை யாக்கினாய் தமிழரின் ஊர்களை!
சாக்களை யெமது சரித்திரமாக்கினாய்!
காக்க மறுத்தாய்! கரங்களை மிதித்தாய்!
கூக்குரல் போட்ட குரல்களை நெரித்தாய்!

பாடையும் இன்றிப்
பிணங்களை எரித்தோம்!
ஆடையும் இன்றி
அவலத்திற் துடித்தோம்!

மறைப்பு களின்றி
மானிடம் அழுதது!
அணைப்புகள் இன்றி
அன்புகள் கதறின!



படிப்பகம்

www.padippakam.com



கணக்கெடுப்புக்கடங்காக்
கவலை நமக்குண்டு!
உனக்க தனைப் புரியும்
உள்ளம் இருக்காது!
உட் கொண்ட காற்றையும்
உணவையும் கூட
வெட்கத்தோடுதான்
ஏற்றுக் கொண்டோம்!
மதியாதார் வாசல்
மிதியாத எங்களை
வதி விடம் தேடி
வீதிவழி அலையவைத்த
சதியை எங்களாற்
சீரணிக்க முடியாது!

மனித்துவம் என்பதே
தமிழின் மறுபெயர்
மன்னித்து வாழ்வதே
தமிழரின் பெருநீதி!

மன்னிக்க வேண்டு மென்ற
மதியெமக்கு வந்தாலும்
மன்னிப்பைக் கடந்தழியும்
விதியுனக்கு உண்டானால்
அதை மாற்றி யமைக்க
ஆருக்கு வலிமையுண்டு!



படிப்பகம்

www.padippakam.com



வெட்டு வாளேந்திய
புத்த பிக்குவே!
சுட்டுப் பொசுக்கிடும்
சூரதேரோவே!

புத்தனுக்குத் தமிழன்
சத்து ராதியா?
கொலை யென்றாற் கூசும்
குணம் கொண்ட இனம் நாம்
நில மென்றாற் சீறும்
நெறி கொண்டார் குலத்திற்
குடி கொண்ட புலிகளைக்
கருக்கொண்டார் நந்தாயர்!

தமிழன் உரிமையுடன்
தலைநிமிர்ந்து வாழத்
தாயகத்தை மீட்கின்றான்?
தவறென்ன கூறு!
பக்தியே வாழ்வெனும்
பாரம் பரியத்திற்
சக்தி பெற்றெழுந்த
சந்ததி நாங்கள்!
புற்றிற் பாம்பையும்
பூசிக்கும் பண்பு
கற்ற மனிதர் நாம்!



படிப்பகம்

www.padippakam.com


உலகையணைப்பதும்
உறவாடி மகிழ்வதும்
நிலவை யழைப்பதும்
நீதியாய் உழைப்பதும்
கலையாய்க் கவிதையாய்க்
கண்டவர் நாங்கள்!

கத்தி தூக்கிக் கர்ச்சிக்கும் பிக்குவே!
கருணையற்று ஏன்
கொலைவெறியைக் கக்குகின்றாய்?

ஆலயக் கூரையில்
திருச் சபைக் கூடத்தில்
செல்லையும் குண்டையும்
தூவிடப் பணிக்கும்
காவியுடுத்த ராணுவச் சிப்பாய் நீ?

சட்டம் அறியாது
சனாதனம் புரியாது
கட்டம் கட்டமாய்த்
தோல்வியைத் தழுவும்
துட்டர் தலைவிக்குத்
துணைபோகும் கூட்டமே!


படிப்பகம்

www.padippakam.com



நாற்பதாயிரம் உயிர்களைத் துச்சமாய்
வேற்று மண்ணிலே விட்டு நீர் வெறுவாயைப்
போட்டு மெல்வது புண்ணியமாகுமா?
கூற்றம் வந்துங்கள் கோடியில் நிற்கவும்
மாற்ற மின்றி நீர் மார்தட்டி நிற்கின்றீர்?

காற்றில் வந்த நற் கருணைச் செய்தியைக்
காதில் வீழ்த்திடாச் செவிடராய் நிற்கின்றீர்

ஆற்றல் கொண்டதோர்
ஆன்மீகப் படைகளைத்
தோற்றுவித்த ஓர்
தலைவனைத் தன்முன்னே
காட்டி நிற்கின்ற
இனத்தினை மறக்கின்றீர்

தர்மம் வென்றிடும்!
சத்தியம் முழங்கிடும்!
தமிழர் யாகம் நற்
தாயகம் படைத்திடும்!
உறுமிப் பாய்ந்திடும்
உலகப் புலிகளின்
உண்மை வீரத்தின்
உயர்வைப் புரியாமல்
திமிரில் நின்று நீர்
திண்டாடி யழிகிறீர்!



படிப்பகம்

www.padippakam.com



உதய சூரியனை
உதிக்காமற் செய்வதற்கு
உலகு உதவினும்
உம்மால் முடியாது!

உதயம் நிச்சயம்!
உண்மை எழுச்சியில்
புதுமை யோடுநம்
தாயகம் மலரும்!
புத்தி யிருந்தாற்
போடுங்கள் ஆயுதத்தை!
ரத்த வெறியை
ரத்துச் செய்யுங்கள்!

எங்கள் தலைவன்
எல்லாம் கொடுப்பான்!
பொங்கல் வேண்டுமா?
பொதி சோறு வேண்டுமா?
தங்க வசதியுடன்
தனியான கப்பலிலே
உங்கள் படைகளை
உயிரோடனுப்புவான்!
எங்கள் கடலில்
எம்புலி நிற்க
உங்கள் பயணத்தை
உடனே தொடங்குக!



படிப்பகம்

www.padippakam.com


சிங்கள மக்களைச்
சிறுமைப் படுத்தாதீர்!
அங்கு துடிக்கும்
அன்னையர் தந்தையர்க்
காறுதல் சொல்லி
அழிவினை நிறுத்துக!

(தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண முற்றுகையின்போது நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் சிக்குண்டு தவித்த வரலாற்று நிகழ்வினைப் பதிவு செய்து எழுதிய வரிகள்)

## குடியிழந்த கிராமங்கள்

நிமிர்ந்து நின்ற நிலங்களெல்லாம்
நெடுங்காடாய்ப் போனதையா!
உமிந்து உண்ட மரக்கனிகள்
உலர்ந்தோடாய்வீழ்ந்ததையா!
அமர்ந்திருந்து எம்மக்கள்
அசைபோட்ட இடங்களெல்லாம்
அடர்ந்த முள்ளுச் செடிகொடிகள்
அரங்காகிக் கிடந்தனவே!



படிப்பகம்

www.padippakam.com



# தலைவன் வாழ்த்து

வங்கக் கடற்சோழா - உனை
வாழ்த்துகின்றோம் தோழா
எங்கள் தமிழாள் மடியில்
வந்த வீரத் தோளா

சங்கப் பாடற் சரித்திரத்தைச்
சாத்திய மென்று ரைப்பவனே
வெங்களத்து வரலாற்றின்
வெற்றிச் சங்கை ஒலிப்பவனே

மங்கையவள் மறத்தியென
மாற்றிப் படை செய்தவனே
தங்கைகளும் தாயகத்தின்
தாவு வேங்கை யென்றவனே

பொங்குதடா தமிழ்மானம்
போர் முழக்கம் செய்யுதடா
பங்கெமக்கும் உண்டுனது
பாதையிலே செல்வமடா

சிங்களத்துச் சிறுக்கி நெஞ்சு
சிதறிப் புறங்காட்டுதடா
உன்களத்துப் பெருமைகண்டு
உலகரங்கே வியக்குதடா



படிப்பகம்

www.padippakam.com



## கூர்ப்பு

இராணுவக் கழுகின் ஈனப் பார்வையின்
எரி தழல் பட்டு எரிமலையாகிய
சராசரிப் பெண்ணும் சமர் செயத் துணிந்தாள்
புராதன காலப் பொறுமையைத் துறந்து
போர்க்களம் காணும் புயலென எழுந்தாள்
அராஜக அரசின் அழிவுப் பாதையில்
அடக்கம் நொருங்கி ஆயுதமானதே!

படிப்பகம்

www.padippakam.com



# பெண்ணவள் புலியானாள்

பெண்ணவள் புலியானாள் - அவள்
பேச்சிலும் மூச்சிலும் புயலென ஆனாள்
மின்னலின் ஒளி யானாள் - இம்
மேதினி உட்கொளும் கடலென ஆனாள்

வெண்ணிலா போன்றவளே - இன்று
வெம்மை கொள் பரிதியாய் வானுலா வந்தாள்
புண்ணில் வேல் கொண்டவளாய் - அனல்
பூத்திடப் பகைதனை வென்றிட நின்றாள்

கண்ணிலோர் கருணை கொண்டே - அவள்
காட்டிய அன்பினை உட்புதைத்தே
விண்தொட விரிந்துயர்ந்தாள் - விழி
ஈட்டியால் வீணரின் விழி திறந்தாள்

முன்னொரு நாள் இவளின் - முகம்
மூடியே இருளினில் அடைத்து வைத்தார்
பொன் பொருள் தனைக் கொடுத்தே - அகப்
பெண்களை அடிமைகள் ஆக்கி விற்றார்

இன்னலில் இவள் குளித்தாள் - பல
இழிவுகள் பட்டுயிர் துடி துடித்தாள்
தன்னை ஓர் இயந்திரமாய் - உல
காக்கிய கொடுமையால் உணர்வெரிந்தாள்

மெல்லியள் என்றிவள் மேனியைத் தீண்டிட
முயன்றவர் கரங்களை முறித்திட எழுந்தாள்
கொல்லவும் குதறவும் கூடிய பகைவரைப்
பயமின்றிப் பாய்ந் தெதிர்த் தோட்டிடத்துணிந்தாள்

படிப்பகம்

www.padippakam.com


## அன்னை அருளூஞ்சற்பா

தானனன தன்னனன தானதன்ன னான!
தன்னதன தானன்ன தனனன்ன தான!

மூர்த்தமென முன்னின்று வாழ்த்துகின்ற தேவி!
மூர்த்தியவன் பாகமென மிளிர்கின்ற தேவி!
வார்த்தசிலை வடிவாகிக் காத்தருளும் தேவி!
தீர்த்தங்கள் தலமாகித் திகழ்கின்ற தேவி!
பார்த்தபெரு வெளியாவும் பூத்தவளே தேவி!
ஆர்த்துள்ளே ஓமென்று ஒலிக்கின்ற தேவி!
கூத்தனுடன் குலவுகின்ற லிங்கப் பொருளாகித்
தோற்றமதன் குறிப்பாகிப் பொலிகின்ற தேவி!
வேர்க்குளொரு வேராகி விளையும் வித்தாகிச்
சேர்க்கையினால் இயற்கையெனும் சிறப்பானதேவி!
ஆக்கையெனும் அணிதந்து அழித்தருளும் தேவி!
வாழ்க்கையெனும் வழிதந்து வினைதீர்க்கும் தாயே!

ஆடீரோ ஆடீரோ அருளூஞ்சல் அம்மா!
அன்பர் தம் உளம் ஏறி ஆடீரோ அம்மா!

போர்த்துருளும் கோள்கள் தமைப் புரட்டுகின்ற தேவி!
பார்கோர்த்த அண்டங்கள் பலவாகும் தேவி!
ஈர்ப்பாகி எதிர்ப்பாகி இணைக்கு விசையாகித்
தேர்ப்பாகி யாகியவை செலுத்து கின்ற தேவி!
போர்க்காரி தர்மத்தின் அறங் காவற்காரி!
கேட்பாரிலார்க்கிங்கு ஒரு சொந்தக்காரி!
கூர்ப்பாகி இனமாகிக் குலமாகும் தேவி!



படிப்பகம்

www.padippakam.com



ஊராகி நாடாகி உலகாகும் தேவி!
ஊற்றாகி உறுப்பாகி உள்ளோட்டமாகி
உணர்வாகி அறிவாகி அனுபவமுமாகி
தோற்றாது தொடர்கின்ற தொல்வினைகள் போக்கும்
துணையாகித் துயர்தீர்க்கும் தூயவளே தாயே

ஆடீரோ ஆடீரோ அருளூஞ்சல் அம்மா!
அன்பர் தம் உளம் ஏறி ஆடீரோ அம்மா!

காற்றாகி நெருப்பாகிக் கடலாகும் தேவி
காராகி நீராகி நிலம் வானுமாகி
மூச்சாகிப் பேச்சாகி மௌன அலையாகி
பொறியாகிப் புலனாகிச் சுரப்பிகளுமாகி
நேற்றாகி இன்றாகி நாளையென ஆகி
நிகழ்வாகி நினைவாகி நிலைக்கின்றதேவி!
தீர்ப்பாகி விதியாகித் திசை புலங்களாகி
திரையாகிக் கரையாகி எல்லைகளுமாகி
வேற்றாகி ஒன்றாகி விக்கினங்கள் தீர்க்கும்
வினவாகி விடையாகி விளங்குகின்ற தேவி!
ஆற்றாத போதெல்லாம் அபயக்கரம் காட்டி
ஆணவத்தின் இருள் போக்கி ஒளியேற்றும் தாயே!

ஆடீரோ ஆடீரோ அருளூஞ்சல் அம்மா
அன்பர்தம் உளம் ஏறி ஆடீரோ அம்மா!

நிலவாகிக் கதிராகி நீர்ப்பனியுமாகி
நிறைவாகிக் குறைவாகி நீண்டு சிறிதாகி
மலையாகி நதியாகி மரம் மிருகமாகி
மட்டற்ற உயிர்போர்த்த வர்ணம் வகையாகி



படிப்பகம்

www.padippakam.com



மலராகிக் கனியாகி மகன் மகளுமாகி
மாண்புகளும் மகத்துவமும் இயல்புகளும் ஆகி
இலையாகித் தண்டாகி ஈயெறும்புமாகி
இரவாகிப் பகலாகி இன்ப துயராகிக்
குலையாத குறி கொண்டோர் மனவுறுதியாகிக்
குருவாகி யருள்கின்ற குருமணியே தேவி
தலைசேரும் ஞானத்தைத் தாங்குகர மாகும்
கருணாக ரியுந்தன் கழல் தஞ்சம் தாயே!

ஆடீரோ ஆடீரோ அருளூஞ்சல் அம்மா
அன்பர் தம் உளம் ஏறி ஆடீரோ அம்மா!

இயலாகி இசையாகி நாடகமுமாகி
மொழியாகி மரபாகி மூத்ததமிழாகி
செயலாகிச் சிதைவற்ற செல்வங்களுமாகி
சிந்தனையை வளமாக்கும் சுந்தரியே போற்றி!
துயர் போகத் துணையாக நெஞ்சகத்தில் வாழும்
கயல் வாழும் விழியாளே நந்தினியே போற்றி!
அயராது உழைப்போரின் அருட்தெய்வமாகி
அவர் காணும் வெற்றிக்கு அடிக்கல்லை நாட்டி
புயலோடு பூகம்பம் பகையாகும் போதும்
விலகாது நிற்கின்ற அம்பிகையே போற்றி!
அயலாகி உறவாகி அணித்தலைவியாகி
ஆனந்த மயமாக்கும் சிவசக்தி போற்றி!

ஆடீரோ ஆடீரோ அருளூஞ்சல் அம்மா!
அன்பர் தம் உளம் ஏறி ஆடீரோ அம்மா!



படிப்பகம்

www.padippakam.com

# உறவோசை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## மூத்தவள் பிரிவில் வார்த்த வரிகள்

ஈன்ற அன்னையின் இனிய விம்பமாய்
வாழ்ந்த அக்காவின் விழிகள் மூடின!
தோய்ந்து துயரத்திற் துடிக்கும் நெஞ்சொடு
ஈண்டு சில வரி யெழுத முந்துவேன்!

'தோன்றினேன் உலகில்' என்ற தொடருக்குச்
சான்று பகர்ந்த சோதரர் வரிசையில்
ஊன்றிய முதல் வித்தாம் உத்தமி பெரியக்கா
மாண்டவோர் செய்தியால் மனம் சோர்ந்து நிற்கிறேன்!

தோன்றிய யாவரும் துறப்பர் உடலெனும்
ஆன்ற தத்துவம் அறிந்தவராயினும்
நீண்ட தொடராய்ப் பிறவிகள் பற்பல
பூண்டு ஒருயிர் கொடுவினை கழன்று
ஆண்ட வன்பதம் அடைந்திடல் மெய்யென
ஓர்ந்த காலையும் உணர்வினால் உறவுகள்
சேர்ந்த வாழ்வினைத் துறப்பதும் சிந்தையிற்
சூழ்ந்த பாசங்கள் தவிர்ப்பதும் கடினமே!

பிரிவு என்பதே பிறவியின் நோக்கமாய்த்
திரியும் பாவி நான் தித்திக்கும் நினைவுகள்
எரிய என்னுள்ளே எட்டத்திலிருந்து என்
அரிய சோதரர் அன்பிற்காய் அழுகிறேன்!



படிப்பகம்

www.padippakam.com



விரியும் காட்சிகள் எத்தனை எத்தனை!
விழிகள் நீர்மழை கொட்டிடும் நினைக்கையில்
பொரியல் மணமும் பூவிலைக் கறியும்
வழிய வழிய அன்பினைக் குழைத்து
வருவோர்க்கெல்லாம் விருந்திடும் பண்பும்
வந்தோர் செல்கையில் வருந்திடும் இயல்பும்
சொரியும் பாசத்தின் சொர்க்கத்தின் சுகமும்
சொர்ப்பனக் காட்சிகள் ஆகின எனக்கிங்கே!
எம்மவர் வரிசையில் எட்டாம் இடத்திலே
என்னை வைத்துச் சென்றாள் என்தாய்!
கண்ணின் மணியெனக் கடைசிப் பிள்ளையாய்த்
தன்னுள் வைத்து தாங்கிய தாய்போக
அன்னம் தண்ணிக்கும் ஆறுதல் வார்த்தைக்கும்
அண்ணன் அக்காமார் அன்புக்காய் ஏங்கினேன்!
தன்னந் தனியாய்த் தந்தையின் நிழல்கூட
மண்ணில் இன்றி மயங்கித் தவித்தேன்!

கையைப் பிடித்து நடத்தவும் மார்பினிற்
காலைவைத்து உதைத்திடத் தாங்கவும்
ஐயனை அப்பனை அறியாப் பிறவியாய்
வையத்தில் வாழுதல் யாருக்கும் வேண்டாம்!

நன்றி சொல்கிறேன் நெஞ்சு நோவுடன்!
நன்றி சொல்கிறேன் நெஞ்சு நோவுடன்
இன்று என்னையோர் மனிதனாமென
இந்த உலகிலே ஆக்கிய மூத்தவர்



படிப்பகம்

www.padippakam.com



அன்புச் சோதர சோதரி யாவர்க்கும்
நன்றி சொல்கிறேன் நெஞ்சு நோவுடன்
நாதியற்று நான் அலையாது பாசத்தால்
நன்கணைத்த உம் பாதங்கள் போற்றினேன்!

இன்று வந்திடும் செல்வம் அது நாளை
சென்றிடும் எனச் செப்புவர் சான்றோர்!
ஒன்றி வாழ்ந்து ஒக்கலித்தாடிடும்
இன்ப வாழ்வுக்கு ஏதிணையாகுமோ?

அன்று பளையிலே அக்காவின் வீட்டிலே
நின்று நிலைத்து நெஞ்சாரக் கூடித்
தின்று குடித்துத் திளைத்த நாட்களை
இன்று ஒருமுறை நினைவுக்குத் தருகிறேன்!
மாதம் இருநூற்று நாற்பது ரூபாய்க்கு
ஓதும் வாத்தியார் உத்தியோகத்தை
வேதமாக்கி அக்காவின் வீட்டிற்
பாதம் பதித்து வாழ்க்கை நடத்திய
காலம் அது! கடவுள் கொடுத்த
வாழ்வும் அதுதான்; பெரியக்காவின்
மீது நான் கொண்ட பக்தியை மெருகூட்ட
நாளும் அவள்வீட்டில் நெருக்கம் கிட்டிற்று!

பாசமக்கள் மருமக்கள் பார்வையில்
ஆசையாய் அமர்ந்து அவர்தரும் அன்புக்குத்
தாசனாய் மாறும் தவமெனக் கெட்டிற்று!



படிப்பகம்

www.padippakam.com



காசு பணம் தராக் கொடை வந்து ஒட்டிற்று
வீசும் தென்றலும் வீழும் மழையும்
வேம்பும் புளியும் மாவும் முருங்கையும்
நேசப் பொருட்களாய் நெஞ்சுளே நீண்டன!
நினைவுக்குள் நிறைந்து நித்திய மாகின

மாலை நேரம் திண்ணையில் அமர்வதும்
மணிக்கணக்காய்ப் பாசத்தில் நனைவதும்
காலை நீட்டிச் சாய்மனைக் கதிரையில்
கண்ணயர்ந் திடுவதும் என்மரு மக்கள்
காலைப்பிடித்து நோவைக் கலைப்பதும்
நாளாந்த நிகழ்வாய் நகர்ந்தன அங்கே!

பின்முற்றம் நிற்கும் முருங்கையில் ஆய்ந்து
முருங்கையிற் சுண்டல் இறாற்பொரியல் இடியப்பம்
கண்குளிரச் சமையல்; காதினிக்கப் பாசச் சொல்
இன்பரசம் அருந்திய இனிய நாட்களவை!

அத்தானின் பாதங்கள் தொழு தெழுந்தாள் என்னக்கா!
பத்தாவிற்கேற்ற பதிவிரதை என்பதற்கு
அர்த்தம் அவளென்று அடிக்கடி நான் நினைத்திடுவேன்!
எத்தாலும் இணைந்து உயிர் கலந்த உறவு அது!
சொத்து சுகங்கள் மாடி மனை கூடங்கள்
அத்தனையும் கடந்த அன்பு வாழ்க்கை அது!
செத்தாலும் பிரியாத சோடிகள் அவர்கள்!
முத்தாரம் பதித்த முழுதான தம்பதியர்



படிப்பகம்

www.padippakam.com



எப்போதும் அக்காவின் இல்லறவாழ்வினிலே
தக்கவில்லைப் புறச்செல்வம் அதுவொன்றே அங்குகுறை!
அக்காவைப் பற்றி அழகுற வர்ணித்தால்
இப்படித்தான் கூறுவேன்; என் தமிழால் எழுதுவேன்

"கோபமறியாக் குணங்கொண்டாள் ஞானப் பூங்
கோதை யெனும் நாமம் கொண்ட நங்கை பிறர் நோகப்
பாவமெதுவும் இயற்றாதாள் பணிவிடைகள்
நாதன் தனக்கு நனிஇயற்றிப் பிள்ளைகளின்
பால்தன் கடமை தவறாது தான் நோற்றாள்!
வேதம் விருந்தோம்பி வாழ்தல் நலம்பேணல்
வேண்டாப் புறஞ்சொற்கள் விலக்கல் எவர்க்கும்
தீது நினையாத் திருச்சேர்தல் என்கின்ற
யாவும் அவளாய் எதிர் நின்றாள்! தமிழ்ப்பாட்டின்
பேதை தமிழ்ப் பெண் இல்லத்தாள் தாயானாள்!

இத்தனை கூறியும் தான் என் நெஞ்சில் வேதனை
பற்றி யெரிவதைப் பகராமல் முடியவில்லை!
எத்துணை பாவமும் யாருக்கும் இயற்றாத
என்னக்காவுக்கு சர்க்கரை வியாதி
கிட்டியதேன் என்ற கேள்வி குடைய
முற்பிறவி செய்த வினையென்ற முணுமுணுப்பும்
விட்டு விட்டு என்னுள் விடையாக எழுகிறது!
சத்தியமாய் அக்கா யாருக்கும் இப்புவியில்
இப்பிறவி இயற்றிய இருள்வினை இருக்காது!
நலமுடைந்த அக்காவின் நலங்கேட்க எனக்குத்
தொலைபேசி யொன்று தான் துணையாக இருந்தது



படிப்பகம்

www.padippakam.com


புலம்பெயர் நிலத்திற்குப் புகுந்த வாழ்வதனால்
இழந்த இழப்புகள் எத்தனையோ எங்களுக்கு!
வளர்ந்த உறவுகளை வாழ்ந்த உணர்வுகளைப்
பிரிந்து உலவுவதே பாக்கியங்கள் எங்களுக்கு!

நேரிலே பார்த்து நெஞ்சு விட்டுப் பழக
ஊரில்லை உறவில்லை என்ற நிலையினிலே
தூரத்திலிருந்து துயர்பகிரும் கொடுமை
நேர்ந்தது நமக்கு; நிச்சயம் விடிவு வரும்!

தொலைபேசியெடுத்துப் பேசுகின்ற வேளையெல்லாம்
நிலைகுலைந்துநெஞ்சுவிம்மும் அக்காவின் குரலென்னை
அழவைக்கும்; அலறவைக்கும்; அன்பம்பு
துளைத்தெடுக்கும்!
விலைகொடுக்க முடியாத விழிகளைப் பார்க்காத
வாழ்வென்ன வாழ்வென்ற விரக்தி விளிம்புடைக்கும்!

ஓடியோடி யுறவுகளை உபசரித்த என்னக்கா
வாடிப் படுக்கையிலே வதங்குவதென் னிதயத்தைச்
சூட்டின் களமாக்கும் சோகத்தின் வனமாக்கும்!
நாடி பிடித்து நாதனுக்குத் துணைசெய்த,
சோடிப் பறவையின் துயரமென்னைச் சிதறடிக்கும்!

வந்தார்க்கு விருந்தூட்டி வரவேற்ற அன்புக்கை
தன் வாழ்வை யோட்டப் பிறரூட்டும் நிலைமைக்கு
வந்த கொடுமை யெண்ணி வதங்கியது என்னாத்மா
பந்தாக ஓடிப் பணிவிடைகள் செய்தவளின்
பாதம் எடுத்த கதை பாழ்தீயாய்ப் பற்றியது!


படிப்பகம்

www.padippakam.com


துணைவன் பிரிவின் துயர் போகக் கொடுநோயின்
கனலும் கவலையும் கண்ணீரும் அகன்றோட
அணைந்ததோர் அகல்விளக்கு! அல்ல அல்ல அழியாத
நினைவாய் நிகழ்வாய் நித்தியமாய் விரிந்தது!
பிறவித் துயரின் பிடியினை விலக்கி
உறவுக் கடலின் ஓசைகள் கடந்து
நிறைவான சோதியாய் நித்திய ஆவியாய்
இறைவன் பாதம் இணைந்தனள் என்னக்கா!

பிரிவு நமக்குத்தான்; அவளுக்கு அல்ல!
பிரியா உறவுடன் பிணைந்து நிற்கிறாள்!
அரிய மானிடப் பிறவியின் எல்லையை
அடைந்து சோதியாய் அங்கே தெரிகிறாள்!

இனியும் பிறக்காத இன்ப எல்லையில்
மனிதம் சுரக்கின்ற மாமலையுச்சியில்
புனித சோதியாய்ப் பூரித்துச் சிரிக்கின்றாள்!
பிணியும் நோயும் பிணிக்காது வாழ்கின்றாள்!

தன்னை யீன்ற தமிழின் புலவனைத்
தர்மம் போற்றிய தாயின் உலகினை
கண்ணின் மணியாய்க் கண்ட கணவனை
கண்டு நின்றிடும் அரும்பேறு பெற்றாள்!

அக்காவே! அக்காவே!
என் பெரிய அக்காவே!



படிப்பகம்

www.padippakam.com



அடே என்று அழைக்காத
அன்பான அக்காவே!
துக்கத்தின் உச்சியிலே
துயரத்தின் பிடியினிலே
சிக்கிச் சிதறுண்டு
சிந்தனையும் எரியுண்டு
விக்கி யழுதுனக்கு
விடை தந்தேன்; வாழி!

அன்பு மருகரே! ஆசை மருகியரே!
துன்பக்கடலில் வீழ்ந்துள்ள உமையெல்லாம்
நெஞ்சில் இருத்தி உம்துயரைப் பகிர்கின்றேன்!
நன்றாக நீங்கள் வாழ்வீர் உமையென்றும்
அந்த இறைவன் வாழ்விப்பான் உம்பெற்றோர்
என்றும் உம்மோடு இருந்துமது சந்ததியர்
நன்கு செழிக்க நல்லாசி புரிவர்!

சோதரியை இழந்து சோகத்திற் துடிக்கும்
சோதரரே சோதரிகாள்! உம்மோடு கலந்து
சோகத்தைப் பகிர முடியாத சோகத்திற்
சோகித்திருக்கின்றேன்! சோகம் தவிர்த்திடுவீர்!

(தனது இறுதி நாட்களில் நீரிழிவு நோயினாற் பாதிக்கப்பட்டுப் பாதம் துண்டிக்கப்பட்டு இறந்த, பாசத்திற்கும் மதிப்பிற்கும் உரிய மூத்த சகோதரியின் பிரிவின்போது அவளைப் பார்க்கமுடியாத நிலையில் இலண்டனிலிருந்து வார்த்த வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com



# வித்துவான் வேலன் நித்தியம் எய்தினார்

மூத்த தலைமுறை முகமொன்று தனது
மூச்சை நிறுத்தி முத்தாய்ப்பு வைத்தது!
பார்த்த விழிகள் இமை மூடிக் கொண்டன!
பேச்சுச் சுரங்கம் பாதையை அடைத்தது!
ஆர்த்த அன்பினால் என்னை அணைத்து
வாழ்த்திய உள்ளம் வரலாறானது!
ஈர்த்த சிரிப்பு இறுகிப் போனது!
இன்பத் தமிழ்த்தாய் இழப்பொன்றை ஈன்றாள்!

கோர்த்துத் தமிழைக் கொட்டிய நாக்கு
வார்த்தைகள் மறந்து வாளாவிருந்தது!
போர்த்த உடம்பைப் பூமியில் விட்டு
நித்தியம் எய்தினார் வித்துவான் வேலனே!

ஏற்றம் நிறைந்த எங்கள் தமிழைப்
போற்றியும் எண்ணியும் எழுதியும் வாழ்ந்த
பாட்டன் ஒருவன் படுக்கையிற் படுத்ததாய்க்
கேட்ட செய்தி நெஞ்சினை வருத்தத்
தீட்டும் கவிதை தருகிறேன் தேசமே!
கூற்றம் வருதல் புதிதல்ல வெனினும்
குமுறும் நெஞ்சுக்கு அறிவென்பதேது!
ஆற்றல் நிறைந்தவர் அன்பினிற்கனிந்தவர்
உறவினைப் பிரிதல் கொடுமையிற்கொடுமையே!



படிப்பகம்

www.padippakam.com



மாற்றம் காண்கின்ற மாநிலப் படுக்கையில்
மதி நுட்பம் கொண்டோர் மதிக்கப் படுவதும்
சாற்றற் குரிய உள்ளொளிச் சால்புள்ளோர்
சரித் திரத்தினிற் பதிக்கப் படுவதும்
நேற்று இன்று நாளைகள் கடந்த
நித்திய வாழ்வினை நினைவூட்டும் சான்றுகள்!

தோற்றம் மறைவுத் தாழ்ப்பாள் கடந்து
தொடராய்ச் செல்லும் ஆன்மீக வாழ்வின்
பேற்றை யடைந்தவர் பெருமைக்குரியவர்
பிறவாப் பிறவியின் பேற்றுக்குரியவர்!

நேற்றுப் போலுள்ளது வித்துவான் வேலனை
நேரிற் கண்டு நெஞ்சை நிறைத்தது!
காற்றுப் போல் வேகமாய் எனை நோக்கி வந்து
கைகளைப் பிடித்தது காட்சியாய் நிலைத்தது!
ஊற்றுக் கொடுத்த எந்தையின் அன்பினை
உள்ளத் திருத்தி அவர் பெயர் கூறி
ஆற்றுப்படுத்தினார் எமக்குள் உறவினை
அன்று தொடங்கிற்று வித்துவான் நட்பே!

அன்று நம்மண்ணில் அவர் உரைகேட்ட
அனுபவம் எனக்கும் உண்டு! உண்டு!
என்றும் அழியா எங்கள் பெருங்கவி
ஆக்கிய புதுமைப் பெண்ணவள் தன்னை
தன்குரலுயர்த்திப் பாடிய வேலனைக்



படிப்பகம்

www.padippakam.com



கண்டேன் அரங்கில் வட்டுக் கோட்டையில்!
இன்றும் பாரதி என்ற கவிஞனை
இதயத் திருத்தி நின்ற வேலனைக்
கண்டேன் இலண்டனிற் கலந்தேன் நட்பினில்!
கடைசி வரையிலென் கருத்தினில் நின்றனர்!

ஒன்றாயமர்ந்து உண்டோம்; உணவினைத்
தின்ற கையோடு தமிழையும் உண்டோம்!
பண்டு பாடிய பழந்தமிழ்ப் புலவரின்
பண்பையும் பாடற் பழத்தையும் உண்டோம்
கன்றுகள் போல அவர்முன்னமர்ந்து
கனிந்த வாழ்வின் கனிரசமுண்டோம்!
மன்றுகள் கண்டவர்; மனிதத்தின் உயர்வின்
மாண்புகள் கண்டவர் மழையாய்ப் பொழிய
நின்று நனைந்தோம்; நிறைவினில் மகிழ்ந்தோம்
நீண்டதோர் கரையினில் நடப்பதாய் உணர்ந்தோம்

உண்டு புசிப்பதில் உணர்வினை ரசிப்பதில்
ஊறும் அன்பினைக் கண்டு களிப்பதில்
பெண்டுகள் பற்றிப் பேசிப் புகழ்வதிற்
பேறு பெற்றவர் வித்துவான் அவர்கள்!
நண்டு மீன் நல்ல இறால் கணவாயுடன்
நாசு ரக்கவி ருந்தினை நயப்பவர்
என்றும் விருந்துக்கு நண்பரை அழைப்பதில்
நல்லதோர் துணை வாய்த்திடப் பெற்றவர்!



படிப்பகம்

www.padippakam.com


வேலனையாவின் அன்பையும் நட்பையும்
வேண்டி நாங்கள் போகின்ற போதெல்லாம்
காலேலாத போதிலும் எமக்காய்க்
காய்ச்சிய உணவுடன் காத்திருக்கின்ற
மேலான அம்மாவின் முகத்துச் சிரிப்பும்
மனைவியின் மாண்பிற் குரமாய் நின்றது!

ஊறுகாய் உண்பதில் வல்லவர் வேலன்!
உரையாடித் திளைப்பதில் வல்லவர் வேலன்!
'போதும் போதும்' என்பார் அம்மா!
'போடியப்பா' என்பார் ஐயா!
இரத்த அழுத்தம் எனக்கும் உண்டு!
உணர்ச்சி வயத்தில் உரத்துப் பேசுவேன்
கரத்தை உயர்த்திச் சிரிப்பார் வேலன்!
கண்களால் என்னைச் சாந்தப்படுத்துவார்!

பொய்யர் உலகின் புரட்டுத் தனங்களை
வையும் என்னை அமைதிப்படுத்துவார்!
வையம் இதுதான் வாழ்வும் இதுதான்!
வரம்புகள் உண்டு என்றே உணர்த்துவார்!

செய்யும் கடமையைச் செய்யும் என்று
சிரித்தபடியே நல்வழி காட்டுவார்!
ஐயம் எனக்கு எழுகின்ற போது
அவற்றிற் தெளிவினை யூட்டி மகிழ்வார்!


படிப்பகம்

www.padippakam.com



கவிதை பற்றியும் கவித்துவம் பற்றியும்
கவிஞன் பற்றியும் எழுதிய வரிகளைச்
செவியிற் போட்டேன் சென்ற பொழுதினில்!
'பிசிறல் இல்லாத வரிகள்' என்று
பெருமைப்படுத்தினார் பெரிய வித்துவான்!

உள்ளத்தாற் பேசிடும் உண்மை மனிதரின்
உறவு கிடைப்பது அரிதிலும் அரிது!
வெள்ளமாய்ப் பாயும் இதய அன்பின்
வீச்சிற் குளிப்பது அரிதிலும் அரிது!
கள்ளமும் போலிக் கண்ணீரும் இல்லாக்
காற்றை நுகர்வதும் அரிதிலும் அரிது!

நல்லவர் நட்பு அரிதிலும் அரிது!
நான் கண்ட வேலனின் உறவும் அரிது!

வேலனின் இழப்பு... தமிழுக்கு இழப்பு!
வேலனின் இழப்பு... அன்புக்கு இழப்பு!
வேலனின் இழப்பு... மரபுக்கு இழப்பு!
வேலனின் இழப்பு... மனிதத்தின் இழப்பு!

ஆழ உணர்வினைப் பகிர்ந்திட இனி நான்
யாரிடமையா ஓடிப் போவேன்?
ஈழவிடுதலைத் தாகத்தைப் பகிர
எவரிடமையா ஓடிப் போவேன்?
கூழின் உணவையும் ஊரின் உறவையும்



படிப்பகம்

www.padippakam.com



கூறி மகிழ யாரிடம் போவேன்?
வாழும் தூய கவியுளம் பற்றி
வியந்திட இனி நான் யாரிடம் போவேன்?

தமிழவைக் கூடத்தில் வந்து அமர்ந்து
தந்தார் ஆசிகள் எமக்கும் தமிழுக்கும்!
தமிழவை நூலகம் தன்னைத் திறந்து
தாமே முதல் நூற் பதிவையும் பெற்றார்!
தமை மறந்தென்னை வாழ்த்தியெனது
தகைமை கடந்த அன்புகள் செய்தார்!
தமது நூலில் எனது பெயரையும்
தானே பதித்து இந்தத் துரும்பையும்
இமயத் தமிழோடு இணைத்து மகிழ்ந்தார்!
இதை நான் எப்படித் தாங்கிக் கொள்ளுவேன்!

வள்ளுவந் தன்னை வாரி வழங்கிய
வள்ளல்வேலன் இன்றிங்கு இல்லை!
உள்ளது பேசி உரிமையோடணைத்த
உயர்ந்த மனிதன் இன்றிங்கு இல்லை!

கள்ளமும் போலிக் கண்ணீரும் இல்லாக்
கண்ணியம் இன்று கண்மூடி விட்டது!
நல்லவர் நட்பினை நயம் பட உரைத்த
நாவும் நரம்பும் இளைப்பாறி விட்டது!

கம்பனைக் காட்டிய விரல்கள் போயின!
கலித்தொகைக் காட்சிகள் திரைமூடிக் கொண்டன!



படிப்பகம்

www.padippakam.com



நம்பெரும் சொத்துக்கள் நம்முன்னே கொட்டிய
நாவும் போயிற்று! நெஞ்சும் போயிற்று!
நம்பிக்கை தந்து நம்முன்னே நின்ற
தீபம் ஒன்றின் திரிதீர்ந்து போனது!

கரும்புலி மறவர் பிரிவுக் கவிதையை
ஒரு முறை யவரிடம் பாடிக் காட்டினேன்!
பெருங்குரலெடுத்துக் கேவிக் கேவிப்
பெரியவர் அழுதார்! நானும் அழுதேன்!

மெல்லிய இதயம்; மேதினிக்காக
நல்லது சொல்ல நாடிய இதயம்!

சங்கத் தமிழின் கவிதைத் தெளிவும்
சைவ சமயச் சித்தாந்த ஞானமும்
எங்கும் பரந்து எழுந்த இலக்கிய
ஏடுகள் கற்று ஏறிய அறிவும்
பொங்கு முணர்வும் பட்டதை முன்னே
பூடகமின்றிப் போட்டு உடைத்திடும்
வெங்களப் பண்பும் கொண்ட வேலனை
இங்குள்ள பலரும் நன்கறிந்திருந்தனர்!

இருப்பினும் எமக்குள் ஒரு குறை எழுந்தது!
இவரது ஆழ்ந்த இலக்கிய ஞானத்தை
விருப்புடன் வாழும் இளைய சந்ததி



படிப்பகம்

www.padippakam.com



செவிக் குணவாக்கிடல் அவசியம் என்ற
கருத்துடன் வித்துவான் வேலனையூடகப்
பாதையிற் திருப்பிடும் முயற்சியில் இறங்கினோம்
துருப்பிடித் திருப்பவர் தூரத்துக் காதலைத்
துடைத்து மினுக்கும் தொண்டினை நாடினோம்

நெருப்பினில் எரிந்த நிலத்தினைப் பிரிந்து
நிழல்களைத் தேடி நடக்கின்ற நம்மவர்
கருப்பொருள் காணாக் காவியம் படைத்துக்
கடைநிலை செல்லும் கொடுமையைத் தவிர்க்கவும்
திரைப்படம் ஒன்றே நிலைக்களனாகித்
திறன்கெட்டு மாளும் கேட்டினைக் குறைக்கவும்
திருக்குறள் தொட்டு தமிழ்மொழி இலக்கியம்
தெரிந்திடாதிருக்கும் இழிவினைத் தடுக்கவும்
உருப்படும் உலகினை ஓம்பிடும் நெஞ்ச
ஒளி கொண்ட சந்ததி மிளிர்ந்திட உதவவும்
பொறுப்புடன் வித்துவான் வேலனையழைத்துப்
புதுத் தமிழோசையைப் பரப்பிட விழைந்தோம்!

கிறுக்கர்கள் சிலரின் கிறுக்குத் தனத்தினாற்
கிறுக்கு வீழ்ந்தது எங்கள் முயற்சியில்!
உறுக்கிட நம்மிடை ஒரு சமுதாயம்
ஒன்றுபடாததால் உண்மை புதைந்தது!
பருக்கிய தமிழ்ப்பாலைப் பாதியில் நிறுத்தினோம்!
பாவங்கள் ஒரு சிலர் அனுதாபம் கூறினர்!
இருப்பினும் வேலனின் எழுத்துப் பயணம்



படிப்பகம்

www.padippakam.com



ஓயாது தொடர்ந்து எங்களை நிறைத்தது!
இருக்கின்ற போது உதைப்பதும் இறந்தபின்
உருக்கொண்டு பாடிப் பதைப்பதும் தமிழனே!

தமிழுணர்வுள்ளோர் தரணிக்குத் தேவை!
தாயக விடிவுக்கும் இவர் பணி தேவை!

நமதுயர்வறிந்து நம்வழி தெரிந்து
நம்குறை கடியும் நெஞ்சுகள் தேவை!
புதுமையின் பெயரால் புற்றீசலாகிப்
புவியினிற் கரைதல் அறிவெனல் தவறு!
நிதியதே வாழ்வாய் நிலையற்று மாயும்
நாளைய உலகைப் படைப்பதும் தவறு!

கடைசியாய் ஐயாவைக் கண்ட கணங்களில்
விடைபெறும் வரிகளாய் வார்த்தைகள் உதிர்த்தார்!
உடல்வலி குன்றி உணர்வின் வலியாற்
'தொடர்கிறேன்' என்று கூறினார் வேலன்!
நடைபலங்குன்றி நாவும் தளர்ந்து
இடையிடை வந்து வார்த்தைகள் ஒலித்தன!
மடையெனத் தொடர்ந்து பொழிந்த குரலது
மயங்கிடப் போவதை யுணர்ந்து வருந்தினேன்!
கொடை யெனக்கற்ற தமிழினைக் கொண்டு
கூத்தனை நாடும் குழந்தையைக் கண்டேன்!



படிப்பகம்

www.padippakam.com


அட இது வாழ்வு! அனைவர்க்கும் பொதுவாய்
ஆண்டவன் கொடுத்த மறையிது வென்ற
தொடரினை எண்ணித் துயரினை மறைத்தேன்!
தூக்கத் திடையே தொடர்ந்தார் வித்துவான்!

'பேசக் களைக்கிறேன்' என்றார் வேலன்!
பேச்சே களைத்ததைப் புரிந்து கொண்டேன்!
வேலனின் மூச்சும் இளைக்கக் கண்டேன்!
வீசிய புன்னகை தளரக் கண்டேன்!

நோயின் கொடுமையைப் பற்றிக்கூறி
'நீரும் கவனம் தம்பி' என்றார்
'பாயும் இரத்த அழுத்தங் குறைக்கப்
பாடு படுமெனும் பரிவான கருத்தில்!

பிரியும் போதும் சிரித்தே பிரிந்தோம்!
அருமையான நகைச்சுவை ததும்பும்
சிறிய கதையுடன் சிரித்து முடித்தார்!
வருகிறேன் என்று பிரிந்தேன் நானும்!

வளர்ந்த எனது மகனைப் பார்த்து
அம்மா அப்பாவைக் கவனியும் என்றார்
எனது மகன்போய் முத்தம் கொடுத்தான்!
எல்லோருமாக விடைபெற்று வந்தோம்!

நண்பர் சீறியுடன் நடந்தேன் வெளியே!
துன்பம் சுமையாய் என்னுட் கனத்தது!


படிப்பகம்

www.padippakam.com



முட்டிக் கனக்கும் முலையுடன் நின்ற
ஒற்றைப் பசுவின் உணர்வுப் பாலினைத்
தட்டிக் கறக்காமல் விட்டு விட்டோமா?
தமிழைப் பெறாது தவறிவிட்டோமா?
புட்டுப் புட்டுத் தமிழர் வாழ்வின்
பெருமைகேட்காது தூங்கி விட்டோமா?

புலம் பெயர் வாழ்வின் இயந்திர இயக்கத்திற்
பொறுமையும் நேரமும் இல்லாத நெருக்கத்தில்
வளந்தரும் நல்ல வார்த்தைகள் கேட்கும்
வாய்ப்பினை யிழந்து வாழ்ந்து விட்டோமா?

கலந்தனில் வீழும் காசின் சத்தமே
கடவுளின் பேச்சாய்க் கருதி விட்டோமா?
உளந்தனில் ஒளிரும் உண்மைச் சுடரின்
ஒளிதனைக் காணாக் குருடரானோமா?

ஈழத் தமிழர் மத்தியில் இன்று
ஆழக் கற்று உணர்ந்தவர் சிலரே!
வாழும் போது இவரை யொதுக்கி
வாழும் கொடுமை நமக்கேன் வந்தது?

ஆயிரம் கேள்விகள் என்னைத் துளைத்தன!
அனைத்திலும் வேலனே காரணமானார்!
ஆயினும் எனக்குள் ஆறுதல் ஒன்றின்
சாயல் தெரிந்தது! சமாதானம் தந்தது!



படிப்பகம்

www.padippakam.com



வாழ்கின்ற போது அவரோடு இணைந்து
நாலையும் பத்தையும் நானும் பகிர்ந்தேன்!
நூல் கொண்டு சென்று அவரிடம் தந்து
அவருக்கு நானும் சிறு தொண்டு புரிந்தேன்!
நாளொன்று எனக்கும் நிச்சயமுண்டு!
நானும் கண்களை மூடத்தான் போகிறேன்!
சாவென்ப திங்கு புதுமையே அல்ல!
சாவிற்குப் பின்பும் வாழ்தலே புதுமை!
ஆவிக்கு இல்லை அழிவென்ற உண்மை
அறிந்த தமிழுக்குள் வேலனைக் காண்பேன்!

(தமிழின் மரபினையும் தரணியின் இலக்கிய பரிமாணங்களையும் ஆன்மீகப் பரிணாமங்களையும் ஆழ உணர்ந்து, தமிழர்க்கோர் நாட்காட்டியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி மறைந்த அமரர் வித்துவான் க. ந. வேலன் அவர்களின் மறைவிற் பதித்த கண்ணீர் வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com


## அக்காளுக்கோர் அன்பு மடல்

முக்காடிட்ட மூலப் பொருளாய்
முகத்தினை மூடிய பாசக் குயிலாய்
கற்காலத்தின் காட்சிப் பொருளாய்
கணவன் விரல்கள் மீட்கும் இருளாய்
கற்காதவள்போல் காட்டில் நடக்கும்
கண்மணியே யென் அக்காளே நான்
துக்ககீதம் தூரத்திருந்து
துன்பத்தோடு பாடக் கேட்பாய்!

துர்க்காதேவி நீ யென்றுன்னைத்
துதித்தார் எந்தன் முன்னோர் என்றும்!
நற்காவியங்கள் ஆயிரம் உனக்காய்
நயந்தார் எங்கள் நற்றமிழ்ப் புலவோர்!
விற்றார் பெண்ணை வீணர் என்றே
விடுதலைப் பாடல் கவிஞர் புனைந்தார்
பொற்காலத்தின் பெண்ணே நீயேன்
போனாய் சிறைக்குப் பொறுத்திட அறியேன்!

சுக்காய் மிளகாய் சமையற் குழியிற்
சுதந்திரங்கெட்டுச் செத்திடல் முறையோ!
நிற்காதெந்தன் நெஞ்சக் கொதிப்பு
நினது முகத்திரை நீக்கும் வரையும்!
முக்காடதனைக் கிழித்து ஒருநாள்
முகமதி காட்டி நீ வரும் வரையும்



படிப்பகம்

www.padippakam.com


அக்காவுனது அன்புக் குரலின்
அமுதம் செவியை அடுக்கும் வரையும்!
புலவன் மகள் நீ! புன்னகை வீசிப்
புதுமைப் பெண்ணாய் மற்றவர்முன்னே
உலவும் உரிமை இல்லாதவளாய்
ஒடுங்கிப் போனாய் உனக்கிது விதியோ?
திலகம் இட்ட உன்முகம் மறைக்கத்
திரையேன் இட்டுத் தூரப் போனாய்
உலகம் பழிக்கும் அடிமைக் கோலம்
உத்தமியேநீ ஏன்தான் எடுத்தாய்!

திமிர்ந்த ஞானச் செருக்குடன் மாதர்
திண்ணைவிட்டுத் தெருவில் இறங்கி
நிமிர்ந்து நடக்கும் நிறைவினைப் பார்க்கும்
நெஞ்சம் எனக்கு நெடுகவும் உண்டு!
சமைந்த பெண்ணைச் சந்தையில் விற்கும்
சாபக் கேட்டை வெறுத்ததும் உண்டு!
அமைந்ததேனோ அக்காவுனக்கு
அடிமை வாழ்வென அறியேன் நானே!

உலக அரங்கில் உரிமைகேட்டு
உரத்துப் பெண்கள் ஓசை கொடுத்தார்!
அளவு ஒன்று அதற்கும் உண்டு
அறிந்தேயுள்ளேன் ஆணும் பெண்ணும்
குலவும் நிலையில் எல்லைகள் உண்டு!
உளமும் உயர்வும் சமத்துவப் படலே
உடன்பாடென்ற உண்மையும் அறிவேன்!



படிப்பகம்

www.padippakam.com



பெருமதம் யாவும் பேசிடு பொருளில்
அருளொடு அன்பும் அடங்கியதென்பேன்!
திருவழி கூறும் பெருமொழி மாந்தர்
அருளியவெல்லாம் ஆண்டவன் மறையே!
இதுபெரிதென்றும் இது சிறிதென்றும்
அறிவறியாரே அகந்தையால் மாள்வர்!
உருவது ஏறியொருவரையொருவர்
அழிவது கண்டு அழுதிடும் இறையே!
பொருள் வழி மதங்கள் மாறுதல் கொடிது!
குறிகளின் மூலம் குறித்தலும் கொடிது!
அருளொளி கொண்டு அணைத்திடும் போது
ஆண்டவன் முன்னே அனைவரும் ஒன்றே!

இது தெரிந்தேயெமை யீன்ற எம்தந்தை
இஸ்லாமியத்தினர் உள்ளம் கவர்ந்தார்!
மதமது மாறா முதுதமிழ்ப்புலவன்
முகமது நபியையும் முற்றிலும் உணர்ந்தான்!

இதையறியாமல் ஏனடி நீபோய்
இறைவனின் பெயரில் ஒரு பலியானாய்!
எமையறியாமல் ஏகிய உனது
எழிலுறு காதல் ஏற்றிடும் எனக்கு
மதவெறியாளர் மார்க்கத்தில் வீழ்ந்து
மட்டிலாத் துயரைத் தந்தனை தாயே!

(காதலின் வழி, பிறந்தகத்தைப்பிரிந்து சென்று துணைவன் கரம்பற்றிய உடன் பிறந்த சகோதரி கணவனின் மதமாற்றத்திற்கு இயைந்து தானும் மதம் மாறி வாழ்தலை அறிந்து நெஞ்சத்துயரோடு பதித்த வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com



## பாசத்துக்குரிய கிட்டுவின் பிரிவில்

சிரித்து வரவேற்ற செந்தளித்த முகமெங்கே
சிந்தித்து உரையாற்றிச் சிறப்புற்ற நாவெங்கே
அணைத்துக் கரம் போட்டு ஆதரித்த மனமெங்கே
அன்னை தமிழ் வாழ அவதரித்த மகனெங்கே

ஈர்ப்புச் சக்தியென இழுத்திருந்த கண்ணெங்கே
இதயத்தை ஊடுருவி எழுச்சிதந்த குரலெங்கே
பார்ப்போரைப் பலப்படுத்தும் பரிணாமத் தோற்றமெங்கே
பாய்கின்ற கேள்விகட்குப் பதில்கூறும் புருவமெங்கே

தேசப் படங்கீறித் தேசியத்தின்வளங்கூறி



படிப்பகம்

www.padippakam.com

மானப் பரம்பரையின் மறவர் உரங்கூறி
மக்கள் பலங்கூறி மனித்துவத்தின் நலங்கூறி
பாடம் பலசொல்லிப் பயிற்றுவித்த சுடரெங்கே

தலைவன் புகழ் பாடி அவன் தலைமைத் திறன்பாடி
இலையிவன் போல்லூர் தலைவன் இனியெமக்கே யெனக்கூறி
"நிலையான தமிழீழம் தான் தலைவன் முடிவாகும்
குலையாது இவன் திண்மை கோடி துயர் வந்தாலும்
வளையாது இவன் வரைந்த தன்மானப் பெருங்கோடு
பலியாது பகை போடும் பல நூறு திட்டங்கள்
மலை வானம் கடல் வையம் கதிர் காற்று நிலவதுபோல்
நிலையான சத்தியமே நிழலாகும் இவனுக்கு"
என்றெமக்குத் தினங்கூறி எமைவளர்த்த உருவெங்கே
குன்றனைய துணிவோடு நிமிர்ந்து நின்ற வடிவெங்கே



சோராதீர் என்றெம்மைச் சுற்றி நின்ற கரமெங்கே
சுதந்திரந்தான் முடிவென்று சூளுரைத்த புலியெங்கே
பாராளும் வேந்தருக்கும் பணியாத பலமெங்கே
படையாண்டு நாடாண்டு புகழ் சேர்த்த திருவெங்கே
கூடப் பிறந்தெம்மைக் காட்டிக் கொடுப்பவரைக்
கோபித் தெழுந்திங்கே கொதிப்புண்டு நிற்கையிலே
கோபிக்க வேண்டாம் நீர் அவர் நாளை திருந்திடுவார்
கொள்கை தெளிவுற்றுத் தமிழீழம் செய்திடுவார்
என்று எமையடக்கி அமைதி தந்த உயிரெங்கே



படிப்பகம்

எதிரிக்கும் கனிவுதரும் இணையற்ற மனிதனெங்கே
சோபித் தொளிவீசும் சுந்தர முகத்தாலெம்
கோபந் தணித்தெம்மைக் குளிர்காற்றில் இருத்தியவன்
ஆபத்து வலயத்தில் அகப்பட்ட கொடுஞ்செய்தித்
தீவந்து எம்மைத் தீய்த்த திது விதியோ
வெள்ளை மலரை வேங்கையரின் பெரு நிதியை
வீரத் தமிழ்க் குலத்தின் வேந்தை இனச் சிறப்பை
எல்லை கடந்து வந்தெமன்போல் எதிர் கொண்டு
கள்ளத் தனத்தாற் கைப்பற்ற முனைந்தாராம்

பகைவன் பிடியினிலே வீழுமுன்னர் உயிர்போக்கி
மறையும் விதிக்கு விலக்காகிப் போகாமற்
படகில் மரணித்துத் தீப்பிழம்பாய்ப் போனாராம்

வெள்ளைச் சிரிப்பும் விரிமுகமும் சுடர் விழியும்
இல்லை இனி யென்று எப்படி நாம் நம்பிடுவோம்

சோதனைகள் தீயாகிச் சுட்டெரித்து நிற்கையிலே
வேதனைகள் பாறையென மேல் விழுந்து அழுத்தையிலே
பாதையிலே மேடுபள்ளம் பயணத்தைக் கெடுக்கையிலே
பாழ் சுறாவும் திமிங்கிலமும் பெருங்கலத்தைக்
கவிழ்க்கையிலே
தீது கொண்ட பகைக் கூட்டம் திசைக்கொன்றாய்
முளைக்கையிலே
மோதி வெற்றி காண்போம் முடிவுதமிழீழமெனச்
சோதிப் பிழம்பாய் எம் முன்னே நின்றவனே

www.padippakam.com


முப்பத்து மூன்று வயதுனக்கு ஆனாலும்
மூண்ட முதிர்ச்சியிலே உனக்கு நிகர் யாரிருப்பார்
எப்பற்று மில்லா தெழுந்த பெரும்பற்றாம்
எமது பெருந்தேசம் எண்ணிச் சமர் புரிந்தீர்

பெற்றவளுக் கேது சொல்வோம்?
புரிந்தவளுக்கேது சொல்வோம்?
சுற்றத்திருந்தொன்றாய்வளர்ந்தவர்க்கு ஏது சொல்வோம்?
நற்றவத்தால் உனையீன்ற நாட்டுக்கு ஏது சொல்வோம்?
தொட்டுன்னைத் துணைக்கழைத்த தலைவனுக்கு
ஏதுசொல்வோம்?
துரத்தியவர் நாமென்ற தூற்றலுக்கானோமே
வெளிநாட்டில் நம்மவர்கள் வாழ்கின்றார் என நம்பி
வழியனுப்பி வைத்த மக்களுக்கு என்ன சொல்வோம்
பழி கூறி மொட்டைக் கடிதங்கள் தானெழுதி
வெளிநாட்டு அரசுக்கு வெறியேற்றி அதன் மூலம்
வெளியேற்றி வைத்த பாவியர்கள் நாங்களென
வெண்ணித் துடிக்கும் எம்மவர்க்கு ஏது சொல்வோம்
மண்ணள்ளித் தூவி யழுவோர்க்கு ஏது சொல்வோம்.

நாடாண்ட மன்னவனை நலங் கொடுத்த நல்லவனை
நாடோடியாக்கி நரபலியாய்க் கொடுத்து விட்டோம்
தேடக் கிடைக்காதசெல்வத்தைத் தொலைத்து விட்டோம்
தேடி வந்த தெய்வத்தைத் திருப்பியனுப்பி விட்டோம்


படிப்பகம்

www.padippakam.com


நாம் செய்த பாவம் நமையன்றோ அழித்துவிடும்
சாமக் குருடர் நம் சந்ததிகள் கலங்கிவிடும்
மன்னிப்பாரின்றி மானிடத்தின் விலங்குகளாய்
பின்நிற்போம் நாங்கள் புலம் பெயர்ந்த நாடுகளில்
காலங்கள் போனாலும் கண்கள் மண் புதைந்தாலும்
ஞாலந் தானுள்ளவரை நமது பழி தீராது
ஓலங்கள் ஒப்பாரி அத்தனையும் சத்தியத்தின்
நூலொன்றிற் பதிந்து நித்தியமாய்ச் சாட்சி சொல்லும்

கிட்டு என்ற பெயரோடு கிழக்கிருந்து வந்தவனே
கெட்டு அலைந்த எமைப் புடம் போட வந்தவனே
கட்டி யணைத் தெம்மைக் கழுவியெடுத்தவனே
சத்தியத்தின் தூணாகக் கண்ணெதிரே நின்றவனே!

பகிர்ந்துண்டு களிக்கையிலே பாலகனாய் வடிவெடுப்பாய்
பசித்த முகங்கண்டால் பதைத்து விருந்திடுவாய்
தகுந்த முறைசொல்லித் தட்டிக் கொடுத்திடுவாய்
தம்பி என்பாய் அண்ணை என்பாய் மச்சான் வா
என்றிடுவாய்
தங்கச்சி அக்கா அம்மா என்றன்போடு
இங்கிதமாய் உறவாடி உள்வீட்டு உறவானாய்
எங்கள் இதயத்தில் உட்கார்ந்து நிலையானாய்
ஓரிரண்டு ஆண்டினிலே உயிர்தோழனானாய் நீ!

சின்னக் குழந்தைக்குச் சிறப்பு விருந்தினன் நீ
கன்னத்திற் தட்டிக் கட்டியணைத்திடுவாய்


படிப்பகம்

www.padippakam.com


உன்னைத் தெரிந்த பிள்ளை உன் முகத்தை மறக்காது
தென்னை இளங்குருத்தே தீப்பிழம்பாய் போனதுவேன்?

கிட்டு மாமாவோ கிட்டுமாமாவோ
மொட்டாய் உதிர்ந்துவிட்ட கிட்டுமாமாவோ
பட்டுமலர் மேனி பாழ்தீயில் எரியவிட்டு
எட்டப் பறந்தாயோ எமைவிட்டுப் போனாயோ

இரக்கப்போனாலும் சிறக்கப் போவென்பாய்
துலக்கிமினுக்கிநிதம் துப்பரவாய் வாழென்பாய்
உறைக்கக் கண்டிப்பாய் உணர்ச்சியுடன் கோபிப்பாய்
அடுத்தகணத்தினிலே அன்போடு புன்னகைப்பாய்
மறைத்துப் பழக்கமில்லை! மாசுந்தன் மனதிலில்லை
நினைத்ததைக் கூறியுந்தன் நட்பதனை வளர்த்திட்டாய்

கலையென்றாலுயிருனக்கு கனித்தமிழில் நல்லார்வம்
கலைஞர்தமைக் காண்பதிலே கணக்கில்லாச் சந்தோசம்
அவர் வந்து காணுமுன்னே அருகடைந்து கருத்தறிவாய்
எதிரிகளின் பாசறைதான் என்றாலும் தமிழ்க் கலைகள்
புதுமையுடன் பூத்திட்டால் போயமர்ந்து பார்த்திடுவாய்
பாடி மகிழ்ந்திடுவாய் பரவசத்திற் கண் பனிப்பாய்
கூடிக் குலவியொரு குடும்பமெனக் குதூகலிப்பாய்

எழுத்துலகிற் பேச்சுலகில் எத்தனையோ நண்பருண்டு
பத்திரிகை யுலகினிலும் பரிச்சயங்கள் உனக்கு உண்டு
ஓவியன் நீயென்ற உண்மை அறியுமுன்னே


படிப்பகம்

www.padippakam.com


பாவியர்கள் உன்னுடலைப் பாழ்தீக்குட் புதைத்துவிட்டார்
நாட்டு வளமறிந்தோர் நமது களமறிந்தோர்
கூட்டுச் செயல்காணக் கூட்டங்கள் கூட்டிநின்றாய்
சமுதாயத் தொண்டர் தலைமைச் சந்தித்துப் பகிர்ந்திருந்தாய்
சமுதாயப் பணிகளுக்கும் சமபங்கைச் செய்திருந்தாய்

தமிழர் புனர்வாழ்வுச் சக்திகளை மெச்சிடுவாய்
தமிழ்ச்சங்கமென்றாலும் அதிலும் பங்கெடுப்பாய்
சுகதுக்கமறிந்துநீ சுற்றமென நின்றிருப்பாய்
சகதமிழரெல்லோரும் உறவென்றுகொண்டிருப்பாய்

கற்றவரும் மெய்சிலிர்க்கக் கேட்டிருந்து கல்லாவார்
கற்றவிடம் நீயெதென்று புரியாது பூரிப்பார்
உலக அரசியலை உற்றுஅவ தானித்து
வளரத் தமிழீழம் வாய்ப்புக்கள் தேடிடுவாய்

உலகத் தமிழரெல்லாம் உயர் வடைந்து மேன்மையுறப்
பலதும் அறிய நிற்கும் மாணவனாய்ப் பறந்திடுவாய்
பிற மொழியின் பிறகலையின் தரமறிந்து போற்றி நிற்பாய்
நிற வெறிகள் கடந்ததொரு நீதியதை நினைத்திருப்பாய்

சுற்றி யிருப்போரின் கெட்டித் தனமறிந்து
புத்தி பல கேட்டுப் புது வழிகள் புரிந்திடுவாய்
இத்தனைக்கும் மேலாக உலகத் தமிழர்களின்
ஒற்றுமையை நோக்கி உறுதி பல எடுத்திடுவாய்



படிப்பகம்

www.padippakam.com



வேற்று இனங்களது விடுதலைக்குக் குரல் கொடுத்துப்
போற்றும் பண்புடைய புதிய தலைமகன் நீ
பாழ் பட்டுப் போனவர் நாம் பறிகொடுத்து நிற்கின்றோம்
ஊழ் வந்து கூடி உன்னை எடுத்ததுவோ

வாழ்வுண்டு என்று எமை வழிகாட்டி நின்ற உனை
வேள்வித்தீ கொள்ளுமென விதித்தானோ பாழிறைவன்
தாழ்வுற்று வாழ்ந்த குடி தலைநிமிர்த்த வந்தவரின்
தாகத்தை அறியாது தலையிலிடி தந்தானோ
கிட்டுவுட னேவளர்ந்து கிட்டுவுடன்படை சேர்ந்து
கிட்டுவுடன் சிறைக்குள்ளும் சென்றுவந்தசெங்களத்தான்
குட்டி சீறியென்னும் கதிரொளியும் பலியானான்
எட்டுப் பேர் இன்னும் இவரும் இளைத்தோரா

வேலன் நாயகன் ஜீவா குணசீலன்
தூயவன் நல்லவன் றோசான் அமுதன் என்ற
முத்துக்கள் கடலலையில் மெழுகுதிரியானாரே

முப்பத்து ஆறு மணித்துளிகள் நடுக்கடலில் நின்று
சுற்றி வளைத்தாரே சிறுமைகொண்ட இந்தியர்கள்
இத்தரணியறியாமல் எல்லை கடந்து சென்று
எத்தர்கள் உம்மை ஏமாற்றத் துணிந்தாரோ?

‘ஈழத்தில் கிட்டு என்ற தலைப்பையெல்லோ
பார்த்திருந்தோம்
எங்கள் தலைமகனை இறுகி அணைத்தபடி



படிப்பகம்

www.padippakam.com


நின்று சிரிக்கின்ற புகைப்படத்தைப் பார்த்திருந்தோம்!

யாழ்ப்பாணம் மட்டுநகர் திருமலையில் மன்னாரில்
வன்னியிலே ஊர்காவற் றுறையினிலே உன்முழக்கம்
கேட்கின்ற நாளையன்றோ காத்திருந்தோம் ராசாவே

நெஞ்சில் அடித்து நிலத்திற் புரண்டழவும்
அஞ்சிக் கிடக்கும் அந்நிய மண்வாழ்வினையே
தஞ்சமென நினைக்கும் தாழ்வுற்ற எமக்கெல்லாம்
என்று தான் நிம்மதியோ ஆற இடமறியோம்

எம்நெஞ்சில் என்றென்றும் ஒளிகொடுத்து நிற்கும் ஐயா
ஓய்ந்து விட மாட்டோம் நாம் உன்பாதை வழி நடப்போம்
வேங்கையரின் போர்க்குரலைவிண்வரையும் கேட்க
வைப்போம்
பாங்கான தமிழீழப்பாடலிலே தீக்குளிப்போம்
சிங்களரை எதிர்த்தெல்லோ சீறிப்புலி வடிவெடுத்தீர்
பொங்கும் இனமானப் பொறிகளென உருவெடுத்தீர்
சங்கெடுத்து வீரச் சமர்புரியப் புறப்பட்டீர்
உங்கள் உயிரோடு உறவுகளை அர்ப்பணித்தீர்

அம்மாவின் அன்பு அணைப்பைப் பிரிந்து சென்றீர்
அக்காவும் அண்ணாவும் தம்பியொடு தங்கச்சி
தடுத்து மறித்தாலும் தமிழீழ விடுதலைதான்
தலையாய கடமையென்று தாவிவந்தீர் போராட



படிப்பகம்

www.padippakam.com



பட்டு மெத்தைப் படுக்கை வீட்டீர் பாற்சோறு தானிழந்தீர்
கொட்டு மழை குளிர் வெய்யில் அத்தனையும் தாங்கி
நின்றீர்
பட்டப் படிப்பிழந்தீர் பதவி பணம் தனை மறந்நீர்
எட்டும் திசை யெல்லாம் எமக்காக நீர் பறந்தீர்

மணநாளை நினைத்தீரோ மண ஓலை பார்த்தீரோ
பிணமாலை கூடஇன்றிப் பிரிந்து செலத்துணிந்தீரோ
தலைவாழையிலை போட்டுத் தங்கச்சி கல்யாணம்
பலகாரம் உணவெல்லாம் கனவோடு கண்டீரோ

போராளி நெஞ்சம் பூவென்பார் பொருள் கண்டோர்
தாராள உள்ளம் தாங்கிய நல் எண்ணங்கள்
போராட வெழுந்தீர்கள் புதுமலர்கள் சிரிப்பதற்காய்
யாராலும் முடியாத யாகத்தின் நெய்யானீர்

எமது பசிக்காய் எமக்காகத் தவம்கிடந்து
எமது நித்திரைக்காய் எம்வீட்டு வாசல்நின்று
எமது பயணத்தில் ஏவல்கள் செய்து நின்று
பகைவன் வருகைதனைப் பார்த்தெதிர்க்கும் பேருள்ளம்
வதியும் ஆத்மாக்கள் வந்தீர்கள் எமக்காக

தியாகத்தின் உச்சியிலே தீரத்தின் விளிம்பினிலே
விவேகத்தின் வரப்பினிலே விஞ்ஞானப்பரப்பினிலே
புதிதுபுதிதாகப் படைத்திருந்தீர் போர்க்கருவி
பகைவன் தடுமாறிப்பயந்தோடும் நிலைகண்டீர்



படிப்பகம்

www.padippakam.com



பக்கத்திருந்தெம்மைப் படுகுழியிற் தள்ளவென்று
துட்டர் அரசொன்று துடியாட்டம் போட்டதையோ
யுத்தம் புரிந்தன்று ஆற்றாமற் துரோகத்தால்
வெற்றி பெற நினைத்தோ விரைந்துவந்தாய் இந்தியமே

சத்தியத்தின் தந்தை காந்தி பிறந்த மண்ணில்
சதிகாரர் ஆட்சி புழுத்து நெழிந்ததையா
ஊழற்கொடுமை லஞ்சத்திற் பேயாட்டம்
அத்தனையும் கூடிஅரசாட்சி புரிந்ததையா

தேசியத்தைக் காத்துத் தம்மக்கள் விடுதலைக்குப்
போராடும் மறவர்களைப் பசியாறத் துடிக்கின்ற
நாச அரசியலின் நாடாமோ இந்தியமண்

எங்கள் விடுதலையின் ஒப்பற்ற தியாகிகளை
உண்டு பசியாறி ஏப்பமிட்டாய் இந்தியமே
ஒன்றா இரண்டா பத்தா ஒரு நூறா
கொன்று குவித்துக் குதறி எறிந்தாய் நீ

சிங்களத்தார் செய்தகொடுமையிலும் பன் மடங்கு
இந்தியர்கள் அன்றோ எமக்கிழைத்துச் சென்றார்கள்
இந்து சமுத்திரத்தின் எல்லைகளைத் தமதாக்கிச்
சொந்தங் கொண்டாடத் திட்டங்கள் தான் தீட்டி
வந்து புகுந்தார்கள் வழிப்பறிகள் கொலை கொள்ளை
என்று பல புரிந்து எம்மினத்தை வதைத்தார்கள்



படிப்பகம்

www.padippakam.com



குமரப்பா, புலேந்திரன் அப்துல்லா, ரகு நளன்
ஆனந்தக்குமார், மீரேஸ், அன்பழகன் றெயினோல்ட்,
பழனி கரனோடு தவக்குமார் என்ற
பன்னிரண்டு பூக்கள் தமைப்
படகினிலே பறிகொடுத்தோம்
உண்ணா விரதத்தை உலகுக்கு வெளிப்படுத்தி
உரிமைப் போராட்ட வழிகண்ட உத்தமராம்
அண்ணல் காந்தி அவதரித்த இந்தியமண்
எம்மைப் புரியாது எம் பகையாய் மாறியதோ?

எங்கள் தீலீபன் உயிர் கொடுத்து ஒளியானான்
ஏனிந்த இந்தியம் இறுமாப்பிற் கிடந்தது?

ஜொனி என்ற வீரத் தியாகியையும் பறிகொடுத்தோம்
இனியுமக்குப் பலி கொடுக்க எம்மக்கள் தயாரில்லை

இயக்கத்தின் வேர்களென இருந்த இவரையெல்லாம்
அரக்கத் தனங்கொண்ட இந்தியமே பறித்தெடுத்தாய்

## தேற்றம்

எத்தனைதான் நடந்தாலும் எம்தாகம் தணியாது
எங்கள் தமிழீழப் போராட்டம் தளராது
சத்தியமோ சாகாது தீயினிலும் வேகாது
நித்தியமாய் நிலைத்திருக்கும் நீதி வழி அது நடக்கும்



படிப்பகம்

www.padippakam.com



## சபதம்

தறிக்கத் தறிக்கத் தளிர்த் தெழுவோம் இது உறுதி
விழுத்த விழுத்த விரைந்தெழுவோம்! இது உறுதி
எரிக்க எரிக்க உயிர் பெறுவோம்! இது உறுதி
அழுத்த அழுத்த அகன்றெழுவோம்! இது உறுதி

நெருக்க நெருக்க நீண்டு வளர்ந்திடுவோம்
உருக்க உருக்க உலையிட்ட பொன்னாவோம்
மறுக்க மறுக்க மடையுடைக்கும் ஆறாவோம்
மறைக்க மறைக்க ஒளி கொடுக்கும் கதிராவோம்
ஒறுக்க ஒறுக்க நிலம் பிளக்கும் கடலாவோம்
நறுக்க நறுக்க நதி சுரக்கும் மலையாவோம்
உடல்கள் அழிந்தாலும் மாவீரர் தந்து சென்ற
திடமான தமிழீழக் கொள்கைகளோ அழியாது
சொல்லால் உணர்வால் செயலால் உறுதி செய்வோம்
இந்தியமே! சிங்களமே! எமையழிக்க எண்ணாதீர்!

மூத்து வளர்ந்த குடி முச்சங்கம் கண்ட மொழி
ஆர்த்து எழுந்த கலை அகிலத்தின் ஆதி நிலை
செந்தமிழின் மீதாணை எந்தமிழர் மீதாணை
இந்த நிலம் உள்ளவரை தமிழீழம் உறுதியடா
எந்தலைவன் நெஞ்சத்தில் ஒரு தர்மம் வாழ்கிறது
எந்தாகம் தமிழீழத் தாயகம்! இது உறுதி!

(ஒரு நண்பனாகச், சகோதரனாக, தாயகத்தின் முழுமையான பிரதிநிதியாக, தலைவரின் தம்பியாக, புலம்பெயர்வாழ் தமிழ் மக்களோடு உறவாடிய தளபதி கிட்டு, வங்கக் கடலிற் தீப்பிழம்பாகிய செய்தி கேட்டுத் துடித்து எழுதிய இக்கவி வரிகள் இலண்டனில் நிகழ்ந்த மாபெரும் துன்பஊர்வலத்திற் பாடப்பெற்றுப் பின்னர் பல ஏடுகளிற் பதிவாகியுள்ளன)



படிப்பகம்

www.padippakam.com



## நாடு கடந்த நட்பின் பிரிவு!

ஊரூன்றி வளர்ந்த உள்ளத்துணர்வுகளை
வேரூன்ற விதைத்து வளரும் கலைஞர்களே!
போரூன்றிக் கிடக்கும் பொன்னான நிலம் பிரிந்து
பாரூன்றிப் படரும் பயணிகளே! பந்தங்களே!

தானீன்ற செல்வங்கள் தரணியெல்லாம் அகதிகளாய்ப்
போயூன்றி வாழப் பொல்லாத பகைவனிட்ட
தீயேந்தித் தடையேந்தித் தீரமுடன் போராடும்
தாயாம் நம் தமிழீழப் பேரணங்கின் பிள்ளைகள் நாம்!

ஆனா மறந்து அடுத்தவரின் மொழியதனைத்
தூணாய்ப் பிடித்துத் துறைசார்ந்த கல்விகளின்
மாணாக்கராகி மாற்றத்தில் நாமிணைந்தோம்
ஆனாலும் எந்நாடு போனாலும் எம் தசைநார்
தானாடும் எம்மவரின் தாகம் பசி தீர்க்கும்!
தேனாய் உயிர் கலந்த தீந்தமிழும் நங்கலையும்
வானாய் நிலமாய் நம் முள்ளே வாழும் எனப்
பாவாலும் கூத்தாலும் பாருக்கு முரசறையும்
யாவர்க்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கங்கள்!

'இறைதரிசனம்' என்றதோர் படைப்பினை
எழுதி அதனை இயக்கிடும் நோக்குடன்
அறையினுள் நுழைந்தேன் அன்றோர் மாலை!



படிப்பகம்

www.padippakam.com



அன்புத் தம்பிகள் ஜெயக்குமார் பாலா
உறையும் இல்லத்தின் உபசரிப்புக் கூடமது!

அறிமுகம் செய்தான் அலைஓசை பாலா!
இறுகிய முகத்தில் இளைந்தோடும் சிரிப்புடன்
இருக்கையில் இருந்து எழுந்து நின்று
இருகை கூப்பி வரவேற்ற தொரு முகம்!

மேக நாதனின் பாசத் தொடக்கமது!
தாகமும் திறனும் கொண்டவோர் தம்பியின்
தேகம் கடந்து அவனுயிர் பார்க்க
நேரம் அதிகம் எடுத்திடவில்லை

ஆரம்பமானது எமக்குள் உறவு!
அடக்கமான கலைஞன் ஒருவனை
அணைத்துக் கொண்ட பெருமையும் கிடைத்தது!

பாத்திரத்தின் பாங்கினையுணர்ந்து
வார்த்தைகள் கோர்த்தவன் குறிப்பினைப் புரிந்து
நேர்த்தியான நடிப்பினால் ரசிகரை
ஈர்த்திடுங்கலை இதயத்தினுள்ளே
ஆர்த்திடும் அன்பினை ஆழமாய் உணர்ந்தேன்!

படைப்புக்கள் சிலவே ஆகியபோதும்
பழக்கத்தில் நம்மிடம் நட்பு வளர்ந்தது!
உடைபட்டுப் போகாத உள்ளார்ந்த உறவுடன்
உண்மை நட்பை உறுதியாய்ப் பகிர்ந்தோம்!



படிப்பகம்

www.padippakam.com



கலை விழாக்களில் கணீரென ஒலிக்கும்
பழகிய குரலது! பண்பட்ட பார்வை!
நிலையாகத் தேசியம் நிழலாடும் நெஞ்சு!
கலையார்வம்! கலைஞர் மேல்
வளையாத மதிப்பு! வரவேற்பிற் குதிப்பு!

சளையாமல் எதையும் சாதிக்க முயலும்
அசையாத துணிவு! அதற்குள்ளோர் பணிவு!
இளையோடிச் செல்லும் இதமான நகைச்சுவை!
தலைபோன போதும் தனக்கிட்ட பணியினை
நிறைவேற்றுவேனெனும் நீங்காத பொறுப்பு!

நாடகத் துறையிலே நிறைவான நாட்டம்!
வேடந் தாங்கினால் வெளுத்து வாங்கிடும்
நாடகன் இவன்! நடிப்பிற்குள் நேர்மை!
எடுத்த பாத்திரம் எதுவாயிருப்பினும்
எண்ணத்தில் அதனை யேற்றி யது வாய்க்
கொடுக்கும் திறமை கொண்டவன் தம்பி!

இயலை இசையை நாட்டிய நாடகக்
கலையை ரசித்து விமர்சனம் செய்யும்
கண்ணியம் நிறைந்த இலக்கியச் செழுமை!
விரிந்த உள்ளம்; விடுதலை போற்றத்
தெரிந்த உள்ளம்; தெளிந்த உள்ளம்!



படிப்பகம்

www.padippakam.com



இதுவரைகூறிய எல்லா வற்றின்
ஒட்டு மொத்தமே என்னருந் தம்பி
இளவல் மேக நாதன் என்று
இறும்பூதெய்தி யீண்டு வாழ்த்துவேன்!
இருப்பினும் இன்றென்
இதயச் சுவர்களில்
எழுதப்படுவன சோகவரிகளே!

பிரிவின் இசையே
பெரிதாய் என்னுள்
உரிமையோடு உட்கார்ந்து கொண்டது!

கடந்துசெல் மாதங்கள்
என் கலை வாழ்விற்
கைகாட்டி யனுப்பும்
கறுப்பு மாதங்கள்!

பாசையூர் தந்த பாசத்தம்பிகள்
பாடியும் ஆடியும் பேசியும் நடித்தும்
ஆசையாய் என்னை நாடக உலகின்
வாசலில் நின்று வரவேற்று வளர்த்தனர்

பாசையூர்த் தம்பியர் வரிசையில் ஒருவன்
'கோசக் குரலோன்' குயின்ரஸ் என்பான்!
''போய் வரு கின்றேன்'' எனக் கரங்காட்டிப்
போய்க் குடிபுகுந்தான் பெருங்கனடாவில்!



படிப்பகம்

www.padippakam.com



நேசமாய் எனது நினைவினில் நின்ற
ஆசைத் தங்கை சுலோவையும் சிறீயையும்
சேரன் தமிழினி யோடு அவுஸ்தி
ரேலியா அனுப்பியே விழிமழைபொழிந்தேன்!

சூசகமறியாச் சுடரொளி நட்பு
வீசிய நாட்கள் நெஞ்சிலினிப்பவை!
மாசமோர் படைப்பாய் மாநகர் லண்டனில்
மலர்ந்தன நமது தாயக உணர்வுடன்!

தாயகம் பற்றி நினைப்பதே தப்பென
வாய்தனைப் பொத்திடும் வரலாறு ஒன்று
பேயென லண்டனைப் பிடித்தது முண்டு!
சீ! இவர் சேர்க்கை நமக்கேன் என்று
சிந்தித்த தமிழரும் உள்ளனர் இங்கு!
கலைஞர் பலரைக் காண்பது சுலபம்!
கலைக்குள் அன்பினைப் பகிர்வது கடினம்!
நிலையில் வாழ்வில் நீரலைபோல
நெருங்கி வந்து செல்பவர் பலரே!
இன்றும் எனக்குள் இன்னொரு சோகம்
வந்து புகுந்து வதைப்பது கண்டேன்!
மேவும் பாசம் ததும்பும் உறவாய்
மிகவும் நெருங்கிப் பழகிய தம்பி
மேக நாதனும் வேறோர் கண்டம்



படிப்பகம்

www.padippakam.com



போகப் போகிறான் பாராட்டி நிற்கிறேன்!
ஊரிலே புழுதிச் சேற்றிலே கிடந்ததை
வாரியெடுத்து நெஞ்சிலே வார்த்தும்
மாரியாய் பொழிந்த மண்ணின் கலைகளில்
ஊறி நனைந்தும் அதனையுள் வாங்கியும்
ஏறி நடந்தேன் என் சிறு வயதினில்!
பட்டறை காணாமல் பயிற்சிகள் செய்யாமல்
கொட்டகை முன்னே குந்தியிருந்து
வெட்டா விழியுடன் விழாப்பார்த்ததன்றித்
தொட்டதேயில்லை நாடகத் துறையை!
எனக்குப் பலமிவ் வினிய கூட்டமே
எனது அறிவிவர் தந்த நாட்டமே!
எனக்குக் களமெம் தாயக ஊட்டமே!
எமது மக்களின் விடுதலையேற்றமே!

உயர்ந்த நோக்குடன் உள்ளார்ந்த இலக்குடன்
அயர்வு நீங்கி அணிபோட்டு நின்றதோர்
கலைக்குடும்பத்திற் கரங்கோர்த்துக் கொண்டோம்!
விலைமதிப்பில்லா விடுதலை கண்டோம்!
அடுத்த கலைஞரை அணைத்துக்கையினைக்
கொடுத்து வளர்த்திடும் உள்ளங்கள் நம்மிடை
கிடைப்பதரிது! கிஞ்சித்தும் பண்பில்லாக்
கடைக் குலத்தவர் கலைஞரே யல்லராம்!
ஈன்ற தாய் முகம் இன்னலிற் தோய்கையில்
இனிய தாயகம் எரிதழல் வேகையில்
நீண்ட போரினில் நம்மவர் துடிக்கையில்



படிப்பகம்

www.padippakam.com



அணிகொள் காவியம் யாப்பது கொடுமையாம்!
வாழும் நாட்களும் வற்றியே போய்விடும்
வனப்பும் வசதியும் வயதோடு கழிந்திடும்
நாளை காலனோர் ஓலைபடித்ததும்
நமது வேளையும் வேலையும் முடிந்திடும்
தோளிற் தூக்கியே நால்வர் நடந்திடத்
தேகம் என்கின்ற தேவை யெரிந்திடும்!
ஆதலாலெ மதன்னை தமிழ் மகள்
காதலோடு நம் கலைப் பணியாற்றுவோம்
மேதினிக்கெம தாற்றல்கள் காட்டுவோம்
மேற்குளார் தமை வியப்பினில் ஆழ்த்துவோம்
அமிழ்தினில் இனிய
தமிழையும் கலையையும்
அகிலமும் களிக்கப்
படைத்திடும் பணியில்
தளர்வின்றி யுழைக்கத்
தந்தேன் என் வாழ்த்துக்கள்!
இளவலே நீ
என்றென்றும் வாழ்கவே!

(கலையுலக உறவில் எனது உள்ளத்தை நிரப்பிய அன்புத் தம்பி கணேசன் மேகநாதன் அவுஸ்திரேலியாவுக்கு சென்றதையொட்டிய வழியனுப்பு நிகழ்விற் பாடிய கவிதை!)



படிப்பகம்

www.padippakam.com



# உணர்ச்சிக் கவிஞருக்கோர் உணர்ச்சிப் பாமாலை

தேசக் குரலாய்த் திக்கெட்டும் வாழ்தமிழர்
வாசற் கதவுகளை வந்துதட்டி விழிக்க வைத்து
வீசத் தமிழ்வாள் தான்கொடுத்துக் கூச்சமின்றி
மூசப் பலங்கொடுத்து முகம் நிமிர்த்தி விழி பார்த்து
''நீகுப் புறப்படுத்தால் நீதி எது? மண்நோக்கி
வா! சப்பரம் எழுப்பு! வந்து தேர்வடத்தைப்பிடி!
நாசப் படுத்தும் நம் பகையை நின்றோட்டும்
வீரப் பரம்பரைக்கு வித்தாகு! பிறநிலத்திற்
தூரக் கிடந்து துதிபாடும் தொழிலைவிடு!
காரக் குழம்பும் கத்தரியும் கிடைத்து விட்டால்
பாரம் குறையுமெனப் பகற்கனவு காணாதே
சோரம் போய் எங்கள் சுதந்திரத்தை விற்காதே!''

பா ரத்தினங்கள் படைக்கும் பெருங்கவிஞ!
வேழக் கவியே! விடுதலையின் வாய்மொழியே!
ஈழப் புலவ! எங்களன்புக் காசியண்ணா!
ஆழக் கிடந்த அன்போடு உனைக் காண
ஓடோடி வந்துள்ளே னுன்தம்பி சிவநாதன்!
அன்றெங்கள் தமிழ்த்தாய் மன்றத்தின் அரங்குகளில்
நின்று தமிழ் முழக்கம் நெஞ்சுயர்த்திச் செய்த உங்கள்
மன்றில் மலர்ந்தவருள் நானும் ஒருவனென்ற
இன்ப உணர்வோடு இன்று வந்து நிற்கின்றேன்



படிப்பகம்

www.padippakam.com



என்தாய் நிலம்விட்டு எங்கே நான்சென்றாலும்
எந்தன் உளமெல்லாம் ஏற்றிநின்ற என்தமிழின்
பண்பால் இதுவாரைநான் பழையவனாய் வாழ்கின்றேன்
அன்றேபோல் இன்றும் அதேகவிதை செய்கின்றேன்
முப்பத்து மூன்று ஆண்டுகள் முன்னுங்களுடன்
உட்பற்று வைத்து உறவுகொண்ட தம்பியிவன்
அப்பற்று மாறா அகத்தோடு வந்துள்ளான்!
ஒப்பற்ற தமிழ்த் தாயின் ஒரு மகனாய் வந்துள்ளான்!

காலத்தழியாக் கவிபாடும் கவியுந்தன்
காலைத் தொழுது கவிமாலை சூட்டுகிறான்
நாலெட்டு வரியால் நன்கு நீ வாழியென
வாழக் கவியொன்று வழங்குங்கள் அண்ணா!

ஈழக் குழந்தை பிறக்கின்ற போதுங்கள்
ஓசைத் தலைமையிலே ஒன்றாகக் கவியரங்கு
கூடிக் குரல் கொடுக்க நானும் உளேன் என்று
பாடி யமைகின்றேன்! பல்லாண்டு வாழியவே!

(தமிழகப் பயணத்தின் போது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் சந்திப்பில், வாசித்தளித்த வரிகள் சிலவற்றை இணைத்து எழுதிய கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சம் கொதிக்குதம்மா!

தமிழெடுத்துப்பாடுகின்றேன் தமிழ் தந்த உன் புகழை
தமிழாலென் னம்மாவென் றழைக் கவைத்த பெருங்கடலை
தமிழேநான் போற்றுகின்ற தலைமகளே தாரணியே
கமழுகின்ற நன் மலரே கற்பனையே கேளம்மா

அன்னையென்ற பெயர் கொடுத்தார்
எனைப் பெற்ற உன் தனக்கு
என்னசெய்வேன் அது வெனக்கு
அழகாகத் தோன்றவில்லை
வண்ணத் தமிழெடுத்துத்
தெய்வமென வாழ்த்தி நின்றேன்
உன்னைப் பிரித் திங்கே
உவந்தானோ காலனையோ

சொல்லிற் கருத்த மைத்துச்
சொல்லடா என்றெனக்குச்
சொல்லாமற் சொல்லி நல்ல
சொல் வளத்தைக் கூட்டுவித்துச்
சொல்லாகிச் சொல்லில் விளை
கள்ளாகி நின்ற அம்மா
கொல்லாமற் கொல்லுதற்குக்
கூடுவிட்டுச் சென்றாயோ



படிப்பகம்

www.padippakam.com



வல்ல இறைவனவன்
நம்மை வருத்துவது
கொல்ல வல்லக் கொல்ல வல்லப்
பொல்லா வினை போக்க
எல்லாம் உரைத் தாய் நீ
எத்தனையோ சொன்னாய் நீ
வல்லவளே உன் பிரிவும்
அதற்காக வந்ததுவோ

உடம்பு கொதிக்கு தென்றால்
உள்ளங் கொதிக்கு தென்பாய்
படுக்க எனை வைத்துப்
பக்கத் திருந்திடுவாய்
பசிக்குதென நான் சொல்வேன்
பசிகிடக்கும் உனை மறந்து
நிசியில் விழித் திருந்தென்
நித்திரைக்கு வித்திடுவாய்

பாலாய்ப் பழரசமாய்
இனிக்கின்ற உன்னுடலிற்
கால் போட்டுப் படுத்திடுவேன்
கைபோட்டே யணைத்திடுவாய்
கால்கள் துடிக்குதம்மா
கண்மணிகள் நொருங்குதம்மா
மூளை கொதிக்குதம்மா
முழுநிலவே உனை நினைத்தால்



படிப்பகம்

www.padippakam.com



ஐயிரண்டு மாதங்கள்
அடிவயிற்றிற் சுமந்திருந்தாய்
பொய்யுலகில் வந்த பின்னும்
பெருஞ் சுமைகள் பொறுத்திருந்தாய்
செய்யாத குற்றங்கள்
சுமந்தாய் எனக்காக
பொய்யா மழையே நீ
போதாது என்றெண்ணி

அன்புமகன் பேரில்
அவையத்தார் பலர் கூடி
நன்றி மறந்து விட்டான்
என்ற பெயர் சூடாமல்
குன்றே யுன் சுடு சாம்பல்
சுமக்க எனைப் பணித்தாய்
என்று தான் உனக்காக
நீ வாழ்ந்தாய் கூறம்மா

தந்தை திரு முகத்தைத்
துளி நேரம் பார்த்ததில்லை
சிந்தை யுணர்வினிலே
செந்தேனே யுனையன்றி
எந்த முகமம்மா
எழுந்து நடை பழகும்
பந்தம் கொடுத்தவளே
பாதியிலே சென்று விட்டாய்



படிப்பகம்

www.padippakam.com



கந்தை யென உடுத்தாலும்
கசக்கிக் கொடுத்திடுவாய்
முந்து கலை கல்வி
முதிர்ச்சிக்கு வித்திடுவாய்
சிந்தை சிறப்பாக்கிச்
சீர் பெற்று நான் வாழ
உந்தன் உழைப்பெல்லாம்
அளித்து மகிழ்ந்திடுவாய்

என்னம்மா சொல்வேன்
உந்தன் அறிவுரைகள்
கன்னலாய்த் தேனாய்க்
காதில் இனிக்குதம்மா
வண்ணமே வான் மகளே
வாழ்வே யென் வடிவழகே
உன்னை மறப்பதற்கு
உன்னுரைகள் விட்டிடுமா?

அறிவுலக வரலாற்றில்
அறிஞர்கள் பலர் வந்தார்
நெறிகள் பல சொன்னார்
நீதி யெடுத் துரைத்தார்
அறிவே நீ யவை யெல்லாம்
ஏன் என்று கேட்பதுபோல்
அறிவு மொழி சொல்லி
அறிவுத்தீ யானாயே



படிப்பகம்

www.padippakam.com



நீ கற்ற கலைக் கூடம்
எது வென்று சொல்லாமல்
வாய்கட்டி நாம் கேட்கும்
வகை சொல்லி வைத்திடுவாய்
நோய் தீர்க்கும் வழியெல்லாம்
துடிப்போடு சொல்லிடுவாய்
தீப்பட்ட புண் போலத்
துளைத்தே யெடுக்குதம்மா!

அன்பு வழி நின்று
ஆதரவு பெறு வென்பாய்
அன்பு மகளே நீ
ஆணையிட்டு மகிழ்ந்திடுவாய்
துன்ப மிழைப்பவரைத்
திருத்த முனை யென்பாய்
இன்பத் திருவிளக்கே
இது போலப் பலவம்மா!

கொள்ளை யுனை வந்து
கூடுகின்ற நாட் கூடக்
கொள்ளி யுனக்கு வைக்கக்
கூடவிரு என்றென்னை
வெள்ளை மலரே நீ
விளித்துரைத்த போதினிலும்
கள்ளம் புரியவில்லை
கல்லாகி நின்றிருந்தேன்



படிப்பகம்

www.padippakam.com


தூர விருந்தவனைத்
துணையாக வாவென்று
கூறியனுப்பிவைத்தாய்
கூடப் பிறந்த வரை
நேர விருந்த பெரும்
நாசத்தை யறியாமல்
கோரத்தைப் பார்ப்பதற்கோ
கூவி யழைத்திருந்தாய்

வந்த வெனை வரவேற்று
வாரமொன்று விருந்து தந்தாய்
சிந்தை விரும்புவதைச்
சிறப்பாகச் செய்து தந்தாய்
சுந்தரமே யேதேதோ
புரியாமற் சொல்லி வைத்தாய்
இந்த இடி தருவதற்கோ
இவையெல்லாம் செய்து நின்றாய்.

இறுதியிலே நீ சொன்ன
இணையில்லா மொழிகளெல்லாம்
குருதியிலே பாய்ந்து நின்று
குத்தி யெடுக்குதம்மா!
உறுதியாய்ச் சொல்லுகின்றேன்
உன்னுரையின் மந்திரத்தை
இறுதிவரை கடைப் பிடித்தே
இவ்வுலகை நீத்திடுவேன்



படிப்பகம்

www.padippakam.com



உன்னருகில் நானிருந்தால்
உயிர் துடித்துவிடுவேனென்
றென்னை "எம்" திருவீட்டில்
இருத்தியுன் னுடன் பிறந்தாள்
தன்னை யடைந்து
தங்கி யிருந் தங்கே
என்னைப் பிரிந்தாயே
என் சொல்லி யாறிடுவேன்.

உறக்கத்தின் உச்சியிலே
நானிருந்த வேளையிலே
உரத்த குரலெடுத்தே
யழுதுவந்து சேதி சொன்னார்
இரத்தம் கொதிக்குதம்மா
இப்போது நினைத்தாலும்
உறக்க மடைந்தாயோ
உன் மகனை விட்டுவிட்டே!

தங்கத்தாற் தேர் செய்து
தங்கமே யுனையிருத்திப்
பொங்கும் மகிழ்வூட்டப்
பார்த்தேயிருந்த வெனைத்
தங்கமே! தங்கத் தேர்
தாய்க் கெதற்கு எனக் கூறி
எங்கோ மறைந்தாயே
என்ன பெரும் அவசரமோ!



படிப்பகம்

www.padippakam.com


நான் படைக்கும் கலையெல்லாம்
நல்லவளே யுனக்காக
வான் பறக்கும் உன்னுயிரை
வாழ்த்துகின்ற பணிக்காக
ஊன் கொடுத்தென் னுயிர் கொடுத்த
உன் நினைவின் சூழலிலே
தேன் பழிக்கும் கலை படைப்பேன்
தண்ணொளியே வாழ்த்திடுவாய்!

தென்றலிலே காண்கின்றேன்
தெளிவினிலே காண்கின்றேன்
வண்டு மகிழ்ந்தாடும்
மலரினிலே காண்கின்றேன்
நன்றியிலே காண்கின்றேன்
நற்றமிழிற் காண்கின்றேன்
குன்றவளே உன் னுருவைக்
கோடி முறை காண்கின்றேன்

பெய்கின்ற மழையினிலே
பொய் கையிலே காண்கின்றேன்
தையலுன் திருமுகத்தைத்
தண் மதியிற் காண்கின்றேன்
பொய்யா வழகினிலே
புகழினிலே காண்கின்றேன்
மெய்யான அன்பினிலே
பொறுமையிலே காண்கின்றேன்


படிப்பகம்

www.padippakam.com



வாழியம்மா வாழியுந்தன்
வளமான நினைவெல்லாம்
வாழ்த்துகின்ற வளந்தந்த
வெண்மதியே வாழியம்மா
பாழு முலகினிலே
பந்தந்தனை மறந்து
வாழியம்மா வாழியந்தப்
பரமன் திருவடியில்

(இறைவனடி 02/07/1970)

(தந்தையும் தாயுமாய் வாழ்ந்து வாழ்வுக்கு ஒளிதந்த பெற்றவள் திடீரென உயிர்நீத்தபோது, புலவர், தனது காலடியைத் தாங்கிய பூமியே தன்னைவிட்டுப் போனதாக உணர்ந்த நிலையில், தாயின் மரணச் சடங்குகளின்போது எழுதி, 'அன்னை மலர்' எனும் பதிவாக 1970இல் வெளியான இந்த வரிகள் எதுவித மாற்றமுமின்றி இங்கு மீள்பதிவு செய்யப்பட்டுள்ளன)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# உலகோசை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## உலகக் கவிஞர்களுக்கு

உலகக் கவிஞர் யாவரும் ஒன்றாய்
ஓசை யெழுப்புங்கள்!
உலகை யழிக்கும் பாவியர் முன்னே
நாவை நிமிர்த்துங்கள்!

மொழிகள் ஆயிரம் கொண்டோம்! -இன
முகங்கள் பற்பல கொண்டோம்!
விழியின் பார்வையில் மட்டும் -இறை
யழகின் பேரொளி கொண்டோம்

கவிஞன் காண்பது அன்பு! -அது
ஞாலம் தாங்கிடும் பண்பு!
கவிதை யென்பது இன்பம்! - இது
காலத் தாயவள் சொந்தம்!

உயிராற் காண்பவன் கவிஞன்!
உயிரைக் காண்பவன் கவிஞன்!
உயிரால் வாழ்பவன் கவிஞன்! -அவன்
உயிரே ஒப்பிலாக் கவிதை!



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## கன்னியாகுமரியில்

மூன்று கடல் முழங்கு மலை
முத்தமிடும் அற்பு தத்தை
மீன்படகு துறைவந்து
வட்டமிடும் பேரழகை
வான்புகழும் வள்ளுவத்தை
வழங்கியவன் பெருஞ்சிலையை
ஆன்ற பெரு ஞானத்தால்
அறிவு தந்த ஆனந்தர்
காந்தியவன் மண்டபத்தைக்
கண்டு நான் காதலுற்றேன்!

## வள்ளுவன் சிலையடியில்
## கலைஞருக்கு வாழ்த்து!

வள்ளுவன் புகழை
வையத்திருத்திடும்
உள்ளம் கொண்ட
உயர்வுடைக் கலைஞரை
வெள்ளத்தன்பின்
வீச்சுடன் வாழ்த்தினேன்!

தெள்ளுதமிழின்
தெளிந்த பாட்டினால்
உள்ளவையாவையும்



படிப்பகம்

www.padippakam.com


உலகுக் கீந்தவன்
எல்லா இனத்திற்கும்
ஒழுக்கம் யாத்த எம்
வள்ளல் ஞானி
வரலாற்றுத் தவமுனி
வள்ளுவன் பாதத்தை
வணங்கியே வாழ்வனே!

## கவியாறு

உச்சிமலை மீதிருந்து ஊற்றாய்க்கூடி
உயரங்கள் பலவீழ்ந்து வீச்சைக்கூட்டிப்
பச்சிலைகள் பாறைகளைப் பரவிச்சாடிப்
பலங்கொண்டு பேரிரைச்சல் கொண்டு பாயும்
அச்சமில்லா ஆறேயுன்னழகு கண்டு
ஆனந்தப் பட்டமர்ந்து விடுவேன் போடி!
சொற்கவிதை சுமந்துவரும் உணர்ச்சிபோலச்
சுகங்கொடுக்கும் நீயுமொரு கவிதைதானோ?


படிப்பகம்

www.padippakam.com



## காவேரிப் பாலத்தைக் கடந்த போது

காவேரித் தாயின்
கருணைக் கரங்கள்
தழுவாதோ செந்தமிழ் மண்ணை!

நீரூறி நிலத்தில்
நெடு போகம் விளைந்து
நிரம்பாதோ தமிழரின் பண்ணை!

யார் வீட்டுச் சொத்திந்த ஆறு?
யார் போட்ட வித்திந்த ஆறு?
பார் காக்கும் தேவியே கூறு! - இதைப்
பாயாமற் தடுப்பவன் யாரு?

ஏராளம் வளங்களினோடு - இறை
ஈன்றானே இந்திய நாடு!
ஏராளும் உழவர்கள் வாழின் -இங்கு
இதற்கில்லை ஓரிணையீடு!



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## எண்ணெய்ப் போர்

விண்ணிற்போர் செய்தார்கள் விஞ்ஞானத்தின்
வீரியத்தைக் காட்டி நின்றார் இன்று இந்த
மண்ணிற்போர் நிகழ்த்துதற்கு முடிவு செய்தார்
மக்கள் கொலை செய்திடவும் துணிந்து விட்டார்!
எண்ணெய்ப் போர் இதுவென்ற எண்ணம் என்னுள்
ஏன்தானோ எழுந்து எனை வருத்தக் கண்டேன்!
எண்ணம் போல் இவ்வுலகை ஆட்டுகின்ற
ஏகாந்த அரசுகளை என்ன சொல்வேன்?

முன்னைப் போர் இரண்டு செய்த அழிவு கண்டும்
மூர்க்கர்கள் திரண்டு நின்ற கொடுமைகண்டும்
அன்னைத் தாய் இவ்வுலகின் அழுகை கண்டும்
அவமாகிப் போன பெரும் இயற்கை கண்டும்
தன்னைத் தாம் பெரியவராய் எண்ணிக் கொண்டு
தாண்டவங்கள் ஆடுகின்ற தறுக்கர் தம்மை
எண்ணத்தால் உயர்த்துகின்ற உண்மைத் தெய்வம்
ஒன்றிங்கு குரலுயர்த்திக் காக்காதாமோ?

பொன்னைத்தான் பெரிதென்றான்! புகழைவேண்டிப்
போர் வெறியிற் பிறர் மண்ணைப் பிடித்து
வென்றான்!
கண்ணைத்தான் பறிகொடுத்துக் கல்வி பெற்றான்!
காலத்தை வெல்லுகின்ற அறிவும் பெற்றான்!



படிப்பகம்

www.padippakam.com


விண்ணிற் தான் கால் பதித்தான்; விதியை வீழ்த்தும்
விஞ்ஞானப் புரட்சி செய்வேனென்றும்
சொன்னான்!
பெண்ணைத்தான் ஆணைத்தான் படைப்பேனென்றான்!
பேரன்பை மட்டுமிவன் புதைப்பதேனோ?

## வேண்டாம் உலகப்போர்

மனிதா உனக்கிது அறமா! - உன்
மமதையில் உலகினை அழிப்பது தகுமா!
இனியவள் இயற்கை யெம்தேவி! - அவள்
இதயத்தைக் குதறிடத் துணிவதும் தகுமா?

அணுவினுள் உயிரினை வைத்தாள்! - இந்த
அண்டங்கள் யாவையும் இயங்கிட வைத்தாள்
மனிதனே உன்னையும் வைத்தாள்! - இந்த
மாநிலத்தாயின் மடியினில் வைத்தாள்!

புனிதமாம் படைப்பதன் பெருமை! - பஞ்ச
பூதங்கள் யாவினும் இயற்கையின் மகிமை
மனிதனே மயங்கிடல் வேண்டாம்! - நீ
மற்றொரு இறையென இயங்கிடல் வேண்டாம்

பனுவல்கள் தந்தனர் சான்றோர்! - இந்தப்
பாருக்கு உதவநற் பாதைகள் ஈந்தார்!



படிப்பகம்

www.padippakam.com


இனியவை கொண்டதிவ்வுலகு! - அந்த
இயற்கையைப் போற்றிடு ஏதிங்கு குறைவு?

மனிதத்தின் பெருமையை உணரு! - அன்பு
மார்க்கமே யெங்களை இணைக்கின்ற உறவு
புனிதர்கள் தோன்றிய பூமி! - அது
புண்பட்டுப் போவதை மாற்றிட உதவு!

கனவெனப் போகட்டும் பகைமை! - எம்
கரங்கோர்த்து வாழ்ந்திட வளரட்டும் தகைமை!
இனியொரு உலகப்போர் வேண்டாம்! - எமை
ஈன்றவள் மடியினிற் தீவிழ வேண்டாம்!



படிப்பகம்

www.padippakam.com



# தமிழகமே!

தமிழகமே! – எங்கள்
தமிழகமே! – எம்
தாயகத்தின் குரலுனக்குக் கேட்கலையா?

தமிழ் யுகமே! – இது
தமிழ் யுகமே! – என
வாய் திறந்து குரல் கொடுக்க வாருமையா!

தமிழ் முகத்தைத்
தீய்ப்பதென்று
முடிவெடுத்தார் அங்கு!

தமிழ் மொழியைத்
தறிப்பதென்று
தீர்வெடுத்தார் அங்கு!

இது நடக்க
விடுவதில்லை
என்றெடுத்தோம் சங்கு!

எம்மினிய
தமிழகமே!
உனக்கும் உண்டு பங்கு!



படிப்பகம்

www.padippakam.com



நீங்கள் வரும்
பாதை பார்த்து
நாங்கள் நின்ற துண்டு!

தேன் தமிழை
நுகர்ந்திட நாம்
ஏங்கி நின்ற துண்டு!

தீங்கு வந்த
போது உமைத்
தேடுதெங்கள் அன்பு!

தூங்குதல் போல்
நடிப்பதேனோ?
துள்ளிவாரும் இங்கு!

(தமிழீழத்தில் நிகழும் தமிழின ஒழிப்பினை எதிர்த்துக் குரல் கொடுக்கவும் ஆதரவணி திரட்டவும் முடியாத நிலையிற் தமிழகம் இருப்பது கண்டு வேதனையோடு விடுத்த வேண்டுகோள்)



படிப்பகம்

www.padippakam.com



# பாரிசு நகரத்திற்
# தேவியின் திருக்கோலம்

வற்றாப் பளை வாழும் அம்மா! - உனை
வணங்கிடத் தலமொன்று அமைத்தோம்!
புற்றார் அரவாடும் நயினைத் - தேவீ!
புன்னகை பார்த்திட அழைத்தோம்

சிற்றூராம் சீரடித் தாயே! - உன்
சீரடி தொழ நாங்கள் நினைத்தோம்!
பற்றோடு உன் பாதம் பணிய - இங்கு
பாரிசில் ஆலயம் அமைத்தோம்!

திருமலை வதிகின்ற துர்க்கா! - உன்
திருவடி வருடிட விழைந்தோம்!
வரும்பகை தடுக்கும் உன்பொற்றாள் -என்றே
வரம் பெற உன் தலம் நுழைந்தோம்!

இப்பாரில் எது நடந்தாலும் - எம்முள்
இருந்தெம்மை வாழ்த்திடும் தாயே!
எப்போது எம் திருமண்ணில் -எம்மை
எதிர்பார்ப்பாய்! என்று சொல்வாயே!!

(பாரிஸ் முத்துமாரி அம்மன் ஆலயத்தினர் வெளியிட்ட 'சங்கரியே பதில் சொல்லு' ஒலிப்பேழையில் உன்னிகிருஷ்ணன் (தமிழகம்) பாரதி (ஜேர்மனி) ஆகியோராற் பாடப்பெற்று பதிவு செய்யப்பட்ட பாடல் இது)



படிப்பகம்

www.padippakam.com



# தாய்

தங்கமணித் தொட்டில் கட்டித்
தாலாட்டுப் பாடுது
தாயெனும் தெய்வமங்கு
சாமரம் வீசுது

சந்தன மேடையும்
அன்னையின் மேனிக்கு ஈடாவதில்லை
தென்றலின் மூச்சும்
தாயவள் பேச்சுக்கு இணையாவதில்லை

ஆயிரங் கலைக் கூடம் தருகின்ற பாடம்
தாயவள் ஆசிக்கு நிகராவதில்லை
கோயிலில் இருக்கின்ற சிலைக்கோலம் யாவும்
அன்னையின் மலர்ப்பாத நிழலாவதில்லை

அனலாகக் கொதிக்கின்ற சுரமானபோதும்
அன்னையின் கரம்பட்டால் நிலை நிற்பதில்லை
துயரோடு படுதோல்லி நாமுற்றபோதும்
அவள் கூறுமுறுதிக்கு இணையீடு இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



# என்னுள் எழும் எண்ணச் சமாதிகள்

எண்ணங்கள் பொழியும் போது
எழுதென்று உள்ளம் தூண்டும்!
எதிர்நின்று வாழ்வின் தேவை
எழுந்தோடி உழைக்க வேண்டும்!
பின்னொன்றாய்த் தொடரும் எண்ணம்
பேனாவை யெடுத்துச் செல்லும்!
பேசாமல் எழுந்து சென்று
பிழையென்று கூறும் இல்லம்!
வண்ணம் சேர் வார்த்தைக் கோலம்
வரிசையாய் வந்து கொல்லும்!
வாபின்னர் பார்ப்போமென்று
வழிகாட்டும் வையத் தோற்றம்!
கண்முன்னே கடமை நின்று
கரங்காட்டிக் கடைக்குச் செல்லும்!
கா சென்ற பெரும் பேய்நின்று
கவிதைக்குப் பாடை செய்யும்!
சன்மம் ஏன் எடுத்தேனென்ற
சன்னதம் உயிரையாட்டும்!
சாவினை யணைத்தே எண்ணச்
சாமாதிகள் நிறையுமாமே!



படிப்பகம்

www.padippakam.com




## கூடாக் குடும்பங்கள்

தாயும் தந்தையும் தனித்தனி இல்லத்திற்
தங்கி வாழ்ந்திட அவர் வழி வந்திட்ட
சேய்கள் நடுவிலே தத்தளித்தின்னல்கள்
சேர வாடுதல் நம்மையும் தொட்டதோ
மேயும் விலங்குகள் தொழுவத்திற் புகுதல்போல்
வீடும் மனிதர் வாழ் விலங்ககமாயிற்றோ
ஈயும் எறும்புமோர் கூட்டுடை வாழ்க்கையில்
எம்மினம் மட்டுமேன் இழிநிலை அடைந்ததோ

கூடியிருந்து நாம் குலவிக் குடும்பமாய்க்
கூழும் கஞ்சியும் குடித்துக் களித்தவர்
வாடி நிற்கின்ற முகங்களைக் கண்டதும்
வலிந்திழுத்து நல் விருந்துகள் தந்தவர்



படிப்பகம்

www.padippakam.com



பாடி ஆடியே பக்கத்துமனிதரைப்
பார்த்துப் பழகியும் பண்டிகை கண்டவர்
கூட நேரமில் லாதகுடிகளாய்க்
குழம்பிக் கிடப்பதும் குவலய நீதியோ

அன்பு நெய்யிலே மனைவிளக்கேற்றிய
பண்பு கொண்டவர் கணவனும் மனைவியும்
இன்பமாயிணைந்தில்லறம் காத்தவர்
இதயச் சேர்க்கையால் அன்பறம் துய்த்தவர்
துன்ப வேளையிற் துயர்வந்து சேர்கையில்
துணை மிகுந்த நற் தோழமை பூண்டவர்
வென்றெழுந்தவர் வரவினுட் செலவதைக்
கொண்டு சிக்கனக் கொள்கையால் வாழ்ந்தவர்

புரிந்துணர்வெனும் புத்தொளி நெஞ்சிலே
போற்றிப் பிள்ளைகள் பொன்னெதிர் காலத்தைத்
தெரிந்து வாழ்ந்தவர் தேய்விலா ஒழுக்கத்தின்
தேவை யெண்ணியே எல்லைகள் போட்டவர்
சொரிந்து நின்றவர் பாசத்தை மக்களின்
சுகத்தை யெண்ணியே தம் சுகம் மறந்தவர்
விரிந்த பூமியில் வீடிலா மனிதராய்த்
திரிந்து தின்பது கலியுகக் காட்சியோ

வயதில் மூத்தவர் வார்த்தையை மதித்தவர்
வரவு கண்டதும் இருக்கை விட்டெழுந்தவர்
அறிவு தந்தவர் ஆசு களைந்தவர்
குருவே யாமென வணங்கி நடந்தவர்



படிப்பகம்

www.padippakam.com



பரிவு நெஞ்சுடன் பலவீன முற்றவர்
பக்கங்சென்று நற் பணியாற்றி மகிழ்ந்தவர்
நெறி மறந்திங்கு சுயநலக் கடலிலே
நீந்திச் செல்லுதல் நம்மின வீழ்ச்சியோ

இல்லத் தன்பதை இழந்துமூன் றாமவர்
சொல்லைக் கேட்டொரு சமத்துவக் கூச்சலில்
அல்லற் பட்டிங்கு அலைகின்ற மனிதர்கள்
மெல்லத் தமிழரின் மத்தியில் முளைப்பதாய்ச்
சொல்லக் கேட்டுத் துயர்மிகுந் தேன் தமைக்
கொல்லத் துணிந்தொரு கொடியதோர் பாதையில்
செல்லத் தொடங்கிய சிறுமதி கேடன்றோ
கல்லைக் கட்டி நாம் கடலினில் வீழ்வதோ

சிக்கனம் எனும் சிந்தனை கெட்டு நாம்
செலவு செய்தொரு கடனிலே காற்றுண்ணும்
வக்கிழந்த ஓர் வாரிசைப் படைக்கிறோம்
வாழ்க்கை யென்பதே வங்கியார் வட்டியிற்
சிக்கிடல் எனும் சிறுமையில் மூழ்கியே
சீரழிந்து போய்ச் சிதறுண்டு கிடக்கிறோம்
பக்கவீட்டிலே பார்த்ததைப் பெற்றிடும்
பகட்டு வாழ்க்கையிற் பாழ்பட நேர்ந்ததோ

வெள்ளைத் தோலுளோர் வீட்டிலே சமத்துவம்
பிள்ளை குட்டிக்குப் பெருமையைத் தந்ததோ
கள்ளக் காதல்கள் கரையிலாத் திருமணம்
நல்ல குடும்பத்தை நாட்டுக்குத் தந்ததோ



படிப்பகம்

www.padippakam.com



உள்ள கொடுமைகள் அனைத்துக்கும் காரணம்
எல்லை வரம்பற்ற சுதந்திரக் கூச்சலே
பல்லைப் பல்லினாற் தேய்த்திடும் காதலைப்
பாடிப் போற்றிடும் பாவித் தமிழரே

ஒழுக்க மென்பது உயர்வுக்குப் பெருவழி
உழைத்து வாழ்வது உலகத்தின் நல்வழி
அழுத்தி மக்களை அன்புடன் கண்டித்தல்
விழுப்பம் வேண்டுவோர் விரும்பிடும் மேல்வழி
கொழுத்தி யெரிப்பதும் கொலை கொள்ளை செய்வதும்
அழுக்குப் போதையில் அழுந்திக் கிடப்பதும்
பழுத்த முதியவர் பாலரைக் கொல்வதும்
பண்பு என்பது பாவியர் சொல்வழி

தாய் வீடு வருகின்ற நேரமொன்று
தந்தையவர் உறங்குகின்ற நேரமொன்று
சேய் வீடு சேருகின்ற நேரமொன்று
சொந்தமாய் அவரவர்க்குச் சுகங்களுண்டு



படிப்பகம்

www.padippakam.com



காய் பிஞ்சு வாங்கி வரவேண்டுமென்று
கடுதாசி யெழுதிவைத்துப் போதலுண்டு
நாய் கொஞ்சி விளையாட மட்டும் கொஞ்சம்
நேரத்தை ஒதுக்குகின்ற நிலையுமுண்டு

ஓடி யோடிநாம் உழைத்தும் உண்மையில்
உழைப்பில் எத்தனை காசுகள் சேமித்தோம்
மாடி வீட்டுக்கும் மற்றைய கடனுக்கும்
போக மீதிக்குக் கடனையே பெறுகின்றோம்
ஏடு பார்த்து நாம் வாங்கிடும் பொருட்களில்
எத்தனை நமக் குதவிடக் காண்கிறோம்
தேடு வாரற்றுத் தெருவிலே எறிகின்ற
திரவியங்கள் தான் எத்தனை கூறுவீர்

உணவுறக்கம் என்பதற்கோர் தொடர்பு இல்லை
உண்டபின்னர் உடனுறங்கும் பழக்க முண்டு
கணமிருந்து கதை நாவல் படிப்பதற்கும்
காற்றாடி மகிழ்வதற்கும் கிடைப்பதில்லை
கணவனுக்கும் மனைவிக்கும் கதைக்க நேரம்
கடை தெருவிற் காணுகின்ற போதும் வங்கிப்
பண விபர மறிந்து கடன் கேட்கும் நோக்கில்
வங்கிக்குப் போகையிலும் கிடைப்பதுண்டு

கூடாத குடும்பங்கள் கூட்டம் சேர்ந்தோம்
குலவாத சுற்றங்கள் கொண்டு சோர்ந்தோம்
மாடாகி யுழைத்தும் எம்மக்கள் அன்பில்
மலராத முகத்தோடு வாழ நேர்ந்தோம்



படிப்பகம்

www.padippakam.com



கூடாரம் ஒன்றின் கீழ்க் கூடுகின்ற
கோதாரி நிலைமைக்கு அடிமையானோம்
வீடாக்கி அவ் வீட்டில் விளக்கை யேற்றி
விருந்துண்ணும் நாளொன்றை வேண்டுவோமே

(குடும்ப ஒழுக்கம், குடும்ப உறவு, குடும்ப உணர்வு, சமுதாய வழிகாட்டல் என்ற தகைமைகளை உதறிவிட்டு, விலங்குவாழ் கூடுகளாக நம்மவர் இல்லங்கள் மாறுதல் கண்டு எழுதிய வரிகள்)

## அப்துல் ஹமீட்டிற்கு... அன்போடு ஒரு வாழ்த்து

தப்பில்லாத தமிழ்தனைப் பேசித்
தனித்துவக் குரலாற் தமிழுடன் வாழும்
அப்துல் ஹமீட்டை அன்புடன் வாழ்த்தும்
அரும்பணி தந்த ஐ.பி.சி ராஜனே!

இப் பொழுதெல்லாம் இனிக்கும் தமிழ்தனை
எம்மவர் ஊடக மன்றினிற் கேட்பது
அற்புதமான அனுபவ மென்பேன்!
அன்றொடு எமது ஆற்றல்கள் யாவும்
கப்பலில் ஏறி விட்டதோ வென்று
கவலை கொள் வோருடன் நிற்பவன் நானுமே!
எப்படி யெக்கலை யாற்றுவ தென்ற
இயல்புடன் இலக்கணம் காட்டுவோர் சிலரே!



படிப்பகம்

www.padippakam.com



அத்தகை யோரின் அனுபவ வரிசையில்
அப்துல் ஹமீட்டை நம்மவர் அறிவர்!
முத்தென வார்த்தைகள்; மொழியிற் கம்பீரம்
கொட்டிடும் தமிழைக் கோர்த்திடும் ஆளுமை!
பத்தையும் அறிந்து பகிர்ந்திடும் அறிவு!
பார்பவர் கேட்பவர் பலரையும் ஈர்க்கும்
வித்துவம் அனைத்தும் விளங்கிடும் கலைஞர்
அப்துல் ஹமீட்டை அணைப்பதெம் கடனே!

வானலை வழியே வந்திடும் ஓசை
வாசலில் நின்று மீள்வது அல்ல!
கானமாய்க் கருத்தாய்க் கவிதையாக் கலையாய்
நேயரின் வாழ்வில் நெருக்கமாய் இணைவது!
ஏனெது வென்று எதிர்க்கணை தொடுப்போர்
வாதிடும் படியாய் வான்களம் அமைப்பது!
ஆனது கூறி அடுத்தது யாதெனும்
ஆதங்கம் தந்து வானரங் கமைப்பது!

ஊர் நடப்பறியவும் உலகினைப் புரியவும்
தேசத்தின் நிகழ்வுகள் தெளிவாகத் தெரியவும்
தார் மீகத்தோடு தர்மத்தின் குரலாய்
வாசலைத் திறந்து வந்துள்ளே சேர்வது!
யார் தடுத்தாலும் தடைகளை யுடைப்பது!
யாகத்தின் தீயாய் நீதியை வளர்ப்பது!
பாரினில் உண்மை பலத்துடன் நிமிரப்
பக்கத்தில் நின்று வாசகம் உரைப்பது!



படிப்பகம்

www.padippakam.com



தனித்தவர் வாழ்விலும் தங்க பஷ்பமாய்த்
தைரியம் கொடுத்து நிமிர்ந்திட வைப்பது!
மனித்துவம் என்ற மாநதிக் கிளையாய்ப்
பயிர்களை நனைக்கும் பலம் சேர் நீரிது!
இனிப்பதை மட்டும் உரைப்பது அல்ல!
இதயத்துச் சுமைகளைப் பகிர்ந்திட வல்லது!
கணிப்புகள் தகவல்கள் அனைத்தையும் திரட்டிக்
களஞ்சியமாக்கிக் காதினிற் தருவது!

இத்தகை பொறுப்புடை ஊடகப் பணியில்
இருப்பவர் தேசத்தின் இணையற்ற தூண்களாம்!
பற்றுடன் தம்பணி யாற்றிடும் வானொலிப்
பரப்பின் வரிசையை வாழ்த்திடல் கடமையே!

அப்புக்குட்டி ராமதாஸ் இவருடன்
அப்துல் ஹமீட்டை அரங்கினிற் கண்டு
பக்கத்திருந்த பலரையும் மறந்து
பல்சுவை யுண்டேன் லண்டனில் ஒருமுறை!
அப்படியிருந்தது இவர்கள் நகைச்சுவை!
விற்பனராகி வியத்தகு கலையினால்
விருந்தினைத் தந்து மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்!

உணர்ச்சி மிகுதியால் உடனே யொருசில
உண்மை வரிகளைச் சுடச் சுடவெழுதி
அவைக்குப் பின்னே சென்று அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com



முன்னே பாடி முழுதாய் வாழ்த்தினேன்!

இலங்கை வானொலி ஈன்ற கலைஞர்கள்
இதயமேடையில் உலவிய கலைஞர்கள்!
அரங்கில் நின்று பாடியும் நடித்தும்
அனைத்துப் பேரையும் ஈர்த்த கலைஞர்கள்!

அவரின் வரிசையில் அணிவகுத் தெழுந்த
அருமைக் கலைஞர் அப்துல் ஹமீட்டை
உலகத் தமிழின் கலையக நண்பர்
உளமுவந் தணைத்துப் புகழுதல் நன்றே!

இவரது குரலில் எழுந்திடும் தமிழை
இளையவர் கேட்டு இன்புறலோடு
தவழ்ந்திடும் அலையிற் தாங்களும் இணைந்து
தமிழதன் ஓசை பரப்பிடல் நன்றே!

வாழிய அப்துல் ஹமீட் எனும் கலைஞன்!
வாழிய தமிழர் வானொலி யோசை!
வாழிய கலைஞர் வாழ்வினைப் போற்றி
வாழ்பவர் என்றே வாழ்த்தி நின்றேனே!



படிப்பகம்

www.padippakam.com



## விழிப்பாய் அல்லேல் வீழ்வாய்

உயிர்த்தாயாகி உள்ளேயிருந்து
இயங்கும் அன்னையே! என் தமிழ்த்தாயே!
திருத்தாள் போற்றிச் சிரத்தால் வணங்கிக்
கவித்தாள் தன்னைக் கையில் எடுத்தேன்!

எழுத்தாய் இசையாய்
எம்மவர் கூத்தாய்ச்
செழித்தவளேயுன்
சீரடி வாழி!

முழுப்பார் நிறைக்கும்
தமிழர் முகங்களை
உளத்தால் உணர்வால்
உறவாய் வணங்கினேன்!

"அழிப்பார் கொடுமை
அறவே நீக்கிக்
களிப்பாய் வாழ்வோம்!
கவலைகள் வெல்வோம்!
மணித்தாய் நிலத்தினில்
மாண்புகள் செய்வோம்!

இழப்பால் இன்னலால்
ஏற்றிய சுமைகளைத்



படிப்பகம்

www.padippakam.com



துறப்போம்! மீண்டும்
துள்ளியெழுவோம்!
வரப்பில் வயலில்
வெண்மணற் பரப்பில்
நடப்போம்; வாழ்வின்
நயங்களைச் சுவைப்போம்!

தளிர்ப்பாய் விரித்துத்
தலைவைத் துறங்குவோம்!
விருப்பாய் விருந்து
வீதியில் முன்றலிற்
செருக்காய் அமர்வோம்!
சேர்ந்து சிரிப்போம்!
கறுப்பாய்க் கிடந்த
கார்மேகங் கிழித்துக்
கதிரவன் புறப்படும்
காட்சியைக் காண்போம்!

நெருப்பாய் எரியும்
இனத்தின் கனலிது
நிச்சயம் ஒருநாள்
நீண்ட பயணக்
கருப்பையிருந்து
ஈழக் குழந்தையாய்
பிறக்கக் காண்போம்!
இறப்பினை மறப்போம்!



படிப்பகம்

www.padippakam.com


செருப்பாய் வாழும்
சிறுமைகொள் காலம்
சிதறிடும் புதுயுகம்
சிலிர்த்தெழும்" என்று
திருப்புமுனையிற்
தெளிவுடன் நிற்கும்
தேசத்து மக்களை
நெஞ்சத்தில் ஏற்றுவோம்
ஆயிரமாயிரம் உறவுகள் எரிய
அன்னையும் தந்தையும் பிள்ளையும் பிரிய
நோயும் நொடியும் நூறெனப்பெருக
நித்திரை நிம்மதி அனைத்தையும் துறந்து

வாயும் வயிறும் விழியும் வற்றிட
வன்னிக் காட்டிடை வாழ்கின்ற மக்களை
தீயிடை எரிகின்ற தீபங்கள் தம்மை
என்னுளே கண்டு அஞ்சலி செய்கின்றேன்!

சோக வரலாறு மாறிடும் என்ற
தாகத்தோடு அவரது தாயக
யாகத்தில் யானும்இணைந்து நிமிர்கின்றேன்!

விழிப்பாய் அல்லேல்
வீழ்வாய் என்ற
தலைப்பிற் கவிதை
தாங்கியே இங்கு



படிப்பகம்

www.padippakam.com



துடிப்பாய் வந்த
தோழமைக் கவிஞரே!
அழைத்தேன் உங்களை
அன்போடு அரங்கிற்கு!

களைக்காதீர் நீர்!
கலையும் கவிதையும்
படைப்போம் இந்தப்
பாரினிற் தமிழதன்
முழக்கம் செய்வோம்!
முண்டாசுகட்டிய
தலைப்பாகைக் கவிஞனின்
தமிழோசை பரப்புவோம்!
நிலைக்கும் சத்திய
நெருப்பாகி எழுவோம்!
நீசர்கள் கட்டிய
விலங்குகள் யாவும்
தகர்ப்போம்! தர்மத்தின்
தானையில் நடப்போம்!

உரைப்போம் உண்மையை!
உறுதியாய் உலகத்தின்
செவிப்பறை திறக்கும்
வரையெம்குரலை
உயர்த்திக் கூவுவோம்!
ஒன்றாகக் கூடுவோம்!



படிப்பகம்

www.padippakam.com


சனநாயகத்தின்
பெயரில் நடக்கும்
சதிகள் சாவுகள்
சித்திரவதைகள்
அனைத்தும் வெளிவர
இலக்கியம் படைப்போம்!

தமிழ்த் தொலைக்காட்சி
இணையத்தின் நண்பரே!
தரணியிற் தமிழனின்
குரலினைக் கேட்கத்
தலைநிமிர்ந்தியங்கும்
அனைவர்க்கும் வணக்கம்!

ஐரோப்பாவின்
அன்புத் தமிழரே!
வைரப் பாவும்
நாவும் கேட்கும்
அருமை ரசிகரே!
விழிப்பாய் வாழும்
இளந்தலை முறையே!
விறைக்கும் குளிரிலும்
வீழும் பனியிலும்
உழைக்கும் தம்பிகாள்!
உறுதி கொள் தங்கைகாள்!


படிப்பகம்

www.padippakam.com



தளிர்க்கத் தளிர்க்கத்
தளிர்த்திடும் இனமாய்த்
தடுக்கத் தடுக்கத்
தடைவெட்டும் இனமாய்
ஒறுக்க ஒறுக்க
உறுதி கொள் இனமாய்
உயர்ந்து வளர்ந்திடும்

ஒப்பற்ற மக்களே!
உமக்கெலாமெனது
உளமார்ந்த வணக்கங்கள்!
விழிப்பாய் அல்லேல்
வீழ்வாய் என்ற
தலைப்பிற் கட்டினோம்
கவியரங் கொன்று!

விழிப்பாய் உலகே
விழிப்பாய் அல்லேல்
வீழ்வாய் என்ற
வீச்சுடன் வரிசில
தலைப்பாய்க் கட்டித்
தரவந்துள்ளேன்!
செவிக்காய் ஒருசில
சிந்தனை தருவேன்!

உலகில் உள்ள இனங்கள் யாவும்
உரிமைகொண்டு இன்புற வாழ்தலே



படிப்பகம்

www.padippakam.com


தர்மம் அறமெனக் கண்ட தமிழதன்
மரபில் உதித்த மக்கள் நாங்கள்!

தலைவன் ஒருவன் உள்ளான்; அவனே
தரணிக்கெல்லாம் தந்தையவனொடு
பரவிய பார்வதி சக்தியே தாயெனும்
பண்பாடு கொண்டு பணிபவர் நாங்கள்!

யாதும் ஊரே! யாவரும் கேளிராய்
வாழும் நெறிதனை நெஞ்சினில் ஏற்றவர்!

சிலரின் காலில் சிதையும் இனங்களைச்
சிந்திக்காத உலகு கொடியது!
நிலமும் மொழியும் கொண்ட மக்களை
நிந்தித் தழிக்கும் கொடிய அரசுகள்
பலமும் படையும் பெருகுதல் கொடியது!
பாடையில் இனங்கள் எரிதல் கொடியது.

வலமும் இடமும் வாழ்வுக்கு வந்தவை!
வல்லான் மிதிப்பது வனத்திற்கு உரியது
குலமொன்றிங்கே மனிதகுலமதிற்
குணங்கொண்டவரே உயர்ந்தவர் என்றோம்

சுதந்திரம் என்பது சிலர்சொத் தல்ல!
சுரண்டிப் பிழைப்பது சனாதனமல்ல!
நிதம் நிதம் பட்டினிச் சாவிலே மற்றவர்



படிப்பகம்

www.padippakam.com



நெருப்பினிற் போகவும் நெறிகெட்ட போக்குடன்
நிதிநிலை காக்கவும் பதவியைப் பேணவும்
நினைத்தது போற் றம் காய்களை நகர்த்தவும்
அதிகுதி செய்வது அறப்பண் பல்ல!
ஆளப்பிறந்தவர் வெள்ளைய ரல்ல!

பிணந்தின்னும் பிசாசுகள் இராணுவவேடத்தில்
பெருவேட்டையாடுதல் ஆட்சிக்கு நலமல்ல!
மதமென்னும் வெறிகொண்டு மற்றவர் வாழ்வினை
மாய்ப்பதும் மறுப்பதும் மனிதத்துக் கழகல்ல!

அதர்மமே ஆட்சியாய் அழிப்பதே கொள்கையாய்
ஆயுதம் தாங்குதல் புனிதத்தின் குறிப்பல்ல!
புதைகுழி தோண்டியே பிரசைகள் உடலினை
மறைப்பதும் தொலைப்பதும் உலகுக்கு அழகல்ல!

ஐ.நா. சபையினைப் பார்த்திட வென்று
அண்மையில் ஜெனிவா நகரம் சென்றேன்!
ஐ.நா. சபைமுன்னே அசைந்திடும் கொடிகளுள்
எமக்கும் ஒரு கொடி அசையுமாவென்று
விழி நாவூற விண்ணோக்கி நின்றேன்!
மை நாகூட மெதுவாக ஒருமுறை
பேனா விட்டு வெளியே நீண்டது!
ஐயோ! நானும் எழுதமாட்டேனோ?
அந்தக் கவிதையை அழகு தமிழிலே!
வையம் பார்க்க எங்கள் தமிழ்க் கொடி



படிப்பகம்

www.padippakam.com



வெளிற் பறப்பதைப் பாடமாட்டேனா?
ஐயத்தோடு அமைதியாய் நின்றேன்!
அந்த நாளுக்காய் வரங்கேட்டு நின்றேன்!

பொய்யர் பக்கம் நில்லாது உலகெனும்
பொய்யினைக் கூறிப் பைய நடந்தேன்!

ஒரு காலெரிந்த நாற்காலியொன்று
பெரிதாய் நின்றது ஐ.நா. முன்றலில்!
திரிகால் கொண்ட நாற்காலி தன்னைத்...
தெரு முன் வைத்தது புதிதாய் இருந்தது!
கதிரைக்கு மூன்றுகால் என்றே கூறிடும்
கட்சியா ஐ.நா.சபையென்று எண்ணினேன்!
புதிரை விளக்கினார் உள் வழி காட்டிய
புண்ணியவாளன் பதிலது கொண்டேன்!

நிலக்கண்ணி வெடியினால் நிர்மூலமாகும்
நிலைகண்டு ஐ.நா. கண்ணீர் வடிப்பதாய்
விளக்கந்தந்தார்; வியப்போடு கேட்டேன்!

தொலைக்கேன் போவான்; எங்கள் தாயகம்
நிலக்கண்ணிக் காடாய் நிற்பது எனது
மனக் கண்ணில் எழுந்து மயக்கம் கொடுத்தது!
நிலக்கண்ணி மீது சிக்குண்டு எம்மக்கள்
வலக்காலும் இடக்காலும் வாழ்வும் இழப்புண்டு
அழக் கண்டேன் என்னுள்! ஆவேசம் எழுந்தது!
உலகத்தின் மீதொரு கோபமும் பிறந்தது!



படிப்பகம்

www.padippakam.com



உலகே நீ தான் ஊற்றாய் நிற்கிறாய்!
நிலக்கண்ணி வைத்து நிலங்களைத் தகர்க்கிறாய்!
பாராளுமன்றத்திற் படைவாழும் போது
யாரையா கண்டார் சனநாயகத்தை!



தேர்தலும் வாக்கும் தோட்டாக்களானால்
யாரையா சுதந்திரப் பாட்டினைப் பாடுவார்!
நெல்சன் மண்டேலா வைச் சிறைவைத்த
நீசர்கள் பக்கம் நீர்தானே நின்றீர்?



படிப்பகம்

www.padippakam.com



ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள்
ஏறியிறங்கினோம் பாராளுமன்றம்
நூறா... இருநூறா எங்கள் இழப்புகள்!
நாற்பதா ஐம்பதா... எங்கள் இறப்புகள்!
நூலகம் தொடங்கி ஆலயம் திருச்சபை
பள்ளிகள் வீடுகள் பல்கலைக்கழகங்கள்
யாவையும் இழந்தன்றோ காட்டுக்கு ஓடினோம்!

இராணுவம் செய்த இழிவுகள் தந்த
இரத்தக் காயங்கள் எத்தனை எத்தனை?
அராஜக அரசின் ஆட்சியில் நடந்த
அடாவடித் தனங்கள் எத்தனை எத்தனை?

நீதி கேட்டவர் நெருப்போடு இணைந்தார்!
வீதியிற் போனவர் புதையுண்டு மறைந்தார்!



படிப்பகம்

www.padippakam.com



சட்டத்தின் எல்லையிற் சஞ்சரித் தோர்தான்
சனநாயகத்தின் சான்றாக நின்றார்!
கட்டம் கட்டமாய் கண்ட கொடுமையைச்
சத்தம் போட்டுச் சபையிலே யுரைத்தார்!

புத்தரின் பிள்ளைகள் பதிலாகத் தந்ததோ...
ரத்தமும் காயமும்; யுத்தமும்... சத்தமும்!
கத்தியும் பொல்லும் காடைத் தனங்களும்...
கன்னியர் மீது காவலர் கொடுமையும்!
மனித உரிமைகள் மகத்துவம் கூறிய
மாமனிதர்கள் மண்ணோடு போயினர்!

புனித உள்ளங்கள் பொல்லாதோர் கைகளில்
துப்பாக்கிச் சூட்டிற் தலைசாய்ந்து போனார்கள்!

எழுதிய கரங்கள் ஒடிக்கப்பட்டன!
பேசிய நாக்கள் மடிக்கப்பட்டன!


படிப்பகம்

www.padippakam.com



சிறையில் எங்கள் செல்வங்கள் செத்தன!
சீவிய வாளிற் சிரசுகள் உருண்டன!

ஐ.நா.சபையே! எங்கே நீ போனாய்!
அழுதோம் அரற்றினோம்! ஆறுதல் தேடினோம்!

யாழ்மா நிலத்தின் இல்லங்களெல்லாம்
மாபெரும் மயானக் காடெனக் கிடந்தது!
வாழ்ந்து களித்த வரலாற்றுப் பூமியில்
வான்படை வந்து செல்மாரி பொழிந்தது!



படிப்பகம்

www.padippakam.com



ஐயகோ எனது அன்னையின் தேசம்
அழிவுக் கஞ்சி வனவாசம் சென்றது!
பொய்யரின் புரட்டுக் கூச்சலை நம்பிப்
பொல்லாத உலகோ சல்லாரி போட்டது!

ஐ. நா. சபையே எங்கே நீ போனாய்?
அப்போதெல்லாம் எங்கே நீ கிடந்தாய்?

கையிலே பிஞ்சுக் குழந்தையரோடு
கண்ணில் நீருடன் எத்தனை தாயர்
வெய்யில் மழையில் விரட்டப்பட்டனர்!
வேதனைக் குழியிற் புரட்டப்பட்டனர்!



பாலுக்கும் பருக்கைக்கும் பாலர்கள் அழுதனர்!
பாவியர் நாமெனப் பதைத்தனர் பெற்றவர்!

வயது முதிர்ந்தோர் வயதிற்கு வந்தோர்
பயத்தின் பிடியிற் பயணம் செய்தனர்!

ஊருற வெல்லாம் ஒவ்வொன்றாகத்
தீர்வு அழிவெனும் தீர்வோடு நடந்தன!

யார் வந்தீர்கள் இதனைத் தடுக்க?
யார் நின்றீர்கள் நிழலைக் கொடுக்க!



படிப்பகம்

www.padippakam.com



வன்னிக் காட்டில் வாழ்வினைத் தேடி
என்னருந்தேசம் எட்டி நடந்தது!
கொட்டும் தேளும் குதறும் சிங்கமும்
கொல்லும் பாம்பும் கூட உலவிடும்
பற்றை புதரெல்லாம் பரவி நம்மவர்
கல்லு முள்ளுடன் கரங்கோர்த்து உறங்கினர்!

உடலினை மறைக்கவும் ஒரு துணிக்கேங்கி
இடர்ப்பட்டு எனது இனமே யழுதது!
அடைப்புக்கள் போட்டு மரத்தடி நிழல்களில்
அடுப்பேற்றக்கூட பருக்கைக்கு இரந்தது!

படிப்பகம்

www.padippakam.com

விருந்தோம்பல் கண்டு விரிந்த பண்பாட்டில்
இரந்தேங்கி வீழும் இன்னல் விளைந்தது!
மருந்தின்றி நோயில் மானிடம் செத்தது!
மரணத்தின் சூழலில் மழலைகள் வளர்ந்தனர்!

தாண்டிக் குளத்தினைத் தாண்டிக் கடந்ததும்
தாங்காமற் கலங்கள் மூழ்கிக் கவிழ்ந்ததும்
வான் வந்த செல்லினால் வாழ்வுகள் போனதும்
நாம் கண்ட கொடுமைகள் கொல்லும் காட்சிகள்!



படிப்பகம்

www.padippakam.com



மிதி நெரிபட்டு உயிர்கள் பிரிந்ததும்
குடி நீரின்றித் தாகத்தில் மடிந்ததும்
கருக் கொண்ட மாதர் கருவோடு சிதைந்ததும்
நெருக்கத்தில் முதியோர் தெருக்கற்களானதும்
வருத்தத்தில் எங்களை உருக்கிய நிகழ்வுகள்!



படிப்பகம்

www.padippakam.com



ஐ. நா. சபையே அறிவாயோ நீ!
இவையெல்லாம் எனது உறவுக்குள் நிகழ்ந்தவை!
ஐந்து லட்சமாய் எங்கள் உறவுகள்
அகதிக் கூட்டமாய் நொந்து நடந்தனர்!
சொந்த மண்ணிலே சோகத்திற் துடித்தனர்!
சுற்றம் சூழ வீதியிற் படுத்தனர்!





படிப்பகம்

www.padippakam.com



நொந்து தளர்ந்து தம்குடி முனக...
அங்கு வந்து அரசியல் ஞான
விந்தைபற்றி விரிவுரையாற்றும்
அந்த முகங்களை நெஞ்சுக்குட் கண்டேன்!

இன்று உன்னிடம் ஒன்று சொல்லுவேன்!
இதயம் இருந்தால் ஏற்றுக் கொள்வாய்!

அணுவாயுதத்தால் உலகு வாழாது!
அன்பும் அறமும் தர்மமும் சாகின்
அணுவும் இந்தத் தரையில் இராது!
பசியும் பிணியும் பஞ்சமும் கொண்டு
பாரில் மக்கள் துன்புறல் கண்டும்
அசையாதிருப்பின் அமைதி வராது!

ஆயுதப் பரீட்சையால் அகிலத்தைப் பிளந்திடும்
பாதகம் நிற்கும் நாள் வரவேண்டும்!
வர்த்தகம் ஒன்றே இலக்கெனக் கொண்டு
வாழ்வினைக் கெடுத்து வையத்தை இருளின்
சொத்தென மாற்றிட எண்ணிடல் கொடுமை!
நீதி வழுவா அரசுகள் நிரம்பின்
நிச்சயம் உலகு நிலை பெற்று மிளிரும்!

வீதிகளெல்லாம் விழாக்கோலம் காணும்!
வீடும் நாடும் சொர்க்க மென்றாகும்!



படிப்பகம்

www.padippakam.com



தேக சுகத்தையும் தேடு பொருளையும்
போக வெறியையும் பொருளாய் கொண்ட
நாகரீகம் நன்மை தராது! நல்லவரின்றி நாடுயராது!
யாக வாழ்வும் அகப் பொருள் உண்மையும்
நீங்கள் அறியா நீதியும் அறமும்!

வரலாறறியா வாய்களின் பிதற்றலை
வாய்க்காற் சேறெனக் கருதி விலக்குவோம்!
மனிதனை மனிதன் உண்டு மகிழும்
நவ நா கரீகத் தத்துவம் போதும்!
இனியும் வேண்டாம் இன ஆதிக்கம்!
இயற்கையின் முன்னே எல்லோரும் மக்கள்!

உலகக் கடலெலாம் படைக்கலமானால்
கலகம் நிச்சயம் பதிலென ஆகும்!
விலகிட வேண்டும் பலவெறியுலகின்
விடுதலை நோக்கி யுழைத்திடல் வேண்டும்!

உண்மையே உலகின் சாரதியானால்
உள்ளத்தில் அமைதி சங்கமமாகும்!
அண்மையில் நிகழ்ந்த அமெரிக்க இழப்பு
யாருக்கும் இனிமேல் நிகழ்ந்திட வேண்டாம்!

அணுகுண்டு விற்பதும் ஆயுதம் கொடுப்பதும்
பிணமுண்டு களிக்கும் பிசாசுகள் பக்கலில்
அணிநின்று அழிவினை முடுக்கி விடுவதும்



படிப்பகம்

www.padippakam.com


துணிவான செயலென்று துள்ளும் உலகே...
விழிப்பாய் நீ! அல்லேல்
வீழ்வாய்! இது நிசம்!

கொல்பவன் கரங்களிற் கோடரி கொடுத்தனை!
பல்லில் விடங்கொண்ட பாம்பிற்குப் பால்வார்த்து
நல்லவர் உயிர்போக்கும் நாடகம் நடத்தினை!

வல்லமை இதுவல்ல! வாழ்விக்கும் பண்பல்ல!
நல்லவை செய்திட நாடிடு உலகே!
எல்லோர்க்கும் இடமுண்டு... இப்பெரு வையத்தில்!
இன்புற்று வாழ இயற்கையின் தயவுண்டு!
அறிவின் வளர்ச்சி ஆக்கத்தைத் தரட்டும்!
அன்பும் அறிவும் மனிதத்தை நிரப்பட்டும்!

வெள்ளையும் கறுப்பும் தோலின் நிறங்கள்!
உள்ளே ஓடும் குருதியும் உணர்வும்
எல்லோர்க்கும் ஒன்றுதான் நீங்களும்அறிவீர்
பொல்லாத போர்கள் பொழிவது அழிவே

உமக்கும் எமக்கும் உடலும் உயிரும்
உள்ளமும் உணர்வும் உண்டென அறிவீர்!
இதயத் துடிப்போடு இயற்கை படைத்தது;
இவனவனென்று தரம் பிரித்தல்ல!
உதயமாவதும் ஒரு சூரியன்தான்!
உலாவந்து போவதும் ஒருசந் திரன்தான்!



படிப்பகம்

www.padippakam.com



தேசம் என்பதும் தேசியம் என்பதும்
தேசியகீதம் கொடியெனச் சொல்வதும்
மேலைத்தேய ஆசைகள் மட்டுமோ?
கீழைத் தேயம் வாழினம் கூட
தேசம் என்பதைத்
தெரிந்து தான் உள்ளது!
கூழைக் குடிப்பினும்
தன்னி னத்தோடு
குந்தியிருக்கவே
எண்ணியிருக்குது!

செல்லும் குண்டும் சிரிப்பினைத் தராது!
சீறியே வீழ்ந்து நெருப்பையே கக்கும்!
நல்லவரென்று தள்ளி விழாது!
நடுவினில் வீழ்ந்து நாசங்கள் செய்யும்!

விதைகள் அழிவது என்தாய் மண்ணில்!
விழுதுகள் சரிவது என் தாய் மண்ணில்!
குழந்தைகள் அழுவது என்தாய் மண்ணில்!
குண்டுகள் வீழ்வது என்தாய் மண்ணில்!
அதை நான் மறந்து எப்படி உறங்குவேன்!
அவர்கள் சாக எப்படி உண்ணுவேன்!
உதையும் அடியும் இதயச் சுமைகளும்
அவர்படும் போது எப்படி மகிழ்வேன்?



படிப்பகம்

www.padippakam.com



தாயக வாழ்வை தாகமாய்க் கொண்டு
தவித்திடும் மக்களைத் தாக்குதல் கொடுமை!
தியாக வேள்வியின் தீயின் ஆற்றலைத்
தீர்த்துக் கட்டிட முயலுதல் மடமை!

நாய்களாய் பேய்களாய் நாடுகள் தோறும்
நம்மவர் அலைந்து துடித்திடும் கொடுமை!
நேயமாய் எமது நிலைமையைப் புரிந்தால்
நிச்சயம் நீங்களும் எங்களை ஏற்பீர்!

விழிப்பாய் உலகே விழிப்பாய் என்று
விளித்தே எனது கவிதையை நிறைக்கிறேன்!

(TTN தொலைகாட்சியின் தொடர் நிகழ்ச்சியாகப் புலவரால் நடாத்தப்பெற்ற 'பாவும் நாவும்' நிகழ்ச்சியில் இடம்பெற்ற கவியரங்கத்தின்போது, ஐ.நா சபையை பார்வையிட்டு வந்த அனுபவத்தோடு வடிக்கப்பட்ட தலைமைக் கவி வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com



## பூமித்தாயின் குழந்தைகளே...

பூமித்தாயின் குழந்தைகளே
தாய் முகந்தேடும் இதயங்களே

குற்றஞ் செய்யாம தண்டனை பெற்றே
கூண்டினில் வாழும் பறவைகளே

பெற்றவரெங்கே படைத்தவனெங்கே
கேள்விகள் பொங்கும் நெஞ்சுக்குள்ளே

அயலவர் அன்பில் நம்பிக்கை தேடி
அனுதினம் ஏங்கும் பிஞ்சுகளே

கற்க இல்லாமல் கண்ணிமை மூடி
இருளினில் வாழும் குஞ்சுகளே

சொற்களில்லாத கவிதைகளாகி
உயிருக்குள் உறங்கும் உணர்வுகளே

இயற்கையின் தலைவன் உலகினைப் படைத்தான்
அரசியல் மனிதன் நிலங்களைப் பிரித்தான்
மயக்கத்தில் உலகை அழித்திடும் மனிதன்
இருப்பதைப் பகிர்ந்தால் இறைவனும் சிரிப்பான்

(தமிழ் அநாதைச் சிறுவர் நிறுவனத்தின் ஆரம்ப கீதமாக இசைக்கப்படுகிறது திருமதி. மாதினி சிறீக்கந்தராசாவினால் இசையமைக்கப்பட்டுப் பாடப்பெற்றது.)



படிப்பகம்

www.padippakam.com



## சகிப்பு; தகிப்பு; சுகிப்பு

ஈன்றாரை இளையவரை முதியோர் தம்மை
இணைந்துவளர் சுற்றத்தை ஊரை நாட்டை
ஈண்டுலக இனங்கள் தமை உயிர்களோடு
இயற்கையதைச் சகித்திடுதல் அன்பாய்மாறி
நீண்டகன்று ஆழ்ந்தருளாய் நிலத்தின் வாழ்வை
வான்தொடுமோர் விருட்சமென ஆக்கும் என்று
ஆன்றவிந்த ஞானியர்கள் அன்றே சொன்னார்
அதுதானே சகிப்பாகக் கண்டேன் நானே!

சேர்ந்ததொரு சமுதாயச் சூழல் தன்னிற்
செறிந்துள்ள உறவுகளின் சுற்றந்தன்னில்
ஆர்ந்த தொரு பெருநட்பில் அன்பிற்காதல்
புரிந்தவரின் உணர்வுகளிற் குடும்பவாழ்வில்
ஆண்டவரின் அரசாட்சி யிவற்றில் நீதி
அறம் பிழைக்கின் சகிப்பு நிலை கடந்து ஆவி
மூண்டதொரு தீப்பிழம்பாய் யெரிந்து கோப
முகங்காட்டத் தகிப்பு நிலை தோன்றுமாமே!

சகிப்பு நிலை கடந்து உயிர் தகித்துப் பின்னர்
சாந்தமடைந்திடும்போது அன்பு மீண்டும்
முகிழ்த்திடுமோர் முழுஞான இன்பம் நோக்கி
நூர்ந்ததொரு மலைத்தழல் போற் குளிர்ச்சிகொள்ளும்
மிகுத்த குணமுடையோரின் முனிவு கூட
மேதினியை அழிப்பதுபோல் எழுந்து ஆடிச்
சுகித்திடுமோர் தர்மத்தை நீதி தன்னைச்
சுகம் பெறுவார் ஈதுண்மையுண்மையாமே!



படிப்பகம்

www.padippakam.com



வகுத்தனர் நம்முன்னோர்கள் இவையே இந்த
வாழ்விற்குள் இணைந்த திரிநிலைகள் என்றார்!
தொகுத்து உயர் இலக்கியங்கள் எமக்குத்தந்து
தொல்தமிழை உலகத்தில் உயர்த்திச் சென்றார்!
பகுத்தறிவு கடந்ததொரு பரமஞானப்
பாதையிலும் இதனைத்தான் பாடி நின்றார்!
தகத்தகத்தன் னிலை மாறும் உயிர்கள் தம்மைத்
தாங்கியதே தரணியெனத் தீர்வு தந்தார்!

கூடலின் முன் ஊடலொரு தகிப்பு ஆகும்!
குளிர்வதன் முன் உள்வெப்பம் கோபமாகும்!
தேடலதன் முதற்படியும் தகிப்பு ஆகும்!
தேடியது கிடைத்தவுடன் சுகிப்பாய் மாறும்!
பாடகரின் பயிற்சியிலும் வெப்பம் தோன்றும்!
பாட்டாளி உழைப்பினிலும் வெப்பம் தோன்றும்!
ஆடியபின் அடங்குகையில் அனைத்தும் மேகம்
போற் கவிந்து குளிர்கின்ற காட்சியாமே!

கண்ணகியின் காவியமும் இதுவே கம்பன்
காட்டிய நல்லிலக்கியமும் இதுவே கண்ணன்
பண்ணியதோர் பாரதமும் இதுவே வாணர்
பாடியவை அத்தனையும் இதுவே இன்னும்
எண்ணிறைந்த வாழ்வியலை எடுத்துப்பார்க்கின்
எல்லாமும் இம்மூன்று பூக்கள் தாங்கும்!
மண் மகளின் மாலைகளாய்ச் சூட்டும் இந்த
மனிதத்தின் பூக்கள் தமை மறுப்பார் யாரோ?



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

## சென்னைக் கடற்கரையில்...

சென்னைக் கடற்கரையே! - ஒரு
சில மணி நேரம் உன்னைப் பார்த்தேன்!

அன்னைத் தமிழின்
அடிகளை வணங்கும்
அலைகளின் அழகினைப் பார்த்தேன்!

தன்னைத் தந்தவள்
தலைநிறை கூந்தலில்
முல்லை மலர்ச்சரம் அணிந்தேன்

மண்ணிற் படுத்தேன்;
மாலைக் காற்றில்!
விண்ணில் விளைந்த
மீன்களைப் பார்த்தேன்
எண்ணம் பூக்க
இதயம் குளிர்ந்தேன்!
என்னை மறந்து
பூக்களைச் சொரிந்தேன்!

(சென்னைக் கடற்கரையில்)



படிப்பகம்

www.padippakam.com



# ஓ தமிழகமே!! உன்னைத்தான்

எங்கள் தமிழ் மகள் ஏறியமர்ந்ததோர்
சங்கமும் செத்துப் போச்சாம்
பொங்கு தமிழ் மன்னர் புலி கயல் விற்கொடி
இங்கொரு வெற்றுப் பேச்சாம்
சங்கெடுத்தூதெனச் சாற்றிய புலவனும்
சரித்திரச் சேற்றிற் போனான்
இங்கினித் தமிழர்க்கு ஆட்சி யொன்றுண்டெனில்
அது தமிழீ ழமாகும்

தாழ்ந்து கிடக்கின்ற தமிழகம் இனியிங்கு
தமிழர்க் கோர் தொட்டிலில்லை
வீழ்ந்து படுத்திடும் விழலர்கள் வீணர்கள்
வீரப் பா கொட்ட வேண்டாம்
ஆண்டு களித்தவர் நாமெனக் கூறியே
மாண்டு நாம் போக வேண்டாம்
ஈண்டு தமிழர்க்கு இருப்பதோர் தாய்நிலம்
அது தமிழீழ மாகும்

மானமில்லாதவர் மறத்தமிழ் மாந்தரின்
மாண்புகள் பேச வேண்டாம்
ஈனம் நிறைந்தவர் ஊழலாம் மையினால்
இனத்துவம் எழுத வேண்டாம்



படிப்பகம்

www.padippakam.com



கூனல் மிகுந்துளம் குறுகி நடப்பவர்
கோட்டை யிலாள வேண்டாம்
பானமருந்தியே மயக்கத்திற் புரள்பவர்
பரணியைப் பாட வேண்டாம்

அடுத்த கரையினில் அநீதி நடக்கையில்
அது பற்றிப் பேச அஞ்சிப்
படுத்து நித்திரை செய்பவர் கனவிலே
இலக்கியம் படைக்க வேண்டாம்
கெடுத்த எத்தரைக் கெஞ்சிக் கிடப்பவர்
பேரிகை முழக்க வேண்டாம்
கொடுத்த எச்சிலைக் குடித்துக் களிப்பவர்
கோரிக்கை வழங்க வேண்டாம்

கலையும் கவிதையும் காவியப் பெருமையும்
கலந்து செழித்த மண்ணில்
மலையைத் தகர்த்திடும் மானத்து வேங்கையர்
எலும்பு தளிர்த்த மண்ணில்
கலைஞர் புலவர்கள் இசைஞர் அறிஞர்கள்
இணைந்து களித்த மண்ணில்
சிலையும் சிறுமையும் அரசியல் ஆனது
சிறுமையிற் சிறுமையன்றோ



படிப்பகம்

www.padippakam.com



# மாற்றம்

மாற்றத்தைப் பார்த்து
மதிகலங்கி மலைக்கின்றேன்
நேற்றைக்கு வந்தவர்கள்
நிலம்மாறிச் சிலநாளில்
நாட்டைத்தாம் மறந்து
நாகரீகச் சுழற்காற்றில்
ஊற்றற்ற துணிக்கைகளாய்
உலகத்தைச் சுற்றுகின்றார்

மாற்றத்தைக் கூட
மதிப்பேன்நான் இவ்வுலகி;ல
ஏற்றத்தைத் தருகின்ற
எல்லாமும் ஏற்கின்ற
தீர்க்கம் நிறைந்தவர் நாம்
தெளிவுள்ளம் நமக்குண்டு
தேட்டத்தில் நமக்கும்
நம்பிக்கைதானுண்டு

நாற்றத்தில் வீழ்ந்து
நலங்கெட்டுப் போகின்ற
மாற்றத்தையன்றோ
மறுக்கின்றோம் மனிதத்தைத்
தூற்றிப்பே ரழிவுக்குத்
தூண்டுதல்கள் செய்கின்ற
மாற்றத்தையன்றோ
மறுக்கத் துடிக்கின்றோம்



படிப்பகம்

www.padippakam.com



# காமத்திற் காதல்

தேனிதழ் குவித்துத் தீட்டிய முத்தம்
தீயென என்னுள் மூட்டிய ஆசையோர்
வான்வரை எழுந்திட வாரியிழுத்தேன்!
வட்ட நிலாமுகம் தன்னை நனைத்தேன்!

மானவள் மயக்கத்தில் மார்பினிற் சாய
மழைமுகிற் கூந்தலை வருடியணைத்தேன்
ஏனைய யாவும் உடைபட்டுப் போக
இருவரும் தேவ உலகினில் நடந்தோம்!

ஆணொடு பெண்சமம் என்பவரெல்லாம்
அறிந்திட ஒரு சொல் அறைந்திடுவேன்யான்!
தூணொடு தூணெனத் துய்த்திடும் கொடிய
தத்துவம் பிறந்ததே தவறெனச் சொல்வேன்!

நாணியே தலைதனைச் சாய்த்திடும் மெல்லியள்
நவின்றிடும் வார்த்தைகள் நாதத்தில் உயர்ந்ததாம்!
ஆணினம் அடங்கிட ஓங்கிடும் வல்லமை
அகத்திலே கொண்டவள் பெண்ணெனில் உண்மையே!

மானமும் துணிவும் மாறிடாத் திண்மையும்
மார்புதோள் வலிமையும் கொண்டதோர் ஆணையே
தானொரு மங்கையாள் தழுவிடத் துடிப்பளாம்!
தார்மிகம் இதுவிந்தத் தரணிக்குப் பொதுவதாம்!



படிப்பகம்

www.padippakam.com



தீனியை வேண்டியே பிறரடி தாங்கிடும்
தெளிவற்ற பிறவிக்குத் தாரமாய் வாய்த்திடும்
ஈனம் சேர் வாழ்வினை எந்தவோர் மங்கையும்
ஏற்றிட ஒப்பிடாள் இதுவும் ஓர் உண்மையே!

தற்சுகம் ஒன்றையே தவமெனக் கொள்வதும்
தன்னவள் இன்பத்தைச் சிந்தியா திருப்பதும்
உற்பத்தி இயந்திரம் அணங்கெனச் சொல்வதும்
உடை உடல் அழகுடன் பெண்ணினம் அழிவதும்
அற்பர்கள் சிந்தையில் ஆண்பெண்கள் சேர்வதும்
அகிலத்திற் பெண்ணினம் ஊமையாய் அழுவதும்
நிற்கின்ற போதன்றோ நிகரற்ற உறவுகள்
நிலத்தினில் மலர்ந்திங்கு நல்வாழ்வு நிலைக்குமாம்

இருளிடைக் கலப்பதே இன்பமாய் எண்ணிடும்
இராக் கால மனிதரை இவ்வையம் கொண்டதாம்!
பருகிய பானத்தின் மயக்கத்திற் புரண்டிடும்
பண்பற்றோர் கரங்களிற் பாலியல் சென்றதாம்!

நிறைவிலாக் காமமோர் நிமிடத்தில் அடங்கிட
நித்திரைச் சமாதியில் நெஞ்சுகள் வேகுமாம்!
அறையினுள் மட்டுமே அவனொடு அவளென
ஆகிடும் உறவுகள் அகிலத்தின் வீழ்ச்சியாம்!



படிப்பகம்

www.padippakam.com


கருத்தொருமித்தவர் காதலிற்காண்கின்ற
காமமும் ஒருவகைப் பேரின்பச் சாதியே!
புரிந்துணர்வுள்ளவர் புணர்ச்சியில் எழுகின்ற
பூவுடலின்பமும் பூரண இன்பமே!

அரைநொடி கால்நொடி ஆசையைக் கடந்தவோர்
அன்பினில்  எழுகின்ற காமத்தைப் போற்றுவோம்
திரையினுட் சிக்கியே திக்கு முக்காடிடும்
திண்மை கொள் காதலைத் தேடி நடப்பமே!

## வேதனை தீர்ந்திட வெளிப்படு இறையே

பாதையின் ஓரத்தே படுக்கை விரித்துக்
காதினைப் பொத்திக் கடுங்குளிர் விரட்டிப்
போதினைக் கழிக்கும் புண்பட்ட மனிதரின்
வேதனை தீர்ந்திட வெளிப்படு இறையே

(London Waterloo Bridge Underground வழியாகச் சென்றபோது)



படிப்பகம்

www.padippakam.com



## வாக்கின் வழி

வாக்கேயெம் மான்மாவின் விழியின் பார்வை
வாக்கேயெம் முள்ளத்தின் குரலின் ஓசை
வாக்கேயிம் மனிதத்தை இணைக்கும் பாதை
வாக்கேநம் வாழ்வுக்கு ஒழுக்கப் போர்வை

## விண்தொட உயருமாமே

நீரிலா ஊர்களோடு நித்தமும் துயரில்வாடும்
பாரிய இனத்தைக் காக்கும் பாரிய திட்டத்தோடு
நேரிய நெஞ்சு கொண்டோர் நெறிதரநேரில் வந்தால்
வேரெல்லாம் உயிர்க்கும் இம்மண்விண்தொடஉயருமாமே

(தமிழகத்தின் வரண்ட ஊர்களைப் பார்த்ததும் வந்த வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com


## தமிழ் ஓலைகள்

தமிழ் ஓலைகள் என்னுந் தலைப்பில்
தமிழர் தகவல் தந்தே நிற்கும்
தமிழர் தகவல் ஏடுகள் நிறுவனத்
தமிழ் நண்பர்க்கென் இனிய வணக்கம்

எமது பணிகளை எடுத்தேயுரைத்திட
எமது பணிகளை எழுத்தாய் நிறுத்திட
உணர்ந்து எழுந்த உமக்கெல்லாம் நன்றி

காசோலை பார்த்துப் பனிப்போருலகில்
தமிழோலை கட்டத் தலைப்பட்டீர் நீர்

நகர பிதாவாய் சிறப்பை யளிக்கும்
சின்னமணியாம் ஐயா அவர்களே
நகர முடியா நாளாம் சனியில்
கடமை நமக்கும் உண்டென நம்பி
வருகை தந்துள்ள அனைவர்க்கும் வந்தனம்

பரவிப் பறந்து பாருக்குழைத்திடும்
பெரிய கூட்டம் தமிழர் கூட்டமாம்
பறவைக்கூட்டமும் பாமும் முதலையும்
குரங்கும் கோட்டானும் கரடியும் சிங்கமும்
தரையிற் புழுவும் தமக்கென வோரிடம்


படிப்பகம்

www.padippakam.com


வரையப்பெற்று வரலாறாய் நிற்கையில்
விரைவில் தமிழர்க்கும் பட்டிய லொன்று
தருதல் வேண்டுமென் றெண்ணினர் போலும்
கரையும் நம்மினம் கடலிலேயென்று
கனவு ஒன்றினைக் கண்டனர் போலும்
சிரமம் நூறு இடறிய போதும்
சிந்தனை விளக்குடன் செய்கடன் புரிந்தனர்
நிறைவுடன் இவரது காரியம் சிறக்க
நீட்டினேன் நேசக் கரத்தினை இன்று

உலகத் தமிழனின் ஒப்பற்ற சேவையை
உணர்த்திச் செல்ல ஓரரசில்லா
மலட்டு இனமாய் தாழ்வுற்று நிற்கிறோம்

விரட்ட ஓடும் மந்தைக்கூட்டமாய்
வீழுந்தீனி நக்கிப் பிழைப்பதாய்
பரட்டைத் தலையுடன் பட்டினி வயிற்றுடன்
கரத்தில் தட்டு சிரட்டையோடு
காவிப் பறக்கும் அகதிக் கூட்டமாய்த்
துரத்தும் அரசுகள் தரணியிலுள்ளன!

விரக்தி வடியும் முகமும் விழிகளில்
வெளிச்ச மில்லா வெருட்சிப் பார்வையும்
கரத்தில் நடுக்கமும் கால ஓட்டத்திற்
கப்பலேறிய பயணக்கோலமும்
இரத்த வெடுக்கும் இதயம் நிறைந்து



படிப்பகம்

www.padippakam.com



நரம்பைத் துளைக்கும் நெடிய சோகமும்
உரத்த சத்தம் கேட்டதும் ஓடி
ஒளித்துக் கிடக்கும் உள்ளப்பீதியும்

வருத்தம் வருத்தும் வரண்ட வாழ்க்கையும்
மரத்துப்போன மனமும் கொண்ட
மனிதனே இந்தத் தமிழனாம் என்று
துரத்தும் அரசுகள் தரணியிலுள்ளன

படகிலேறிப் பார்வலம் வந்து
கடவுச் சீட்டைக் கடித்து விழுங்கிய
பிறவி தமிழ னென்று விளங்கி
உடையைக் கழற்றி உள்ளே தடவி
ஊத்தைக் கேள்வியால் உயிரைத்துளைத்து
கடையிற்கடையாய் நடத்திப் பின்னர்
காவற் கூண்டில் நிறுத்தியும் வைத்தனர்

உறிஞ்ச வந்த குருவிச்சைக் கூட்டமாய்
உருட்டியுருட்டி விசாரணை செய்தனர்
உரிஞ்சேயெறிந்தோம் இவர்முன் உடைகளை
ஊமைப் பாஷையி லுத்தர விட்டனர்

ஆளைக் கவிழ்த்து அங்கங் குலுக்கித்
தூளைத் தேடித் துருவியும் பார்த்தனர்



படிப்பகம்

www.padippakam.com


குற்ற வாளிபோல் எம்மை நடத்தி
குறுக்கு விசாரணை செய்து முடித்து
கைநாட் டிடும்படி கட்டளையிட்டு
கடைசியி லிரத்தமுஞ் சோதனை செய்தனர்

மோட்டார் வேகம் கூடியதென்று
மறித்து அதிலே விசாரணை தொடங்கி
வீட்டினில் வந்து தேடுதல் போட்டு
வெளிநாட்டான்நீ வேலையா செய்கிறாய்?
காட்டுன் கடவுச் சீட்டை நீயென்று
போட்டு விரட்டும் பொல்லாத சட்டம்
நாட்டுக்கு நாடு நாம்காணும் சட்டமாம்

கடையிற் கடையாய் நடத்திய பின்னர்
'கடையில்' தமிழனாய்த் தமிழன் வாழ்கிறான்
அளவுகடந்த ஆற்றல்க ளெல்லாம்
அந்நிய மண்ணில் அவமாகிப் போயின
வயது முதிர்ந்தோர் அனுபவம் ஆளுமை
வரண்ட நிலத்தில் விதையாய்ப் போயின
உலக அரங்கில் எமது மக்களின்
உண்மைப் பலங்கள் சிதறிப் போயின

அன்புக்குரிய வென்தமிழ் மக்களே
எங்கள் பங்கும் உலகிலேயுண்டு
'திங்கப் பிறந்தவன் தமிழன்' என்று
தீட்டுஞ் சரித்திரம் தீயிலே யிடுவோம்



படிப்பகம்

www.padippakam.com



தமிழனேனித் தரணியிற் பிறந்தான்?
தமிழனெதைத்தான் தரணிக்குத் தந்தான்?
நிமிர்ந்த தலையுடன் பிறந்தவனின்றேன்
நெளிந்து புழுவாய் நெடுவழி நகர்ந்தான்?

வரலாறில்லா இனமாகி
வரண்டு வற்றிப் பிணமாகி
தரையிற் றமிழன் அழிவானோ
தரணிப் புழுவாய் நெளிவானோ

உலகின் இனங்க ளெல்லாமும்
உயர்வுப் பாதை செல்லுகையில்
உலகத் தமிழன் தன்வாழ்வை
உடைத்துக் காலம் உருட்டுவதேன்?

உலகின் திசைகளெல்லாமும்
ஓடிச் சென்றான் உயிர் வாழ
பழகுந் திறத்தாற் பலரோடும்
பகிர்ந்து கொண்டான் தன் வாழ்வை

தலையும் முகமும் உடல்தானும்
தமிழனென்று பகர்ந்தாலும்
கலையும் மொழியுங் கைவிட்டுக்
காலச் சிறைக்குப் பலியானான்



படிப்பகம்

www.padippakam.com


பேரைக் கேட்டாற் தமிழ்ப்போர்தான்
பேரன் பேத்தி தமிழென்பான்
ஆரைக்கேட்டோ அறிகின்றான்
அவனோரினத்தின் வேரென்று

சிங்கப்பூரில் மலேயாவில்
சின்னத்தீவாம் மொறீசி யசில்
தென்னமரிக்கத் தீவோடு
இன்னும் பற்பல நாடுகளில்
தங்கப் போன தமிழ் மக்கள்
தாயை மறந்து தங்கியதால்
திங்கப்பிறந்த தமிழரெனும்
தாழ்வுப் பெயரைத்தழுவினரே

ஒருபே ரினமாய் உருவாகி
உலகமறையின் கருவாகி
பெருமை கொண்ட தமிழ் மாந்தர்
புவியிற் தாழ்ந்த தெதனாலோ?

இந்தக் கேள்வி யென்நெஞ்சில்
எழுந்து நின்று வாட்டுகையில்
வந்த பதிலை வடித்திட்டேன்
வருத்தத்தோடு குறித்திட்டேன்

தமிழனுலகின் தரம் நோக்கித்
தரத்தான் பிறந்தான் அவன் போற்றும்


படிப்பகம்

www.padippakam.com



அமிழ்தாம் மொழியும் அவன் கலையும்
அவனிக் குயர்வு தருமென்பேன்

பண்பாடுண்டு அவனுக்குப்
பாரையணைத்து வாழ்கின்ற
அன்பாருள்ளம் அவனுள்ளம்
அழகுக்கலையி லவன் வெள்ளம்

கட்ட டங்கள் ஓவியமும்
காவியம் சிற்பம் கற்பனையும்
சட்டம் சமயம் சங்கீதம்
சமையல் தையல் சித்திரமும்
பித்தம் வாய்வுப் பிணிபோக்கிப்
பிணியே அணுகா வாழ்வுதரச்
சித்தந் தெளிய மருத்துவமும்
சிந்தனை வளர்க்கும் அறிவியலும்
சித்தின் அந்தம் சித்தாந்தம்
சிறப்புப் பொருளாய் வேதாந்தம்
பாட்டுங்கூத்தும் இலக்கியமும்
பலகைத்தொழிலுங் கமத்தொழிலும்
ஓட்டிக்கப்ப லாழ்கடலில்
உலகஞ்சிறக்க வாணிபமும்
ஆட்டும் புயலையெதிர்த்தெழுந்து
அள்ளிக் கொணர்ந்த கடற்றொழிலும்
ஏட்டுக் கல்வி தொழிற்கல்வி
ஏற்றம் கொடுத்த குரு பக்தி



படிப்பகம்

www.padippakam.com


நாட்டின் வளங்கள் தெரிந்தவற்றை
நன்றாய்ப் பெருக்குந் திறன் யாவும்
பாட்டன் கலைகள் பழந்தமிழன்
கோட்டங் கடலில் மூழ்கியதாம்

வண்டிச் சக்கரம்
செங்கல்லுக் கட்டடம்
தங்கம் வெள்ளி
செம்பொடு தந்தம்
கொண்டு செய்த
கணையாழி மங்கையர்
காப்பும் மாலையும்
காதணி மூக்கணி
சீப்பு யாவையும்
செய்து செழித்தநல்
மூத்த தோர்குடி
தமிழர் தொன்குடி

ஆயும் உள்ளம் அகிலத்தின் அன்பிலே
தோயும் உள்ளமும் தமிழனின் உள்ளமாம்

வீட்டை நாட்டை விளக்குகின்ற
வெளிப்பாடெமது வரலாறு
காட்டு இனங்கள் இன்றெமக்கு
கல்வி புகட்ட வந்ததையா
வேட்டையாடச் சென்றவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



வெட்டிச் சுட்டு வாழ்ந்தவர்கள்
சூட்டுச் சத்தம் போட்டுலகைச்
சூறையாடிப் பிழைத்தவர்கள்
ஆட்டுமந்தைக்கூட்டமென
ஆண்டாரெம்மைப் பலதடவை

கேட்டுப் பார்த்தேன் காரணத்தை
கெட்டிக்காரத் தமிழ்க்கூட்டம்
ஓட்டமெடுத்து அலைவதுதான்
ஏனாம் என்றும் சிந்தித்தேன்

தன்னைச் சுற்றிச் சிறுவட்டம்
தானேயிட்டுச் சுயநலத்திற்
பின்னிக்கிடக்கும் பிழையொன்றே
தமிழ்ப் பேரினத்தின் பிழையென்பேன்
என்னை விடயா ரிருக்கின்றார்
என்ற நினைப்பிற் தனக்குள்ளே
எண்ணிக் கிடக்கும் எண்ணந்தான்
எங்கள் தமிழர் தவறென்பேன்

தனித்துப் பார்த்தால் தமிழன்தான்
தகைமை கொண்டு வழி சொல்வான்
அணைத்துக் கொண்டு வாழென்றால்
அதுதான் வேண்டாம் எனச் சொல்வான்



படிப்பகம்

www.padippakam.com


உலகில் வாழும் இனமெல்லாம்
தாமோரினமாய்த் திரளுகையில்
அலையுந் தமிழன் தன்வீட்டில்
அடைந்து கிடக்க நினைக்கின்றான்
தலையிற் குருதி வழிந்தோடத்
தஞ்சம் கேட்டு ஓடுகையிற்
கலையும் இவனின் கனவொருநாள்
காலம் இவனை நிந்திக்கும்
விலையொன்றில்லா விடுதலையை
வேண்டிக் கண்கள் விழித்திடுவான்

அந்நிய மொழியும் அவர் கலையும்
அழகென வெண்ணி உறங்குகின்ற
எந்தமிழ் மக்கள் உணரட்டும்
எம்மவர் பெருமை புரியட்டும்
பூ ட்டிய விலங்குகள் ஒடியட்டும்
புதுத் தமிழுலகம் பிறக்கட்டும்
கூட்டியே தமிழர் தகவல்கள்
குறைவற விங்கு நிறையட்டும்
ஆட்சியொன்றெமக்கு அமையட்டும்
எந்தமிழீம் மலரட்டும்
மாட்சிமை கொண்ட தலைமையின் கீழ்
மாநிலத் தமிழர் திரளுகவே


படிப்பகம்

www.padippakam.com



# அமுது

ஐம்பது நிமிடத்தில் அத்தனை இன்பமும்
அலுத்துப் போகின்ற அந்நிய மண்ணிலே
எண்பது வயதிலும் இன்னொரு பெண்ணை
எட்டிப் பிடிக்கின்ற திரிசங்கு சொர்க்கத்திற்
தின்பதும், குடிப்பதும, திரிவதும் பின்வந்து
தட்டுத் தடுமாறிக் கள்வெறி மயக்கத்தில்
மந்த இருளிலே மனைவியென்றெண்ணி
வந்த உருவத்தை வழிமறித்தணைப்பதும்
விந்து காவிடும் விஞ்ஞானச் சேர்க்கையில்
சந்ததீயென்ற பெயரிலே சடலங்கள்
தந்து போவதும், தாரமும் தாயுமோர்
தந்தையும் மாறிய குடும்பங்கள் படைப்பதும்
எந்தப் பாவமும் அறியாக் குழந்தையைச்
செந்தீயில் எரிப்பதும் சுடுநீரிற் தோய்ப்பதும்
பிஞ்சு மழலைகள் பித்துப் பிடித்தொரு
ஐந்து வயதிலே அரக்கர்கள் ஆவதும்
குஞ்சு குழந்தைகள் குட்டிப் பிசாசுக்
கூட்டமாகியே கூரைகள் எரிப்பதும்
இன்று ஒருவன் நாளை ஒருவன்
என்று திருமணம் பண்ணிக் களைப்பதும்
அண்டை அயலவர் துன்பம் அறியாது
உண்டு களித்து உள்ளே கிடப்பதும்
அன்றாட நிகழ்வெனக் கொண்ட உலகிலே
இன்றொரு பொன்விழா நிகழ்ச்சியைக் காண்பது
கண்கொள்ளா அதிசயக் காட்சியல்லவா?



படிப்பகம்

www.padippakam.com


எங்கள் மண்ணிலே திருமணம் நிரந்தரம்
இனிய மக்களின் ஏற்றம் நினைத்திடும்
சங்கமம்ஒரு குடும்பமென் றெம்முள்ளே
நின்று ஓர் குரல் எழுப்பினர் நம்மவர்

ஐம்பதாண்டுகள் அன்பு வாழ்க்கையைக்
கண்டு நின்றிடும் கவிஞர் குடும்பத்தின்
பொன்வி ழாவிலே புகுந்து களிக்கின்ற
இன்ப அனுபவம் இறைவன் வரமன்றோ

இன்றெலாமிது எமக்குப் புதியது
இன்பமென்பதே என்னவென் றறிந்திடும்
பண்பு நீங்கிய பாவிய ராகநாம்
பாரின் எல்லைகள் பார்த்து நடக்கிறோம்

தந்தை தாயரைத் தாரம் கணவனைக்
கொன்றும் பணந்தேடும் கொள்கை மிகுந்தோராய்
நின்று தவிக்கின்ற நீசர் உலகத்தில்
இன்று நாம் வாழ்கிறோம் இதுவோர் உண்மையாம்
குன்று கரைந்தோடிக் குளநீரிற் கலந்தாற்போல்
தின்றிடத் தீன்தேடும் தெருநாய்கள் நாமானோம்

அன்னை திரேசாவின் அன்புப் பெயரினைத்
தன்னிற் சூடிய தாயே உமக்கு என்
அன்பு வணக்கங்கள் அம்மாவின் நிலையிருந்
தென்னை வாழ்த்திடத் தங்களை வேண்டுவேன்



படிப்பகம்

www.padippakam.com



பொன்னை மணியைப் பொருளை நிலத்தைத்
தென்னந் தோப்பினைத் தோட்டந்துரவினைப்
பென்னம் பெரிய வீட்டைப் புதுக்காரை
எண்ணிக் கிடந்து ஏங்கும் உலகிலே
மண்ணையும் விண்ணையும் மாபெருங்கடலையும்
பண்ணையும் பாட்டையும் பரந்த இவ்வுலகையும்
கன்னற் தமிழையும் கலை பண்பாட்டையும்
எண்ணத் திருத்தி யெழுந்திடும் ஞாயிறாய்
உண்மைக் குரலாய் ஒலிக்கும் முரசமாய்
என்னைத் தவிர வேறொன்றும் தர இல்லை
என்றே நினைத்து எழுதுவோர் கவிஞர்கள்

சின்னக் குழந்தையின் உள்ளம் இவருக்கு
சீறுவார் பின்னர் சினந்தணிந்தன்புடன்
கண்ணீல் நீருடன் காலடி சேருவார்
காலக் கண்ணாடியாய் நாலையும் பேசுவார்
என்னைவிட இந்த உலகிலே உயர்ந்தவன்
இன்னும் இல்லையென்றே இவர் கூறுவார்
அன்னம் இல்லை எனும் நிலை மறந்தவர்
மன்னுயிர்க் கெல்லாம் மாளிகை கட்டுவார்
தன்னுடல் தனை மறைத்திடத் துணிக்கிவர்
என்ன செய்வா ரென எண்ணியிருக்கையில்
கண்ணனார் தந்த துகில் தனைப்பாடியே
கண்ணை மூடித் தம் கைதட்டி ஆடுவார்



படிப்பகம்

www.padippakam.com



வானம் பொய்க்கினும் வயல்தான் புகைக்கினும்
தானம் பொய்க்காத் தரணியை வேண்டுவார்
ஊனும் உடலும்தான் உள்ளே எரிகையில்
மானம் பொய்த்திடா மாண்புகள் தேடுவார்

இலட்சி யத்தினால் இழப்புகள் நேர்கையில்
அலட்சி யத்துடன் உயர்வழிக் கோடுவார்
இலக்கி யத்தையும் இசையையும் நாடுவார்
இன்பவாழ்வென அன்பினைப் பாடுவார்
ஒன்றுதெய்வ மென்றேபுகழ்ந் தேத்துவார்
உலக மாந்தரின் ஒற்றுமை பேணுவார்

விளக்கதாய் அகம் வீற்றிருக்கும் மனை
விளக்கின் மடியிலே வேதனை ஆற்றுவார்
களைப்பு நீங்கிடக் காதலின் இன்பத்திற்
திளைத்து மகிழுவார். தித்திக்கப் பேசுவார்
மழைக்கும் மாலைக்கும் மலருக்கும் வீணைக்கும்
அழைப்புத் தந்திவர் அவரோடு பேசுவார்
இளைப்பிலா நல்லிதயம் இவருக்கு
இறப்பு வரைக்கும் இளையோர் இவர்களாம்

அடித்து வீழ்த்திட ஆத்திரங் கொண்டிவர்
துடித் தெழுந்து பின் தோத்திரப் பாடலில்
முடித் தடங்குவார் முனிந்தது தான் மறந்
தினிக்கப் பேசியே நட்பினைத் தேக்குவார்



படிப்பகம்

www.padippakam.com



உள்ளிருந்தெழும் உணர்ச்சியை மறைத்திடும்
கள்ள மென்பதைக் கற்க விரும்பிடார்
வெள்ளைப் பூவென விரிந்த உளத்திலே
விளையும் தேனிவர் பிறவியின் பெருமையாம்

இப்படியான
இனிய கவிஞனின்
இல்லத்தரசியாய்
இணைந்து வாழ்ந்தவோர்
பெட்புறு தேவிக்கென்
பெரிய வணக்கங்கள்

தமிழ் மகளிடம் தம்மைக் கொடுத்தோர்க்குத்
தாரமாய் வந்தோர் தலைவிதி தனிவிதி
அழகு மாளிகை அடுத்தவர் போற்றியே
பழகும் பான்மையில்பதவிகள் பட்டங்கள்
மிளகு மல்லிக்குப் பஞ்சமிலா வாழ்வு
அளவிலா வரு மானம் இவைகளின்
நிழலும் படாதவன் கவிஞன் எனும் நிலை
நிலவி வந்தது நேற்றுநம் மண்ணிலே

அரச கட்டிலில் அருகிருந்தே பல
பரிசு வாங்கிய நாட்களும் போனதாம்
முரசறைந்தொரு முதன்மைக் கவிதைக்கு
முடிப்புத் தந்ததும் முன்னர் நடந்ததாம்



படிப்பகம்

www.padippakam.com


தமிழைப் போற்றுவோன் தரித்திரம் பிடித்தவன்
வயிறு நிரப்பிட வார்த்தைகள் விற்குமோர்
வணிகன் என்றெல்லாம் வர்ணனை செய்தவர்
வாழ்ந்து போயினர் வரலாற்றின் பாதையில்

துன்பச் சுடுகாட்டிற்
துணைவியுடன் கண்ணீரில்
விம்பமென வீழுகின்ற
வீழ்ச்சியது தான் மறைந்து
கம்பளத்தில் வாழ்ந்து
கனித்தமிழிற் கவியெழுதும்
இன்ப நிலையொன்று
இங்கு வரவேண்டுமென்பேன்

இரப்பவனின் இதயத்தில்
எழிற் கவிதை சுரக்குமென்ற
அரைப்பனிதான் உருகிவிட
ஆதவனை வேண்டிநிற்போம்

ஐம்பது ஆண்டுகள் அருமைத் துணைவியாய்
இல்லற வாழ்வினை இயற்றிய திரேசா
அம்மையார் அவர்களே!
இன்றைய மாதரின் இழிநிலை தன்னைக்
கண்டு கொதித்திடும் அன்னையர் வரிசையில்
நின்றிடும் உங்கள் நிலைமை நாம் அறிவோம்


படிப்பகம்

www.padippakam.com



சமத்துவம் என்ற சிந்தனை தன்னைச்
சாக்கடை வீழ்த்திடும் நிலைக்கு
வளர்த்திடும் கொடிய சந்ததியொன்று
வளருதல் நம்மிடை கண்டோம்
நினைத்ததும் புதிய நிழல்தனைத் தேடி
நீட்டுவார் கரங்களை இவர்கள்
அணைத்திடும் ஆணை அழைத்திவர் வாழும்
அசிங்கத்தைச் சமத்துவம் என்பார்

விழியொடு விழியுற விளைந்த காதலும்
அழியா அன்பில் ஆர்த்தெழும் நட்பும்
குழிபுதைப் பொருளாய்க் குன்றிப் போனதாம்

விழியொடு விழியா பேசியதின்று?
அழிவிலா அன்பா ஊறியதின்று?

கழுவாப் பற்கள் கடித்துக் குதற
முழுகாக் குளிக்கா முதலைகள் முட்டிக்
கொழுவியிழுக்கும் பான்மையில் இங்கு
வழி தெரு நின்று பேசுதல் கண்டோம்

பேசுவ ரொருகணம் பேச்சி னிடையிலே
தேய் சுகம் தேடிச் சூழலை மறந்து
நாய்களைப் போல நடுத் தெரு நின்று
மூசி முனகி முகத்தொடு முகம் பட
நோசுடன் நோசினை உரசுவர் உதடுகள்
பேய் சுரம் கண்டு பிணைபட நிற்பர்



படிப்பகம்

www.padippakam.com


மழலைகள் செல்வர்! மாதர்கள் செல்வர்!
இளையவரோடு முதியவர் செல்வர்!
விதவையர் செல்வர்! பலவீனர் செல்வர்!
உளமது நொந்த உலுத்தரும் செல்வர்!
அறிவறிந்தோரின் ஆய்வுகள் அறிவீர்
அதிசயக் கொலைகற் பழிப்புகள் அறிவீர்
வெறிதனைத் தூண்டும் வினையிது காமப்
பொறியென உணரல் கற்றவர் கடனே

கண்டதும் காதல்
கதைத்ததும் போதல்
காம சூத்திரத்தினை ஓதல்
களித்து ஒன்றாதல்
காமத்தில் ஈதல்
கருத்தரித்தால் உடல் ஊதல்
கருத்திலே மோதல்
வெறுத்து வேம்பாதல்
கவல் கொண்டு முடிவிலே சாதல்
பிள்ளைகள் வெளியிலே
கூதலில் நோதல்
நள்ளிராக் கரத்திலே வீழ்தல்

இதையெல்லாம் கேட்டோமோ
நேற்றுவரை காதில்



படிப்பகம்

www.padippakam.com



புதிய நிலங்களிலே
புற்றீசற் கூட்டமென
வதிய வந்துவிட்டோம்
வாழ்வை அமைத்துவிட்டோம்

காலக் கடலலையிற் கட்டையென மிதக்கும்
கோலம் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்க் கோலம்
நீலக் கடலதனை நீந்திக் கடந்து விட்டால்
வாழக் கிடைக்கும் வசதியென வெளிநாட்டில்
ஓலம் இடுகின்ற உலகத் தமிழருள்ளார்
நாலும் கிடைக்கும் நமது மொழி பண்பாடு
ஏலம் போட்டு விட்டால் என்றும் நினைக்கின்றார்
ஈழத் திருமண்ணின் இனத்தின் பெருமை கொன்றார்

இது கண்டு நெஞ்சு பொங்கி
எழுகின்ற இந்த வேளை
புதிதாகக் காதில் வீழ்ந்த
பொன் விழாச் சேதி கேட்டு
இறுமாந்து போனேன் எங்கள்
அன்பார்ந்த அமுது என்ற
கவி வாழ்ந்து களித்த நாட்கள்
நினைவேந்தும் நிகழ்வு நன்றே

அமுதுவின் கவிதை தந்து
அருந் தமிழிதயந்தன்னை
உழுத நற் பெரியோய் உங்கள்
உளத்துயர் வன்பு கண்டோம்



படிப்பகம்

www.padippakam.com



இளவாலை பிறந்து அன்பால்
இளவாலைதனை மணந்து
நிலவோடு வானம் போல
நீரோடு அலைதான்போல
மலர்வாழும் மணத்தைப்போல
மதிவாணர் அறிவைப்போல
நிலையாகக் கூடிநிற்கும்
நீள்புகழ் நின்று வாழி

என்றாலும் இந்த நேரம்
எந்தமிழ் மக்களுக்காய்
நெஞ்சாரச் சேதியொன்று
நீட்டியே செல்வேன் எங்கள்
மண்வாழவேண்டு மென்று
மன்றாடிக் கொள்வீர் எங்கு
சென்றாலும் நாங்கள் சொந்த
மில்லாத குடிகளானோம்

துண்டோடு துளிநீர் கேட்டுத்
துறைகளில் நிரையாய் நின்று
மண்டாடி வாழும் வாழ்வை
மனித்துவம் ஏற்றிடாது
கொண்டாடப் பெருமையில்லை
கொடிகட்ட நிலமுமில்லை
நின்றாடி மகிழ்ந்துலாவ



படிப்பகம்

www.padippakam.com



நமக்கென்று நாடுமில்லை
துண்டாடி யெம்மையங்கே
துயரத்தில் நீந்த வைக்கும்
சண்டாளர் சாய்ந்து இந்து
சமுத்திரத் தமிழன் மீண்டும்
வென்றாளும் நிலையை வேண்டி
விழிப்போடு குரல் கொடுப்பீர்

சங்கானை சித்தங்கேணி
புளியடி வாங்கோ வந்து
சில்லாலை ஏறு என்ற
சொல்காதில் வீழும் நாட்கள்
இல்லாத வாழ்க்கை வீணே
என்று நாம் கடமை செய்வோம்
பண்பாட்டை மாற்றிப் பேசும்
பரிபாஷை தன்னை மாற்றிப்
பெண்டாட்டி மாற்றிப் பிள்ளை
படிப்புக்காய் மதத்தை மாற்றித்
திண்டாடும் நிலைமை வேண்டாம்
திருந்தியே தமிழர்தொன்மைப்
பண்பாட்டை நினைப்போம் எம்மைப்
பெற்றாரின் பெருமை காப்போம்!

எத்தனை தரம் குளித்தும்
எம் நிறம் மாறிடாது
எத்தனை கரம் பிடித்தும்



படிப்பகம்

www.padippakam.com



எம் மினம் மாறிடாது
எத்தனை சுரம் படித்தும்
எம் குரல் மாறிடாது
சத்தியம் எமக்குள் வாழும்
சரித்திரம் ஒரு நாட்பேசும்

இத்தினம் இந்தப் பொன்னாள்
எனக்கு மோர் வாய்ப்புத் தந்த
வித்துவான் எங்கள் மண்ணில்
விளைந்த னல்லமுது தோளிற்
சொற்களால் மாலை செய்து
சூட்டியே மகிழ்ந்தேன் அன்பால்
நற்றுணை அழகு செய்த
நாயகி திரேசா வாழி
பொற்றமிழீழம் பெற்ற
பெருங்கவி மரபில் வாழும்
இப்பெருங்கவியை வாழ்த்த
எனக்கிங்கு தகைமையில்லை

பெற்ற என் தந்தை அந்தப்
புலவனைப் பார்த்திரேன் நான்
கற்றதும் யாதொன்றில்லை
கன்றெனை அணைத்து வாழ்த்தும்
பெட்புறு பெரிய நெஞ்சின்
பெருந்தன்மைக் கெனது நன்றி



படிப்பகம்

www.padippakam.com



முளைக்கின்ற பயிரை வாழ்த்தி
வளர்க்கின்ற உள்ளங்கொண்டோர்
கிடைக்கின்ற தருமையிங்கே
பெரியவர் அமுது எங்கள்
தடைக்கற்கள் உடைக்கும் மூத்த
தலைமுறைக் கவிஞராகி
நிலைக்கின்றார் எமது நெஞ்சில்
நீடு நீர் வாழி வாழி

(தமிழறிஞரும் முது பெரும் கவிஞருமான திரு அமுத சாகரன் அடைக்கலமுத்து (அமுது) அவர்களின் 50 ஆவது திருமண ஆண்டு நிறைவையொட்டி இடம் பெற்ற பொன்விழாவில் பாடிய கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



## குரலடங்காது

குண்டுகள் வீழினும் குரலடங் காது!
குரல்வளை இறுக்கினும் குரலடங் காது!
துண்டமாய் வீழ்த்தினும் குரலடங் காது!
கூண்டினில் அடைக்கினும் குரலடங் காது!
குண்டர்தம் படையுடன் கொலைகார அரசு
குற்றுயிராக்கினும் குரலடங் காது!
கொண்டதோர் இலட்சியக் கொள்கையில் வாழும்
கோடி தமிழரைக் குவலயங் கொண்டதால்!

வண்டுகள் கூட விடுதலை பாடும்
வானத்து விண்மீன்கள் விடுதலை பாடும்
கெண்டை மீன்கூட விடுதலை பாடும்
கௌதாரி குயில்களும் விடுதலை பாடும்
சுண்டெலி கூடச் செந்தமிழீழத்திற்
சுதந்திரப் பாட்டையே சுவையோடு பாடும்
பண்டு போல் என்றுமே பழந்தமிழ் தர்மத்தின்
பக்கமே நின்று தன் பலத்தினை வளர்த்ததால்!

இன்று எம் கண்களில் இரத்தம் வடிந்திட
இறப்பொன்று நடந்தது எல்லோரும் அறிந்ததே
குன்று போல் நின்ற எம் குமார் பொன்னம்பலம்
கொலையுண்ட செய்தியால்எம் நெஞ்சு தகர்ந்ததே
மன்றிலே தமிழரின் மானப் போர் வென்றிடும்



படிப்பகம்

www.padippakam.com



என்றதோர் உண்மையை உலகுக்குக் கூறிய
பொன் குரல் பூமியின் பொல்லாத அரக்கரால்
பூவுடல் நீங்கியே புகழுடல் கண்டதே

கேட்பா ரில்லாதவர் என்று நம் தமிழரைக்
கொழும்பின் அரசு கொழுத்திட நிற்கவும்
தாழ்ப்பா ளில்லாதவை தமிழரின் இல்லங்கள்
தகர்த்திடுவோமெனத் தறுக்கர்கள் நடக்கவும்
கூப்பா டிட்டவர் தொண்டைக் குழியினிற்
கொட்டாந்தடி கொண்டு குத்திக் கிழிக்கவும்
சாப்பா டுஇன்றியே சிறையிலே நம்மவர்
சத்திய வேள்வியிற் சவமாகிப் போகவும்
பார்ப்பீர் புலிகளின் போர் வெல்லும் என்று
பணியாத நெஞ்சுடன் பகைவரின் மத்தியில்
நாப்போர் நடத்தியே நமக் கென்று துணிவுடன்
நல்லவை செய்ததோர் வீரமாமனிதனைக்
காப்பின் றிக்காடையர் கரங்கொண்ட துவக்கினாற்
கருக்கிய கொடுமையைக் காசினி கண்டதே

சுற்றி வளைப்புகள் சுட்டெரிப்புகள்
பற்றியிழுப்புகள் பண்பாட்டு அழிப்புகள்
குற்றமில்லாமலே கூண்டிலே அடைத்து
குற்றுயிரோடு குழிமூடும் நிகழ்வுகள்
சித்திரவதைகள் சிரச் சேதங்கள்
சட்டங்கடந்த சிறைத்தண்டனைகள்
இத்தனை கொடூரங்கள் இராணுவம் செய்ய



படிப்பகம்

www.padippakam.com



இவற்றிற்கு உரம்போடும் சிறீலங்கா அரசின்
பொய்த்திரைவிலக்கிடப் பெரும்பாடு பட்ட
பொன்னம்பலத்தின் பிரிவு கொடுமையே

மனித உரிமையின் மகத்துவம் நம்பித்தன்
மக்களை அணைப்பதே மார்க்கமாய் மாற்றிய
இனிய உயிரொன்றின் இதயம் சரிந்தது
இதுவே தமிழர்க்குத் தீர்வெனத் தெரிந்தது

பேச்சுச் சுதந்திரம் பிணமாக்கப்பட்டது
பேச்சினி எதற்கு? என்ற பிரக்ஞையே
மூச்சாய் இன்று தமிழருட் புகுந்தது
ஆட்சி யொன்றமைத்து அரசினைத் தமிழன்
ஓச்சுதல் ஒன்றே உரியதாய்ப் பட்டது
காய்ச்சிக் கிடக்குது சுதந்திரம் என்ற
கனவுகளெல்லாம் எமைவிட்டுச் சென்றது
மாட்சிமைதங்கிய சிங்கள அரசென்ற
மாயைக்கு மங்களம் பாடிடச் சொன்னது

அழியா வரம் பெற்ற அன்புத் தமிழினமே
அழாதேநீ அழாதே நீஅழக்கூடாது
விழியை நோக்கி விரைந்திடும் நீரைநம்
விடுதலைப் பயிரை நோக்கித் திருப்புவோம்

தட்டேந்தப் பிறந்தவ னல்ல தமிழன்
கொட்டிக் கொடுக்கப் பிறந்தவன் தமிழன்



படிப்பகம்

www.padippakam.com



சட்டமும் நீதியும் தமிழர்க்குப் புதிதல்ல
சட்டத்திற் தமிழன் சரித்திரம் கண்டவன்
முற்றிலும் கற்று முதிர்ந்து புகழ்கொண்ட
சட்டத்தின் அறிஞனை எரித்திடும் நாளிது

சட்டத்தை நீதியைச் சனநாயகத்தை
விட்டுச் செல்வது எம் வழியல்ல
கொற்றம் பிழைத்ததாற் கொடியை உயர்த்தினோம்
கொள்கையை நசித்ததாற் கொதித்து எழும்பினோம்
பெற்ற பூமியிற் பேய்கள் புகுந்ததால்
பிள்ளைகள் தோளிலே ஆயுதங் கண்டோம்
இரத்தம் குடிக்கின்ற இராணுவ அரசின்
இரக்கமற்ற செய்கையை எதிர்த்தோம்

நாவைத் துண்டித்த நிகழ்வுகள் உண்டு
நகங்களைப் பிடுங்கிய நிகழ்வுகள் உண்டு
பார்வையைப் பறித்த பாதகம் உண்டு
பாதத்தை நொருக்கிய பயங்கரம் உண்டு
சாகுமுன் புதைத்த சம்பவம் உண்டு
சாகாமல் எரித்த சங்காரம் உண்டு
ஊடகம் உடைத்த உண்மைகள் உண்டு
உரிமைகள் மறுத்த உணர்வுகள் உண்டு

நீதி மன்றத்தில் நின்றவை ஒருசில
நீதி கிடைத்ததை நினைப்பதிற் பயனிலை
வாதத்தில் வென்றதோ சிங்கள வாதம்
வழக்காடி நின்றதோ இராணுவப் பாதம்


படிப்பகம்

www.padippakam.com



உலகத் தமிழனே ஓய்ந்து விடாதே
உண்மையைக் கூறாமல் உறங்கி விடாதே
கலையைக் கவிதையைக் கர்ச்சனையாக்கு
காலத்தின் தேவையை அர்ச்சனையாக்கு
மலையைத்தகர்த்திடும் மானத்தைத் தேக்கு
மண்ணைத் தொழுவதே மதமென ஆக்கு

சிங்கள அரசிடம் ஒன்றைத்தான் கூறுவோம்
எங்களின் கண்களை ஒருமுறை உற்றுப்பார்
அன்பை அறத்தை அகிம்சையைக் காண்பாய்
எங்களின் உயிரை ஒருமுறை தொட்டுப் பார்
எல்லோரும் இன்புற எண்ணுதல் காண்பாய்
எங்கள் பூமியின் புழுதியைச் சற்றுப் பார்
எறும்புக்கும் இடந்தரும் பண்பினைக் காண்பாய்
எங்கள் வாழ்வின் இதயத்தைக் கற்றுப்பார்
இல்லத்து விருந்தே இன்பமாய்க் காண்பாய்

சிங்கள மக்கள் சிதைவது கண்டு
சிரிக்கும் தமிழன் இங்கில்லை யென்ற
சங்கதி உனக்குத் தெரியாதிருக்கலாம்
உங்களை நாங்கள் வெறுப்பவர் இல்லை
உண்மையாய் உமக்குநாம் எதிரிகளில்லை
சங்கடம் எமக்கும் சவங்களைப் பார்ப்பது
எங்கோ ஒருதாய் அழுவதைக் கேட்பது



படிப்பகம்

www.padippakam.com



எங்களை விடுங்கள்
எம்மண்ணில் விடுங்கள்
நிம்மதியோடு வாழவிடுங்கள்
நீதியின் நிழலில் உறங்கிட விடுங்கள்

அலைந்து அலைந்து களைத்தது எம்மினம்
அழுது அழுது வரண்டது எம்விழி
தொலைந்த எங்கள் இன்பத் துருவத்தைத்
தொட்டுப் பார்ப்பதே எங்களின் விரதம்

ஆண்ட பழக்கம் தமிழனுக்குண்டு
அதற்குச் சான்றே புலிகளின் தொண்டு
நீண்ட போரை நிறுத்திட வாருங்கள்
நிலத்தில் தமிழர்கள் வாழ்வதைப் பாருங்கள்

(எங்கள் மண்ணில் நிகழ்ந்த அரச பயங்கரவாதப் படுகொலைகள், சித்திரவதைகள், சிறைத்தண்டனைகளை எதிர்த்தும், மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும், உலக மனித உரிமை நிறுவனங்களின்முன் குரலெழுப்பியும் வந்த மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கொலையுண்ட செய்தி கேட்டு நெஞ்சு நொந்து எழுதிய வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com



## நம்பிக்கைக் கதிர்கள்

அன்னையும் அவள் தன் அடிகளும் பிறந்த
தொன்மை கொள் நாடும் அது கண்ணினமும்
முன்னவர் தந்த முதுமொழி வளமும்
கண்ணெனக் கருதுதல் நங் கடனாமே

உண்மையும் அன்பும் உளம்விரி ஞானமும்
எண்ணிய பொருளை ஈட்டிடுந் துணிவும்
பெண்மையின் சிறப்பைப் போற்றிடுந் தகவும்
மண்ணினை யுயர்த்தும் மாண்புகளாமே

ஆன்றோர் வழியில் அரசியலறமும்
சான்றோர் வாழ்த்தும் சமூகத் துறவும்
ஈன்றோர் போற்றும் இனிய மக்களும்
தோன்றாத் துணையாய்க் கொள்வது நாடு

ஆக்கங் கொடுக்கும் அறிவியல் விரிவும்
தேக்க மில்லாத சிந்தனைத் தெளிவும்
வீக்கம் தடுக்கும் பொருளியற் செறிவும்
நோக்கம் நல்லார் ஆட்சியென்றறிவாம்

வரவறிந்தாற்றும் செலவுகள், களைத்து
வருவிருந்தறிந்து போற்றுதல் மக்கள்
மரபுகள் தெரிந்து வாழுதல் பிறரை
அரவணைத் திருத்தல் அவனிக்குயர்வாம்



படிப்பகம்

www.padippakam.com



புரிந்து வாழ் குடும்பம் புகழ் தருமக்கள்
தெரிந்து வாழ் சுற்றம் தேடிடும் நண்பர்
பரிந்து வாழ் அயலார் பயமிலாச்சூழல்
பொருந்தினால் உலகம் புத்தொளி பெறுமே

உலகதன் மேன்மை ஓம்பிடுமிலக்கியம்
கலகங்கள்ஓயக் கருதிடும் கலைப்புலம்
அலகிலா இயற்கையின் அற்புத இயல்புகள்
விலகிடா மருத்துவம் விழுமியம் தருமே



படிப்பகம்

www.padippakam.com



www.padippakam.com

# இறை தர்மம்

பூமியிற் கருவாய்ப் பூத்த
புல் புழு பூச்சிக்கெல்லாம்
தாம் தமக்கென்று கொள்ளத்
தர்மத்தை இறைவன்
தந்தான்!
ஆமிது உண்மை யென்பேன்
ஆண்டவன் படைப்பிலிங்கு
நாமொரு பிறவி கொண்டு
நடமிடல் தர்மமாமே!

கூவிடும் குயில்களுண்டு
குயில்களுட் கோடி கோடி
சாகியம் அவற்றுக்கென்று
சிறகுகள் வர்ணந் தீட்டி...
ஆவியும் உடலும் தந்து
ஆண்டவன் செய்த அந்த
ஓவியச் சிறப்புக் கண்டு
உவகையும் வியப்பும்
கொண்டேன்!

படிப்பகம்

www.padippakam.com


தாவிடும் குரங்குக் கூட்டம்
தனித் தனி அவற்றுக்கென்று
ஓவியம் வரைந்த தெய்வம்
எப்படிச் செய்ததாமோ?
பூவிலே வகைகள் கோடி
அவைக்கென மணத்தைத்தேடித்
தூவிய விந்தை வாழ்வின்
துல்லியம் விளக்குமாமே!

வானவில் நிறங்கள் கொண்ட
வரிகளும் புள்ளிக் கோடும்
தானமாய்த் தந்து தோலிற்
தோகையாய்ச் சிறகாய்ப் போர்த்து
கானகம் நிறைத்த தெய்வம்
கற்பனை யெழுச்சிகொண்டு
மோனமாய்ச் சிரித்தல் கண்டேன்
முழுமையோர் படைப்பாமென்பேன்!

சூழலின் தன்மைக்கேற்பச்
சுழன்றிடும் தன்மை தந்தான்!
ஆழ்கடல் நீரிற் பாறை
அடர் மலையுள்ளும் வெப்பம்
வீழ் நிலந்தனிலும் கூதல்
குளிர் பனிதனிலும் நின்று
வாழுயிர் படைத்த மேன்மை
வல்லவன் சிறப்பாமன்றோ!



படிப்பகம்

www.padippakam.com



கூடுதல் உயிர்க்கு இன்பம்
குலவுதல் உணர்ச்சிக் கின்பம்
சோடியாய்ச் சேரும் போது
சுரத்தலும் ஆங்கு இன்பம்
கோடியாய்ப் படைப்பில் இந்தக்
குணநலம் இயற்கை தந்த
ஈடிலாக் கொடை யாமென்பேன்
இணையிதற் கேதுமுண்டோ!

உறவுகள் படைத்தான் ஆங்கு
உணர்வையும் ஊறவைத்தான்
பறவைகள் பாம்புக் கூட்டம்
பல்லின விலங்குயாவும்
உறவினில் அணைத்தல் உண்டு.
உதாரணம் பலவும் உண்டு
அறிவியல் வயலில் உள்ளார்
ஆய்ந்திதன் விளக்கம் சொல்வார்!

தன்னினம் அறிந்து கூடல்
தனித்துவம் உயிர்கட்கெல்லாம்
தன்னியல் புள்ள யாவும்
தாங்கிடும் பொதுமைப் பண்பாம்!
மன்னுயிர் யாவும் தம்முள்
மாதொடு ஆணாய்க் கூடும்
வண்ணமாய் வாழ்வு தந்து
வையகம் யாத்தானன்றே!



படிப்பகம்

www.padippakam.com



படைப்பெனும் தத்துவத்தின்
பெருமையைப் புரியார் வாழ்வை
நடைப்பிண மாய்க் கழித்து
நாட்களை வினையஞ் செய்வார்!
உடைத்தொரு இயற்கைத்தாயின்
உயர்வினை மாற்றித் தீய
படைக்கலம் அமைக்கும் பாவம்
பாரினை அழிக்குமாமே!

நாதமோர் விந்தினோடு
நற்கலை ஓசையாகி
பாதியாய்ப் பாதியாகிப்
பலம்பெறும் தத்துவத்தை
மாதொடு ஆணாய்க் காட்டி
மறை தருலிங்கமாக்கி
ஓதிய முன்னோர் தம்மை
எண்ணிடல் பொருந்துமாமே

வியத்தகு பிறவியிந்த
மானிடப் பிறவியென்று
உயர்த்தினர் ஆன்றோர் மேலாம்
உள்ளமுண்டென்றும் கண்டார்
செயத்தகு செயலாற்றுண்டேல்
சேவையும் தொண்டும் அன்பும்
வயப்படும் வையம் நோக்கி
வாழ்ந்து கண்மூடலாமே!



படிப்பகம்

www.padippakam.com



உள்ளமென்றொன்று வைத்து
உணர்வுகள் அங்கு வைத்து
வெள்ளமாய்க் குருதி வைத்து
வாய்வு நீர் உறுப்பு வைத்து
சுள்ளியாய் எலும்பு வைத்து
சுற்றியே நரம்பு தைத்துத்
தள்ளினான் தோலிற்போர்த்து
தரணியில் உருண்டோம் நாமே!

இரத்தத்தில் சிவப்பு வைத்து
இயக்கினான் சக்தி தந்து!
உறக்கத்திற் கனவுகாணல்
உயிர் காக்கும் வழியைத் தேடல்!
வருத்தத்தில் வாடல் தேக
வளர்ச்சிக்கு உணவு வேண்டல்
கருக்கட்டி யினம் பெருக்கல்
காசினித் தர்மமென்றார்!

தருமமோர் நியதி செய்து
தரணியைத் தாங்கி நிற்றல்
புரிவது மனித தர்மம்!
புகழ் பொருள் அமைய வேண்டிச்
சரியிலா வழியிற் சென்று
சரித்திரம் படைத்தல் கேடு
தருமெனச் சான்றோர் தங்கள்
தரிசனக் குறிப்பாற் கண்டார்!



படிப்பகம்

www.padippakam.com


ஆண் எனும் அமைப்பினுள்ளே
பெண்மையைத் திணிக்கும் செய்கை
வீண் இது வெறியராட்டம்
வெற்றிபெற் றிடவே மாட்டார்!
தாண்டவம் புரியுமிந்தத்
தாரணி இயற்கை பொங்கி
மூண்டொரு தீயாய் எம்மை
முடித்திட எழுவாளன்றோ!

கருவறை தந்தான் தாய்க்குக்
காத்திடும் அன்பு மென்மை
கருணை கொள் உள்ளம் யாவும்
உரியதாய்ச் செய்தான்ஊட்டும்
பெருமையும் அவர்க்கே தந்தான்
பேதமை கொண்டு பெண்ணை
அடிமையாய் எண்ணும் பாவம்
மனிதனின் கொடுமையன்றோ?

பார்வையின் பொருளாய்ப் பெண்ணைப்
படைத்தவன் மனிதன் அன்றோ?
போர்வையைப் போர்த்தி மூடி
பூமுகம் புதைத்து மாதர்
நீர்மையைக் கெடுக்கும் நீசர்
நீதியைக் கொன்றார் இந்தப்
பாருய்யும் அருளாய் வந்தாள்
பெண்ணெனப் புரிதல் தர்மம்!



படிப்பகம்

www.padippakam.com



ஆணொரு பெண்ணாய் மாறி
அழிந்திடத் துடித்தல் கண்டு
நாணி நான் கூசுகின்றேன்!
நாச்சுடக் குமுறுகின்றேன்!
தூணொடு தூண் கலந்து
துய்ப்பதோ இன்பமிங்கு?
வீணரே விழிப்பீர் வாழ்வின்
விருத்தியைக் குலைக்கலாமோ?

நோய்கள் மேல் நோய்கள் தோன்றி
நெறிகளைப் புவிக்குச் சொல்லிப்
போவது புரிவோம் பாழும்
பிணியினில் இருந்து மீள்வோம்!
தாய் மகள் பிள்ளை தந்தை
தம்பியோர் அண்ணன் தாரம்
தூய நல்லுறவு கண்டு
துயரிலா உலகு செய்வோம்!

உலகமும் ஒன்றே ஈங்கு
உள்ளவர் ஒரு குடும்பம்
கலகமே வேண்டாமென்று
காப்பதே மனித தர்மம்
அயலவர் அன்பு பேணி
ஆங்கவர் இனங்கள் பேணி
குலவுவோம் குடும்பமாக
குவலயம் சிறக்கத்தானே!



படிப்பகம்

www.padippakam.com



கோள்களின் இயக்கந்தன்னைக்
கோர்த்திங் கொழுங்கு செய்து
நாள் திசை நியமித்தானை
நாயகன் என்றே கொள்வோம்!
ஆள்கிறான் பஞ்ச பூத
அமைப்பினை அவற்றின் காலம்
நீள்வது உணர்ந்தார் அந்த
நியதியின் பெருமை காண்பார்!

இயங்கிடு பிரபஞ்சத்தை
இயங்கிடத் தொடக்கிவைத்த
இயந்திர மூலம் யாதோ
இயக்கிடும் சக்தி யாதோ
இயம்பிட அறியா திங்கு
இளைத்தது அறிவின் கூர்ப்பு
மயங்கியே நின்றே னந்த
மாபெரும் விந்தை யெண்ணி!

ஊழ்வினைப் பயன்கள் ஆத்மா
உணர்த்திடும் தொடர்பு தர்ம
வாழ்வது தெய்வச் சான்றாய்த்
தரணியில் உள்ளதாகும்!
பாழ்பட அறிவு செய்து
பாரினை யழிக்கும் பண்பைத்
தூள்படச் செய்யும் அன்பு
துலங்கிட வாழுவோமே!



படிப்பகம்

www.padippakam.com



## பாரதமே உனக்காக

பெண்ணைச் சிதைத்திடும் பேதமை கண்டு என்
பேச்சினை யிழந்து நின்றேன்
பெண்ணை வதைத்திடும் ஆணினம் கண்டு என்
ஆத்துமம் வேர்க்க நின்றேன்
பெண்ணவள் தாயெனப் போற்றிய பூமியிற்
பிறந்தவர் நாங்களென்ற
எண்ணமே யற்றவர் இந்திய மண்ணிலே
இருப்பதும் நியாயமாமோ?

பொன் பொருள் கேட்டொரு மங்கையை எரிப்பவன்
பேடியிற் பேடியாவான்
அன்பினைக் காட்டிடும் அன்னையின் பூவுடல்
அழிப்பவன் நோயிற் சாவான்
தென்படும் திசையெலாம் தேவியைத் துதித்தவர்
தோன்றிய பூமி தன்னில்
வந்த இப்பாவியர் கரங்களில் விலங்கிட்டு
வீதியிற் கொளுத்தலாமே

கருவிலே பெண்ணெனக் கண்டதும் அழித்திடும்
கயமையும் நடக்கு தென்றார்
திருகியே கொன்றுடல் தெருவிலே எறிகின்ற
கொடுமையும் நிகழுதென்றார்
பருகிடப் பலமிலாப் பிஞ்சுகள் வாயிலே
பசிய நெல் மணிகள் தந்து
கருகிடச் செய்திடும் காதகர் உடல்தனைப்
பாதியாய் நறுக்கலாமே



படிப்பகம்

www.padippakam.com



# புலவன்

பெற்றசுகம் பாட்டெழுதும்
புலவனுக்கும் உண்டாம்
பெற்றவுடன் பெருங்களைப்பில்
படுக்கையிலே வீழ்வான்

சற்று விழி மூடியவன்
சாய்ந்திருக்கும் போது
சத்தியமாம் தேவதையின்
முத்தமதில் தோய்வான்

குற்றமதைக் கேட்டவுடன்
குதித்தெழுந்து போர்வாள்
சுற்றியெதிர் சூனியத்தை
வெட்டிப் பகை சாய்ப்பான்

எட்டவரும் நிகழ்வுகளை
எதிர்க்கணத்திற்கண்டு
எடுத்துரைப்பான் உலகதற்கு
அச்சமதை வென்று
கொட்டு மழை வெய்யில் பனி
அத்தனையும் நெஞ்சிற்
கட்டி வைத்து வாழுகின்ற
காலமவன் இயற்கை



படிப்பகம்

www.padippakam.com



பற்றியவன் வாழ்விருக்கும்
பார்வை யொளி கண்டு
பதறிடுவார் பகைவரவன்
பாய்ச்சல் தனி என்று

எழுதியநற் கவிதையுள்ளே
ஓசை நயம் இருக்கும்
எட்டடியோ ஈரடியோ
இதயங்களை உருக்கும்
உழுது வரும் அவன் விரல்கள்
உணர்வுகளைப் பெருக்கும்
உயிரிருக்கும் அவன் வரிக்குள்
உட்பொருள்கள் சிரிக்கும்

அழுதிடுவான் சில சமயம்
அவன் விழிகள் பனிக்கும்
அழகுமொழி அடுக்கினிலே
அதிமதுரம் இனிக்கும்
பழகிடுவோர் பாசமது
அவன் கவியிற் தொனிக்கும்
பகைவர்களின் முகம் நினைத்தால்
அவன் வரிகள் தகிக்கும்

பட்டதனைப் பட்டபடி
பாடிடுவோன் புலவன்
பார்நடுங்கப் புதியவிதி
படைத்திடுவோன் புலவன்



படிப்பகம்

www.padippakam.com


கெட்டவரின் கேடுகண்டு
கொதித்தெழுவோன் புலவன்
கூர்வரியால் குரல் வளையை
நெரித்திடுவோன் புலவன்

சட்டமது சமயமென
நம்பிடுவோன் புலவன்
சான்றோரே சமுதாயக்
கொற்றமென்போன் புலவன்
திட்டமிடத் தெரிந்தவரின்
தலைமை கொள்வோன் புலவன்
தீதணுகாச் சமத்துவத்தின்
தீர்ப்புணர்ந்தோன் புலவன்

இத்தகைய புலவர்களை
எந்தமிழ்மண் படைக்கும்
எத்தகைய தடைகளையும்
எழுச்சியுட னுடைக்கும்
எத்துறையும் உயர்வுபெற
துணிவுடனே உழைக்கும்
இனியதொரு சமுதாய
உணர்வுகளைச் சமைக்கும்

எத்தர்களின் இழிவு நிலை
இல்லையெனும் படியாய்ச்
சத்தியத்தின் துணையுடனோர்
சந்ததிதான் தழைக்கும்



படிப்பகம்

www.padippakam.com



இத்தரையில் எந்தமிழர்
ஏற்றமது கொண்டு
எதிர் யுகங்கள் அத்தனையும்
போற்றிடவே நிலைப்பர்



படிப்பகம்

www.padippakam.com


# கட்சியரசியல் வாதி

கட்சி யரசியல் வாதியோர் வேடன்
கையில் அம்புடன் வருகிறான் மேடையில்!
பட்சி யாகிடும் பாமரமக்களைப்
பலியெடுத்திடப் பார்வையைத் தீட்டுவான்!
நட்பு வார்த்தையால் நல்லவர் நெஞ்சினில்
நஞ்சு பாய்ச்சுவான் நாடக மாடுவான்!
அற்பு தங்களை யாற்றுவேன் என்று தான்
ஆட்சி யேறிட அனைத்தையும் கூறுவான்!

குச்சு வீட்டையும் கோபுரமாக்குவேன்!
கோட்டை கட்டி நான் குடியும் அமர்த்துவேன்!
பொச்சு மட்டையிற் புகைவண்டி செய்குவேன்!
போட்டுப் பாருங்கள் ஓட்டெனக் கென்னுவான்!
பொய்ச் சுரங்களைப் போட்டுப் புது இசை
பாடிக் காட்டியே மக்களைக் கவருவான்!
உச்சியில் நின்று உள்ளங்கால் வரையும் தான்
உண்மையானவன் என்றும் உளறுவான்!

கட்சி வென்றிடும்; காலம் நகர்ந்திடும்!
காட்சி மாறிடும் கர்ச்சனை மாறிடும்
மச்சி மெள்ளமாய் மாடிக்கு மாறுவான்
மக்கள் நண்பரை மாற்றத்துக் காக்குவான்!
வைச்ச தன்குறி வந்து கிடைத்ததும்
வாழ்வு சொர்க்கமாய் வாய்க்க மகிழுவான்!
இச்ச கத்தினில் இவன் கட்சித்தொண்டரோ
இதயம் நொந்து தம்இல்லத்திருப்பரே!



படிப்பகம்

www.padippakam.com



## உலகக் குழந்தைகளுக்காக

மழலைத் தேனிசை தந்தாள் – ஒரு
மனிதத் தாயவள் மக்களையீந்தாள்!
அழகுச் சேய்தனை ஈங்கு – அழச்
செய்யும் மாந்தர்கள் துக்கமே தந்தார்!

உலகம் பேய்களின் கூடோ? – பிறர்
உயிரைக் குடிப்பவர் வீடோ?
என நாம் எண்ணிடும் படியாய் – இங்கு
எத்தனை தீங்குகள் செய்தார்!

தனியாய்ச் சென்றிடல் பாவம்! – பிறர்
தயவை வேண்டிடல் பாவம்!
கணமும் சூழலில் நின்று – உயிர்
கொய்யும் அந்தகர் கோலம்!

உணவிற் கெடுதிகள் உண்டு! – அணி
உடையாற் கெடுதிகள் உண்டு!
பணத்தின் மிகுதியால் இங்கு –பிணிப்
பிடியில் அழிவதும் உண்டு!

உலகக் குழந்தைகள் வாழ்வை – நாம்
உயர்த்தும் வழி செய்ய வேண்டும்!
மலர்கள் போன்றவர் நெஞ்சில் – புது
நம்பிக்கை வரச் செயவேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com


## மகாத்மா

மனிதத்தின் ஆத்மாவை மதித்த ஆத்மா!
மதவெறியை முற்றாக மறுத்த ஆத்மா!
புனிதத்தால் வெள்ளையரை வென்ற ஆத்மா!
பூவுலக மக்களெல்லாம் போற்றும் ஆத்மா!

இனியுத்தம் இல்லையெனும் உலகு நோக்கி
இதயத்தாற் சாந்திதனை ஏற்ற ஆத்மா!
கனிவுற்ற அன்பாலே கடவுள் மைந்தர்
கரமோங்க வழி சொல்லி நடந்த ஆத்மா!

குனிவற்றுப் பாரதத்தாய் சுதந்திரத்தின்
கொடியுயர்த்திக் குரல்கொடுக்க உழைத்த ஆத்மா!
குனிவுற்று நிற்குநிலை கண்டு நெஞ்சு
குமுறுகிறேன் இந்தியமே நிமிராயோ நீ!


படிப்பகம்

www.padippakam.com


# வேரின் பலம்

மரத்தின் வேர்கள் மண்ணுள் நகர்ந்து
நிகழ்த்தும் அற்புதம் கண்டேன்
நிலத்தைப் பிளந்து கல்லைத்துளைத்துத்
தகர்க்கும் தகைமைகள் கண்டேன்!

உரத்துச் சத்தம் இடுவதும் இல்லை!
உலகம் பார்க்க நடப்பதும் இல்லை!
இரத்த யுத்தம் செய்வதும் இல்லை!
எதிர்க்கும் தடைகளை வைவதும் இல்லை!

கரத்தை யுயர்த்திச் செல்வதும் இல்லை!
கட்சி கூட்டிச் சொல்வதும் இல்லை!
பலத்தைப் பார்த்துப் பெருவியப்புற்றேன்!
பச்சை மரமே! வாழி நீ வாழி!

(பலமுள்ள மரவேர்கள்.... நிலத்தினையுடைத்து நகர்வது கண்டு எழுதிய கவிதை)



படிப்பகம்

www.padippakam.com



## எட்டியுதைத்திட எழுந்திடுவீரோ?

உண்டியலேந்தி உலகின் முன்னே
உட்கார்ந்திருந்தது போதும் போதும்!
கண்டவர்காலைத் தொட்டு வணங்கிக்
கைச்சில் லறைகள் கேட்டதும் போதும்

இந்திய அரசியல் இழைக்கும் கொடுமையால்
இடர் பட்டழிவதும் போதும் போதும்!
என் தமிழ் மக்களே ஏழையர் யுகத்தை
எட்டியுதைத்திட எழுந்திடுவீரோ?

பட்டினிப் பிணியிற் பரதேசிக் கோலம்
இட்டு நீர் இங்கு இழிவு பட்டுள்ளீர்!
பிச்சை யெடுக்கப் பிள்ளைகள் பெற்றுப்
பிறர் பழித்துரைக்கும் நிலையடைந்துள்ளீர்!

அட்டைகள் புழுப்போல் அசைந்து நெளிந்து
அசிங்கப் பொருளாய் உருமாறி யுள்ளீர்
எத்தனை பெரிய இனத்தினிற் பிறந்தும்
ஏனிந்தக் கொடிய பாத்திரம் எடுத்தீர்

உங்கள் வாக்கினால் உயர்ந்த அரசியற்
சிங்கங்கள் அங்கே சிரித்துப் புரள்கிறார்!
பொங்கி யொருமுறை பாய்ந்து பாருங்கள்!
பொடிப் பொடியாகும் அவரது பொய்மையே!

(தமிழக ஆலயங்களின் முன்றலிலும், கடற்கரை ஓரங்களிலும் பிச்சை கேட்டுக் கையேந்தி நிற்கும் மழலைகளையும் அவரைத் தாங்கியீன்ற தாயரையும் பார்த்துப் பொருமி எழுதிய வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com



## நலிவு நீங்கிடல் கண்டேன்!

சென்ற ஆண்டினிற் சென்னையில் நின்று நான்
சிறிது சஞ்சலங் கொண்டேன்!
நின்று வீதியில் நீட்டிய கரங்களால்
நெஞ்சு நொந்து நான் சென்றேன்!
இன்று கைகளில் உழைப்புடன் பற்பலர்
எழுந்து நடப்பது இன்பம்!
நன்று நன்றிந்த நாட்டினில் ஏழையர்
நலிவு நீங்கிடல் கண்டேன்!

(தமிழகத்தில் கரத்தில் விளக்குமாறினைத் தாங்கி வீதி பெருக்கும் உழைப்பாளரைக் கண்டபோது)

## தேச வழிகாட்டல்

தெய்வ வாக்கெனத் தெளித்திடும் வார்த்தைகள்
தேசமாந்தரின் செவிகளில் வீழ்ந்திடின்
பொய் கழன்றிடும் சோம்பல் பறந்திடும்!
போலி வாழ்க்கையின் பூச்சுக் கரைந்திடும்!
வைய நாடுகள் போற்றிடும் வண்ணமாய்
வாழ்வில் நம்பிக்கை வந்து கலந்திடும்!
மெய்யில் ஊக்கமும் மேலான எண்ணமும்
கொண்டு மேன்மைகள் துய்த்திடல் உண்மையே!



படிப்பகம்

www.padippakam.com


## தமிழ்ப் பதம்

அன்னை தமிழே! ஆருயிரே! - உனை
அகத்தினில் ஏற்றி நின்றேன்!
எண்ணம் தளரா வல்லமை தருவாய்!
என்னுயிர்க் கொளி கொடுப்பாய்!

தில்லைத் தாண்டவன் தோற்றுவித்தான்! - உனைத்
தேனிலும் பாலிலும் தோய்த்தெடுத்தான்!
எல்லையில்லா இயல்புகள் எல்லாம்
ஏந்திய இறைமையை வார்த்தெடுத்தான்!

வல்ல குறுமுனி வளர்த் தெடுத்தான்! - உன்
வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தெடுத்தான்
தொல்புலவோரின் வழியுணர்ந்தே - தொல்
காப்பியன் சொல் பொருள் அணியமைத்தான்

வள்ளுவன் குறளால் வையத்தை வென்றாய்
வனப்புறு சிலம்பதன் ஒலியெழ நடந்தாய்!
மெல்லிடைக் கீழ்மணி மேகலை கொண்டாய்!
வளையாபதியின் ஓசையைத் தந்தாய்!

கொள் செவியில்ஒளிர் குண்டல கேசியும்
கோர்த்தநற் சீவக சிந்தாமணியும்
வள்ளல்கள் சித்தர்கள் ஞானிகள் அருளிய


படிப்பகம்

www.padippakam.com



வற்றாச் செல்வமும் பற்றிட நின்றாய்!

முத்தமிழ் மன்னரின் மூதவை தன்னில்
முத்தமிழாய் நீ பேரவை கண்டாய்!
முச்சங்கப் புலவரின் காதலையுண்டாய்!
அற்புதமே நீ யழிவுகள் வென்றாய்!

## மரபு

மரபு என்பது மாறாத உண்மைகள்
மாற்றம் யாவையும் தாங்கிடும் தன்மைகள்
வரவு நாடா வனப்புறு நெஞ்சுகள்
வாழ்ந்து ஈட்டிய அனுபவத் தொன்மைகள்
பரவும் அறிவியற் பட்டறைத் தத்துவம்
பாசறை கடந்து பிறந்த பனுவல்கள்
விரவும் ஞான விளக்கினையேந்திய
வியத்தகு சான்றோர் விளம்பிய பொருளே



படிப்பகம்

www.padippakam.com



# திருவாளர் முற்போக்கு

ஓ இவர்தான் எங்கள் முற்போக்கு எழுத்தாளர்
ஒற்றைவழிகண்ட ஒப்பற்ற படைப்பாளர்
பாமுதலாய் இங்கு படைப்புலக வரப்பெல்லாம்
பாதம் பதித்து நிற்கும் பலங் கொண்ட எழுத்தாளர்

நூல் நிறைய எழுதியவர் நோபல் பரிசு பெற்றார்
நூற்றுக் கணக்கான ஆய்வுரைகள் அறிந்து கற்றார்
சால்வையொன்று சிவப்பில் சாய்ந்துள்ள நிறம் சிவப்பு
ஆகையினால் இவர்தான் அசலான இடதுசாரி
சோவியத்தைச் சீனாவைச் சுற்றி வலம் வந்ததனால்
சுதந்திரத்தைப் பற்றிச் சுவையாகப் பேசிடுவார்
யாவருக்கும் இந்த வையம் பொது வென்று
சேதிகளைப் பரப்பும் சொல்லாளர் வல்லாளர்

பாரதியின் பக்தரிவர் கால்மாக்சின் பூசாரி
வாரிசுகள் இவர்க்கும் வருவார்கள் எனநம்பி
ஊர்களிலே யெல்லாம் மன்றங்கள் நிறுவியுள்ளார்
வீரவரிபேசி விருதுகளும் பெற்றுள்ளார்

காவியங்கள் நாவல்கள் கட்டுரைகள் என்றிவர்தான்
தூவியவை பல நூறு தூண்டியவை சில நூறு
கோவில்களை எரியுங்கள் கோட்டைகளை உடையுங்கள்
பாவிகளை உதையுங்கள் என்று படை கூட்டியவர்



படிப்பகம்

www.padippakam.com



ஏழைகளை மிதிக்கின்ற செல்வந்தர் கூட்டத்தை
எடுத்தெறிய வேண்டுமென்று எழுத்தளவில் முழங்கியவர்
கோழைகளை வதைக்கின்ற கொடியவரின் கொட்டத்தை
கூண்டோடு தொலைப்பமென ஆர்ப்பாட்டம் வழங்கியவர்

நாளையுகம் நமக்கென்று நடுமேடை தனில் நின்று
நாவீரம் பேசுகின்ற நாகரீகப் பேச்சாளர்
தோழர்களின் தோழரிவர் தொண்டர்களின் தேவதூதர்
தேசமதை விடுவிக்கத் தோன்றிய நல்லவதாரம்.

நாளடைவி லிவர் பெரிய காரேறி வலம் வந்தார்
நாடெல்லாம் வரவேற்பு நல்ல செல்வம் செந்தளிப்பு
தோழர்களின் தோழரிவர் தோட்டம் துரவுடனே
வாழ்வில் உயர்ந்து விட்டார் வட்டம் பெருக்கி விட்டார்
தோளோடு தோள்கொடுத்துத் துயர்சொல்லிவந்தவர்கள்
வாழ்வு மட்டும் இன்றும் வரட்சி விட்டு நகரவில்லை

## பெண்ணின் திறன்

பெண்ணுக்கும் உணர்வுண்டு புலன்களுண்டு
பேச்சுண்டு மூச்சுண்டு பெருமையுண்டு
எண்ணத்தில் எழிலுண்டு ஏற்றமுண்டு
எதிர்பார்ப்பும் அவளுக்கு அதிகமுண்டு
திண்ணைக்குள் அகப்பட்ட தென்றல்போலத்
திறன் வேகும் நிலை மாற வேண்டுவோமே



படிப்பகம்

www.padippakam.com

## கவி கண்ணதாசனுக்கு

திரையிசையாற் தமிழ்தந்து
நிலைத்த பாவோன்!
தெருவீடு சந்தெல்லாம்
ஒலித்த பேரோன்!
உரை நடையாய்ச் சிறுகதையாய்
நாவலாக
ஊறுமுளத் துணர்வுகளைப்
பொழிந்த மேகம்!
தரை நிறைந்த போகத்தைத்
தழுவிக் கொண்டும்
தலை சிறந்த ஞானத்திற்
குளித்த நெஞ்சோன்!
அரைவயதில் ஆயுள்தனை
முடித்துக் கொண்டு
அவசரமாய்ப் போனதொரு
கொடுமையந்தோ!

படிப்பகம்

www.padippakam.com

## நம்முன் ஓர் நடிகமலை

சிரித்தாலும் அழுதாலும் சீறினாலும்
சீமானுக் கிணையாவார் யாருமில்லை!
உரித்தான தொருகுரலும் உணர்ச்சியாறும்
உயிர்க் கண்ணும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்தி
வரிக்கோர்வை வசனங்கள் விளங்கப் பேசி
வசமாக்கும் தனிப்பண்பும் பாத்திரத்தை
உரித்துள்ளே புகும் பாங்கும் உடைய சிம்மம்
உளதென்றால் அது எங்கள் சிவாஜியாமே!

நடிப்புலகின் நால்கரையும் நீந்திப் பார்த்து
நல்முத்துத் தந்திட்ட நடிகர் கோவைப்
படிப்பாக்கி அவர் கலையைப் பகிர்தல் வேண்டும்
படைப்புலகில் அவர் நாமம் பதிதல் வேண்டும்
துடிப்புடைய புதுமுகங்கள் தோன்றி யெங்கள்
தொல் நடிப்பைத் துலங்க வைத்துச் சிறக்க வேண்டும்
அடிப்படையிற் சிவாஜியவன் ஆற்றல் கொண்டு
அழகு தமிழ் நடிப்புலகு ஓங்குமாமே!

(நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் நடிப்பினைப் பதிவு செய்து எழுதிய வரிகள்)



படிப்பகம்

www.padippakam.com


# உலகத் தமிழரை உயரவைத்தவன் பிரபாகரனே

உலகத் தமிழரை
உயரவைத்தவன் பிரபாகரனே! -முழு
உரிமையோடு நாம் வாழ உதித்தான் பிரபாகரனே!

சோழப் புதல்வன் பிரபாகரனே!
சுதந்திர தீபம் பிரபாகரனே!

அலைகடல் மீது
கொடியுடன் நிற்பவன் பிரபாகரனே! -அந்தக்
காற்றினில் வந்து எம்முடன் கதைப்பவன் பிரபாகரனே!

உடலுயிர் தந்த
மறவரின் தலைவன் பிரபாகரனே!
உண்மையின்ஒளியில் உறுதியைக்காப்பவன்பிரபாகரனே!

சங்கத் தமிழாய்
மீண்டும் ஒலிப்பவன் பிரபாகரனே - புதுச்
சரித்திரம் செய்து தண்டுவலிப்பவன் பிரபாகரனே!

பொங்கிடும் வீரப்
பரம்பரை தந்தவன் பிரபாகரனே! - பல
புதுமைகள் செய்து புகழென நிற்பவன் பிரபாகரனே!



படிப்பகம்

www.padippakam.com



காலக் கவிதை பிரபாகரனே!
கருத்தில் நிற்பவன் பிரபாகரனே!

பூ நகரிப்
பாசறை தகர்த்தவன் பிரபாகரனே!
முகவரியின்றிப் பகைவனையழித்தவன் பிரபாகரனே!

கா வியத்தின்
நாயகனானவன் பிரபாகரனே! -நம்
கரும்புலிமறவர் உயிரினில் வாழ்பவன் பிரபாகரனே!

வீரத் தாயரை
அணியில்அழைத்தவன் பிரபாகரனே! -பெரும்
வெற்றிப்படையென விரைந்து நடப்பவன் பிரபாகரனே!

சாதிப்பேயினை
விரட்டியடித்தவன் பிரபாகரனே! -வளர்
சமத்துவ நெறியை அணைத்து வளர்ப்பவன் பிரபாகரனே!

தங்கத்தலைவன் பிரபாகரனே!
தமிழர் தலைவன் பிரபாகரனே!

கூனல் நிமிர்த்திக்
கொள்கை கொடுத்தவன் பிரபாகரனே! -இழிக்
கூலித்தமிழன் என்பதையழித்தான் பிரபாகரனே!



படிப்பகம்

www.padippakam.com


ஈன மகற்றி
மானம் விதைத்தவன் பிரபாகரனே! -நமக்
கெல்லை கொடுத்து நாட்டையமைத்தவ்ன் பிரபாகரனே!

பிஞ்சுச்சிறுவரைப்
பேணி வளர்ப்பவன் பிரபாகரனே! -அவர்
பேசும் மொழியில் உறவாய் நிற்பவன் பிரபாகரனே!

பேரிற் தமிழை
யேற்றி மதிப்பவன் பிரபாகரனே! - இன்றுமீழமக்களின்
இன்ன களைந்தவன் பிரபாகரனே!

பாரிற் தமிழன்
படையை அமைத்தவன் பிரபாகரனே!-உயர்
வானிற் கொடியைப் பறந்திட வைத்தவன் பிரபாகரனே!

எங்களுக் கென்றொரு தனித்துவம் தந்தவன் பிரபாகரனே!
போற்றிப் புகழ்வோம் பிரபாகரனே!
போர்முரசார்ப்போம் பிரபாகரனே!

செஞ் சோலையில்
வீரம்வளர்ப்பவன் பிரபாகரனே! -அவர்
சிந்தனைக்களத்தில் விடுதலை சேர்ப்பவன் பிரபாகரனே!

அஞ்சாநெஞ்சன் பிரபாகரனே!
அன்பின் நண்பன் பிரபாகரனே!



படிப்பகம்

www.padippakam.com



எல்லைத்தடைகளை
யெதிர்த்து நிமிர்ந்தவன் பிரபாகரனே!-இன்று
எங்கள் மண்ணின் வளங்கள் புரிந்தவன் பிரபாகரனே!

இல்லைத்தடைகள்
என்று துணிந்தவன் பிரபாகரனே! -தமி
ழீழமக்களின் இன்னல் களைந்தவன் பிரபாகரனே!

பாரிற் தமிழன்
படையை அமைத்தவன் பிரபாகரனே!-உயர்
வானிற் கொடியைப் பறந்திட வைத்தவன் பிரபாகரனே!

(இப்பாடல் தேனிசை செல்லப்பா அவர்களின் இசை வழி காட்டலில் எழுதப்பெற்று அவரால் அரங்குகளில் பாடப்பெற்று ஒலிப்பேழையிற் பதிவுசெய்யப்பட்ட பாடல்)



படிப்பகம்

www.padippakam.com


## சத்தியத் தாயின் பிள்ளைகள்

சத்தியத் தாயின் பிள்ளைகள் நாங்கள்
சனநாயகத்தின் முல்லைகள் நாங்கள்!
சந்தேகம் வேண்டாம்!

எத்தனை துயர்கள் எமைத்தகர்த்தாலும்
எதிரிகள் எம்மைத் தளரவைத்தாலும்
எம் காலம் தோன்றும்!

உழைப்பால் உயர்வது எம் கொள்கை!
உண்மையன்பே எம்பாதை!
உலகையணைத்திடும் பெரும்பண்பை
உணர்த்தும் மொழியே எம்கீதை!

இயற்கை மடியில் எம்வாழ்க்கை!
இலக்கிய மெங்கள் இனவேட்கை!
பயத்தை வெல்லும் பலங்கொண்டே
பாரில் நிலைக்கும் வழிகாண்போம்!

புவியில் எமக்கொரு புதுக்கோலம்
பூத்தது தலைவன் பெரும்பிறப்பால்!
கவிதைத் தமிழன் தோன்றுகிறான்
கூத்திடுவோம் நாம் சிறப்பாய்!


படிப்பகம்

www.padippakam.com


செவியும் விழியும் திறந்தன இன்று
சிறுமைகள் யாவும் சென்றன!
குவியும் நம் வளம் கொடியெழுமென்று
கூடிக் களித்தது நம்மினம்!

புள்ளடி போட்டது தமிழினம்
புலிகளின் ஆட்சியை வேண்டி!
இல்லை வேறொரு தீர்வென
எழுந்து நின்றது தாயகம்!

சனநாயகத்தின் பிள்ளைகள் நாமெனும்
செய்தியை யறிந்தது பூமி!
இனியும் எம்மைத் தடுத்திடல் தவறென
எண்ணிக்கொண்டது சாமி!



படிப்பகம்

www.padippakam.com


## ஊடகர் நடேசனின் உயிரிழப்பின்போது

ஓ! கொடிது எங்கள்
உறவுகளின் தனிக்குரலாய்
நாவசைத்த நடேசனை
நாமிழந்து நிற்கின்றோம்!

பாதகரின் கொடுஞ்செயலின்
பரிணாமம் இன்னும்
ஓயவில்லை யென்று
உலகரங்கில் நிறுவியுள்ளார்!

தாயகத்தின் செய்திகளைத்
தவறாமற் தந்த எங்கள்
ஜி. நடேசன் இழப்பால்
நெஞ்சுடைந்து நிற்கின்றோம்!
தீயவரின் செயலாற்
துன்புற்று நிற்கின்ற
தேசத் தாயோடிங்கு
நானும் இணைகின்றேன்!

ஊடகத்தின் அரங்கில்
உச்சரிக்கப்பட்ட
உயர்ந்த பெயரொன்று
உயிர் நீத்து விட்டது!



படிப்பகம்

www.padippakam.com


கடல் சூழ்ந்த தீவுக்குட்
கண்ணீர் வடித்த
இனமென்றின் இன்னலை
உலகுக்கு உரைத்திட்ட
திடமான நெஞ்சொன்று
தலைசாய்த்து விட்டது!

மட்டக்களப்பு
மக்களின் வரலாற்றில்
ஒட்டிக் கொண்டுள்ள
உவர்ப்பான நிகழ்விது!

எட்டப்பர் செய்கையால்
எங்கள் தமிழினம்
துக்க மலர்களைத்
தூக்கி நின்றது!

கொடிய அரசின்
கொண்டாட்ட நாளிது!

வடிகட்டி யெடுத்த
வஞ்சத்தனத்தின்
கொடியேற்ற தினமிது!

விடியலை நோக்கிய
விடுதலைத் தேசத்தின்
படியில் நிகழ்ந்த
பகிரங்கக் கொலையிது!



படிப்பகம்

www.padippakam.com


மனித உரிமையை
மறுக்கும் செயலிது!

உலக விடுதலையின்
உச்சியில் வீழ்ந்த
மரண இடியிது!

சன நாயகத்திற்குச்
சமாதி யெழுப்பிடும்
சதிகாரச் செயலிது!

சிறீலங்கா அரசின்
அராஜக அமைப்பில்
உரிமைகள் பற்றி
உரைப்பவர் தமக்கு
இறுதி மரியாதை
இதுதானென்று
உறுதி செய்துள்ளார்
உலகுக்கு இன்று!

சமாதானத்தின்
சதுரங்க நகர்த்தலில்
நியாயம் கடந்த
நிகழ்வுகள் தம்மை
உடனுக்குடனெம்



படிப்பகம்

www.padippakam.com



செவிகட்குத் தந்த
மூத்த தமையனை
இழந்து நின்றது
உலகத் தமிழினம்!

இனியும் இதுபோல்
நிகழாதிருக்கத்
துணிவுடன் நாங்கள்
தொடர்வோம் பணியினை!

நேசமிகு துணைவனை
நெஞ்சுயர்ந்த தந்தையை
பாசமிகு உறவினனைப்
பற்றுமிகு ஊரவனைத்
தாயகத்தின் தூதுவனை
தக்கதொரு ஊடகனைத்
தீயிலிடப் போகின்ற
துயர்ப்புயலிற் சிக்கியுள்ள
யாவர்க்கும் எனது
அனுதாபம் உரித்தாக!



படிப்பகம்

www.padippakam.com



## கூலிக் குரல்கள்

கூலிக்குரல்கள் சில கூடியெழுப்புகின்ற
கூவல்கள் எங்கள் காதில் விழுகிறது!
நாளைக்கிவர்கள் நாட்டுக்குப் போவதற்கு
நாலு நியாயங்கள் தேடல் தெரிகிறது!
தாவிக் குதித்துத் தமிழீழக் கவிபாடிச்
சாயத்தைப் பூசிச் சதுராட்டம் ஆடுகிறார்!
பாவி இனத்தைப் பசியாறும் பருந்துகளின்
வாயைத் திறந்து பாருங்கள் குணம் புரியும்!

நேற்று வரைக்கும் நெஞ்சுக்குள் நஞ்சோடு
நீதி மறந்து நிரை மாறி நின்றவரும்
காற்றுள்ள போது தூற்றிடுவோ மெனக் கூறிக்
கண்சிமிட்டி மெள்ளக் கவியோடு வந்துள்ளார்!
சோற்றுக்கு இங்கே மடந்திறந்து கிடக்கிறதாம்!
சுகமாக இலக்கியத்தைச் சோறாக்கித் தந்துவிட்டால்
நாட்டுக்குள் நுழைய நல்ல பெயர் கிடைக்குமென்று
நச்சு நினைப்போடு நகர்வுகளைச் செய்கின்றார்!

யாகக் குழியில் எத்தனையோ இன்னுயிரைச்
சாகக் கொடுத்துச் செத்துப் பிழைத்தவர் நாம்!
சோகக் கதைகள் ஒரு கோடி சுதந்திரத்தின்
சுடரை உயர்த்தச் சோதனைகள் ஒரு கோடி!
வேகக் கிடந்த நிலம் விடுதலைக்காய் இளம்புலிகள்



படிப்பகம்

www.padippakam.com



ஈகக் கரங்களுடன் எதிரி படை தகர்த்து
ஈழக் கொடியை உயர்த்தியதை உலகறியும்!

நோவிற் துடித்த நம்மினத்தின் துயர் மறந்து
நொடி கூட நமது நாட்டுக்கு ஈயாமல்
நாவிற் படு பொய்யும் நடிப்பும் அரசியலாய்
நமக்கென்ன கிடைக்குமெனும் நெறிகெட்ட பாதையிலே
பாவிற் றலைந்த பாவலரும் நாவலரும்
படியேறி வந்துள்ளார் பாட்டெழுதிப் புகழ்படைக்க!
தீவுக்கு மீளத் திரும்புகின்ற நோக்கோடு
திசை மாறி வந்துள்ளார் தேனோடு வந்துள்ளார்!

பாட்டுக்குக் கருவாய்ப் பாடையிலே யார் போவார்?
பக்கென்று பாய்ந்து பாட்டெழுதி இலக்கியத்தின்
ஏட்டிற் பதிக்க எழுந்துள்ளார் இங்கு சிலர்!
ஏமாந்த இனம் என்ற எண்ணத்தை முதலாக்கி!
பூட்டு உடைந்து புதுக்கதவம் திறந்ததெனப்
புல்லர்கள் கூடப் புலிவேஷம் போட்டிங்கே
ஆட்டம் போடுவதை அறிகின்றோம் அவர்களுக்கு
அன்போடு சில வார்த்தை சொல்ல விரும்புகின்றோம்!

தீகக்கி நின்ற சிங்களத்தின் கொடுமைகளைத்
திடத்தோடு நின்று எதிர் கொண்ட தலைமையது
பாகப் பிரிவு செய்யாமல் இன்று வரை
பாரை மதித்துப் பலமிருந்தும் சமாதானப்
பாதைக்கு வந்து பல நாளாய் மேசையிலே



படிப்பகம்

www.padippakam.com


தீர்வைக் குறித்துத் திட்டங்கள் பகிர்கிறது!
நீதிக்குள் நின்று நிலையான அமைதி தனைப்
'பார்'வைக்கு மென்ற பண்பட்ட உணர்வோடு!

புண்பட்ட தேசத்தைப் புடம்போட்டு இறைமையுள்ள
பொன்னான யுகம் காணப் புரிந்துணர்வு ஒப்பந்தம்
அன்றைக்குச் செய்தான் எங்கள் பெருந்தலைவன்!
அமைதிக்கும் பாதை யமைக்கத் தளமமைத்தான்!
இன்றைக்கு வரைக்கும் இதயத்தின் தூய்மையுடன்
எதிர் காலம் நோக்கி இயங்கினார் நம்மறவர்!
முன்வைத்தார் திட்டங்கள் முழுத்தீவும் நன்மைபெற!
முதிர்வான அரசியலின் முனைப்போடு உலகளந்தார்!

எங்கள் தாயகத்தை ஏமாற்ற நினைப்பவர்கள்
எவராக இருந்தாலும் தர்மம் பொறுக்காது!
வங்கத்துக் கடலும் வானும் சகிக்காது!
வாய் வரையிற் சமாதானம் வழங்குவதும் நடக்காது!
சிங்கத்தின் கொடியோடு எம்மண்ணைச் சிதைக்கும்
சிந்தனை இனியும் வெற்றியளிக்காது!
பொங்கும் தமிழிந்தப் பூமியில் உள்ளவரை
பொய்யான மனிதர்களைப் போற்றாது நம்மினமே!


படிப்பகம்

www.padippakam.com



# கார்த்திகைப் பூவே!

ஆர்த்தெழும் அலைகளின் நடுவே -நீ
பூத்தனை கார்த்திகைப் பூவே!
நீர்த்தழும்பேறிய விழியில் -ஒளிக்
கீற்றென நீந்தினை பூவே!

தீப்பொறியால் ஒரு தேகம் -தமிழ்
தீட்டியதே யுனக் காக!
பேய்ப்பகை ஓடியதாகப் -புதுப்
பாட்டுடன் விரித்தனை தோகை!

தீர்த்திடத் தொல்லைகள் யாவும் -வந்து
தோன்றினை கார்த்திகைப்பூவே!
நேர்த்திகொள் மாந்தரின் நாவாய் -நீ
நீதியை வாழ்த்துவை பூவே!

வேர்த்திடும் கரங்களின் நோவை -இனித்
தீர்த்திடுவாயடி பூவே!
பார்த்தலம் வாழ் தமிழ் மக்கள் -உனைப்
பார்த்தினி யேற்றுவர் தீபம்!



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# சத்தியம் சாகாது

செல்லரித்துக் கிடந்த செந்தமிழின் ஏடுகளைக்
கல்லரித்துக் கழுவிக் காலத்தாலழியாது
சொல்லொலித்துச் சிரிக்கும் சுரங்கமென நூலாக்கிப்
புல்லரிக்கச் செய்யும் புகழ்படைத்த பெருமக்கள்
எள்ளெரித்து வணங்கி எமக்காகத் தவங்கிடந்து
உள்ளெரித்துச் சென்ற அறிவுத்தீ அன்புத்தீ
உள்ளிருந்து எங்கள் உயிருக்கு ஒளியூட்ட
உலகமெலாம் பறந்தும் உள்ளுணர்வால் ஒன்றானோம்

கல்லின் வழியாய்க் காசினியின் வரலாறு
சொல்லி நடக்கும் ஆசிரியர்பலநூறு
முள்ளை எலும்பை முற்கால விலங்குகளின்
பல்லைப் பாதத்தைப் பதிவு செய்து ஒருவாறு
உறைபோர்த்திக் கிடக்கும் உலகத்தின் நில அமைப்பின்
உள்ளமைப்பைத் தெரிந்து உயிரினத்தின் உறுப்பு வழி
வரை போட்டறிந்து வரலாற்றுக் காலத்தை
வரம்பிட்டுக் காட்டும் வழக்கம் நிறையவுண்டு
தரை பார்த்து அகழ்ந்து தாம்கண்ட தரவுகளைத்
தரவாக்கி மாந்தர் தம்மியல்பு உரைத்தலுண்டு

எல்லை கடந்து எழுதாத ஓசைகளாய்ச்
சொல்லின் அடியிற் சுடர்விட்டு நிற்கின்ற

படிப்பகம்

www.padippakam.com



உள்ளத்துச் செழிப்பை உணர்த்தும் இலக்கியத்தைக்
கொள்ளாத அறிவுலகம் வரலாறு கூறாது

காலங் கடந்த கருத்துக்கள் சிந்தனைகள்
பாலம் என அமையும் பழமைக்கும் புதுமைக்கும்!
ஞாலம் படர்ந்து நிலை நிற்கும் நம்பிக்கைக்
கோலம் அறியாதோர் கூற்றுண்மையாகாது!
ஒருமக்கள் சிந்தனையின் ஊற்றறியா தெழுகின்ற
வரலாற்றுக் கணிப்பில் வாய்மையிருக்காது
அகப்பொ ருள்களிறியா அறிவுலகம் ஒன்றுண்டு
அனைத்தும் புறமென்று அது நம்பிநிற்கிறது

ஏட்டில் எழுதாத எத்தனையோ உயர்நெறிகள்
கேட்டுப் பரிமாறும் கேள்விப் படிமமெனப்
பாட்டாய்ப் பெருமறையாய்ப் பாரியலின் உண்மைகளாய்
தோற்றி நகர்வதுண்டு தொல்பொருளாய்த் திகழ்வதுண்டு

சிந்துநதிக் கரையிற் சிறப்புற்று வாழ்ந்த குடி
இந்து மக்களௌன இயம்புமொரு வரலாறு!
இந்தப் பெருங்குடியின் ஈற்றடியாய் இனிதுலகில்
வந்தவர்கள் நாங்களௌன நவலுமொரு வரலாறு!

என்று நாம் வந்தோம் ஓரினமாய் இவ்வுலகில்?
என்ற தோர் கேள்வி எம்மிடையே எழுவதுண்டு
தொண்டுநம் மக்கள் தோன்றிய காலத்தைக்
கண்டு உரைக்கும் ஆவணங்கள் ஏதென்று
இன்று விளக்கம் கேட்கின்ற இளையகுலம்
உண்டு நம்மிடையே உண்மைப் பொருளறியும்



படிப்பகம்

www.padippakam.com



பண்பு இவர்க்குண்டு பாட்டனொடு பாட்டியவள்
பண்டு இருந்தநிலை பார்க்கும் விருப்புமுண்டு

மன்னர் வளர்த்து மாண்பு கொண்ட மாமொழியாம்
அன்னை தமிழை அழித்திடலா மென்றெண்ணிச்
சின்ன மரங்கள் சில சிலந்தி வலைதான் நூறு
பின்னியதாய் வரலாறு பேசிக் கிடந்ததுண்டு
முன்னர் ஒரு நாள் முடிவு தந்து நம்மினத்தின்
மூச்சை யடக்கிவிட முதலைகளும் முயன்றதுண்டு
தின்னப் பிறவி கொண்ட தீயவரும் தீங்குபல
பண்ணிக் களைத்துப் பயந்தோடிப் போனதுண்டு

என்ன நடந்தும் எத்துணைதான் எதிர்ப்பு வந்தும்
எங்கள் உயிரின் இறவாத உள்ளொளியை
பன்னற்கரிய பண்பாடு நல்லறத்தைப்
பாரின் உயிர் அணைக்கும் பக்திப் பெருவளத்தைக்
கன்னகமும் கவைக்கோலும் கொண்டெவரும் கவரவில்லை
காட்டுப் பெருந்தீயெங் கருப்பொருளைத் தீண்டவில்லை
மன்னுலகின் முதுபொருளாய் மறைவழியே மலர்ந்து நிற்கும்
மார்க்கம் தமிழ்மார்க்கம் மறைவிதற்கு இல்லையன்றோ

படையெடுப்பு நடத்திப் பல்லுயிர்கள் தாம் குடித்துக்
குடைபிடித்து வந்து கோட்டைகளும் தாமெழுப்பி
நடை உடுப்பு நமதுமொழி நாகரீகம் பண்பாடு
அடைவு வைக்கச் சொல்லி அடக்கு முறையாலெமக்கு
தடைகள் பல விதித்துத் தனிச்சிறையிற் தானடைத்துப்
புடைத்தடித்து கொன்ற பொல்லாத அந்நியர்க்கும்



படிப்பகம்

www.padippakam.com


கொண்டாட வெல்லாம் குளிர்தடையாய் இருக்கவில்லை
பூவுலகப் பந்திற் “பூட்சோடு” நடந்தவனைத்
தேவனெனத் துதித்தோரும் கிழக்கினிலேயிருந்துள்ளார்
நாவினிலே ஆங்கிலமும் நலுங்காத வெள்ளுடையும்
காவி வந்த இவனைக் கடவுளென்றும் கணித்துள்ளார்
பாவியிவன் பரசமயக் கொள்கைகளைப் பழித்துரைத்தான்
கோவிலுக்குட் புகுந்து கொட்டங்கள் தான் புரிந்தான்
ஏவினான் தன் படையை எட்டப்பர் துணையோடு
கூவியவர்குரலைக் குண்டொலியிற் கலக்கவைத்தான்

மனதையடக்குவதும் புலன்கள் தமைப் பூட்டுவதும்
இனமானத்தோடு உயிர் வாழ எண்ணுவதும்
தனதாட்சி யெல்லைகுட் தகாதென்று கூறும்
சனநாயகத்தைப் பயிர் செய்ய முனைந்திட்டான்

வல்லானே வாழ வாய்ப்புள்ள சமுதாய
எல்லைகளை எழுப்பி எதிர்த்தவரைச் சிறையிலிட்டான்
ஏடுகளையெரித்து எம் மறிவைத் தறித்துவிட
நாடு மொழி தெய்வமென நம்பினோரை நசியவைத்தான்
வேடுவர்கள் நாமென்ற வெறியான கருத்ததனை
மோடுகளின் மூளையிலே முழுதாக விதைத்துவிட்டான்

ஆதாரமில்லாத அழுக்குக் கருத்துக்களை
பூதாகாரப்படுத்தி புத்தகங்கள் வெளியிட்டான்
வேதாளப் படிப்புலகில் வெள்ளையனைப் பின்பற்றி
ஊதாரி அறிஞர் பலர் உள்நாட்டில் முளைத்தார்கள்


படிப்பகம்

www.padippakam.com



வெள்ளையர்கள் ஓதியதே வேதமென வரலாற்று
வெள்ளத்தில் வீழ்ந்து நீந்தி வந்தார் நம்மவரும்
உள்ளவற்றை மறைத்து உண்மைகளை உதறிவிட்டு
கள்வர்களின் கருத்தைக் கல்வியிலே கலந்திட்டார்

மாக்ஸ் முல்லர் என்பார் வரலாற்று மதஞ்செய்து
ஆக்கிய முடிபுகளை அப்படியே உண்மையெனத்
தேக்கினர் தெளிவற்றோர் தேய்ந்தார்கள் மதி கெட்டு
நோக்கம் நிறைவேற்ற நுழைந்தார்கள் மேனாட்டார்
கையிலே மதநூலைத் தந்து அடிமைகளைக்
கண்மூடச் சொன்னார் கண்மூட அவர் சொத்தைப்
பையினிலே போட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்
வையம் முழுவதையும் வழிப்பறியால் ஆண்டார்கள்

ஆபிரிக்க மண்ணும் விதிவிலக்காய்ப் போகவில்லை
அடிமைத் தளையில் அவர்களையும் சிக்க வைத்தார்
நாவிரித்த நல்லவரை நசுக்கி யழித்தார்கள்
படிப்படியாய் அவரைக் காப்பிழக்க வைத்தார்கள்

தென்னாபிரிக்காவைத் தம் தேச மாக்கியதும்
என்னாடும் தம் நாடே யென்று தரணியெல்லாம்
மன்னாதி மன்னரென மார்தட்டி விரட்டியதும்
முன்னாள் நடந்து முடிந்த கதையில்லை
இன்னாளும் அதைத்தான் இவர் செய்யத் துணிகின்றார்

மண்டேலா என்ற மனிதத்தின் மாமலையைக்
கண்டதுவரலாறு மார்ட்டின் லூதர்கிங்



படிப்பகம்

www.padippakam.com


என்ற தோர் தலைமகனை ஒளிந்து நின்று மாய்த்ததையும்
இந்த உலகம் இதயத்தில் தாங்கியது
ஸ்ரீவ் பீக்கோ* என்ற இளைஞன் சிறைப்பட்டு
நெரிபட்டு உதைபட்டு உயிர் நீத்த கொடுமைதனை
அறிந்த பொழுதெனது ஆவி தவிப்புற்றேன்
எரிபட்டு அழிவுற்றார் எண்ணிக்கை ஆயிரமாம்

அமெரிக்க நாட்டின் அதிகார வேட்டைக்குள்
அகப்பட்ட கறுப்பர்கள் அலைவுற்ற கதைநூறு
நம்பிக்கை மலையின் உச்சியில் நடந்தவன்
நம்பியாம் மார்ட்டின் லூதர்கிங் கென்பான்
"என்னிடம் நல்லதோர் கனவுண்டு" என்றே
எடுப்பாக உலகின் செவிகளில் உரைத்தவன்

துன்புற்ற கறுப்புத் தோலினமக்களின்
தோள்களை யுலுப்பித் துணிவினை விதைத்தவன்
குன்றாய் நிமிர்ந்து குரல் கொடுத்த சிங்கத்தைக்
கொன்றார்கள் பாவியர்கள் கோழைத் தனத்தாலே

மல்கம் எக்ஸ் என்ற மாமனிதன் குரலடக்கி
அடக்கம் செய்ததொரு அமெரிக்க வெள்ளைவெறி
கிரேக்கத்துச் சிந்தனைகள் எகிப்தின் விழுமியங்கள்
பரக்கக் கிடந்தும் பாரின்று பலம் படைத்த
அரக்கர்கள் பின்னே அலைவது பெருங்கொடுமை
சரக்கேற்றி விற்கவந்தோர் ஆளுவது பெருங்கொடுமை



படிப்பகம்

www.padippakam.com



ஆயுத வலிமையே அகிலத்தை யாளுமெனில்
ஆன்மீக மற்ற அறிவு வளருமெனில்
தீயிலித்தரணி எரிவதும் அதிசயமோ?
நோயிலும் பிணியிலும் நொடிவது அதிசயமோ?

நாகரிகமென்றால் நாடுகளைப் பிடித்தடிமைச்
சோகம் விளைத்துச் சுதந்திரத்தைப் பறித்தலெனும்
தாகம் கொண்டவர்கள் தலைமையிலே இவ்வுலகு
போகும் நிலை கண்டு பொறுக்காது புழுங்குகிறேன்

உளவியலின் வரலாறு உதித்ததென்றார் கிழக்கினிலே
விளைவுகளை விளைவுக்கு ஊற்றான காரணத்தை
அளவிடுதல் விஞ்ஞான அலகுகளைக் கடந்த பொருள்
தளநேரம் திணிவுகளைத் தாண்டியவோர் வெளியுண்டு

தர்மவிதிகளுக்குத் தனியிடத்தைத் தந்தவர்கள்
பெருமை நிறைந்த இந்து மக்கள் ஈதுண்மை
கர்ம நிலைப்பாட்டைத் தொடர்பிறவிக் கொள்கைகளை
அறியக் கொடுத்தவரும் நம்மக்கள் ஈதுண்மை

அகப் பொருள்களறியா அறிவுலகம் ஒன்றிங்கே
அனைத்தும் புறமென்றே அறை கூவி நிற்கிறது.
அகப்பையிலே இருப்பதுதான் நிஜமென்று அதை நம்பி
அது கடந்த உணர்வுகளை அது விலக்கிச் செல்கிறது
உளநோய்மிகுந்து உள்ளுணர்வு தான் மங்கும்
களமாகி யிவ்வுலகம் கவலையிலே மிதப்பதற்கு



படிப்பகம்

www.padippakam.com


உளதோர் காரணத்தை உணராத அறிவுலகம்
வளமாதல் கண்டு வாய்மை அழுகிறது

காலக் கணிப்பிற் கலியுகத்தின் தகமைகளை
மூலச் சுருதிகளில் முற்கூட்டிக் குறித்துள்ளார்
ஞானக் கடலினிலே ஞானவொளி கண்டவர்கள்
சீலக் கருத்துக்களால் செய்தார்கள் காவியங்கள்

விஞ்ஞான வட்டத்தில் விளங்காத உண்மைகளை
மெய்ஞ்ஞானம் கொண்டு மெய்ப்பித்த மேலறிவு
பொய்யாது என்றும் புரளாது கொடியோரின்
கையால் அழியாது காலத்தாற் தேயாது

உள்ளம் உயிர் என்ற உருவற்ற வியாபகங்கள்
உலகின் அதிர்வுகளை உணர்த்துகின்ற சத்தியங்கள்
உள்ளடக்கி நிற்கும் ஒப்பற்ற இந்துநெறி
வெள்ளமெனப் பரந்து விரிசுடராய் நிற்கு மன்றோ

உயிரோடு தொடரும் உள்ளத்தின் இயல்புகளைப்
பயில்கின்ற பேரறிவு படிப்பால் நிறையாது
ஒளிர்கின்ற உள் ஞானம் ஓங்கி யெழும் வரையில்
அழிகின்ற உடலூனம் அறிவு தரமாட்டாது.

ஏட்டில் எழுதாத எத்தனையோ உயர் நெறிகள்
கேட்டுப் பரிமாறும் கேள்விப்படிமமென
நாட்டு வழக்கில் நல்லோரின் சிந்தனையிற்
பாட்டாய்ப் பெருமறையாய் பாருணரும் பனுவல்களாய்த்
தோற்றி யொளிர்வதுண்டு தொல் பொருளாய்த்திகழ்வதுண்டு



படிப்பகம்

www.padippakam.com



கூற்றில் நிறைவதுண்டு குறிப்பொருளாய் நிற்பதுண்டு
மொழி யென்றால் எழுத்தோசை யென முற்றுப் பெறுவதில்லை
வழி வந்த எண்ணங்கள் வரிவடிவில் வருமுதலே
விழி கண்டும் செவிகொண்டும் விரிந்திடுமோர்இனத்துவத்திற்
பொழிகின்ற இலக்கியங்கள் பிறந்து பின்னர் இலக்கணத்தை
வழிமொழிய வரலாறு வழி வழியாய்ப் பின் தொடரும்

தொல்காப்பியனார் தொகுத்திட்ட இலக்கணம் நம்
தொல்புலவர் தொடர்ச்சியன்றித் தொடக்கமில்லையெனஅறிவீர்
சொல்லாகி வந்த பின்னர் சொல்லெழுத்தாய் உருப்பெற்று
பல்லாயிரமாண்டுப் பனுவல்கள் பிற் தொடர்பே

பாசக்கருவிருந்து பாய்ந்து வந்த உணர்வலையில்
ஓசை யெழுந்து சொல்லாகி அது பின்னர்
தாய் தந்தபாட்டாய்த் தவழ்ந்து தலைப்பட்டு
ஊர் சந்தையெல்லாம் உறங்கி யெழுந்தோடி
ஊர்ச் சிந்தாய் உலவி உள்நாட்டில் உறவாடித்
தேசத்தின் மொழியாய்த் தென்றலிலே தான் கலந்து
பாச்சந்தமாகிப் பாண்டித்தியமாகி
நாச் சந்தப் புலவரிடம் நடமாடி நிற்குமன்றோ

இந்த வரலாற்றின் உயிர்க் கூர்ப்பை எடுத்துரைக்க
எந்தக் கல்வெட்டால் இயலுமெனக் கூறிடுவீர்?

வள்ளுவனின் குறளுக்கு ஆண்டாயிரமிரண்டு
கொள்ளுவது உண்டு வள்ளுவன் முன் அம்மொழிக்கு



படிப்பகம்

www.padippakam.com



உள்ள வயது கேட்டால் உண்மையே பதிலுரைக்கும்
தெள்ளு தமிழ் மொழியின் தொன்மை சொலச் சான்றேது

மந்திரமாய் மலர்ந்த மாமொழிகள் பட்டியலில்
செந்தமிழும் ஒன்றாய்ச் செப்பிடுவர் கற்றுணர்ந்தோர்
வந்த மொழிக்கெல்லாம் வாழ்வு செய்ய அரசிருக்க
எங்கள் தமிழுக்கோ எவரிருந்து வாழ்வுதந்தார்
தெய்வமொழியென்று தெளிவாக நானுணர்ந்தேன்
தேயா மொழியென்ற தீர்வினையும் நான் கொண்டேன்
உய்ய வழி சொல்லும் உலக மொழியாகி
ஊழியழிவுகளைக் கடந்து நிற்றல் உறுதியன்றோ?

திங்களும் கதிரும் தென்றலும் தீயும்
பொங்கு கடலும் பூமியும் உள்ளவரை
எங்கள் தமிழும் இனமும் வாழுமென
என் கரமுயர்த்தி எல்லோர்க்கும் வாக்களிப்பேன்

மலை சான்றாய் நிற்கும்
மண் சான்றாய் நிற்கும்
கலை சான்றாய் நிற்கும்
கதிர் சான்றாய் நிற்கும்
அலை சான்றாய் நிற்கும்
அனல் சான்றாய் நிற்கும்
நிலை கொள்வாள் தமிழ்த்தாய்
நித்தியமாகவே



படிப்பகம்

www.padippakam.com



## முடிவு



இலக்கண வேலிகள்
இல்லாத வெளியில்
இறக்கைகள் கட்டியென்
பாக்கள் பறப்பதை
வியப்புடன் பார்த்து
விக்கித்து நின்றேன்!
அலைக்கழிவில்லாத்
தமிழ்யுகம் ஒன்றினைத்
தருவாயாவென
இயற்கையைக் கேட்கிறேன்!
தயக்கத்தோடு
இயற்கையும் ஒருமுறை
தலையினையாட்டிச்
சம்மதம் சொன்னது!
விலைக் கெழுதாத
வீரிய விரல்கள்
விளைந்திடுமென்று
வாஞ்சையாய் இருக்கிறேன்!
இலக்கிய மாளிகைச்
சுவர்களில் நின்று
என்னைப் பார்த்துக்
குயில்கள் கூவின!
மலர்ச்சர மேந்திய
வாழ்வியல் முனிவர்கள்
வாழ்த்துப் பாடவென்
வரலாறு முடிந்தது!



படிப்பகம்

www.padippakam.com

## நன்றி

கொற்றவன் செத்தும் குலையாத தமிழைக்
கொண்டவன் குனிந்தும் குனியாத தமிழைப்
பற்றிய நெருப்பிலும் பணியாத தமிழைப்
பாவலர் நாவினில் வற்றாத தமிழை
மற்றவர் முன்னே மயங்காத தமிழை
மாமலையாக நிலைக்கின்ற தமிழை
நற்றவத்தாலே என்தாய் மொழியாய்
நயந்த என் தாய்க்கு நன்றியென் தமிழே!

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

திரு பற்றிமாகரன் அவர்கட்கு.....

அன்புள்ள தம்பி!
யார் தம்பி பங்கய மணாளன்!
இப்படிக் கவிதை எழுதுகிறாரே! அவரின் ஒரு கவிதை படித்தேன். அப்படியே லயித்துப் போனேன். உயிர்த்துடிப்பான கவிதைகள் உணர்ச்சி மிகையாகாமல், கருத்தோட்டம் சிதறாமல், சொல்வளம் குறையாமல் எந்தச் சொல்லை எந்த இடத்தில் வைக்க வேண்டுமோ, வைத்து எழுதினால் பொருள் நயக்குமோ அப்படி எழுதுகின்றார்........

அன்புடன்.......

'மறவன் புலவு' சச்சிதானந்தன்



'புலவர்'நல்லதம்பி சிவநாதன்
BSc. (Civil Eng) MCIOB

இலங்கையின் தேசியகீதத்தைத் தமிழில் தந்த முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களது புத்திரரான திரு. சிவநாதன் அவர்கள் இலங்கையில் வட்டுக்கோட்டையில் பிறந்து, இள வயது முதலே கூத்து நாடகமெனத் தொடங்கித் தனது 16 வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினார்.

1974 இல் மேற்படிப்பிற்காக இலண்டன் வந்தவர், கட்டடத் துறையில் கல்வியும் அனுபவமும் பெற்று, இன்று அத் துறையில் முகாமைத்துவப் பொறுப்பை வகிக்கின்றார். "புலவர்" என அன்பாக அழைக்கப்படும் இவரது இலக்கியப் பணி பேச்சு, கவிதை, நாடகம், நாட்டிய நாடகம்,வானொலிநிகழ்வுகள் என விரிந்து இங்கிலாந்து மட்டுமல்லாது உலகின் பல்வேறு முனைகளையும் தொடுகிறது.

தனது பாலப் பருவத்திலேயே தந்தையைப் பறிகொடுத்து, தாயின் அரவணைப்பில் வளர்ந்தார். அத் தெய்வத்தாய் தமிழையும், தெய்வீகத்தையும் இணைத்து ஊட்டி வளர்த்தமை அவரது கவிதைகளில் மிளிர்ந்து காணப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



வெளியீடு:
தமிழவை இலண்டன்
ISBN NO: 0-9548259-0-X

படிப்பகம்